CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta




Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

உ

சிவமயம்

# சிவமஞ்சரி

- ஒன்பதாம் தொகுதி -

( பக்கங்கள்- 1280 முதல் 1440 வரை )

ஆசிரியர்

சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணிஅரசு, சிவசேவா ரத்னம்

**பூசை. ச. அருணவசந்தன்**

**சிவமஞ்சரி** - ஒன்பதாம் தொகுதியின் இந்த முதற்பதிப்பு

விக்ருதி வருஷம் வைகாசி மாதம் விசாக நன்னாளானஞான பூர்ணிமா நன்னாளில் (27-05-2010)

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளையின் நிறுவனரும், தலைவருமான

செந்தமிழ்வாரிதி **சிவத்திரு. இரா.செல்வக்கணபதி-சந்திரா** தம்பதியர் அவர்களின்

பேராதரவுடன் வெளியிடப்பட்டது

**சிவசுந்தரி கலைக்கூடம்**

29, பீமண்ணா முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நூலின் விவரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | சிவமஞ்சரி (ஒன்பதாம் தொகுதி) ⑨ |
| நூலின் ஆசிரியர் | பூசை. ச. அருணவசந்தன் |
| பதிப்பு ஆண்டு | முதற் பதிப்பு- 2010 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| பதிப்பாளர் / ஆசிரியர் | பூசை. ச. அருணவசந்தன் |
| முகவரி | ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு<br>ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.<br>அலைபேசி : 99411 24964 |
| பக்கங்கள் | 8+160 ஆக 168பக்கங்கள் |
| நூல் அளவு | கிரௌன் 1.4 -( 24 c.m. x 18.2 c.m.) |
| அச்சிட்டுள்ள பரப்பளவு | 21.5 செ.மீ x 15.2 செ.மீ |
| பயன்படுத்தப்பட்டுள்ள தாள் | பலாபூர் எச்.பி புள் கிரௌன் 11.6 கி.கி. |
| பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள் | 10.8 புள்ளிகள் |
| மின் அச்சுக் கோர்வை | சிவசுந்தரி , செங்கழுநீர் பிள்ளையார் கோயில்தெரு<br>மயிலாப்பூர் சென்னை -4. |
| மறுதோன்றி அச்சகம் | ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>3, பழைய ஜெயில்ரோடு,தங்கசாலை ,<br>சென்னை 1.போன் 25283554 |
| நூலின் பொருள் | சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி<br>தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள்<br>ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள்<br>தனித்தனி தலைப்புகளில் |
| விலை | ரூபாய் 100/- |
| நூலகக் குறியீட்டு எண் | - |

அட்டையில்- ஸ்ரீ தட்சிணாமூர்த்தி படம் உதவி - ஸ்ரீ சிவமூர்த்தி, எஸ், இண்டர்நேஷனல்




Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# முகவுரை

உலகில் உயர்ந்த பொருட்களாக இருப்பவற்றை ரத்தினங்கள் என்பர். இரத்தினங்களை ஒன்பதாக வகைப்படுத்தி நவரத்தினங்கள் என அழைக்கின்றனர். நவரத்தினங்களை ஒத்ததாக சிவமஞ்சரியின் இந்த ஒன்பதாவது தொகுதி வெளிவருகின்றது. நவம் என்பது புதுமை வலிமை ஆற்றல் மிகுந்தது என்னும் பல பொருட்களைத் தருகிறது. அதையொட்டி இதில் மகாபலி சாலிகளான இராட்சதர்களும், பூதர்களும் சிவவழிபாடு செய்து பேறு பெற்ற வரலாறுகளும், மகாதபஸ்விகளில் உயர்ந்த ரத்தினங்களாகத் திகழும் சப்தரிஷிகள் தொடர்பான செய்திகளும் உயிர்களுக்கு சிவஞானம் என்னும் உயர்ந்த ரத்தினத்தை அருளும் சிவாச்சார்யர் பற்றிய செய்திகளும் ஞான சிகாரத்னமான தட்சிணாமூர்த்தி வழிபாடு தொடர்பான செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த பஞ்சரத்தினங்கள் ஒளிவீசத் துணைநின்ற அனைவரையும் அன்புடன் போற்றி வணங்குகிறேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்ற காலம் தொடங்கி சிந்தை யாலும் செயலாலும் ஒயாது அருளாசி வழங்கிப் பல்லாற்றாலும் உதவிவரும் திருக் **கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்கி மகிழ்கிறேன்.

இப்பணியில் அருள் உதவி செய்து வரும் எனது வணக்கத்திற்குரிய **குருநாதர் குருஜி ஆர்.துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அவர் பெரும்பொருட் செலவில் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரும் நிறைதவச் செல்வர். நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயத்தில் தினந்தோறும் கைப்பட ஏராளமான தீபங்களை ஏற்றியும், நீர்சுமந் தேத்தியும், மலர்ப்பணி செய்தும் வருபவர். அவரைப் போற்றி வணங்குறோம்.

எனது சிவப்பணிகளுக்கும் தெய்வீக் பணிகள் அனைத்திற்கும் துணைநின்று வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி.அனந்த லட்சுமி** அவரது கணவர் கயிலைப்புனிதர் சிவத்திரு **வரத.வீரராகவன்** தம்பதியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரை அடியொற்றி அவரது அன்பரும், நுங்கம்பாக்கம் எல்.வி.ஜே. பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளையின் நிறுவனருமான திருப்பணிச் செல்வர் அருட்பணிஅரசு **எம்.வி.ஜெய்சங்கர்** அவர்கள் நல்லாதரவை வழங்கி வருகின்றார்கள். இத்தொகுப்பிலுள்ள நூல்களுக்கு விவரம் திரட்ட பயணங்கள் மேற் கொண்ட தற்கும், படங்கள் தீட்டவும், பேருதவி புரிந்துள்ளார்கள். இவருக்கும் இவரது தாய் தந்தையர் சிவத்திரு. **ஓ.எஸ்.விவேகா னந்தன்-லட்சுமி** இவர்களுக்கு என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஐந்து மலர்களும் தனித்தனியே அன்பர்களின் நல்லாதரவுடன் பல்வேறு காலங்களில் இலவச வெளியீடாக வெளிவந்தன. இவ்வெளியீடுகளுக்கு உதவியருளிய நண்பர்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

இவற்றில் முதல் மலராக சர்வஜித்து வருஷம் 2008 மகாசிவராத்திரி நன்னாளில் வெளிவந்த **ஸ்ரீ பூதலிங்கேஸ்வரர்**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூலுக்கு உதவி புரிந்தவர்கள் நமது விழா புரவலர் அன்னதான செல்வர் சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் **எஸ்.வி. ஜெயராமன்** அவர்கள் ஆவார். அவருடன் **திரு.டி.ஆர். ரமேஷ், திரு.மோகன ராஜசிம்ம மகேந்திரன்** அவர்களும் உதவி புரிந்தார்கள். இரண்டாவதாக, 2008 ஆனித் திருமஞ்சன நாளில் (42ஆவது மலராக) ஸ்ரீ ராட்சத லிங்கேஸ்வரரை வாரன்ரோடு **பால விநாயகர்** ஆலய அர்ச்சகர் **ஸ்ரீமான் முத்துக் குமாரசுவாமி அவர்களும், அவர்களின் திருக் குமாரர்கள் எம். விக்னே ஸ்வரன், எம்,விவேகா னந் தன்,எம்.விக்கிரமாதித்தன்** ஆகியோர் பேருதவி புரிந்து வெளிவர உதவினர். ஸ்ரீமான் முத்துக்குமார சிவாச்சாரியார் இந்நூலுக்கு மட்டுமன்றி, இத்தொகுதியி லுள்ள மற்ற நூல்கள் வெளிவரவும் பேருதவி புரிந்தார்கள். அவருடைய வேண்டுகோளின்பேரில்சீதாராமன்அண்டு கம்பெனிஉரிமையாளர்கள் **திரு.மோகன்குமார், திரு.ஸ்ரீ பிரேம்குமார்** கர்நாடக சங்கீத புத்தக உரிமை யாளர்கள்**திரு.சி.வினோத்குமார்,திரு.சி.ஹேமந்த் குமார்**ஆகியோர் உதவி புரிந்தார்கள்.

மூன்றாவதான மலர்கடலாட்டு விழா வான மாசி மக (2010) நன்னாளில் வெளி வந்தது. சிவமஞ்சரி வரிசையில் 48வதான **சப்தரிஷீஸ்வரர்** என்னும் இந்நூல் வெளி யீட்டுக்கு லால்குடி சப்தரிஷீஸ்வரர் ஆலயத் தின்பால் பேரன்பு கொண்டவரும், அவ்வூ ரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அரிதில் முயன்று சேகரித்து வைத்திருப் பவருமான லண்டன்வாழ் லால்குடி தமிழர் **சிவஸ்ரீ.வேதநாராயணன்**அவர்கள் உதவி புரிந்தார்கள். அவரிடம் நம்மை ஆற்றுப்படுத்தி இவ்வுதவிகளைப் பெறச் செய்தவர் சென்னை சி.எல்.ஆர்.ஐ. , **சித்தாந்தரத்தினம் ஆறுமுகம்** அவர்கள் ஆவார்.

நான்காம் வெளியீடாக மலர்ந்த **தட்சிணாமூர்த்தி** என்னும் நூல் தைப்பூச நன் னாளில் (2007)திருவிடைமருதூரில் வெளி யிடப்பட்டது. இதற்கு எனது சகோதரி யும்,அவரது கணவருமான திரு.வரத வீர ராகவன்- அனந்தலட்சுமி தம்பதியர் அவர் களது குமாரர்கள், **வீர. அருண் பிரசாத், வீர.தீபக்குமார்** உதவி புரிந்தார் கள்.

ஐந்தாவது மலர், 2009 தீபாவளித் திருநாளில் (சிவமஞ்சரியின் 45ஆவது மலராக) **ஸ்ரீ சிவாச்சாரியார்கள்** என்னும் பெயரில் மலர்ந் தது.இந்நூல் வெளிவர பெரிதும் துணை நின்றவர்கள். திருமயிலை கபாலீசுவரர் ஆலய அர்ச்சகர் **சிவாகமஸ்ரீ தே. கபாலி குருக்கள்** அவர்கள் ஆவார். அவரும் அவரது சகோ தரர் **சிவாகமஸ்ரீ அருணசுந்தர சிவாச்சாரியார்** அவர்களும் மேற்படி நூலைப் பார்வை யிட்டு சிறப்பான ஆலோசனைகளை வழங்கி மேன்மைப்படுத்தினர். மேலும், வாரன் ரோடு பாலவிநாயகர் ஆலய அர்ச் சகர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி சிவாச்சார் யார் அன்பர்கள் மூலம் திரட்டிக் கொடுத்த நிதியும் இவ்வெளியீட்டிற்குப் பெரிதும் உதவியாக இருந்தது.இவர்கள் யாவருக் கும் எனது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ஞான பௌர்ணமி** எனப் போற்றப் படும் வைகாசி விசாகத் திருநாளில் மேற் குறித்த ஐந்து நூல்களையும் தொகுத்து சிவமஞ்சரியின் ஒன்பதாம் தொகுதியாக வெளியிட்டு மகிழ்கிறோம்.

இம்முயற்சிக்குப் பெரிதும் ஆதரவு அளித்து நன்கொடைகளை வழங்கிய பேராசிரியர் **இரா.செல்வக் கணபதி** அவர்க ளுக்கும், முன்வெளியீட்டு திட்டத் திற்கு உதவிய (6ஆம் பக்கத்தில் உள்ள பட்டி யல்படி) அன்பர்களுக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய வேளையில் நமது பணிகளுக்குத் துணைநிற்கும் அனை வரையும் போற்றி மகிழ்கின்றேன்.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்து செம்மைப்படுத்தி உபகரித்து வரும் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ **வி.எஸ்.நடராஜன்** அவர்களை வணங்கி மகிழ் கிறேன். இவருடைய குமாரர்என்.**பானு (எ) பாலசுப்பிரமணியன்** (ஸ்பீகள் பிரிண்ட்டர்ஸ்) அவர்களும் அனேக உதவிகளைச் செய்து வருகின் றார்.

( தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நன்றி மலர்கள்

இறைவனின் திருவருளாலும், அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரியின் ஒன்பதாம் தொகுதியின் முதற்பதிப்பு வெளிவந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் முன்தொகை வெளியீட்டுத் தொகை அளித்து உதவிபுரிந்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலை எம்மண்ணல் சகல செல்வ சௌபாக்கியங்களையும் அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

வாழி நலம் சூழ அன்பர் பூசை.ச.அருணவசந்தன்

பிரம்மஸ்ரீ ஜி.பரமேஸ்வர தீக்ஷிதர்,சிதம்பரம்

'சிவஸ்ரீ Prof.Dr.M.V. சத்தியநாராயணா IIT
தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை-42

சிவஸ்ரீ .தங்க.சொர்ணகுமார்
டிவிஎஸ் சுந்தரம் பிரேக்ஸ் லைனிங் லிமிடெட்

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

சிவஸ்ரீ Dr.C.ரவிசங்கர். B.D.S.,
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, புதுச்சேரி

குருஜி சிவஸ்ரீ கே.கே. கோபாலசர்மா
பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை-20

சிவஸ்ரீ எஸ். குமார் B.Com,(ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா)
துரைசாமிபுரம் திருப்பூர்

சிவஸ்ரீ M. ராஜா
மேன்டாள் ரிசர்வ் வங்கி அதிகாரி, சென்னை

சிவஸ்ரீ M. சச்சிதானந்தம்
தனலட்சுமி வங்கி, மந்தைவெளி, சென்னை

சிவாகமஸ்ரீ.ஞானஸ்கந்த மூர்த்தி சிவாச்சாரி யார்
அறுபடைவீடு, பெசன்ட்நகர், சென்னை

சிவஸ்ரீ.L. ஆறுமுகம் B.Sc.,S.I.(Retd)
சென்னை மாநகராட்சி

சிவஸ்ரீ ஏ. வெங்கடேசன்
ராஜா அண்ணாமலை புரம்,சென்னை-28

சிவஸ்ரீ .N. கார்த்திகேயன்
பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

குகஸ்ரீமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41

சிவஸ்ரீ .அபிராமன்
கௌரி டவுன் கோவை

சிவஸ்ரீ .சீனு. அருணாசலம்
சைவசித்தாந்தப் பயிற்சி மையம், சிதம்பரம்

ஸ்ரீமதி எஸ். சியாமளா ஸ்ரீநிவாசகோபாலன்
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,திருவான்மியூர், சென்னை-41

திருமதி, பானுமதி மாதவன் திருவல்லிக்கேணி

சிவஸ்ரீ,சாமி.சுப்பையாஸ்தபதியார்குமாரர்
சிவஸ்ரீ.சிவா (எ) சுவாமிநாத ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி,காஞ்சிபுரம்

சிவஸ்ரீ கே,பி,பி. பன்னீர்செல்வன்
கூட்டுறவு சங்கங்களின்கூடுதல் பதிவாளர்

சிவஸ்ரீ.M.இராஜசிம்ம மகேந்திரன்,
சிவஸ்ரீ.S.மோகன சம்பத்
பெருமாளகரம், திருவேற்காடு

சித்தாந்த ரத்தினம்சிவஸ்ரீ க.இரத்தினசபாபதி
திருவேங்கட முதலி தெரு புதுப்பேட்டை, சென்னை-2

சிவஸ்ரீ T.K. நீலகண்டன்
2, ரயில்வே காலனி 2வது தெருஅமைந்தகரை , சென்னை-29

சிவஸ்ரீ வி,எஸ்.கல்யாணராமன்
சுக்ருதா, மாருதிநகர், பெங்களூரு. 560072

திருவாசகச்செம்மணி
திருவையாறு வே.ரமணன், சிதம்பரம்

ஜினஸ்ரீ. மல்லி. ஜினேந்திரதாஸ்
CLRI .கிண்டி சென்னை

சிவஸ்ரீ,ஆறுமுகம் .CLRI .
கிண்டி சென்னை

சிவாலயம் சிவஸ்ரீ ஜெ.மோகன்
அபிராமபுரம், சென்னை-600 004

சிவஸ்ரீ புலவர் மா.கி.ரமணன்
தமிழாசிரியர், திருவொற்றியூர்,சென்னை-19



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

**சிவஸ்ரீ டாக்டர் தி.க.தேவராஜன்**
மெயின்ரோடு. திருமழிசை

**சிவஸ்ரீ. வே. வெங்கட்ரமணி தலைவர்,**
பக்தமண்டலி, இரத்தினகிரீஸ்வரர் கோயில்,செ- 90

**சிவஸ்ரீ.எஸ், சத்தியநாராயணன்,**
ஸ்ரீபிரசாத வேதிக் அஸ்டிராலஜி,சென்னை -28

**சிவஸ்ரீ சாந்தா பரமேஸ்வரன்,பெங்களூரு,**

**திருமதி.சுமதி சுப்ரமணியன், நவி மும்பை,**

**N.V.M.G. RAMAN,**
**Dugar, KesavaPerumalpuram Chennai-28**

**சிவத்திரு பி, வடிவேல் கண்ணன்,**
அருணோதயம், அருணாச்சலா பவுண்டேஷன் கோவை

**சிவஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசன்,ராம் பிளாட்ஸ் ஸ்ரீநகர் காலனி, சென்னை 15**

இந்நூலுக்குத் தேவையான ஒவியங் களை வரைந் தளித்த ,மயிலை காசி ஸ்தபதி யார்கோவி(எ)கோவிந்தராஜன்)ஆகியோ ருக் கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும்தேவையானபடங்கள் தமிழ்நாடு தொல்லியல்(ம)அருங் காட்சி யத் துறையினரிடமிருந்தும் திருவாவடு துறை ஆதீனத்திலிருந்தும்பெறப்பட்டன. இந்திய மத்திய தொல்லியல்துறை மே னாள் அதிகாரிதிரு.தியாக.சத்திய மூர்த்தி அவர்களும், மயிலை ஆர்.ராஜா இன்னும் பல அன்பர் களும் அளித் தார்கள். இவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்நூலினைப்பலருக்கும் அறிமுகப் படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் பிரம்மஸ்ரீ ஜி.பரமேஸ்வர தீக்ஷிதர் அன்பர்கள் பரமக்குடி திரு(ம்) திரு மதி. ஹரி வாசு தேவ் தம்பதியினர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதா ரங்களைத் திரட்ட உதவியாக இருந்த டாக்டர் உ.வே.சாமிநாதைய்யர் நூலகத்தினர்க்கு எங்கள் நன்றி.

இந்நூல் அச்சிடுவதற்கு உதவியாக கணினி தட்டச்சு செய்துதவிய திரு.சு.கதிர் வேலு அவர்களுக்கும், நிழற்பிரதிகளைச் செய்து தந்த சத்தியா பிராஸஸ் திரு .ராதா கிருஷ்ணன் அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட் ட ளித்த ஸ்ரீஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமை யாளர்கள் திரு.சுந்தர மூர்த்தி, திரு. செல்வராஜ் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. கே.வசந்தா எனது அனைத்து சிவப்பணி களும் நன்கு நடைபெற இல்லப் பொறுப் புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருந்துவருகிறாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பர்கள்அனைவருக்கும் உண்ணா முலை அம்பிகை உடனாகிய அண்ணா மலை யெம்மண்ணல் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை அளித்து அருள் பாலிக்க வேண்டு மென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

திருமயிலாபுரியில் புன்னை மர நீழ லில் வளர் பொற்கொடியான கற்பக வல்லியின் திருவருள் எங்கும் நிறைந்து எல்லோரையும் வளத்துடனும், மகிழ்ச்சி யுடனும் வாழ வைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் என்றும் சிவப்பணியில்,

பூசை. ச. ஆட்சிலிங்கம்

பூசை. ச. அருணவசந்தன் (எ)
பூசை.ச.ஆட்சிலிங்கம்

விக்ருதி ஆண்டுவைகாசி விசாக நன்னாள்
ஞான பூர்ணிமா 27-05-2010 புத்த பூர்ணிமா
வியாழக்கிழமை அலைபேசி-9941124964

**சிவமஞ்சரி : சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்**
**சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை

# இந்நூலின் உள்ளே....


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| மலர் 41 | ஸ்ரீபூத லிங்கேஸ்வரர் | ” | 1281 |
| மலர் 42 | ஸ்ரீ இராட்சத லிங்கேஸ்வரர் | ” | 1313 |
| மலர் 43 | ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் | ” | 1345 |
| மலர் 44 | ஸ்ரீ தட்சிணாமூர்த்தி | ” | 1377 |
| மலர் 45 | ஸ்ரீ சிவாச்சாரியர்கள் | ” | 1409 |




Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமன்ன முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

பேரன்புடையீர், சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த ஒன்பதாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன).இவை

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறைஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க்) தியாகராஜர்
21. கேதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. திருமணக்கோலநாதர்
26. பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறை அறிமுகம்
28. வேதஆகம புராணீசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. தீர்த்தேசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சிணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்ப ரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலயத் திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்தத் தாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜ லிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

## சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பு நோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதினம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சிவமஞ்சரிச் செம்மல் என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் அருட்பணி அரசு என்ற பட்டத்தையும், சேலம் அறுபத்து மூவர் விழாக் குழுவினர் சிவசேவாரத்தினம் எனும் விருதையும் அளித்து கௌரவித்துள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஸ்ரீ பூதலிங்கேசுவரர்

பூதங்கள் சமய வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளனஅனைத்துச் சமயங்களும் பூதர் களைத் துணைத் தெய்வங்களாகக் கொண் டுள் ளன. பூதர்கள் தரும வழியில் நடப்பவர்களா கவும், பணம், புதையல் பொக்கிஷங்களைக் காப்பவர்களாக வும் போற்றப்படு கின்றனர்.

சிவ வழிபாட்டில் பூதர்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளனர். சிவபெருமான் பூதநாயகன் என்று அழைக்கப்படுகிறான். பூதர்கள் சிவனு டைய சேனையில் மகாவுக்ர வீரர்களாகவும், அவர் நடனமாடும்போது இசைக்கருவிகள் வாசிப்பவர்களாகவும் உள்ளனர். சிவாலயங் களில் பூதர்களை மதில், ஸ்ரீவிமானம் ஆகியவற் றில் அமைத்துள்ளதைக் காண்கிறோம். சிவவடி வங்கள் பலவற்றில் பூதர்களும் இணைத்துச் செய்யப்பட்டுள்ளனர்

பூத என்ற சொல் பல பொருள்களைக் குறிக் கிறது. பூத என்பதற்கு மகிழ்ச்சியைத் தருவது என்பது பொருள். மக்கள் பூதர் என்ற பெயரைச் சூடினர். வைணவம் போற்றும் ஆழ்வார்களில் ஒருவர் பூதத்தாழ்வார் என்ற பெயர் பூண்டிருந் தார்.சங்கப் புலவர்கள் பூதனார், கரும்பிள்ளைப் பூதனார், குன்றம்பூதனார்,கோடைபாடியபெரும் பூதனார், காவன் முல்லைப் பூதனார், வெண் பூதனார் என்ற பெயர்களுடனும் அரசன் ஒருவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற பெய டனும் இருந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம்.. ஊர்களுக்குப் பூதூர், பூதமங்கலம், பூதபுரி என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன.

பூத என்ற சொல் கடந்த காலத்தைக் குறிக் கிறது. காலத்தின் நாயகனான சிவபெருமான். பழைமைக்கும் பழைமையானவன் என்ற பொரு ளில் பூதபுராணர் என்றும்பூதேசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார். பூதலிங்கம் என்ற பெயரில் பெருமான் பல தலங்களில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பூதம் என்பதற்கு ஆதாரம் என்பதும் பொருள். உலகத் தோற்றத்திற்கு ஆதாரமான நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் என்னும் ஐந்தும் மாபூதம் என் றும், பஞ்சபூதங்கள் என்றும் அழைக்கப்படுகின் றன. இவற்றில் பெருமான் நீங்காது நின்று ஐந் தொழிலை ஆற்றுகின்றான். அதைக் குறிக்கும் வகையில் ஐந்து லிங்கங்களை அமைத்து அவற் றைப் பஞ்சபூத லிங்கங்கள் என்று போற்றி வழி படுகின்றோம்.

இப்படிப் பல்வேறு நிலையில் விளங்கும் பூதநாதனான சிவபெருமானின் பெருமைகளைப் பேசுவதாகச் சிவமஞ்சரியின் நாற்பத்தோராவது மலர் மலர்கிறது. இதில் சிவகணங்களான பூதர் கள்,அவர்களின் சிவசேவை,பெருமான் பஞ்ச பூத லிங்கங்களாக இருந்து அருள்பாலிப்பது, பூத லிங்கம் என்னும் கடந்த காலத்தை உணர்த்தும் சிவலிங்கமாக இருந்து அருள்பாலிப்பது முதலிய அனேக செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள் ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்பு டன் அழைக்கிறோம்

சித்ரபூதேசுவரி உடனாய பரம பூதேசுவரர் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து, அருள்பாலிக்க வேண்டு மென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன். - சிவசுந்தரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பூத வழிபாடு - சிந்தனைத் துளிகள்

ஸ்ரீ-அர்த்தநாரீசுரவர் -திருவண்ணாமலை

பூதர்கள் கூட்டமாக வசிப்பவர்கள். பேராசையற்றவர்கள். மகிழ்ச்சியில் எப்போதும் திளைத்திருப்பதுடன் ஆடிப்பாடி மகிழ்பவர் கள். சுயநலமற்றவர்கள். மற்றவர்களுக்கு உதவும் மனப் பான்மை கொண்டவர்கள்.

எல்லா தெய்வங்களுமே பூதர்களைப் படை யாகக் கொண்டிருக்கின்றன. முருகன் பூதர்களை சேனைகளாகக் கொண்டுள்ளான். அவர்களைப் பூத வெள்ளம் என்று புராணங்கள் கூறுகின்றன. அருணகிரிநாதர் முருகனின் பெருமைகளைப் போற்றும் வரிசையில் பூதங்களையும் போற்றிப் பூத வேதாள வகுப்பு என்ற நூலைப் பாடியுள் ளார். இதில் பூதங்களின் வீர தீரங்கள் போற்றப் பட்டுள்ளன.

விநாயகர் பூத கணங்களால் சேவிக்கப்படு கிறார். அவருடைய தோற்றம் ஏறக்குறைய பூதத் தை ஒத்ததாகவே உள்ளது. அவருக்கு இருபுற மும் பழங்கள், பட்சணங்கள் நிறைந்த கூடை களை ஏந்திய பூதங்களை அமைக்கின்றனர்.

காளி பூத வாகனத்தை உடையவள். சேலம் மாவட்டத்தில் அவள் பூதகாளியம்மன் என்ற பெயருடன் வீற்றிருக்கின்றாள். கொங்கு மாவட் டத்தில் அனேக காளியம்மன் ஆலயங்களில் ஆண் பூதங்களையும், பெண் பூதங்களையும் துணைக் கடவுளராக வைத்துள்ளனர். இவை நெடிய அகன்றசுதை வடிவில்அச்சமூட்டும் வகையில் உள்ளன.

தென் மாவட்டங்களில் தெய்வங்கள் ஏறி வரும் தாவும் குதிரைகளின் தூக்கிய முன் கால் களைத் தாங்கி நிற்பதாக இரண்டு பூதங் களை அமைத் துள்ளனர். அவற்றின் இடையில் மாடம் அமைத்து அதில் காளியை அமைக்கும் வழக்க மும் உள்ளது. இந்த பூதங்களுக்கும் காளிக்கும் வழிபாடு செய்யப்படுகிறது.

பூதங்களுக்கு மக்கள் படையலிட்டு வழி படுகின்றனர். அவ்வழிபாட்டினால் மகிழ்ந்து பூதங்கள் மண் வளத்தையும் பயிர்ச் செழிப்பை யும் பெருக்கி நற்பலன்களைத் தரும் என்று நம்பு கின்றனர். கர்நாடக மாநிலத்தில் பூத வழிபாடு சிறப்புடன் உள்ளது. சங்க இலக்கியங்களில் பூதர்கள் நகரைக் காப்பதுடன், தருமத்தைப் பரிபாலிக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளன..

பூதங்கள் இளமையானவர்கள் என்பதைத் தேவாரம் பாடிளம் பூதம் என்றும் அகன்ற கண் ணுடையவர்கள் என்பதை ஆந்தை விழி பூதத்தார் என்றும் குட்டையாகவும் குண்டாகவும் இருப் பதைக் குண்டை, குறட்பூதம் என்றும் பாடி மகிழ் கிறது..

பூதம் என்பதற்கு வடிவம் என்பது பொருள். திருச்சி மலைமீது வீற்றிருக்கும் சிவபெருமான் தனது பக்தையின் பெண்ணிற்கு அவளுடைய தாயின் வடிவுடன் சென்று பிரசவம் (மகப்பேறு) பார்த்து சேவை புரிந்தார். அதையொட்டி "தாயுமானவர்" என்று அழைக்கப்படுகிறார். இப்பெயரை வடமொழியில் மாத்ருபூதேசுவரர் என்று அழைக்கின்றனர். திருவண்ணாமலையில் இரமணர் தம் தாயின் சமாதியின்மீது நிறுவிய லிங்கத்திற்கும் மாத்ருபூதேசுவரர் என்று பெயர் சூட்டியுள்ளார்.

பூதம் என்பதற்கு ஆதாரம் என்பது பொருள். திருவாலங்காட்டில் வேளாளர் எழுபதின்மர் நெருப்பில்மூழ்கி உயிர்துறந்த நிகழ்ச்சிக்குச் சிவபெருமான் சாட்சியாக இருக்கிறார். அவரைச் சாட்சி பூதேசுவரர் என்றுஅழைக்கின்றனர். இதற்குச் சாட்சி வடிவானவர் என்பது பொருள்.

அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானை குருபூத வேலன் என்று போற்றுகிறார். இதற்கு மங்கல உருவமுடைய குருவடிவாக விளங்குகிறவன் என்பது பொருள். (பூதம்- மங்கல வடிவம்)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூதபுரிகள் - பூதூர்கள்

பூத வழிபாட்டின் சிறப்பாலும், பூதர்களைப் போற்றும் வகையிலும் பல ஊர்களுக்குப் பூதூர், பூதப்பாண்டி, பூதபுரி முதலான பெயர்கள் வழங்குகின்றன. அவற்றில் பெருமான் பூதேசர் பூதபுரீசர் என்ற பெயர்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். அத்தகைய தலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

### திருப்பெரும்பூதூர்

வைணவ சமயத்தின் உன்னத ஆச்சாரியாரான ஸ்ரீமத் ராமானுஜர் அவதரித்த திருத்தலம் ஸ்ரீ பெரும்பூதூர். இது பூதர்களால் அமைக்கப்பட்டதால் பூதபுரி என வழங்கு கிறது. இங்குள்ள சிவாலயம் ஒரே இரவில் பூத கணங்களால் அமைக்கப்பட்ட தென்பர். இறைவர் பூதபுரீசுவரர். அம்பிகை மங்களாம்பிகை.

### பூதப்பாண்டி

கன்யாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தின் தலைநகராகப் பூதப்பாண்டி என்னும் பெரிய ஊர் உள்ளது. பாண்டியர்கள் அமைத்த நகரமென்று கூறப்படுகிறது. சங்கப் பாடல் பாடிய ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்பவனால் அமைக்கப்பட்ட தென்று ஒரு சிலரும், அவன் மகனான பசும்பொன் பாண்டியன் தன் தந்தையின் பெயரால் இதை அமைத்தான் என்று ஒரு சிலரும் கூறுகின்றனர்.

இவ்வூரில் பூதலிங்கசுவாமி ஆலயம் என்னும் சிவாலயம் உள்ளது. இங்குள்ள சிவ பெருமான் பூதலிங்கேசுவரர் இவருக்குச் "சாலியன் கண்ட திருமேனி" என்ற பெயரும் வழங்கு கிறது. இது குடைவரைக் கோயிலாகும். ஆலயத்தில் அருகில் பெரிய தெப்பக்குளம் உள்ளது. கருவறையும் அதிலுள்ள லிங்கமும் ஒரே பாறையில் ஆனது. இங்குள்ள சிற்பங்கள் புகழ்பெற்றதாகும். இறைவியின் பெயர் சிவகாமசுந்தரி.

### சென்னை சிவபூதம்

சென்னையை அடுத்துள்ள ஆவடியிலிருந்து போரூர் செல்லும் வழியில் மேட்டுக் குப்பம் சாலையில் (மேம்பாலத்திற்கு அருகில் கவர் கார்டன் நிறுவனத்திற்கு அருகில்) வானகரத்தையொட்டிச் சிவபூதம் என்ற இடமுள்ளது. இங்கு வயல் வெளியில் சிவலிங்கம் உள்ளது. கோயில் புதியதாகத் திருப்பணி செய்யப்படு கிறது.

### காஞ்சி நகர் பூதநாதேசம்

காஞ்சிபுரம் கிழக்கு இரத வீதியும் வடக்கு மாடவீதியும் இணையும் இடத்தில் (பூக்கடை சத்திரம் அருகில்) வடக்கு நோக்கியவாறு விநாயகர் ஆலயம் உள்ளது, அதனுடன் இணைந்தவாறு கிழக்கு நோக்கி நிலையில் பூதநாதேசுவரம் உள்ளது, இது காஞ்சியில் கணங்கள் வழிபட்டுப் பேறு பெற்ற இடமாகும், கருவறையில் பூதநாதேசுவரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார்.

அவருக்குப் பின்புறம் சுவரில் கல்லாலான புடைப்புச் சிற்பம் பதிக்கப்பட் டுள்ளது. இதில் மாமரத்தடியில் அம்பிகை சிவ பூசை செய்யும் காட்சியும் கீழே வரிசையாக நால்வர் திருவுருவங்களும் இடம் பெற்றுள்ளன. கருவறைக்கு முன்புறம் நந்தியும் அவருக்கு அருகில்தெற்கு நோக்கியவாறு சண்டீசரும் அமைந் துள்ளனர்.

இங்குள்ள விநாயகர் ஆலயம் முன்னாளில் பூதத்தார் ஆலயமாக இருந்து பின்னாளில் விநாயகர் ஆலயமாக மாற்றப்பட்டிருக்கலாம் என்று கருது கின்றனர். இக்கோயில் வடக்கு நோக்கி இருப்பதும் ஈசான திசையில் இருப்பதும் இக்கருத்துக்கு வலு சேர்க்கின்றன.

### பூதகணங்கள் பூசித்த திருப்பைஞ்ஞீலி

திருச்சிக்கு அருகிலுள்ள மணச்ச நல்லூரிலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் திருப்பைஞ்ஞீலி என்னும் தலமுள்ளது. இத்தலத்து இறைவன் நீலகண்டன். இது பூதங்கள் பூசித்த தலமாகும். இவ்வூர் தேவாரத்தில் திருஞான சம்பந்தர் "நித்தலும் பாரிடம் பணிசெய்யும் பயில் பைஞ்ஞீலி" என்றும், அப்பர் சுவாமிகள் "படைகொள் பாரிடம் சூழ்ந்த பைஞ்ஞீலியார்" என்றும் அருளிச் செய்துள்ளனர். (பாரிடம் - பூதம்)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## தரணி – பூதேசுவரர்

பாடல்பெற்ற திருத்தலமான பந்தணை நல்லூருக்கு அருகிலுள்ள கீழமாந்தூர் என்ற ஊரை ஒட்டி தரணி என்ற சிற்றூர் உள்ளது. அதில் தென்கிழக்கு முனையில் குளமும் அதன் கரையில் பூதநாதேசுவரர் ஆலயமும் உள்ளன. அம்பிகை பாலாம்பிகை தரணி என்பதற்குப் பூமி என்பது பொருள் பூமிதேவி வழிபட்ட இடமாதலின் தரணி என்றும் அதில் பூமி பூதத்துடன் பூதங்கள் வழிபட்டதால் இறைவன் பூதேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

## பூதர் ஆலயங்கள்

ஆதிநாளில் மக்கள் பூதர்களைக் காவல் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டனர். பழம் பெரும் கடலோரத் திருநகரான காவிரிப் பூம் பட்டினத்தில் பூதர்களின் ஆலயங்கள் இருந்ததை மணிமேகலையும் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.

திருவண்ணாமலை, சிதம்பரம், சென்னை முதலிய இடங்களில் பூதர் ஆலயங்கள் இன்றும் உள்ளன. அவை கால மாற்றத்தால் வேறு பெயர் களில் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

பஞ்சபூதத்தலமான சிதம்பரத்தில் தெற்கு ரத வீதியில் வடக்கு நோக்கியவாறு பூதருக்கான ஒரு சிற்றாலயம் உள்ளது. அதிலுள்ள பூதர் இந்நாளில் நரமுக விநாயகர் என்று அழைக்கப்படுகி றார். அகன்ற விழிகள், பருத்த வயிறு, குட்டை யான கைகள் ஆகியவற்றுடன் வீற்றிருக்கும் இவரை மக்கள் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

பஞ்சபூதத் தலங்களில் மற்றொன்றான திருவண்ணாமலையில் அண்ணாமலையார் ஆலயத்தின் பெரிய மதிலின் வடகிழக்கு முனை க்கு அருகில் (வடக்கு மாடவீதியில்) பூதத்தார் ஆலயம் உள்ளது. தலையில் விரிந்த ஜடாமண்ட லத்துடன் அகன்ற விழிகள், அகன்ற மார்பு, பருத்த வயிறு, குட்டைக் கால்களுடன் கரங்களை முன் னோக்கி நீட்டியவாறு இருக்கும் இவர் அக்னி பூதமாவார். இவரை பூதநாராயணர் என்று அழைக் கின்றனர். இவருடைய ஆலயம் வைண வத் கோயிலாகத் திகழ்கிறது.

சென்னையில் மவுண்ட்ரோடில் (அண் ணா சாலை) மசூதிக்குப் பின்புறம் பூதப் பெருமாள் கோயில் உள்ளது.

காலப்போக்கில் பூதர் வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டுடன் கலந்துவிட்டது. தென் மாவட் டத் திலுள்ள அனேக சிறு தெய்வ ஆலயங்களில் பெரிய பூதர்களைக் காணலாம். கொங்கு நாட்டில் பூதர் வழிபாடு முனிவழிபாட்டுடன் கலந்துவிட்டது. இம்மண்டலத்தில் அனேக ஆலயங்களில் பூதங்களைக் காவல் தெய்வங்க ளாக அமைத்துள்ளனர்.

பாண்டி மண்டலத்தில் பாய்ந்துவரும் ஐய னார், சாத்தனார், வீரர், கருப்பர் முதலியதெய்வங் களுடைய குதிரைகளின் தூக்கிய முன்னங்கால் களைத் தாங்கி நிற்பவர்களாக இரண்டு பூதர்கள் அமைக்கப்பட்டுள்ளனர். அனேக ஊர்களில் இத்த கைய உருவங்கள் அமைந்துள்ளன.

### கோச்சடை பூதம்

கோச்சடை என்னும் ஊர் மதுரைக்கு அருகில் உள்ளது. இங்குள்ள வில்லாயுதமுடைய ஐயனார் ஆலயத்தில் ஏறத்தாழ 20 அடி உயர முள்ள பூதத்தின் உருவம் சுதையால் அமைத்து வண்ணம் தீட்டப் பட்டுள்ளது. இது புகழ்பெற்ற பூதமாகும். வலிமையும் வனப்பும் உள்ள திட காத்திரமான மனிதர்களைக் கோச்சடை பூதம் போலிருக்கிறான் என்று கூறும் வழக்கம் மதுரைப் பகுதியில் உள்ளது.

### திருநெல்வேலி சங்கிலி பூதத்தார்

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் நெடிய மதிலின் தென்கிழக்கு மூலையின் உச்சி யில் சங்கிலி பூதத்தார் வீற்றிருக்கின்றார். இவருக் குச் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. சிறந்த வரம் அருளும் மூர்த்தியாக இவர் விளங்கு கிறார். மக்கள் இவரிடம் நேர்ந்துகொண்டு அது நிறைவேறியதும்காணிக்கைகளைச் செலுத்தி வழி படுகின்றனர். உயர்ந்த மதில்மீது அமர்ந்திருக்கும் இவருக்கு அருகில் சென்று வழிபடப் படிக் கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவருக்கு ஆண்டு தோறும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப் படுகின்றன.

திருப்பரங்குன்றத்தில் அண்டாபரணர் என்னும் பூதத்தார் திருவுருவம் உள்ளது. இவருக் குப் படையல்களும் சிறப்பு வழிபாடு களும் நடத்தப்படுகின்றன.

சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் தேவசபை (சோமாஸ்கந்தர் சந்நிதி) யின் மேற்குச் சுவரில் அர்த்தசாம அழகரின்அருகில் சிறுவிமானத்து டன் சிவகணமாகிய பூதம் உள்ளது இது சங்கி னை ஊதும் நிலையில் உள்ளது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# மகேஸ்வர வடிவங்களில் பூதன்

சிவபெருமானின் திருவுருவங்களில் இருபத்தைந்தை மகேசுவர வடிவங்கள் என்று கொண்டாடுகின்றனர். சில நூல்கள் 64 திருவுருவங்களை அட்டாட்ட விக்கிரகங்கள் என்று போற்றுகின்றன. சிவபெருமானுடன் பூதங்கள் இடம் பெற்றுள்ள சிவவடிவங்கள் சிலவற்றை இங்கே காணலாம்..

பூதத்துடன் கூடிய சிவமூர்த்தங்களில் தலையானது பிட்சாடனர் ஆகும். இதில் பெருமானின் இடப்புறம் பூதன் நிற்கின்றான். அவன் இரண்டு கைகளாலும் அகன்ற தட் டைத் தலைக்கு மேல் ஏந்திப் பிடித்துள்ளான். வலப் புறம் மான் தாவி நிற்கிறது. சோழ நாட்டுத் திருமேனிகள் பலவற்றில் மேற் சொன்ன பூதத் துடன் பெருமானுக்குக் குடை பிடிக்கும் கோலத் தில் உள்ள பூதத்தையும் காண்கிறோம்.

சோழநாட்டு நடராசத் திருமேனிகளில் பீடத்தில் ஊன்றிய திருவடியின் இருபுறமும் பஞ்சமுக வாத்தியத்தை இசைக்கும் பூதனையும், பிரம்ம தாளம் இசைக்கும் பூதனையும் காண்கிறோம் .சிலவற்றில் இவர்களுடன் கொம்பு ஊதும் பூதனையும் கஞ்சிரா இசைக்கும் பூதனையும் சேர்த்து நான்கு பூதங்களாக அமைக்கின்றனர்.

இடபாருடர் வடிவில் பெருமானுக்கு நீண்ட காம்பைக் கொண்ட குடையைப் பிடிக்கும் பூதனைக் காணலாம். இவனைப் புஷ்ப தந்தன் என்று சிவமகா புராணம் அழைக்கிறது. பாபநாசத்தில் உள்ள பெரிய கல் திருமேனியான இடபாருடர் வடிவில் இடப்புறம் குடைபிடிக்கும் பூதனின் திருவுருவமும் இடம் பெற்றுள்ளது. பெரிய இடப வாகனங்களில் பூதனும் சேர்ந்தே அமைக்கப்பட்டுள்ளான்.

கங்காளர் திருவுருவங்களில் அவருடன் இசைக் கருவிகள் இசைக்கும் ஐந்தாறு பூதங்களும் இடம் பெற்றுள்ளன.

குதிரையில் பெருமான் ஏறி வரும் போதும், குதிரைக்கு இணையான வேகத்தில் குடை பிடித்துக் கொண்டே ஓடி வரும் பூதனைக் காண்கிறோம்.

கால சம்ஹாரர் வடிவில் பெருமானுடன் வாள், வஜ்ரம், முதலிய படைக்கலங்களை ஏந்தி

-பூதத்துடன் விளங்கும் பிட்சாடனர்

நிற்கும் பூதர்களைக் காண்கிறோம்.திருக் கடவூர் கால சம்ஹாரர் திருவுருவத்தின் பீடத்தில் மாண்டு வீழ்ந்து கிடக்கும் யமனையும், அந்த உடலின் காலில் கயிற்றைக் கட்டி இழுத்து அப்புறப் படுத்த முயலும் பூதத்தையும் காண்கிறோம்.

சிவபெருமான் பகீரதனுக்கு அருளும் கோலம் மாமல்லபுரத்தில் பெரும்பாறைச் சிற்பமாக உள்ளது. அதில் பெருமான் நீண்ட பெரிய சூலத்துடன் திகழ்கிறார்.அவருடன் பூதம் உள்ளது. அதற்கு வயிற்றில் சிங்கமுகம் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிவபெருமான் வைரவர் கோலம் கொள்ளும் வேளையில் பூத, வேதாள, பிசாச கணங்கள் சூழ பவனி வருகிறார். வடுகர் என்றும், சட்டநாதர் என்றும் அழைக்கப்படும் வைரவ மூர்த்தங்க ளுடன் பூதர்கள் அமைக்கப்பட் டுள்ளனர். திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்திலுள்ள அம்பிகை சந்நிதி சட்டநாதர் வடிவத்திலும் சீர்காழி முத்துசட்டை நாதர் என்னும் வடுகநாதர் உலாத்திருமேனியிலும் அவருக்கு இருபுறத்திலும் பூதர்களைக் காணலாம்.

கலைஞர்கள் தமது உன்னத கற்பனைத் திறத்தால் பெருமானை அமைக்கும் போது, அவருடன் நகைச்சுவை ததும்ப பூதர்களையும் அமைத்துள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாலயங்களில் பூதர்கள்

...தங்கள் ஆர்ப்பரிக்க யானையின் உடலிலிருந்து பெருமான் வெளிப்படுதல்

சிவபெருமான் பூதர்களின் தலைவன். எனவே, பூத நாயகன், பூதேசுவரன், பூதநாதன் என்று பலவாறு அழைக்கப்படுகிறான். சிவாலயங்களில் பல்வேறு நிலைகளில் பூதர்களை அமைந்துள்ளனர். அந்த செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

ஆலயத்தில் நுழைந்ததும் பலிபீடத்திற்கு அருகில் அகன்ற விபூதி மடலைத் தாங்கியவாறுள்ள பூதத்தின் கல்திருமேனியைக் காண்கிறோம். இந்த பூதம் விபூதி பூதம் என்று அழைக்கப்படும். இதன் தலையிலுள்ள மடலில் விபூதியை நிறைத்து வைப்பர். திருக்குளத்தில் நீராடி தூய்மையுடன் ஆலயத்துள் வருபவர்கள் இந்த விபூதியை எடுத்து அணிந்து கொள்வர்.

இதை அடுத்துள்ள பலிபீடத்தின் பீடத்தில் முன்புறம் பிரார்த்தனா கணபதியும் மற்றைய மூன்று பக்கங்களில் பூதர்களின் உருவங்களும் அமைந்திருக்கின்றன. பூதர்கள் அவரைப் போற்றுவதுடன் அவருக்குப் பணிபுரிவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர். இதை உணர்த்தும் வகையில் பலிபீடத்தின் நான்கு பக்கங்களிலும் பூதர்களை அமைப்பதும் உண்டு. திருவாவடுதுறை பலிபீடத்தில் நாற்புறமும் பூதர்களைக் காணலாம்.

வாயிலின் இருபுறமும் பூதர்களின் உருவங்கள்சங்கநிதி பதுமநிதியாக நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சிவபெருமானின் அபிஷேக நீர் வெளியேறும் நாளத்தினைத் தாங்கியவாறுள்ள பூதத்தைச் சில தலங்களில் காணலாம். இவரைத் தீர்த்த பூதம் என்று அழைக்கின்றனர். இவருடைய அனுமதியுடன் தீர்த்தநீரை எடுத்துத் தலையில் தெளித்துக் கொள்கின்றனர். கேரளத்திலுள்ள பெரும்பான்மையான ஆலயங்களில் கோமுகத்தை (தீர்த்த நாளம்) தாங்கி நிற்கும் தீர்த்த பூதர்களை அமைத்துள்ளனர்.

ஸ்ரீ விமானத்திலும் கோபுரங்களிலும் பூதர்கள் கலையழகுடன் வீற்றிருக்கின்றனர். இவற்றின் உச்சியில் நான்கு மூலைகளிலும் பூதர்கள் சங்குடன் அமர்ந்திருக்கக் காணலாம். இவர்களின் இருபுறமும் நந்திகள் படுத்துள்ளனர். இவர்களைக் கோடி பூதங்கள் என்பர்.

திருமதிலின் உச்சியில் நான்கு மூலை களிலும் பூதங்கள் அமர்ந்திருப்பதைக் காண்கிறோம். அவற்றின் இருபுறமும் நந்திகள் படுத்துள்ளனர். இந்த பூதர்கள் குத்துவாள், தடி, தண்ட ஏயுதம் ஏந்தியவர் களாக உள்ளனர். சில தலங்களில் புலியை அழுத்திப் பிடித்துக் குத்திக் கொல்லும் பாவனையில் பூதர்கள் உள்ளனர். மண்டபங்களின் தளத்தின் நான்கு முனைகளிலும் பூதர்களைக் காண் கிறோம்.

ஸ்ரீ விமானத்தில் கருவறை சுவரும் மேல் தளமும் கூடுமிடத்தில் மழைநீர் வழிந்தோட வளைவான அமைப்பு உள்ளது. இது கொடுங்கை எனப்படும். இதன் கீழ் வரிசையாக நாற்புறமும் பூதங்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் உள்ளனவாக அமைக்கப் பட்டிருக்கும். சில பாம்பைப் பிடித்து அடுத்ததன் மேல் விடுகின்றன. சில குட்டிக் கரணம் போடும். சில பிடித்துத் தள்ளி விளையாடும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மகிழ்ச்சியுடன் இருக்கின்றன. இந்த வரிசை பூதவரி எனப்படும்.

இவையன்றி, மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுள்ள வாகனங்கள், விமானங்கள் ஆகியவற்றிலும் கோடி பூதங்களும் தாங்கு பூதங்களும் இடம் பெற்றுள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூத சதுக்கம்

**பூத**வழிபாடு பூம்புகாரில் சிறப்புடன் இருந்ததைப் பண்டை இலக்கியங்கள் கூறுகின்றன.

பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தில் தெய்வீகச் சிறப்புப் பெற்ற ஐந்து மன்றங்கள் பூம்புகாரில் இருந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவை வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம் பூத சதுக்கம், பாவை மன்றம் ஆகிய ஐந்தாகும்.

வெள்ளிடைமன்றம் திருடர்களைத் தண்டிக்கும் இடம். வியாபாரப் பொருட்பொதிகளை திருடுபவர்கள் அவற்றைத் தலையில் சுமந்து கொண்டு வெளியே செல்லாமல் திகைத்து அங்கேயே சுழலும் படிச் செய்யும்.

கூன், குருடு முதலான உடற்குறையுள்ளோர் இலஞ்சி மன்றத்தில் உள்ள பொய்கை களில் மூழ்கினால் நல்ல உடல் பெறுவர். தொழு நோயால் அழுகின உடல் பெற்றவர்கள் மூழ்கினால் பொன்போல் பொலியும் உடல் பெறுவர்.

நெடுங்கல் மன்றத்தில் நெடியகல் நாட் டப்டிருக்கும் வஞ்சனையால் மருந்திடப் பட்டு அதனால் பித்தேறி வருந்துபவர்களும், நஞ்சருந்தி நடுக்கம் உற்றவர்களும், பாம்பு கடித்து விஷம் ஏறியவர்களும், பேய்களால் பீடிக்கப் பட்டு அலைக்கழிக்கப்படுபவர்களும், இங்குள்ள நெடுங்கல்லைச் சுற்றி வந்து வழிபட் டால் அத் துன்பங்கள் நீங்கும்.

பூத சதுக்கத்தில் பூதர்கள் வாழ்ந்தனர். இப் பூதர்கள் பொய்த் தவவேடம் பூண்டு வஞ்சித்து வாழ்பவர்களையும், கற்பிலா பெண்களையும், பொய் சாட்சி சொல்பவர்களையும் பிறன் மனை வியை விரும்புவர்களையும், தீய அமைச்சர் களையும், கோள்கூறி கொடுமை செய்பவர் களையும் தம் கைப் பாசத்தால் பற்றி நான்கு காதம் கடுங்குரல் எழுப்பி அடித்து உண்டு அழிப்ப வர்கள். நன்மை விளைப்பவர்கள். ஆதலால் மக்கள் அவர்களை வழிபட்டனர்.

ஐந்தாவதான பாவை மன்றத்தில் அழகிய பெண் வடிவங்கள் இருந்தன. நாட்டில் அறத் திற்கு மாறான செயல்கள் நடக்கும் போதும் குற்றங்கள் நடக்கும் போதும் அவை பேசாமல் அழும். இவை அழுவதைக் கொண்டு மன்னன் தீயவை நடப்பதை உணர்ந்து அவற்றை தேடிக் கண்டு பிடித்து விலக்குவான்.

இவை ஐந்தினுள் பூதர்கள் வாழ்விடமான பூத சதுக்கமே மக்களோடு அதிக தொடர்புடையதாக விளங்கியது. மக்கள் தங்கள் குறைகளை நேர டியாக பூதர்களிடம்சென்று முறையிட்டனர்.

அவற்றிற்குப் பொங்கல், கள், மாமிசம் கலந்த உணவு, சுண்டல்கள் ஆகியுவற்றைப் படைத் தனர். அவை தம்மைக் காக்கும் என்று நம்பினர். அவையும் மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்தன.

மேலும், பூம்புகார் நகரத்தின் சுடுகாட்டின் நான்கு வாயில்களில் ஒருவாயில் பூதத்தால் காக் கப்பட்டது. அந்தப் பூதம் மடித்த சிவந்த வாயுடன் சூலமும் பாசக்கயிற்றையும் ஏந்தி சினத்தால் சிவப்பான கண்களுடன் இருப்பதாக மணிமேகலை கூறுகிறது.

நாளங்காடியில் பூதம் ஒன்று இருந்தது. முசுகுந்தன் என்னும் மன்னனின் நன்மைக்காக இந்திரன் இங்கு பூதங்களை அமர்த்தினான் என்பர். இந்திர விழாவைக் கொண்டாட மறந்தால் இப்பூதம் புகார் நகருக்குத் துன்பம் செய்யும் என்பது நம்பிக்கை.

சோழர்களின் தலைநகரங்களுள் கருவூரும் ஒன்றாகும். சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் கருவூர் பெருஞ் சதுக்கத்துப் பூத நாத னார் என்னும் புலவர் சில பாடல்களைப் பாடி யுள்ளார். அவர் பெயரை ஆய்வு செய்தவர்கள் கருவூரிலும் பெரியபூத சதுக்கமும் அதில் பூத வழிபாடும் இருந்தது என்று கருதுகின்றனர். சிலப் பதிகாரத்தில் கருவூரில் சதுக்க பூதத்தை அமைத்து மதுவேண் வடிவவள்வி செய்யப்பட்ட குறிப்பு உள்ளது.

இவற்றை நோக்க நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே பூதர்கள் வழிபாடு சிறப்புடன் தமிழகத்தில் இருந்ததை அறியமுடிகிறது.

சீர்காழி பூதங்களால் காக்கப்படுகின்ற நகரமென்று திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிததுள்ளார் அருகிலுள்ள பூம்புகாரில் இருந்ததுபோலவே சீர்காழியிலும் பூதவழிபாடு சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. சீர்காழி பூதநாதனான பைரவரின் நகரம் என்பது குறிப்பிடத்தக்கது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தேவார மூவர் வாழ்வில் பூதங்கள்

தமிழ்மறையான தேவாரத்தினை அருளிச் செய்த மூவர் வாழ்விலும் பூதர்கள் செய்த அருஞ் செயல்களைக் காண்கிறோம். சிவபெருமானின் ஆணைப்படி அவர்கள்அற்புதங்களை நிகழ்த் தினர் இதனைப் பெரியபுராணம் சிறப்புடன் கூறுகிறது. அதைத் தொடர் ந்து காணலாம்.

பல தலங்களை வணங்கியபின் திருஞான சம்பந்தர் திருவாவடுதுறைக்கு வந்து வழிபட்டுத் திருமடத்தில் தங்கி இருந்தார். அப்போது, அவருடைய தந்தையார் அவரிடம் வந்து வேள்வி செய்வதற்குரிய காலம் வந்துள் ளது.அதற்குப் பொருள் வேண்டும் என்றார். திருஞான சம்பந்தர் அந்தமில் பொருளான திருவாவடுதுறை பெருமானின் திருவடி களே என்று கூறி ஆலயத்துள் சென்று " இடரினும் தளரினும்" என்ற பதிகத்தைப் பாடினார்.

அவருடைய பாடலைக் கேட்ட இறைவன் அருள் புரிய விரும்பினார். அதை உணர்ந்த பூதம்ஒன்று ஆலயத்தின் முன்னுள்ள அகன்ற மலர்ப் பீடத்தில் மீது ஒராயிரம் பொற் காசுகள் நிறைந்த பொற்கிழியை வைத்தது. பின்னர் நாயனாரிடம் அன்பரே இது எடுக்க எடுக்கக் குறையாத உலவாக்கிழி சிவபெருமான் உமக்கு அளித்தது எடுத்துக் கொள்ளுங்கள்! என்று கூறி மறைந்தது.

திருஞானசம்பந்தர் அதை எடுத்துத் தந்தை யாரிடம் அளித்து உலகம் நலம் பெற சிவ வேள்வியை நீங்கள் புரியுங்கள்,சீர்காழி வேத வேதியர் அனைவருடன் இணைந்து செய்யுங்கள் என்றார்.

திருவாவடுதுறையில் நடைபெறும் தை மாதப் பெருவிழாவின் ஆறாம்நாள் அன்று திருஞான சம்பந்தர் ஆலயத்திற்கு வருதல்; பூதம் மலர் பீடத்தில் பொற்கிழியை வைத்தல் ; அதை ஞான சம்பந்தர் எடுத்துக் கொள்ளுதல்; ஆகியவை ஐதீக விழாவாகக் கொண்டா டப்படுகிறது. இதற் கென சிறிய பூதம் உள்ளது. (பார்க்க பக்கம் சிவமஞ்சரி .....)

திருஞானசம்பந்தர் வரலாற்றில் நடந்த பிறிதொரு அற்புதத்திலும் பூதர் செய்த பணி யைக் காண்கிறோம். அவர் பல தலங்களை வணங்கித் திருச்சத்தி முற்றம் தொழுது பட்டீச் சரத்தை நோக்கி வந்தார். அப்போது உச்சி வேளை யாக இருந்தது. கோடை வெப்பம் மிகுதி யாகி வருத்தியது. சிவபெருமான் அவருக்கு அருள் புரிய விரும்பினார். அதை உணர்ந்த ஒரு சிவபூதம் முத்துப் பந்தரை யாரும் அறியா வண்ணம் அவர் திருமுடிமீது பிடித்தது.

பெருமானே பட்டீசர் எம்மை அனுப்பி னார். இந்தப் பந்தர் உமக்கானது என்று அது மொழிந்தது. நாயனார் இறைவன் அருளை எண்ணி இது அன்பர்பிரான் அளித்த திருவடிநீழல் என வியந்தார். அன்பர்கள் முத்துப் பந்தலைப் பிடித்துக் கொண்டனர். பூதம் மறைந்தது

திருநாவுக்கரசர் வாழ்வில் வந்த பூத நிகழ்வுகளைக் காணலாம்.

நாவரசர் திருவதிகையிலிருந்து பல தலங் களை வணங்கி விட்டுப் பெண்ணாகடம் என்ற தலத் திற்கு வந்தார். அத்தலத்தில் வணங்கி பெரு மானே, நான் அமணர்களோடு சேர்ந்து வாழ்ந்த இந்த உடலுடன் வாழ விரும்பவில்லை. என்னு டைய உடல் சிவமாகவும், நான் உயிர் வாழவும் விரும்பினால், என்னுடலில் உனது முத்திரை களை இட்டருள்க என்று பாடிப் பரவினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொன்னார் திருவடிக்கு என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடி அதில் மின்னார் மூவிலைவேல் என்மேல் பொறி என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் என்று கூறி விண்ணப்பித்தார்.

அதைக்கேட்ட இறைவன் அருள்புரிந்தார். ஒரு சிவபூதம் மற்றவர் கண்களுக்குத் தோன்றாது இருந்து அவருடைய தோளில் சூலம், இடபம் ஆகியவற்றை முத்திரையாகச் சாத்தியது அதைக் கண்ட நாவுக்கரசர் பெருமானைப் பாடிப் பரவினார்.

தொடர்ந்து சுந்தரர் வாழ்வில் பூதங்கள் செய்த அற்புதத்தைக் காணலாம்.ஒரு சமயம் சுந்தரர் இல்லத் திற்கு அமுது படைக்கு வேண்டிய நெல்லை அளித்து வந்த குண்டையூர்க் கிழாரால் அதை அனுப்ப முடியாது போயிற்று. அவர் இறைவனிடம் முறையிட்டார். இறைவர் குண்டையூர் கிழாரிடம் நெல்மலைகளைத் தந்தார். அவற் றைக் கண்டு அதிசயித்த கிழார் சுந்தரரிடம் அதைக் கூறினார். குண்டையூர் வந்து நெல்மலைகளைக் கண்டு அதிசயித்த சுந்தரர், திருக்கோளிலி ஆலயத்திற்குச் சென்றார். அங்கு நெல்லிட ஆட்கள் வேண்டிப் பதிகம் பாடினார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் பூதங்களை அனுப்பி நெல்லை எடுத்துச்சென்று திருவாரூரில் சேர்த்துவிட்டார். பூதப்படையே திரண்டு வந்து நெல்லை இடம் மாற்றியது என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் குறித்துள்ளார்.சிவபெருமான் சுந்தரருடைய வாழ்வில் பூதங்களைக் கொண்டு செய்த திருவிளையாடல் மற்றொன்றும் உள்ளது.

சேரநாடு சென்று சுந்தரர் சில நாட்கள் சேரமான் பெருமான் நாயனாருடன் தங்கி இருந்து மகிழ்ந்தபின் அவர் அளித்த பெரும் செல்வத்துடன் திருவாரூருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார், கோவையை அடுத்த திருமுருகன் பூண்டிக்கு வரும் வேளையில் சிவபெருமான்



❀-குண்டையூர் நெல்மலையை குறள் பூதப்படைகள் கொண்டு சென்று பரவையார் மாளிகையை நிறைவித்தல்

பூதங்களிடம் அவரிடமிருந்து பொருட்களைக் கவரும்படிக் கூறினார். பூதங்கள் கொலைத் தொழிலுடைய வேடர்கள் போல் வடிவு கொண்டு, சுந்தரரை வழிமறித்து, சுற்றி வளைத்து, அச்சுறுத்திப் பொருளைக் கவர்ந்து கொண்டு மறைந்தன.

சுந்தரர் திருமுருகன் பூண்டி இறைவன் ஆலயத்துள் சென்று பெருமானை வணங்கி, இந்த கொடிய காட்டில் ஏன் வாழ்கின்றீர் என்ற பொருள் அமைந்த பதிகம் பாடினார். அதைக் கேட்டுப் பெருமான் மகிழ்ந்து அருள்புரிந்தார். வேடுவர் பறித்த பொருட்களையெல்லாம் ஆலயத்தின் வாயிலில் நிறைந்திருக்கக் கண்டு அவற்றை எடுத்துக்கொண்டு திருவாரூர் சென்றார்.

இந்நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் திருமுருகன் பூண்டியில் ஆண்டுதோறும் வேடர்பறி விழா கொண்டாடப்பட்டு வருகிறது,

இப்படி இன்னும் அனேக புராணங்களிலும் தலபுராணங்களிலும் பெருமான் பூதங்களை ஏவி அன்பர்களுக்கு உதவிய அருஞ்செயல்களைக் காண்கிறோம்.

❀ சிவபெருமானை வழிபடும்போது அவரைச் சுற்றி அமைந்துள்ள அஷ்ட வித்யேஸ்வரர் என்ற எண்மரை பூசிக்கிறோம். இவர்கள் அனந்தாதியர் என்று போற்றப்படுகின்றனர். இதுபோல் சிவபெருமானைப் பாணலிங்க வடிவில் வழிபடும்போது இந்த வித்யேஸ்வரர்களுக்குப் பதிலாக எட்டு பூதங்களை வழிபடுகிறோம். இவர்கள் அஷ்டபூதங்கள் எனப்படுகின்றனர். ❀



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## இசைக் கலைஞர்களான பூதர்கள்

மகாவலிமை படைத்தவர்களாகவும், அதியுன்னத வீரர்களாகவும் திகழும் பூதர்கள் நகைச் சுவை உணர்வும், இசை நாட்டமும் மிகுந்த வர்கள். இறைவன் நடம் புரியும் போது பூதர்கள் இசைக் கருவிகளை வாசிக்கின்றனர்.

அவர்கள் குடமுழா, யாழ், சங்கு, பேரிகை, மத்தளம், கரடிகை, முதலியவற்றை இசைத்து மகிழ்விக்கும் காட்சியை ஸ்ரீவிமானத்தின் கபோத வரியில் காண லாம்.

திருமுறைகளில் அனேக இடங்களில் பூதர் கள் பாடுவது, இசைக் கருவிகளை மீட்டுவது, சிவனோடு ஆடுவது ஆகியன குறிக்கப்பட் டுள்ளன. பூதங்கள் பாட, இறைவன் நடமா டுகிறான். அவை தாளமிட இறைவன் பாடல் ஆடல் ஆகியவற்றின் லயம் பிறழாமல் ஆடு கிறான் என்று சம்பந்தர் கூறுகிறார். மேலும் கலி செய்(மகிழ்ச்சியால் ஒலி செய்கின்ற) பூதம் கையால் தாளமிடுவதையும் குறிக்கின்றார்.

மாசிலா பல பூதம் முன் முழவொலி யாழ் குழல் மொந்தை கொட்ட பறையும் சிறுகுழலும் யாழும் பூதம் பயிற் றவே மறையும் பலபாடி மயானத்துறைவார் (ஆலம் பொழில்) " பாரிடம் பலகருவி பயிலக் கண்டார்" என வரும் திரு முறைத்தொடர்களால் அறியலாம். கல்ல வடத்தை ஏந்தி ஆடு கின்றனர். அதைக் கண்டு சிவபெருமான் மகிழ்கிறான்இதனைக் கொல்லை விடைமுன் பூதம் குனித்தாடும் கல்ல வடத்தை உகப்பார் காழியார் எனவரும் தொடரால் அறியலாம். சிவபெரு மானின் திருமணத்தின் போது பூதர்கள் எட்டு கோடி வாத்தியங்களை முழக்கினர் என்று சிவ மகாபுராணம் கூறுகிறது.

சிவபெருமான் கங்காளனாக வலம் வரும்போது இசைக் கருவிகளை வாசித்துக் கொண்டு பூதர்கள் அவனைச் சூழ்ந்து வருகின்றனர்.

சங்கம் மருவிய காப்பியமான சிலப்பதி காரத்தில் நாடக அரங்கு நிர்மாணிக்கும் விதம் விரிவாகக் கூறப் பட்டுள்ளது. அதில் நாடக அரங் கின் முகப்பில் நந்தி யுடன் நால்வகை வருணப் பூதங்களின் உருவத்தையும் அமைக்க வேண்டு மென்று கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பூதர்கள் இசைக் கடவு ளராகப் போற்றப்பட்டதை அறிய முடிகிறது.

சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் துவஜா ரோகண மண்டபத்தையொட்டிக் கட்டப்பட் டுள்ள கொலு மண்டபத்தில் தூண்களின் உச்சி யில் இசைக்கருவிகள் வாசிக்கும் பூதவடிவங் களைக் காணலாம்.

## போர்க்களத்துப் பூதர்கள்

பூதர்கள் மகிழ்ச்சியுடன் அமைதியாக இருப்பவர்கள். ஆனால், எதிரிகளைக் கண்டால் விடாது கடும் போரிடுபவர்கள். அதியுக்ரமய போராளிகள் அவர்கள் வாள் கத்தி, கேடயம், எறியீட்டி, வில், அம்பு முதலான எண்ணிலாத ஆயுதங்களை ஏந்திப் போரிடுகின்றனர். அவர்கள் வெற்றியை அடைவதில் விருப்பமுடையவர்கள். சிவபெருமான் போருக்குச் செல்லும் போது பூதகணங்களும் படைக்கலம் தாங்கி அவருடன் செல்கின்றனர். சில கோயில்களில் பூதவரிசையில் போருக்குச் செல்லும் வரிசையான பூதங்களை அமைத்துள்ளனர். முருகனின் சேனை பூத வெள்ளம் என்று அழைக்கப்படுகிறது. அந்த பூதங்களின் அதியுக்ர வீரதீரங்களை அருணகிரிநாதர் பூத வேதாள வகுப்பில் பாடிப் பரவியுள்ளார். திருமுறைகளில் பூதப்படையைப் பற்றிய செய்திகளைக் காண் கிறோம். அவை இடிபோன்ற பொருளால் பகைவர்களை அச்சுறுத்துகின்றன.(இடிக் குரல்வாய் பூதப்படை கடல் போல் பரந்துள்ளது ( கடல் பூதப்படை) பொல்லாதவையாக உள்ளன.(பொல்லாத பூதப் படை) எனப் பலவாறு கூறப்பட்டுள்ளது. சிவபெருமானுக்குரிய யாக சாலைகளில் வைக்கப் படும் தசாயுதங்களைப் பூதர்கள் தாங்கியிருப்பது போல் அமைக்கின்றனர். சிவபெருமான் பூதப்படை யாளி என்றும், பூதகணம் சூழப் போர்க்கோலம் காண்பான் என்றும் அழைக்கப்படுகிறார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூதப்படையல்



- மீனாட்சி கல்யாணத்தில் உணவுண்டு மகிழும் பூதம்

பூதர்கள் பெருஉணவுப் பிரியர்கள். மலை மலையாகக் குவித்து வைத்த உணவு களை நொடியில் உண்டு, பின் ஏரி குளத்தி லுள்ள தண்ணீ ரைக் குடித்து மகிழ்பவ ர்கள். அந்த மகிழ்ச்சியால் மக்களுக்கு பேருதவி புரிபவர்கள். மக்கள் பூதர்களுக்கு அடிக்கடி படையலிட்டு அவர்களை மகிழ்வித்து அரு ளைப் பெற்றனர். திருமுறையில் பெருஞ்சோற் றை யுண்டு வயிறு பருத்தவை என்றும், திண்டி வயிற்றுச் சிறுபூதம் என்றும் பூதர்கள் குறிக்கப் பட்டுள்ளனர்.

சிவபெருமான் ஒரு சமயம் பூதனுக்கு சோறிட்டுத் திருவிளையாடல் புரிந்ததைத் திருவிளையாடற் புராணத்தால் அறிகிறோம்.

உமாதேவியார் ஒரு சமயம் பாண்டிய மன்னனின் அன்பிற்கு இரங்கி அவன் செய்த யாகத்தில் அழகிய பெண் குழந்தையாகத் தோன்றினாள். மூன்று முலைகளுடன் தோன்றி ய அப்பெண்ணுக்கு தடாதகை என்று பெயர் சூட்டி மன்னன் வளர்த்தான். அவள் அரசர் களுக்குரிய அத்தனை கலைகளையும் பயின்று தேர்ச்சி பெற்றாள். பாண்டியன் எதிர்பாராத விதமாக மரண மடைந்தான். மக்கள் அவளுக்கு முடிசூட்டிப் பாண்டி மண்டலத்தின் மகாராணி யாக்கினர். அவள் எட்டுத் திக்கிலும் படை நடத்தி அனை வரையும் வென்றாள்.

இறுதியில் சிவபெருமானை வெல்லக் கயிலாயத்தின் மீது படை நடத்தினாள். போருக்கு வந்த சிவபெருமானைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தாள். அவ்வேளையில் அவனது மூன்றாவது ஸ்தனம் மறைந்தது. அதைக் கண்டு இவரே தமது கணவர் என்று தீர் மானித்தாள். பெருமான் அவளிடம் மது ரைக்கு வந்து அவளை மணப்பதாகக் கூறினார்.

மதுரை மணக்கோலம் பூண்டது. எங்கும் மங்கல வாழ்த்து ஒலிக்க, சிவபெருமான் தம் கணங்களுடன் எழுந்தருளி மீனாட்சிதேவியைத் திருமணம் செய்து கொண்டார். அவ்விழாவில் எல்லோரும் மனதார வயிறார உண்ட பின்னும் மலைமலையாக சோறும் கறிகளும் அண்டா அண்டாவாக சாம்பார், குழம்பு, பாயசம், இரசம், தயிர் ஆகியவை மீதமாகி விட்டன.

மீனாட்சிதேவி சிவபெருமானிடம் சென்று தம் அரசகர்வம் தொனிக்க, பெருமானே உணவுப் பொருட்கள் ஏராளமாக மீதமாகியுள் ளன. உங்கள் ஆட்களை வந்து உண்ணும்படிக் கூறுங்கள் என்றார். அவளிடம் பெருமான் நான் இப்போது ஒருவனை அனுப்புகிறேன். அவனு க்கு உணவிடுங்கள் பிறகு மற்றவரை அனுப்பு கிறேன் என்றார்.

பின்பு குண்டோதரன் என்னும் பூதத்தை நோக்கினார். அவன் வயிற்றில் கடும்பசி உண்டா யிற்று. அவனை அழைத்துச் சென்று உணவிடும் படிக் கூறினார்.

அவனை அழைத்துச் சென்றனர். அவன் அங்கிருந்த உணவு மலைகளையெல்லாம் ஒரு நொடியில் உண்டு தீர்த்தான். சாம்பார், குழம்பு எல்லாவற்றையும் எடுத்துக் குடித்தான். பின் னும் பசி அடங்காதவனாக சமைக்க வைத்திருந்த அரிசி, பருப்பு பச்சைக் காய் கறிகளையும் வாரி உண்டான். அவனுடைய அடங்காத பசியைக் கண்டு எல்லோரும் அஞ்சினர். மீனாட்சியின் கர்வம் மறைந்தது. அவள் பெருமானை நோக் கினாள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருமான் அவனுடைய பசி அடங்கும் படிச் செய்ததுடன் அவன் பருகிமகிழக் கங்கா தேவியைப் பெருநதியாகப் பெருகி வரச் செய்தார். அந்த நதியே இந்நாளைய வைகை நதி.

சிவபெருமான் குண்டோதரனுக்குப் பசியை உண்டாக்கி, அவனை உண்ண வைத்துத் திருவிளையாடல் புரிந்ததைத் திருவிளையா டற்புராணம் விரிவாகக் கூறுகிறது.

மதுரையில் குண்டோதரனுக்கு உணவு படைத்ததை நினைவூட்டும் வகையில் அன் னக்குழி மண்டபம் என்னும் மண்டபம் அமைக் கப்பட்டிருந்தது. அது இப்போது இல்லை.

பூதன் உணவு உண்டு களித்ததனை நினை வூட்டும் வகையில் பூதனுக்கு உணவூட்டும் விழா சித்திரைமாதம் மீனாட்சி திருமணத் திற்குப் பிறகு நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திலுள்ள திருக்கல்யாண மண்டபத்தில் மேடைமீது இரண்டு பூதங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று உணவருந்தும் கோலத் திலும் மற்றது சங்கூதும் நிலையிலும் உள்ளன.இந்த பூதர்களுக்குப் பெரிய அளவில் உணவு படைந்து விழா கொண்டா டுகின்றனர்.

ஆலயங்களைப் பூதர்கள் காக்கின்றனர் என்று கூறப்படுகிறது. ஆலயங்களில் நடத்தப் படும் ஸ்ரீபலி ஆதியில் பூதங்களுக்கு நடத்தப் பட்டு வந்ததென்றும் காலப்போக்கில் பிற தெய்வங்களுக்கு ஆயிற்றென்றும் கூறுவர்

## பூதபலி

பூதர்களுக்கு அளிக்கப்படும் படையல் பூதபலி என்று அழைக்கப்படும். இது பெரும்படையல் வகை யைச் சார்ந்ததாகும். சோற்றைக் குவித்து அதைச் சுற்றி வடை சுண்டல் கறிகள் பழங்களுடன் குடம் குடமாக பானகம் தண்ணீர் ஆகியவற்றை வைத்துப் படைப்பர். காலப் போக்கில் பூதபலி அளிப்பது குறைந்துவிட்டது.

காரமடை ரங்கநாதர் ஆலயத்தில் பெருந்திருவிழாவின்போது, பூத கவாள சேவை என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது இதில் ஓலைப்பெட்டியில் வாழைப்பழம், வெல்லம், தயிர் ஆகியவற்றைப் பிசைந்து வைத்து உருட்டிக் கவளமாகப் படைக்கின்றனர். பூதம் ஏறியவர் அவற்றை உண்டு களிப்பர்.

சிலப்பதிகாரத்தில் மக்கள் பூதர்க்கு மாமிசம், சுண்டல், பொங்கல் ஆகியற்றுடன் மதுவையும் படைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. பூஜாபத்ததி நூல்களில் பூதர்களுக்கு புருஷ வடிவாகச் செய்யப்பட்ட மாவுப் பண்டங்களால் பலி அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

## பூத பலிபீடம்

ஆலயத்தில் கொடிமரத்திற்கு அருகிலுள்ள பலிபீடம் பிரம்ம சந்தி என்று அழைக்கப்படுகிறது. இதில் தினமும் பிரமன், இந்திரன், சூரியன், சப்த ரிஷிகள், அப்சர கணங்கள், பூத,, பிசாச, பிரேத, வேதாள முதலிய கணங்களுக்குச் சோற்றுருண்டைகளைக் கொண்டு பலி அளிக்கப்படுகின்றது. இந்த பலிபீடத்தைப் பூதபலி பீட மென்றும் அழைப்பர்.

## பூதக் கலமிடுதல்

திருமணமாகிய பின் மணமகள் ( மனைவி) கணவனுக்கு முதன்முதலாக உணவு படைப்பது பூதக்கலமிடுதல் என்று அழைக்கப்படுகிறது.

## பூத தர்ப்பணம்

சிவாச்சாரியார்களின் காலை வழிபாட்டில் ஐந்து விதமானவர்களுக்கு நீர்வார்த்து தர்ப்பணம் செய்ய வேண்டுமென்று பூஜாவிதி நூல்கள் கூறுகின்றன. அவை தேவ தர்ப்பணம் , ரிஷி தர்ப்பணம், மானுட தர்ப்பணம், பூத தர்ப்பணம், பிதிர் தர்ப்பணம் என்பனவாகும். இவ்வேளையில் சொல்லப் படும் மந்திரம் சிவபெருமானை எல்லா பூதங்களிலும் நிறைந்திருக்கிறான் என்று கூறுகிறது. திருவாசகம் இதனை பூதங்கள் தோறும் நின்றாயெனில் என்று கூறும். இறைவன் பஞ்சபூதங்களில் நிறைந்திருப்பதைத் திருமுறைகளில் அநேக இடங்களில் காண்கிறோம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பூத வாகனம்

சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களில் முதன்மை பெற்றவர்கள் நந்திகணமும் பூதகணமும் ஆகும். பெருமான் நந்திகணங்களில் உயர்நிலையிலுள்ள அதிகாரநந்தியின் மீது பவனி வருகின்றார். அது அதிகார நந்திசேவை என்று அழைக்கப்படுகிறது. இதுபோன்று பூதங்களுக்கு அருளும் வகையில் அவர் பூதவாகனத்தில் பவனி வருகிறார். இது பூதவாகன சேவை என்று அழைக்கப்படுகிறது. பெருமானைத் தாங்கிச் சுமந்து வரும் பூதனுக்கு மகாகாயன் என்பது பெயர். சிவாலயங்களில் பெருந்திருவிழாவின் மூன் றாம் நாள் இரவில் பூத வாகன சேவை நடத்தப்படுகிறது.

பெருமானின் வாகனமாக விளங்கும் பூதன் இரண்டு கரங்களுடன் காட்சியளிக்கிறான். தலையில் முடியை வட்டமான வட்டணை யாக முடிந்துள்ளான். வலக்காலை மடித்து இடக்காலை ஊன்றியுள்ளான். பருத்த உடம்பில் அழகியசட்டையுடன் குட்டையான கால் சட்டை அணிந் துள்ளான். அகன்று பரந்துள்ள முகத்தில் விரிந்த கண்களையும் கத்தையான மீசையையும் கொண்டுள்ளான். அபூர்வமாகச் சில தலங்களில் நான்கு கரங்கள் கொண்ட பூதனைக் காணலாம்.

சில தலங்களில் வெள்ளியால் செய்யப்பட்ட பூதவாகனம் உள்ளது.

❀-பூதவாகனம் - திருவிடை மருதூர்

சிவபெருமான் பூத வாகனத்தில் பவனி வரும் போது அம்பிகை பூதகி வாகனத் தில் பவனி வருகிறாள். அவ்வேளையில் சண்டேசுவரரும், விநாயகரும் பூத வாகனத்தில் பவனி வர, முருகன் தாரகாசுர வாகனத்தில் பவனி வருகின்றார்.

## திருவடி தாங்கும் பூதங்கள்

சிவபெருமானின் திருவடியைத் தாங்கி பூதங்கள் மகிழ்கின்றனர். நடராசரின் திருவடிக்கீழ் படுத்தவாறு கிடக்கும் பூதன் முயலகன் எனப்படுவான். அவன் பாம்பையும் சூசி முத்திரையையும் கொண்டுள்ளான். இவனை அபஸ்மாரன் என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. ஸ்வரம் என்பதற்கு எதிர்மறைப் பொருள் அபஸ்வரம் என வழங்குவதைப் போல, மாரன் என்ற சொல்லுக்கு எதிர்மறைப் பொருளைத் தருவதாக அபஸ் மாரன் உள்ளது. மாரன் மனமயக்கத்தைத் தருபவன். அதனால் துன்பத்தை விளைவிப்பவன். இந்த பூதன் சிவபெருமானின் திருவடி சம்பந்தத்தினால் எல்லோருடைய மன மயக்கத்தையும் நீக்கி இன்பத்தை அளிக்கிறான். எனவே, அபஸ்மாரன் என்று அழைக்கப்படுகிறான்.

இவனை சிலர் அரக்கனென்று அறியாமையால் கூறுகின்றனர். சில நடராசர் வடிவங்களில் இவன் அமர்ந்திருக்க பெருமான் இவன் தலைமீது காலையூன்றி நட ன மாடுகிறார். சிவபெருமான் பூதங்களில் நிறைந்து நின்று அதை ஆட்டுவிப்பதைக் குறிக்கவே பூதன் மீது நடமாடும் கோலத்தில் உள்ளார் என்பர்.

கங்காதரர், திரிபுராந்தகர் கோலங்களில் இவன் அமர்ந்திருக்கப் பெருமான் காலை அவன் தலை முதுகின் மீது ஊன்றி நிற்பதைக் காணலாம். சிவபெருமான் இடபத்தில் ஏறும் போது, ஒரு பூதத்தின் தோள் மீது திருவடியை ஊன்றி ஏறுவதாகவும், இறங்கும்போதும் அப்படியே ஊன்றி இறங்குவதாகவும் சிவ மகா புராணம் கூறுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# காஞ்சிபுரத்து பூதர்கள்

- ஜெயஸ்தம்பம் (எ) பூதஸ்தம்பம் - காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் அம்பிகை தவம் செய்து சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றாள். பின்பு அங்கு 32 அறங்களையும் முழுமையாகச் செய்ய விரும்பி ஓர் அறச்சாலையை அமைத்தாள். அதில் பசிப்பிணி நீக்கும்தலையான அறமான உணவூட்டலைத் தொடங்க சிவ பெருமானை வேண்டினாள். பெருமான் இரு நாழிகை நெல்லை அவளுக்கு அளித்தார். அதை அவள் பெருக்கி அடியவர்களுக்கும் அன்பர்களுக்கும் ஆதர வற்ற வர்களுக்கும் அமுதூட்டினாள்.

அவள் அமைத்த பண்டக சாலையில் பண்டாசுரன் என்பவர் உணவுப் பொருட்களை உண்டு தீர்த்து பெருந்தொல்லை அளித்தான். அம்பிகை திருமாலிடம் அவனை அடக்கும்படி வேண்டினாள். அவர் அசுரனின் மீது பாய்ந்து அவன் மீது ஏறி நின்றார். அவன் திமிரி அவரைக் கீழே தள்ளினான். திருமால் அவனை கீழே தள்ளி மேலே அமர்ந்தார். அப்போதும் அடங்காத அவன் அவரை கீழே தள்ளிவிட்டான். பெரு மாள் அவன் மீது பாம்பணையை விரித்துப் படுத்தார். சற்று காலம் அமைதியாக இருந்த அவன் பெருத்த வலிவுடன் அவரைக் கீழே தள்ளியதுடன் போரிடத் தொடங்கினான். திருமால் சோர்ந்தார்.

சிவபெருமானின் சடையிலிருந்து ஆணும் பெண்ணுமான இரண்டு பூதங்களைத் தோற்றுவித்து திருமாலுக்குத் துணையாக அனுப்பினார். அவர்கள் பண்டாசுரனை அழித்து ஒழித்தனர். பின்னர் போரிடும் ஆசையால் திருமாலுடன் சண்டையிடத் தொடங்கினர். சிவபெருமான் அவர்களை அமைதிப்படுத்தினார்.

அம்பிகை அப்பூதங்களைக் காம கோட்டமாகிய தனது ஆலயத்திலுள்ள உலகாணி தீர்த்தத்திற்குக் காவலாக இருக்கும்படி அமர்த்தினாள். காமாட்சியம்மன் ஆலயத்திலுள்ள பெரிய திருக்குளமான உலகாணி தீர்த்தத்தின் காவல் தெய்வங்களாகப் பெரிய பூதனும், பூதகியும் உள்ளனர். இக்குளத்தின் படித்துறையில் பெரிய சுதைச் சிற்பங்களாக இவர்கள் அமைக்கப்பட்டுள்ளனர்.

அசுரன் மீது நின்றும் இருந்தும், கிடந்தும் அவனை அடக்க முயன்ற கோலத்துடன் உலகாணி தீர்த்தத்தின் கரையில் பெருமாள் மூன்று அடுக்குகள் கொண்ட சந்நிதியில் எழுந்த ருளியுள்ளார். இவரைப் பூத அனுக்கிரகப் பெருமான் என்கின்றனர்.

பூதர்கள் பண்டாசுரனை அழித்த பாவமும், திருமாலுடன் போரிட்டுத் துன்பப்படுத்திய பாவமும் நீங்கச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டனர். அந்த லிங்கம் பூதேசுவரர் என்னும் பெயரில் உள்ளது.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயத்தில் ஜெயஸ்தம்பம் என்னும் பெயரில் வெற்றித் தூண் ஒன்று உள்வாயிலின் முன்புறம் நிலைப் படுத்தப்பட்டுள்ளது, அதன் உச்சியில் அமைந்த பீடத்தில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு நான்கு பூதங்கள் நிலைப் படுத்தப்பட்டுள்ளன. இவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளையும் உலகிற்கு எடுத்துக்கூறுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பிரதம கணங்கள்

சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களாகப் பூதர்கள் விளங்குகின்றனர். அவருக்குரிய அனைத்துப் பணிகளையும் அவர்கள் செய்கின்றனர். சிவ பூதர்களைப் பிரதம கணங்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

வடமொழியில் இவர்களைப் பாரிஷர்கள் என்று குறித்துள்ளனர். தமிழில் பாரிடம் என்று வழங்கப்படும். தேவாரத்துள் அனேக இடங்களில் பாரிடங்கள் குறிக்கப்பட்டுள்ளனர். " கழுதொடு பாரிடம் கைதொழுதேத்த ஆடும் எம் அடிகள்" என வரும் தொடர்கள் மூலம் இதை அறியலாம்.

காசிக்கண்டம் என்னும் நூலில் பிரதம கணங்களின் பெயரும் அவர்கள் காசியில் அமைத்து வழிபட்ட லிங்கங்களின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன.

சங்குகர்ணனும், மகா காலனும் அதியுன்னத வீரர்கள். இவர்கள் சிவபெருமானுக்கு துவார பாலர்களாக உள்ளனர். கண்டாகர்ணனும் மகோத ரனும் பெருமானுடைய மாளிகையின் மேலைக் கோபுரத்தைக் காவல்புரிகின்றனர்.

சோம நந்தி, நந்திசேனன், காலன், பிங்கலன், குக்குடன் ஆகிய ஐந்து பேருக்குப் பஞ்ச கணங்கள் என்று பெயர். இவர்கள் காசியில் பஞ்சலிங்கங்களை அமைத்துள்ளனர்.

தில தர்ப்பணன், ஸ்தூலகர்ணன், த்ருமி, சண்டன், ப்ரபாமயன், சுகேசன், பினதந்தன், சாகன், கபர்த்தினன், பிங்கலாட்சன், கிராதன், பஞ்சாட்சன், சதுர்முகன், பாரபூதன், திரியக்ஷன்,

க்ஷேமகன் லாங்கலின் விராதன் சுமுகன் ஆஷாடன் முதலியோர் முக்கியமான பாரிடங்களாவர்.

இவர்கள் மகா யுத்த வீரர்களாகவும், இசைக்கருவிகளை இசைப்பதில் வல்லவர்க ளாகவும் உள்ளனர். இத்தகைய ஒரு கோடி பூதங்கள் காசிநகரைக் காத்து நிற்பதாகக் புராணங்கள் கூறுகின்றன.

சிவகணங்களில் குந்தன், மயூரன், குக்குடன் என்ற மூன்று கணங்கள் உள்ளனர். இவர்கள் முருகனுக்குரிய வேல், மயில், சேவல் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள். மேலும், சாகன், விசாகன் என்ற பூதர்களைக் காண்கிறோம். இவர்கள் சிவனுடைய ஆணை பெற்று முருகனின் வாயிற் காவலர்களாக விளங்கு கின்றனர்.

லம்போதரன், கும்போதரன் என்னும் ப்ரதம கணங்கள் சிவனுடைய ஆணையால் விநாயகப் பெருமானுக்குத் தலைமைப் பணியாளர்களாகவும், அவருடைய ஆலயத்தின் துவார பாலகராகவும் விளங்கி வருகின்றனர்.

## பூதநிருத்தம்

பூதர்கள் ஆடல் பாடல்களில் வல்லவர்கள். அவர்கள் பருத்த உடலைக் குலுக்கி, விநோதமாக ஆடி, இறைவனை மகிழ்விக்கின்றனர். அது, பூத நிருத்தம் என்று அழைக்கப்படுகிறது.

சிவாலயங்களில் பெருந்திருவிழாவின்போது நடைபெறும் கொடியேற்றம், கொடியிறக்கம் ஆகியவற்றில் ஈசானத்திக்கில் பெருமானையும், சூலதேவரையும், நிறுத்தி பூதநிருத்தம் நிகழ்த்தப்படும். மேளத்தைத் தலையில் வைத்துக்கொண்டே வாத்தியக் கலைஞர் அதைத் தட்டிக் கொண்டே, சுற்றி வந்து ஆடுவதே பூதநிருத்தம் எனப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவ வழிபாட்டில் பூதங்கள்

ஸ்ரீ-தசாயுதங்களைத் தாங்கி நிற்கும் பூதர்கள்- மரச்சிற்பம் - திருவிடை மருதூர்

சிவபூஜா பத்ததி நூல்களில் சிவவழிபாட்டின் அங்கமாகப் பூதர்கள் வழிபாடு நடத்த வேண்டுமென்று கூறப்படுகிறது.தினசரி பூஜைகளில் அஷ்டபூதங்கள் எனப்படும் எண்பூதங்கள் பூசிக்கப்பட்டு, அவர்களுக்குப் பலி அளிக்கப்படுகிறது. இவர்கள் சிவாசனத்தில் இடம் பெற்றுள்ளனர்.

சிவபெருமானின் ஆணைப்படி வெண்மை நிறம் கொண்ட சம்வர்த்தன் கிழக்கிலும், பொன் நிறம் கொண்டஉன்மத்தன் தென்கிழக்கிலும், கருநிற முள்ள குண்டோதரன் தெற்கிலும், செந்தீயைப் போன்ற தீர்க்க காயன் கன்னி மூலையிலும், பச்சைவண்ண ஹிரஸ்வபாதன் மேற்கிலும் புகை வடிவான சிங்கரூபன் வடமேற்கிலும், அதிரக்க செந்நிறமுள்ள கஜமுகன் வடக்கிலும் நீலநிற மான பிரியம் முகன் வடகிழக்கிலும் இருந்து உலகினைக் காப்பதாக ஸ்ரீ காரணாகமம் கூறு கிறது. இவர்களை அஷ்டபூதர்கள் என்று அழைக் கிறோம்.

ஸ்ரீ பலி அளிக்கும் போது, பலிபீடத்தின் குமுதப்பட்டிகையை பூதங்களின் வடிவமாகப் போற்றுகின்றனர். ஸ்ரீபலி மந்திரத்தில் பலிபீடத்தின் இரண்டாம் ஆவரணத்தில் ஈசானத்தில் பூதர்களை அழைத்துப் பலி சமர்ப்பிக்கின்றனர்.

நடுவிலுள்ள கர்ணிகையில் ஆமோதன், பிரமோதன், ப்ரமுகன், துர்முகன், விக்னஹந்தரன், அவிக்னன் ஆகிய அறுவரை வழிபடுவர். இந்த அறுவரும் பூத நாயகர்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.

பூதர்களுக்குப் புருஷ வடிவில் செய்யப்பட்டமாவுப் பொருட்களால் பலி சுமர்ப்பிக்க வேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகி ன்றன.

சுயம்புலிங்கங்களைப் பூசிக்கும் வேளை கிழக்கில் உன்மத்தனும், அக்னி திக்கில் சதுர்வத்திரனும், தெற்கில் குண்டோதரனும், நிருதி திக் பூதங்களாக விளங்குகின்றனர். இவர்கள் வாளும் கேடயமும் தரித்தவர்கள். பாம்புகளைப் பூணாலாகவும் மாலையாகவும் அணிந்திருப் பவர்கள். நவரத்தின மயமான ஆபரணங்களைத் தரித்திருப்பவர்கள்.

மேலும் பஞ்சாவரண பூஜையின்போது ஐந்தாம் ஆவரணத்தில் தசாயுதங்கள் எனப்படும் பத்து ஆயுதங்களைப் பூசிக்கும் வேளையில் அவற்றைத் தாங்கியுள்ள மகா பூதர்களையும் பூசிக்கின்றனர். ஆயுதங்களை வைக்குமிடம் பூத பீடம் என்று அழைக்கப்படுகிறது

ஸ்ரீவிமானத்திலும், ராஜ கோபுரங்க ளி லும் கண்டம் என்னும் பகுதியில் நான்கு திசைகளிலும்அமர்ந்துள்ள நான்கு பூதர்களும் அறம், பொருள்,இன்பம், வீடு என்ற நாற் பொரு ளைத் தமது சங்க நாதத்தால் உண்டாக் குகின் றனர் என்று கூறுவர்.

பஞ்சாசன பீடத்தில் நான்கு யுகங்களையும் குறிக்கும் வகையில் நான்கு பூதர்களின் வடிவங்கள் அமைக்கப்படுகின்றன. இவர்கள் கால பூதங்களாவர்.

இவ்வாறு பலவிதமான பூதர்கள் வழிபாட்டில் உள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பாண்டிய நாட்டில் பூத வழிபாடு

தென் தமிழ்நாடான பாண்டியமண்டலத்தில் பூத வழிபாடு தனிச் சிறப்புடன் இன்றுகூட இருந்து வருகின்றது. குறிப்பாக மதுரையில் பூத வழிபாடு சிறப்புடன் திகழ்கிறது.

சிவபெருமான் அம்பிகையை மணக்க வந்த போது, அனேக வெள்ளம் ( அளவற்ற எண்ணிக்கை) பூதர்களோடு வந்தார் என்றும், அப்பூதங்கள் பாண்டி நாட்டின் அழகில் மயங்கி, ஆங்காங்கு கோயில் கொண்டனர் என்றும் கூறப்படுகிறது. மீனாட்சி திருமணத்தில் குண்டோதரன் மலை மலையாகச் சமைத்திருந்த உணவுகளை உண்டு, தாகத்தால் தவித்தபோது பெருமான் கங்கையை வைகை நதியாகப் பெருகிவரச் செய்தார் என்று புராணம் கூறுகிறது. அவனுக்கு உணவிட்டது இப்போதும் ஐதீக விழாவாகக் கொண்டாடப் படுகிறது. உணவுண்ணும் கோலத்தில் திருமண மேடையில் பூதத்தின் பெரிய புடைப்புச் சிற்பம் உள்ளது.

பாண்டிய மன்னர்கள் பூதப் பெயர் சூடினர். சங்க கால மன்னன் ஒருவனின் பெயர் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்பதாகும்.

புலவர் பெருமக்களும் நப்பூதனார், கரும் பூதனார் என்ற பெயர்களைச் சூடியிருந்தனர். இவை பூதவழிபாடு மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கைக் குறிக்கின்றன.

மதுரையிலும் அதைச் சுற்றிஅமைந்த கோச்சடை முதலிய ஊர்களிலும் பூதர் வழிபாடுகள் நன்முறையில் உள்ளன.

சோமசுந்தரப் பெருமான் மாணிக்கவாசகர் பொருட்டு, நரிகளைக் குதிரைகளாக்கி நடத்தி, வந்த போது, பூதகணங்கள் குதிரைச் சேவர்களாகிக் குதிரைகளை நடத்தி வந்தனர் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

மதுரையில் இந்திரன் சோமசுந்தரப் பெருமானுக்கு அமைத்த ஸ்ரீவிமானத்தை 32 பூத கணங்கள் தாங்குவதாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. சங்கப் புலவரான நக்கீரர் மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் ஒரு பூதத்தால் சிறை வைக்கப்பட்டுத் துன்புற்றபோது பாடியதே திருமுருகாற்றுப்படையாகும். அதைக் கேட்ட முருகன் மகிழ்ந்து பூதத்தை வென்றடக்கி நக்கீரரையும் அவருடன் பூதத்தால் அடைக்கப்பட்டிருந்த 999 புலவர்களையும் சிறை மீட்டு அருள்பாலித்தார் என்று தல வரலாறு கூறுகிறது.

திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே உள்ள ஒரு குளம். இது குண்டோதரன் என்ற பூதத்தால் வெட்டப்பட்டது என்பர். இதற்கருகில் கூடை தட்டிய பரம்பு என்ற சிறு குன்று உள்ளது. ஏரி உண்டாக வெட்டி மண்ணைக் கொட்டி இம் மலையை பூதம் அமைத்ததென்பர். திருப்பரங் குன்றத்தில் அண்டாபரணர் என்னும் பூதத்தார் வழிபடப் படுகிறார். இவருக்குச் சிறப்பு வழிபாடு கள் நடைபெறுகின்றன.

திருஞானசம்பந்தரும் மதுரை சோம சுந்தரப் பெருமானை பூதர் நாயகன் எனப் போற்றி "பொங்கழல் ஒருவன் பூத நாயகன்" என்று அருளிச் செய்தார்.

இம்மண்டலத்திலுள்ள சிறு தெய்வ ஆலயங்கள் அனைத்திலும் சுதையால் பூதர்கள் வனப்புடன் செய்யப்பட்டு வழிபடப்படுகின்றனர்

## பூதபூமி

பூமியை அதன் இயல்பு அதிகமுள்ள மரஞ்செடி கொடிகள், பறவைகள் விலங்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் சைவீ, ப்ராம்மி, வைஷ்ணவி முதலான பன்னிரண்டு வகை யாகப் பிரித்துள்ளனர். அதில் பூதபூமியும் ஒன்றாகும். இது பெருநொச்சி, குறுக்கத்தி அருகு அழிஞ்சில் முருக்கு அலரி, மல்லிகை இலுப்பை ஆகிய மரம் செடி கொடிகளைக் கொண்டது. விபூதி மணமுள்ளது. மனிதர்களுக்கு அன்னத்தை யும்(ஊனை யும்) புஷ்டியையும் தருவது. பூதபூமி உழைப்பாளர்களும்,விவசாயிகளும்நிறைந்ததாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூதலிங்கம்

பூதலிங்கம் என்ற சொல் பூதர்களால் வழி படப்படும் லிங்கம் என்ற பொருளைத் தரு வதைப் போல , பூத காலம் என்பது கடந்த காலத்தைக் குறிப்பதாகவும் உள்ளது. கடந்த காலத்தின் நிகழ்வுகளில் இருந்தேமக்கள் நிகழ் கால அனுபவங்களை உணர்கின்றனர். அதுவே அவர்கள் எதிர் காலத்தில் மேன்மை பெற உதவுகிறது எனவே, கடந்த காலப் பதிவு களை அழிந்து போகாமல் தன்னுள் நிலைப் படுத்தி வைக்கும் பெருமான் பூதலிங்கம் என்ற பெயரில் விளங்குகின்றான்

காலம் அறிந்து கொள்ள முடியாத இடத் திலிருந்து தோன்றி, முடிவு தெரிய இடத்தை நோக்கி ஓடிக் கொண்டே இருக்கிறது. உயிர் கள் அதன் மடியில் தோன்றி, வாழ்ந்து , மடிகி ன்றன.அது கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற மூன்றாக உணரப்படுகிறது.

நிகழ்ந்த காலம் கடந்த காலமாகவும் எதிர் காலம் நிகழ்காலமாகவும், மீண்டும் நிகழ்காலம் கடந்த காலமாகவும் ஓயாது மாறிக்கொண்டே இருக்கின்றது. காலம் நமக் காகக் காத்திருப்ப தில்லை. இந்த மூன்று காலங்களாகவும், பெரு மான் விளங்கு கின்றார். காலம் கடந்த அதீத னான பெருமான்காலத்தின் வடிவமாக விளங் குகிறான்.காலத்தின் நாயகனான அவனால் உலகில் ஓயாத மாறுதல்களை உருவாகிக் கொண்டே இருக்கின்றது..

காலத்தின் வடிவில் விளங்கும் பெருமா னைக் காலகாலன் என அழைக்கிறோம். மூன்று காலங்களைக் குறிக்கும் வகையில் மூன்று லிங்கங்களை அமைத்து கடந்த கால லிங்கம், நிகழ்கால லிங்கம், எதிர்கால லிங்கம் என்று அழைக்கின்றனர். இவற்றை வடமொழியில் பூத லிங்கம், வர்த்தமான லிங்கம், பௌஷ்ய லிங்கம் என்று அழைக்கின்றனர்.

திருநெல்வாயில் அரத்துறை ஆலயத்தில் காலத்தின் பெயரால் மூன்று லிங்கங்கள் பிரா காரத்தில் அமைக் கப்பட்டுள்ளன. திருப்புகலூர் ஆலயத்தில் மூன்று லிங்கங்களுக்கும் தனித் தனியே பெரிய சந்நிதிகள் உள்ளன.

திருப்புகலூர் திருவாரூருக்கு அருகில் உள்ளது நன்னிலத்திலிருந்து 7 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இது பஞ்ச லிங்கத்தல மாகும். ஆலயத்தைச் சுற்றி அகழி அமைக்கப் பட்டுள்ளது. ஆலயத்தில் ஐந்து சந்நிதிகள் உள்ளன. முதன்மை மூர்த்தியாகக் கருவறையில் வீற்றிருப்பவர் அக்னீசுவரர். அவரைச் சுற்றி சந்நிதிகளில் பூதேசுவரர், வர்த்தமானேசுவரர், பௌஷ்யேசுவரர் எனும் பெயர்களில் பெரு மான் வீற்றிருக்கிறார். கருவறைக்கு இடப்புறம் வர்த்தமானீச்சரம் என்னும் சந்நிதி உள்ளது. இது முருகநாயனார் திருப்பணி செய்த தலம். இதற்கெனத் தனியே தேவாரப் பாடல் உள்ளது.

பிராகாரத்தில் தென்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு பூதேசுவரர் ஆலயம் உள்ளது. இதில் பூத லிங்கமாகப் பெருமான் விளங்கு கிறார். பிராகாரத்தின் வடக்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு பௌஷ்யேசுவரர் எழுந்தருளியுள்ளார்.

ஐந்தவாது லிங்கமாக பாரத்வா ஜேஸ்வரர் உள்ளார்.

வெண்ணியூர் திருத்தல தேவாரத்துள், திரு நாவுக்கரசர், " பூதநாதனை" , " பூம்புகலூ ரானை" என்று போற்றிப் பரவுகிறார்

பூத என்பது செல்வத்தைக் குறிக்கும் சொல். திருநீற்றை மேலான செல்வம் என்று பொருட்பட விபூதி என்று அழைக்கின்றனர். அப்பூதி, என்று பெயர் சூட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்துவருறது ஈசுவரன் என்பதற்கு ஐஸ்வர்யம் உடையவன் என்பது பொருள். அதுபோன்றே பூதீஸ்வரன் என்பதற்கு சுகங்களின் நிலை பெற்றிருப்பவன் என்பது பொருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஐந்து லிங்க வழிபாடு ( பஞ்சலிங்க பூஜை)

பூதம் என்ற சொல்லுக்கு ஆதாரம் என்பதும் பொருளாகும். இறைவன் பொருட் பிரபஞ்சமாக உலகைப் படைக்க விரும்பியதும் அதற்கு ஆதாரமாகத் தன்னிடமிருந்தே ஐந்து பொருட்களைத் தோற்றுவித் தான்.

அவை ஆகாயம், காற்று, தீ,நீர், பூமி என்பனவாகும். இவற்றைப் பஞ்சபூதங்கள் என்பர். இவற்றில் ஆகாயம் பராசக்தியின் வடிவமாகும். அதனுள் மற்ற நான்கு பூதங்களும் உள்ளன.

இந்த ஐந்தினைக் குறிக்கும் வகையில் ஐந்து சிவ லிங்கங்களை வைத்து வழிபடும் வழக்கம் தோன்றியது. இவ்வழிபாட்டால் பூமி செழிக்கும் என்று நம்புகிறோம். இயற்கைச் சீற்றங்களான காற்றால் உண்டாகும் புயல், கடல் கொந்தளிப்பு முதலியனவும், தீயால் உண்டாகும் அழிவுகளும், நிலத்தால் உண்டாகும்நிலநடுக்கம், நிலப்பிளவு முதலான வையும், வானத்தால் உண்டாகும் எரிகல் வீழ்தல், கொடும் மழை, இடி தாக்குதல் முதலியனவும் நிகழாது என்றும், அப்படி நிகழும்போது வாழ்வைப் பாதிக்காது என்றும் நம்புகிறோம். ஐம்பூதங்களின் கூட்டுறவாலேயே நமது உடல் உண்டாயிருக்கிறது. அது நோய், நொடிகளற்று நீண்ட ஆயுளுடன் மகிழ்ச்சியுடன் வாழ இந்த ஐம்பூத வடிவாக விளங்கும் பெருமானை வணங்குகிறோம்.

ஐம்பூதங்களின் வடிவாக ஐந்து லிங்கங்களை நிறுவி வழிபடும் வழக்கம். நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆகம பண்டிதர்கள் இவை சிவபெருமானின் ஐந்து முகத்திலிருந்து தோன்றியவை என்றும் கூறுவர். பெருமானின் ஐந்து முகங்களும் ஐந்து வண்ணங்களில் ஒளிர்வதால், ஐந்து வண்ண லிங்கங்களை வைத்து வழிபடுகின்றனர்.

ஆகாசம் நிறமற்றது என்பதைக் குறிக்கும் வகையில் ஸ்படிக லிங்கத்தையும், காற்று நிறமற்றதானாலும் வலிமை பெற்றிருப்பதாலும், கருப்பு வண்ண லிங்க மாகவும்,தீ செவ்வண்ணத்தால் பொலிவதால் சிவப்புக்கல் லிங்கத்தையும், தண்ணீர் பொன் வண்ண மஞ்சள் நிற லிங்க மாகவும் பூமி வலிமையுடன் பசுமையாகப் பொலிவதால் பச்சை வண்ண லிங்கமாகவும், வைத்து வழிபடப்படுகின்றன.

காலப்போக்கில் சிவாலயப் பிராகாரங்களில் ஐந்து லிங்கங் களுக்கும் தனித்தனியே ஸ்ரீவிமானத்துடன் சிற்றாலயங்கள் அமைக்கப் பட்டன. திருஒத்தூர் (செய்யாறு) வேதபுரீசுவரர் ஆலயம், திருஒற்றியூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் முதலான அனேக திருக்கோயில்களில் பஞ்சலிங்க சந்நிதிகளைக் காணலாம். இக்கோயில்களில் இந்த ஐந்து சிற்றாலயங்களும் ஒரே இடத்தில் இல்லாமல் பிராகாரத்தில் வெவ்வேறு இடங்களில் உள்ளன.

கொங்கு நாட்டில் உள்ள பஞ்சலிங்கங்கள் ஒரே வரிசையாக அமைந்த ஐந்து சிற்றாலயங்களில் அமைந்துள்ளன. இங்குள்ள அனைத்துச் சிவாலயங்களிலும் முருகன் ஆலயங்களிலும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஞ்சலிங்கங்கள் அமைந்த சிற்றாலயங்களைக் காணலாம். சிவராத்திரி நாளில் இவற்றிற்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

யாவற்றிற்கும் மேலாக ஐந்து திருத்தலங் களைப் பஞ்சபூதத் தலங்கள் என்று போற்றுகி றோம். சிதம்பரம் ஆகாயத் தலமாகவும் காளத்தி காற்றுத் தலமாகவும், திருவண் ணாமலை தீ தலமாகவும், திருவானைக்கா நீர்த்தலமாகவும், காஞ்சிபுரம் மண்தலமாகவும், போற்றப் படுகின்றன.

பெருமான் இவற்றில் முறையே ஆகாச லிங்கமாகவும், வாயு லிங்கமாகவும், சோதிலிங்க மாக வும், அப்புலிங்கமாகவும், ப்ருத்வீ லிங்க மாகவும், விளங்கி அருள்பாலித்துக் கொண்டிருக் கின்றார். இந்த ஐந்தினை உணர்த்தும் வகையில் அனேக ஊர்களில் பெருமான் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஐம்பெரும் (பஞ்ச) பூதலிங்கங்களை வழி படுவதால், உலகில் இயற்கைச் சீற்றங்களால் உண்டாகும் துன்பம் பாதிக்காது. பயிர்கள் செழிக் கும். மன அமைதி உண்டாகும் என்று திடமாக நம்புகின்றனர்

## பூமி லிங்கம் (மண் லிங்கம்)



ஸ்ரீ-அம்பிகை பூசித்தல் –கச்சி ஏகம்பன் – காஞ்சிபுரம்

இறைவன் மண் வடிவினை உணர்த்தும் லிங்கமாக வீற்றிருக்கும் தலம் காஞ்சிபுரமாகும், சத்யவிரதம் என்னும் இத்தலத்தில் அம்பிகை கம்பையாற்றங்கரையில் மணலைக் கூட்டிச் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தாள். அப்போது திருவிளையாடல் புரியக் கருதிய சிவபெருமான் கம்பையாற்றைப் பெருகச் செய்தார். பெருகி வரும் வெள்ளத்தைக் கண்டு அஞ்சிய அம்பிகை, தாம் பூசித்த லிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். அவளுடைய முலைகளும், வளையல்களும் பெருமானின் திருமேனியில் படிந்து வடுவை உண்டாக்கின. சிவபெருமான் அந்த லிங்கத்திலிருந்து வெளிப் பட்டு அவளுக்கு அருள்புரிந்தார்,

அவள் உலகம் செழிக்க ஐயன் அளந்த இரு நாழிகை நெல்லைக்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் இத்தலத்தில் செய்தாள்,

சிவபெருமானை அம்பிகை தழுவியபோது, குழைந்ததால் தழுவக் குழைந்த பிரான் என்றும், முலைத் தழும்பை ஏற்றதால் முலைத்தழும்பர் என்றும் அழைக்கப்படுகிறார்.

அம்பிகை மாமரத்தடியில் மணலைக் கூட்டி அமைத்த லிங்கமே இந்நாளில் ஏகாம்பர நாதராகத் திகழ்கிறது. காஞ்சியில் உள்ளவற்றில் பெரியதாகவும் தலைமையிடமாகவும் இருப்பது ஏகாம்பரநாதர் ஆலயமேயாகும்,

இத்தலம்முத்தியளிக்கும் தலங்களில் முதன் மை பெற்ற ஏழினுள் ஒன்றாகும், காசிக்கு நிகரானது. இங்குக் கணக்கற்ற விஷ்ணு ஆலயங் களும் துர்க்கை காளி ஆலயங்களும் சிவாலயங் களும் உள்ளன. இத்தலம் கல்வி கரையிலாக் கச்சி என்று போற்றப்படுகிறது,

### திருவாரூர் வன்மீகநாதர்

சிலர் திருவாரூரை மண் தலமாகக் கூறுவர். ஆர் என்பது பூமகளைக் குறிக்கும் சொல் என்றும், அவள் பூசித்த தலம் ஆரூர் என்பர். இங்குப் பெருமான் புற்றுக்குள் வீற்றிருக்கும் மண் லிங்கமாக இருந்தார் என்று புராணம் கூறும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அப்புத்தலம் - திருஆனைக்கா

சிவபெருமான் நீர் வடிவில் விளங்கும் தலம் திருஆனைக்கா. ஒரு யுகத்தின் தொடக்கத்தில் அம்பிகை சிவபூசை செய்ய விரும்பினாள். சிவ பெருமான் தண்ணீர் வடிவாக விளங்கும் இத் தலத்திற்கு வந்தாள். பெருக்கெடுத்தோடும் நீரில் மூழ்கி எழுந்தாள். நீறணிந்தாள். மலர்களைப் பறித் துச் சேர்த்தாள்.

சிவலிங்கம் வேண்டுமே. காவிரிக்குச் சென்றாள். பொங்கிவரும் காவிரி வெள்ளத்தைக் கண்டாள். அதில் வரும் நீரைத் திரட்டி. சிவலிங்கமாக ஆக்கினாள். அதை அங்கிருந்த வெண்ணாவல் மரத்தின் கீழ் வைத்துப் பூசித் தார். சிவபெருமான் அவளுடைய ஒப்பற்ற பூசை யால் மகிழ்ந்தாள். அந்த லிங்கத்திலிருந்து வெளிப் பட்டு அவளுக்கு அருள் புரிந்தார். அவளுடைய அந்த லிங்கத்தில் கலந்தார்.

அந்த லிங்கம் இறைவன் ஆணையால் இறுகி கல்லாலானது என்றாலும், அதைச் சுற்றி நீர்பெருகி அதை மூழ்கடித்தது. பெயருக்கேற்ப அச்சிவலிங்கம் நீருக்குள்ளேயே இருந்தது. அவ் வப்போது நீரை இறைத்து விட்டுப் பூசை செய்த னர். அங்கு அவரை சிலந்தியும், யானையும் வழி பட்டுப் பேறுபெற்றன.

அந்த லிங்கத்திற்கு மாமன்னர்கள் ஆலயம் அமைத்தனர். பெருமான் நீரால் திரட்டப்பட்ட திருமேனியாக விளங்குவதால் செழுநீர்த்திரள் என்று அழைக்கப்படுகிறார். மேலும் நீரானார், அப்பு லிங்கர், ஆரம் கொண்டருளிய பெருமான் என்ற பெயர்களும் வழங்குகின் றன.




அம்பிகை பூசை செய்யும் ஐதீகம் இன்றும் உள்ளது. அம்பிகை சந்நிதியின் அர்ச்சகர் உச்சிக் காலபூசையின்போது, புடவை அணிந்து யானை, முன் நடக்க பரிவாரங்களுடன் அம்பிகை சந்நிதி யிலிருந்து புறப்பட்டு சுவாமி சந்நிதிக்கு வந்து பூசை செய்கிறார்.

இறைவர் அப்புலிங்கர், அம்பிகை அகிலா ண்டேசுவரி. செழுநீர்த் திரளாக விளங்கும் ஆனைக்கா. அண்ணலின் பெயரால் பல தலங் களில் ஜம்புகேசுவரம் என்ற சிவாலயங்கள் அமைக் கப் பட்டன. இவற்றில் குறிப்பிடத்தக்க சிலவற்றைக் காணலாம்.

### ஜம்பை (திருவரங்கம்) ஜம்புகேசுவரர்—

ஒரு கலக காலத்தில் திருவரங்கம்- திரு வானைக்கா ஆகிய இரண்டு தலங்களிலிருந்தும் சில அன்பர்கள் கூட்டமாகப் புறப்பட்டுவந்து, தென்பெண்ணையாற்றங்கரையில் இரண்டு ஊர்களை அமைத்து அதில் சிவாலயத்தையும் திருமால் ஆலயத்தையும் அமைத்தனர். இவ்வூர்கள் ஜம்புகேசுவரம், திருவரங்கம் என்று அழைக் கப்படுகின்றன. ஜம்பு கேசுவரம் இந்நாளில் ஜம்பை என வழங்குகிறது. இங்குள்ள சிவாலயம் ஜம்பு கேசுவரம் என்று அழைக்கின்றனர்.

### செம்பாக்கம்- ஜம்புகேசுவரம்

திருக்கழுக் குன்றத்திலிருந்து திருபோரூர் செல்லும் சாலையில், செம்பாக்கம் என்ற தலம் உள்ளது. இங்கு வெண்ணாவல் மரத்தடியில் ஜம்புகேசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. அம்பிகை அகிலாண் டேசுவரி. இவ்வூரில் ஏராளமான குளங்களும் பெரிய ஏரியும் உள்ளன. நீர்க் கடவுளான வைரவர்க்குத் தனி ஆலயம் உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## அக்னி லிங்கம் - தேஜோ மயலிங்கம் - திருவண்ணாமலை

ஸ்ரீ-அண்ணாமலையார்-திருவண்ணாமலை

இறைவன் செந்தீ வடிவினன். அவன் தீயாகத் தோன்றி அருள்பாலித்த தலம் திருவண்ணாமலை. அண்ணா + மலை என்பதற்கு அணுக முடியா மலை என்பது பொருள் ஒரு யுகத் தின் ஆரம்பத்தில் சிவபெருமான் உலகையும் அதில் உயிர்த் தொகுதிகளையும் அவற்றைப் படைத்துக் காக்க திருமாலையும் பிரம்மனையும் படைத்தார்.

திருமால் பூமி தோன்றுவதற்கு முன்பாக வெள்ளக் காடாக இருந்த வேளையில் அந்த நீரில் மிதக்கும் ஆலிலை மீது குழந்தையாக யோக நித்திரையில் இருந்தார். அவருடைய கொப்பூழிலிருந்து செந்தாமரை ஒன்று மலர்ந்தது. அந்த தாமரை மலர் மலர்ந்ததும் அதில் யோகியாகப் பிறந்த பிரமன் விழித்தான். உலகில் தான் மட்டுமே தனித்திருப் பதை உணர்ந்தான். தான் அமர்ந்திருக்கும் தாமரையிலிருந்து அதன்தண்டைப் பிடித்துக் கொண்டு இறங்கினான். அது திருமாலின் உந்தியில் இருந்து வெளிவருவதைக் கண்டான். அப்போது திருமால் யோக நித்திரையில் இருந்தார். அவரைப் பிரமன் எழுப்பினான். அவரை நோக்கி நீ யார் என்றான், அதற்கு அவர் மகனே! நான் திருமால் உன்னைப் படைத்தவன் என்றான்.

பிரமன் ஓ திருமாலே! உன்னுடைய கடந்த காலத்தில் நீ பத்து பிறவிகள் எடுத்த போது உன்னைப் படைத்தவன் நானே என்றார். திருமால் அதை மறுத்தார். அவர்களிடையே பேச்சு வளர்ந்து யார் பெரியவர் என்ற போட்டியாக மாறியது. இருவரும் தானே பெரியவர் என்று வாதிட்டனர்.

அவ்வேளையில் அவர்களுக்கிடையே நெடிய நெருப்புத் தூண் தோன்றியது. விண்ணுக் கும் பாதாளத்திற்கும் நிற்கும் அந்த நெடிய ஜோதியைக் கண்டு அவர்கள் வியந்தனர். அப்போது பெருமானின் வானொலியாக இந்த சோதியின் அடியை ஒருவரும் முடியை ஒருவரும் தேடிக் கண்டுபிடியுங்கள் யார் முதலில் கண்டு பிடிக்கின்றீர்களோ, அவரே பெரியவர் என்றார். பிரமனுக்கும் திருமாலுக் கும் அதுவே சரியென்றுபட்டது.

திருமால் பன்றி அவதாரத்துடன் அடியைக் காணப் பாதாளத்தை அகழ்ந்து கொண்டு சென்றார். பிரமன் அன்ன வடிவுடன் முடியைக் காண விண்ணில் எழுந்தான், ஆண்டுகள் பல வாயின.

பூமியை அகழ்ந்ததால், திருமாலின் கொம்புகளும் குளம்புகளும் தேய்ந்து அழிந்தன. அவர் தமது தோல்வியை ஒப்புகொள்ள முடிவு செய்தார். மீண்டும் தரைக்கு வந்தார். அதே வேளையில் விண்ணில் பறந்து சென்ற பிரம னின் நிலை மோசமானது. தீயின் வீச்சால் அவனு டைய சிறகுகளும் உடலும் கருகின. இனி, பறக்க முடியாத நிலையில், அவன் தரைக்கு மீள வேண்டி யவனானான். அவன் மனம் தோல்வியை ஒப்புக் கொள்ள விரும்பவில்லை.

அவ்வேளையில் வானிலிருந்து விழும் ஒரு தாழம்பூவைக் கண்டான். அது அவனிடம் பிரமனே நான் விழத் தொடங்கி பல ஆயிரம் ஆண்டுகள் ஆயின. உன்னைப் போல் பதினான்கு பிரமர்களின் காலம் கழிந்து விட்டது. எனவே, உன் முயற்சியை விடுக என்றது. பிரமன் மனம் சோர்ந்து பூமிக்கு வந்தான். அவனுடன் தாழம்பூவும் வந்தது.

அவ்வேளையில் நெருப்புத் தூணின் மத்தியிலிருந்து சிவபெருமான், மான், மழு அபய வரத முத்திரை தாங்கியவராய் தோன்றி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னார். அவரைத் திருமாலும் பிரமனும் வணங்கி னர். திருமால் தன் தோல்வியை ஒப்பு கொண் டான். பிரமன் இறுமாப்புடன் தான் வென் றேன். முடியைக் கண்டேன் என்று பொய் கூறி னான். தாழம்பூ அவன் கூறியதற்கு ஆமோதித் துச் சாட்சி கூறியது.

பெருமான் திருமாலை ஆரத் தழுவினார். பிரமனை கோபத்துடன் நோக்கி வேதக் கடவு ளான நீ பொய் கூறியதால் உனக்கு தனிக் கோயில்கள் இல்லாது போகட்டும் என்று சபித்தார்.

பிரமன் அவரைப் பணிந்து மன்னிக்குமாறு வேண்டினான். நெருப்பு மலையை இறைவன் பொன் மலையாகச் செய்தார். அந்த மலையைப் பிரமனும் திருமாலும் வழிபட்டனர்.

பிரமன் சிவபெருமானிடம், ஐயனே! இந்த மலைக்கு மழையையன்றி யாரால் அபிஷேகம் செய்ய முடியும். நட்சத்திரங்களே மாலையாக இருக்குமேயன்றி யாரால் மாலை சூட்ட இய லும். ஆகவே, இதன்பால் ஒரு சிவலிங் கத்தை அமைக்க வேண்டுமென்றான். பெருமான் அவன் விருப்பப்படியே மலையின் கிழக்குப் பகுதியில் ஒரு சிவலிங்கத்தைத் தோற்றுவித்தார். அதையே இப்போது நாம் அண்ணாமலை யாராகப் போற்றி வணங்குகிறோம்.

மேலும், பிரமன், பெருமானிடம் எங்களுக்கு அறிவு புகட்டிய இந்த கார்த்திகை மாதத்து கார்த்திகை விண்மீனில் சோதியைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அப்போது பெருமான், கார்த்திகை மாதத்து கார்த்திகை நாளில் இம்மலையின் உச்சியில் சோதி தோன் றும், அதைக் கண்டு தரிசிப்பவர்களுக்கும், பார்த்தபின் அன்று உணவு அருந்துபவர்க்கும் அவருக்கு மட்டுமின்றி, அவர் வம்சத்தில் வரும் இருபத்தோருதலை முறையினருக்கும் முத்தி வரம் கொடுப் போம்" என்றார்.

அம்மலை ஆதியில் பொன்மலையாயும், அடுத்தயுகத்தில் வெள்ளி மலையாகவும், இப்

-அர்த்தநாரீசுரவர் -திருவண்ணாமலை

போது மண்மலையாகவும் இருக்கிறது. நெடுங் காலம் அம்மலையின் உச்சியில் கார்த்திகை மாத கிருத்திகை நாளில் சோதி தானே தோன்றி யது. காலப்போக்கில் அது தோன்றாததால் மகா முனிவர்களும் சித்தர் களும் கூடி மலை மீது தீபம் ஏற்றும் வழக்கத்தைத் தோன்றுவித்தனர். இப்போது தீப விழா வையொட்டி பெருந் திரு விழாவும் கொண்டாடப்படுகிறது.

இறைவர் அண்ணாமலையார் அம்பிகை உண்ணா முலைநாயகி. அன்பர்கள்இங்குள்ள மலையை அண்ணாமலையாராகப் போற்றி வலம் வந்து வழிபடுகின்றனர். இதன் எட்டு திக்கிலும் திக்பாலகர்களால் நிறுவி வணங்கப் பட்ட லிங்கங்கள் அவரவர் பெயராலேயே சிற்றாலயங்களில் உள்ளன. மலை சுற்றும் பாதை யில் அனேக சிறு சிற்றாலயங்கள் உள்ளன.

சிவபெருமான் பூதபதி என்றழைக்கப்படுகிறார். சிவனடியார்களின் பரம்பரை பூத பரம்பரையாகும். திருஞானசம்பந்தர் பூதபரம்பரை பொலிய திருவாய் மலர்ந்தார் என்கிறார் என்கிறார் சேக்கிழார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## வாயு லிங்கம் - காற்று லிங்கம் - திருக்காளத்தி



- காளத்திநாதர் – காளஹஸ்தி

ஞானத்தின் வடிவான அம்பிகை ஒரு சமயம் சய்ய மலைத்தொடர் ஒன்றில் யோக நிலையில் வீற்றிருந்தாள்.

அவள், அவ்வேளையில் வழிபட சிவபெருமானை விரும்பி தன் யோகத்தால் காற்றைத் திரட்டி லிங்கமாக ஆக்கினாள். அதற்கு யோக முறையில் பூசை செய்தாள். அந்த லிங்கம் யாருடைய கண்ணிற்கும் புலப்படாதிருந்தது. அம்பிகை அன்பர்கள் கண்டு வழிபட சித்த மருந்துகளைக் கொண்டு அந்தக் காற்று லிங்கத்தை இறுக்கி பெரிய லிங்கமாக மாற்றினாள். அந்த லிங்கமே காளத்தியில் காளத்தீசுவரர் என்ற பெயரில் பெரிய லிங்கமாக உள்ளது. அதை வாயு லிங்கம் என்று அழைக்கின் றனர். அதனை தேவர் முதல் எல்லோரும் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

அந்த லிங்கத்தை யானை, சிலந்தி, பாம்பு ஆகிய மூன்றும் வழிபட்டன. பெருமான் அவற்றிற்கு மோட்சமளித்துத் தன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொண்டார். அம்மூன்று உருவங்களும் அவருடைய திருமேனியில் உள்ளன. கண்ணப்பர் வழிபட்டுத் தன் கண்ணை இடந்து அப்பி அருள்பெற்றலிங்கம்இதுவேயாகும்.

## தர்மஸ்தலா - பூதர்கள்

கர்நாடக மாநிலத்தில் புகழ்பெற்ற சிவத் தலமாக தர்மஸ்தலா விளங்குகிறது

இத்தலம் ஆதியில் பூதர்களுக்கு உரியதாக இருந்தது. சிவகணங்களாக பூதர்கள் நால்வர் சிவனது ஆணைப்படி பூமியில் தர்மத்தைக் காத்து வந்தனர். கலிகாலம் தொடங்கிய பின்னர் தர்மம் குறையத் தொடங்கியது. அதைக் கண்ட பூதர்கள் வருத்தமடைந்து சிவ பெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் இது காலத்தின் கொடுமை. நீங்கள் தூய்மையான இடத்தில் தங்கி யிருங்கள் என்றார் பூதர்கள் அமைதியான தர்மம் நிலவும் இடத்தைத் தேடித் திரிந்தனர். இறுதியில் இப் பகுதிக்கு வந்து இப்பகுதியை ஆண்டு வந்த ஹெக்டே குடும்பத்தினரிடம் சென்று தாங்கள் தங்கி வசிக்க ஒரு வீடு வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் தாம்வசித்து வந்த வீட்டை அவர்களுக்கு அளித்துவிட்டு வேறிடம் சென்ற னர். பூதர்கள் அங்கே வசித்து வருகின்றனர்.

பூதர்கள் ஹெக்டே அவர்களின் வேண்டு கோளை ஏற்று வைரவரை அனுப்பி மேற்குக் கடற் கரையிலிருந்து சிவலிங்கம் எடுத்து வந்து நிலைப் படுத்தினர் என்று வரலாறு கூறுகிறது. அந்த லிங்கத்தில் மஞ்சுநாதர் என்ற பெயரில் சிவபெருமான் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய தேவி வடக்கில் தனிக்கோயில் கொண்டுள் ளார். அவளுடைய சந்நிதியில் அவளுக்கு முன் புறம் நான்கு பூதர்களும் உள்ளனர்.

இக்கோயிலைஎன்னும்குடும்பத்தினர் பரம்பரையாக நிர்வகித்து வருகின்றனர்.

ஊருக்கு வடக்கிலுள்ள சிறிய மலை மீது வைரவர் ஆலயம் உள்ளது. அதற்குச் சற்றுத் தொலைவில் நேத்ராவதி ஆறு ஓடுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## ஆகாயத்தலம் - சிதம்பரம்

பஞ்சபூதங்களில் மகாபூதமாகவும் மற்ற நான்கு பூதங்களுக்குப் பிறப்பிட மாகவும் இருப்பது ஆகாசமாகும்.. இது உமாதேவியின் வடிவமாகும். இது எண் ணிலடங்காத சூரிய சந்திரர்களை யும் நட்சத்திரக் கூட்டங்களையும்கோள் களையும் தன்னுள் கொண் டுள்ளது.

பூமியில் ஆகாயத் தலமாக இருப் பது சிதம்பரம் ஆகும். அம்பரம் என்பது எல்லையில்லாபெருவெளி. சித்+ அம்ப ரம் எனில், காலம் கடந்தஅளக்க முடி யாதபெருவெளியைக் குறிக் கும். இதிலு ள்ள பொருட்கள் ஓயாது இயங்குவதற்கு மூலகாரணமான பஞ்சகிருத்திய தாண்ட வத்தை இத்தலத்தில் பெருமான் ஆடிக் கொண்டிருக்கின்றான்.இந்தத் தாண்ட வம் ஆனந்த தாண்டவம் எனப்படும்.

பேரண்டவெளியில்ஆகமம் கூறும் ஆறு அத்துவாக்களில் மூன்று அத்து வாக்கள் வியாபித்துள்ளன.அவை வர்ணம் (எழுத்து) பதம், மந்திரம் என்பனவாகும். அதைக் குறிக்கும் வகையில் ஐம்பத் தோரு வர்ணங்களும் எண்பத் தோரு பதங்களும் கூடிய மந்திர ராஜமான எந்திரம் ரகசியம் எனும் பெயரில் வைக் கப்பட்டுள்ளது. இந்த மந்திரம் அரூப மூர்த்தியாகவும்சந்திர மௌலீசுவரர் எனும் சிவலிங்கம் உருவருவமாகவும், நடராசப் பெருமான் உருவத் திருமேனி யாகவும் எழுந்தருளியுள்ளனர்.

இங்குப் பெருமான் ஆடும் தாண்ட வம் ஆனந்த தாண்டவம் ஆகும். உடுக் கை ஒலியால் உலகைப் படைத்தும் தீ ஏந்திய கரத்தால் அழித்தும்,அபய கரத் தால் அருளலையும், ஊன்றிய திருவடி யால் மறைத்தலையும், தூக்கிய திருவடி யால் காத்தல் தொழிலையும் எப்போ தும் நடத்துகின்றார்.

அவருடைய ஆனந்த மா நடனத் தைத் தேவி கண்ணாரக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றாள். பெருமான்



ஸ்ரீ-நடராசர் -சிதம்பரம்

நின்றாடும் சபை சிற்சபை எனப்படும். இத்தலம் ஆகாயத் தலம் என்பதை உணர்ந்த சிற்சபையினைச் சுற்றி அமைந்துள்ள திரு மாளிகையில் இரண்டாம் அடுக்கில் தனிச் சந்நிதியில் ஆகாய லிங்கம் எனும் பெயரில் ஒரு லிங்கம் தனிச்சந்நிதியில் நிலைப் படுத்தப்பட்டுள்ளது.

இத்தலத்தில் நடராசர் உருவத் திருமேனியாக அமைவ தற்கு முன்பாக, ஆகாசத்தைக் குறிக்கும் யந்திரம் விசீநியம்பு வாகத் தோன்றியது.அதை தேவர்கள் வழிபட்டனர் என்று கூறுகின்றனர்.அதன்பின்னர் தில்லை வனத் தின் நடுவே ஆல மரத்தின் நீழலில் சுயம்புவாக திரு மூலட்டானர் என்னும் சிவ லிங்கம் தோன்றிய தென்றும் கூறுவர்.

அதன்பின்னர் பதஞ்சலி, வியாக்ரபாதர், ஜைமினி ஆகிய மூன்று முனிவர்களுக்காகச் சிவபெருமான் ஆனந்த தாண்ட வத்தை ஆடிக் காட்டினார்.அப்படியே ஐம்பொன் சிலையா னார். இரண்யவர்மன் என்பவன் இங்கு ஆலயத்தை அமைத் தான். அவனே அந்தர்வேதியிலிருந்து தீட்சிதர்களை அழைத் துவந்து பூசைகளை நடத்த ஏற்பாடு செய்தான். அன்று முதல் தொடர்ந்து நடராசர், சந்திர மௌலீசுவரர், இரத்தின சபாபதி, மூலட்டானநாதர் ஆகிய மூர்த்திகளுக்குச் சிறப்பான வபாடுகள்நடைபெற்றுவருகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## திருப்பெருந்துறை - ஆன்மநாதர்



●ஆன்ம நாதர்-ஆவுடையார் கோயில்

ஆகாசத்தைக் குறிக்கும் மற்றோர் தலம் ஆவுடையார் கோயில் என வழங் கும்திருப்பெ ருந்துறை யாகும். இத்தலத்தின் கருவறைஆகாச வெளி யான பேரண்ட வெளி யைக் குறிப்ப தாகும்.

ஆகாச வெளி யில் நட்சத்திரக் கூட் டங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றில் முக்கியமான தான இருபத் தேழு நட்சத்திரங்களைக் குறிக்கும் வகையில் 27 தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. பிரபஞ்ச வெளியில் ஐந்து கலை வியாபித்துள்ளதைக் குறிக்கும் வகை யில் ஐந்து தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. பிரபஞ் சத்தில் இடம் பெற்றுள்ள 274 புவனங்களைக் குறிக் கும் வகையில் 274 தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன.

அம்பிகையின் திருமேனி ஆகாசம் என்பதால், அவள் அருவமாக எழுந்தருளியுள் ளார். அவளுடைய அருளை வெளிப்படுத்தும் வகை யில் பாதங்களை வைத்து வழிபடுகின்றனர். இறைவன் ஆகாசத்தில் விளங்கும் மந்திரக் கூட் டங்களின் மூலாதரமான ஓங்கார ரூபராக, அருவத் திருமேனியாக எழுந்தருளி யுள்ளார்.

இத்தலம் ஆதி சிதம்பரம் என்றழைக்கப் படுகிறது. இக்கோயில் விதானங்களில் இராசிக ளும், அதன் தேவதைகளும், நட்சத்திரக் கூட்டங் களும், செதுக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகரோடு தொடர்புடைய திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருவி டைமருதூர், சிதம்பரம், முதலிய தலங்களில் ஆன்மநாதர் ஆலயங்கள் உள்ளன. இவற்றிலும் கருவறையில் சிவலிங்கம் அமைக்கப்படாமல் பீடம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது

சென்னைஅம்பத்தூரைஅடுத்துள்ள மேனாம் பேடு என்னும் ஊரில் அன்னபூரணிஉடனாய ஆத்ம நாதர் ஆலயம் உள்ளது.

## கடுவெளி

திருவையாற்றிற்கு அருகில் கடுவெளி எனும் ஊர் உள்ளது. கடுவெளி என்ற சொல் பேரண்டப் பெருவெளியைக் குறிக்கும் சித்தர் பரிபாஷைச் சொல்லாகும். இவ்வூரில் ஆகாச புரீசர் என்ற பெயரில் பெரிய சிவாலயத்துள் பெருமாள் எழுந்தருளியுள்ளார். இது கடுவெளி சித்தரால் பூசிக்கப்பட்ட தலமாகும்.

## பாண்டிய நாட்டு பஞ்ச பூதத் தலங்கள்

பஞ்சபூதத் தலங்கள் யாவும் தொண்டை நாட்டிலும் நடுநாட்டிலுமே அமைந்துள்ளன. இவற்றுக்கு இணையாகத் தென்பாண்டி நாட்டிலும் பஞ்சபூதத் தலங்கள் உள்ளன. தென்பாண்டி நாட்டுத் திருப்பதியான திருநெல்வேலிக்கு அருகில் ஐம்பூதங்களைக் குறிக்கும் பஞ்ச பூதத் தலங்கள் உள்ளன. இவை சங்கரன் கோயில், தாருகாபுரம், கரிவலம் வந்த நல்லூர், தென்சேரி மலை, தேவதானம் என்ற ஐந்தாகும்.

சங்கரன் கோயில் மண் தலமாகப் போற்றப்படுகிறது. இறைவன் சங்கரலிங்கேசுவரர், அம்பிகை கோமதி. இங்கு அம்பிகை தவம் செய்து இறைவனை சங்கரநாராயணராகக் கண்டு மகிழ்ந்தாள். அது ஆடித்தவசு என்னும் பெயரில் ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

தாருகாபுரம் நீர்த்தலமாகப் போற்றப்படுகிறது. இங்கும் அம்பிகை அகிலாண்டேசுவரி என்னும் பெயரில் அருள்பாலிக்கிறாள். இறைவர் மத்தியஸ்த நாதர். கரிவலம் வந்த நல்லூர்நெருப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. இறைவன் பால்வண்ண நாதர் அம்பிகை ஒப்பன நாயகி. இறைவன் இந்திர னுக்குச் சோதி வடிவில் காட்சியளித்த தலம். தென்சேரிமலை காற்றுத் தலமாகப் போற்றப் படுகிறது.இறைவர் திரிபுரநாதர், அம்பிகை சிவபரி பூரணாம்பிகை .தேவதானம் ஆகாயத் தலம் இறைவர் நச்சாடை தவிர்த்த நாதர் அம்பிகை தவம் பெற்ற நாயகி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சென்னை மாநகர் பஞ்சபூதத் தலங்கள்

ஸ்ரீ நடராஜர்

விரிந்து வளர்ந்து விட்ட சென்னை மாநகரிலும் பஞ்சபூதத் தலங்கள் அமைந்துள்ளன. இவை புராதனத் தலங்கள் இல்லை என்றாலும், தனிச் சிறப்பு மிக்கவைகளாகும்.

பஞ்சபூதத் தலங்களில் வாழ்ந்தவர்கள். சென்னை மாநகரில் குடியேறிய போது தங்கள் ஊர் தெய்வங்களையும் இங்கு எழுந்தருளி வைத்துள்ளனர். இவற்றில் பஞ்சபூதத் தலங்களில் நடைபெறுவதுபோன்றே விழாக்களும் பூசைகளும் நடைபெற ஏற்பாடு செய்திருந்தனர். நாளடைவில் அவை சென்னை மாநகருக்கே உரிய வழிமுறைகளை ஏற்றுக் கொண்டு மாறிவிட்டன.

சென்னையில் (மின்ட் சாலையில்) தங்கசாலைத் தெருவில் ஒன்றும், அமைந்தகரையில் ஒன்றும் ஆக இரண்டு பெரிய ஏகாம்பரநாதர் ஆலயங்கள் உள்ளன. இவை இரண்டும் அளவில் பெரியதாகும்.இரண்டிலும் சிறப்பான பூசைகள் செய்யப்படுவதுடன் நன்கு பராமரிக்கப் படுகின்றன.(மின்ட்) தங்கசாலை ஏகாம்பரநாதர் ஆலயத்தில் காஞ்சி ஏகாம்பர நாதர் ஆலயத்திற்குரிய பூசைகளும் திருவிழாக்களும்நடைபெறுகின் றன.

சென்னை அண்ணாப்பிள்ளை தெருவினை அடுத்துள்ள பள்ளியப்பன் தெருவில் ஒன்றும், தண்டையார்பேட்டையில் ஒன்றுமாக இரண்டு அண்ணாமலையார் ஆலயங்கள் உள்ளன. இவ்விரண்டிலும் கார்த்திகைத் தீபவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இவற்றின் முகப்பில் அண்ணாமலையார் ஐதீகக் காட்சி சுதை வடிவமும் அதன் உச்சியில் கார்த்திகைத் தீபம் ஏற்ற அகலும் உள்ளன.

திருமயிலை கபாலீச்சரத்திலும்,காரணீச்சரத் திலும் அண்ணாமலையாருக்கான பெரிய தனிச் சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் முகப்பில் அண்ணாமலை அதில் லிங்கோற்பவர் வடிவம் அதன் உச்சியில் அகல் ஆகியவை உள்ளன. கார்த்திகை தீபத்தன்று இங்கு சிறப்பு அபிஷே க அலங்காரங்கள் செய்யப்படுகின்றன.

சென்னை (மண்ணடி) பவளக்காரத் தெருவில் காளத்தீசுவரர்- ஞானபிரசூனாம்பிகை ஆலயம் உள்ளது.

சென்னைவாழ் சிதம்பரம் நடராசப் பெருமானின் பக்தர்கள் அமைத்தவை சிதம்பரேசர் ஆலயங்களாகும். சென்னை சூளை அவதானம் பாப்பையர் தெருவிலும், சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலும், லிங்கிச் செட்டி தெருவிலும் ஆகமூன்றுநடராசர் ஆலயங்கள் உள்ளன. இவற்றின் கருவறையில் நடராசமூர்த்தியின் அழகிய உலாத் திருமேனிகள் எழுந்தருளி வைக்கப்படுள்ளன. நடராசருக்கு உரிய ஆறு அபிஷேகங்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. திருவாதிரையன்று பெரிய விழா கொண்டாடப் படுகிறது.

கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள நடராசர் ஆலயத்தில் பெருமான் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இது திருவாவடுதுறை ஆதினத்தால் போற்றப்படுகிறது.

கொரட்டூரில் அகிலாண்டேசுவரி உடனாய ஜம்புகேசுவரர் ஆலயம் உள்ளது. கிழக்குத் தாம்பரம் காமராஜர் புரத்திலும் ஜம்பு லிங்கேசுவரர் ஆலயம் உள்ளது.

இவை தவிர சென்னையில் இன்னும் பல சிவாலயங்கள் பஞ்சபூதத் தலங்களின் பெயரால் அமைந்துள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பஞ்சபூதத் தலங்களும் - மகேசுவர வடிவங்களும்

சிவபெருமான் தனக்கென ஓர் உருவமும் இல்லாதவர். என்றாலும், எண்ணிலாத வடிவங்கள் கொண்டு எண்ணிலாத பெயர்களுடன் அன்பர்களுக்கு அருள்புரிந்து வருகின்றார். அவருடைய உருவங்களில் இருபத்தைந்தைத் தேர்ந்தெடுத்து, மகேசுவர வடிவங்கள் என்று பெயரிட்டு வணங்கி வருகிறோம். அவற்றில் ஐந்து அனைத்துக் கோயில்களிலும் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது. அவை நடராசர், சோமாஸ்கந்தர்,அர்த்தநாரீசர், தட்சிணாமூர்த்தி, சந்திரசேகரர் என்பவையாகும். பஞ்ச பூதங்க ளோடு தொடர்பு டைய இவ்வடிவங் களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து இங்கே காணலாம்.

மற்ற நான்கு பூதங்களைத் தன்னுள் கொண்டிருக்கும் மகாபூதம் ஆகாசமாகும். அதில் ஓயாது இயக்கம் நடைபெறுகின்றது என்பதைச் சிவபெருமானின் ஆனந்தத் தாண்ட வம் உணர்த்துகிறது. அவருடைய நடராசர் கோலம் ஆகாயத் தத்துவத்தைக் குறிக்கிறது. அவருடைய நவநாதச் சிலம்பிலிருந்து ஓசையும் அதிலிருந்து மந்திரம் பதம் வண்ணம் (எழுத் துக்கள்) ஆகியன தோன்றுகின்றன. அதனால் யாவிற்கும் மூலமான நடராச மூர்த்தியை அனைத்து ஆலயங்களிலும் எழுந்தருளி வைத்து வழிபடுகிறோம். ஆகாசத்தலமான சிதம்பரத்தில் சிற்சபையில் நடராசர் ஆடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

ஆகாச வெளியில் இரண்டாவதாகத் தோன்றி அங்கும் வியாபித்திருப்பது காற்றாகும். காற்றே எல்லா உயிர்களும் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கிறது. அந்தக் காற்றின் வடிவாகக் கல்லால மரத்தடியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருக்கோலமே தட்சிணா மூர்த்தி கோலமாகும். காற்று ஓரிடத்தில் நில்லா மல் சஞ்சரித்துக் கொண்டே இருக்கின்றது. அதுபோன்றே மனமும், ஓரிடத்தில் நில்லாமல் அலைபாய்ந்து கொண்டே இருக்கின்றது. அதை ஒருமுகப்படுத்தி, நிலைப்படுத்தி, ஆற்றலாக வெளிப்படுத்துவதை அருளும் மூர்த்தியாகத் தட்சிணா மூர்த்தி விளங்குகிறார். தட்சிணா என்பதற்கு ஆற்றல் என்பதும் பொருள். காற்றுத் தலமான திருக்காளத்தி தட்சிணாமூர்த்தித் தலமாகும். அங்குப் பெருமான் ஆகம பீடத்திலும், வைதீக பீடத்திலும் வீற்றிருந்து ஞானத்தை அருள் கிறார்.

காற்றிலிருந்து தோன்றியது நெருப்பாகும். அது எல்லா பொருட்களிலும் கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்துள்ளது. எல்லா செயல்களுக்கும் அது ஆதாரமாக உள்ளது. அந்த நெருப்பே சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றிற்கு ஆதாரமாகும். அவற்றின் நடுவில் பெருமான் அர்த்தநாரீசுவரராக விளங்குகிறார். இதைக் குறிக்கும் வகையில் திருவண்ணா மலையில் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளியுள்ளார். அவர் அக்னி மண்டலத்தின் நடுவில் நடனமாடிக் காட்சியளித்ததின் நினைவாக ஆண்டு தோறும் கார்த்திகை தீபம் ஏற்றும் வேளையில் அவருடைய உருவம் எழுந்தருளிவந்து நடனமாடும் ஐதீக விழா நடத்தப்படுகிறது.

நெருப்பிலிருந்து நீர்ப்பிரவாகம் தோன்றி நதிகளாக ஆயின. மழையாகப் பொழிந்து குளங்குட்டைகளானது நீர் அமுதமாகும். நீரின்றி உலக வாழ்வு இல்லை. எனவே, நீரிடையே பெருமான் அம்பிகையுடன் சந்திரசேகர மூர்த்தியாக விளங்குகிறார். இறை வனின் அருளே நீராக விளங்குகிறது. இறைவன் தண்ணீர் லிங்கமாக விளங்கும் திருஆனைக்காவல் சந்திரசேகரத் தலமாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீரிலிருந்து நிலஉலகம் தோன்றியது. நிலத்தில் மரம் செடி கொடிகள், ஊர்வன பறப்பன, நடப்பன முதலியனதோன்றின. மனிதகுலம் பூமியில் நிலைபெற்று வாழ்கிறது. இவை யாவும் தமது வம்சத்தை விருத்தி செய் கின்றன. இவற்றை உணர்த்தும் வகையில் சிவபெருமான் தேவி யுடனும் குமாரனுடனும் சோமாஸ்கந்தராக வீற்றிருக்கின்றார். நிலத்தைக் குறிக்கும் காஞ்சி மா நகரம் முழுவதுமே சோமாஸ்கந்த மூர்த்தித் தலமாக விளங்குகிறது. இங்கு ள்ள ஏகாம் பரநாதர் முதல் மற்றும் அனேக சிவாலயங்களில் கருவறையில் சோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளி யுள்ளார்.

முதலில் உலகத்தை அசைத்து, இயக்க ஆர்ப்பரித்து ஆடும் நடராசப் பெருமானாகச் சிவபெருமான் விளங்குகிறார். அடுத்து அமைதி தவழ வீற்றிருக்கும் பிரானாகத் தட்சிணாமூர்த்தி இருக்கும் கோலத்தில் இருக்கிறார். தொடர்ந்து சக்தியைத் தன்னுள் தோற் றுவிக்கும் அர்த்தநாரி நிலையில் காட்சி அளிக்கிறார். நான்காம் நிலையில் சக்தி அவர் உடலிலிருந்து தனிப்பெரும் பெண்ணாக வெளிப்பட்டு அவர் அருகில் நிற்கின்றாள். அந்தக் கோலமே சந்திரசேகரர் கோலமாகும். அதற்கடுத்து அம்பிகையும், சிவனும் வம்சம் விருத்தியைக் குறிக்கும் வகையில் இடையில் குகன் வீற்றிருக்கின்றார். இது சிவம் மக்களுக்கு அருளப் படிப்படையாகப் பல்வேறு கோலம் கொள்ளு தலைக் குறிக்கின்றது என்பர்.

பஞ்ச பூதங்களின் நிலையை உணர்த்தும் வகையில் அமைந்த இந்த ஐந்து மூர்த்திகளையும் அனைத்து ஆலயங்களிலும் எழுந்தருளி வைத்து வழிபடுகின்றனர். இவற்றில் பூரண அனுக்கிரக மூர்த்தியாக ' சோமாஸ்கந்தர் விளங்குகிறார். அதனால் அவர் பிரதான மூர்த்தியாக அனைத்து ஆலயங்களில் விளங்குவதுடன் பெருந்திருவிழாவாகக் கொண்டாடுவதற்குரிய மூர்த்தியாக இருக்கின்றார்.



**சிவம்– பராசக்தி– தண்ணீர்**

சிவம் பேறு சக்தி வேறல்ல சிவத்திடமிருந்து ஆதிசக்தி தோன்றியது சிவபெருமானே உயிர் கள் மீதுள்ள அன்பால் பெண்வடிவம் தாங்கி சக்தி எனபேர் கொண்டு நின்றான். அதை உணர்த்தவே திருஆனைக்காவில் (சோமாஸ்கந்த மூர்த்திக்கு) சிவபெருமானுக்கு பெண்வேடம் அணிவித்து விழா கொண்டாடுகின்றனர். சிவபெருமான் தானே பெண்ணாகவும், அவளுடைய வடிவான நீராகவும் இருப் பதை நீர்த் தலத்தில் உணர்த்தும் நிகழ்ச்சியாகும். (புராணத்தில் இதற்கு வேறுவகையான விளக்கம் உள்ளது)

சிவபெருமான் நடத்தும் ஐந்தொழில்கள் சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம், திரோபவம் அனுக் கிரகம் என்ப னவாகும். இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ப னவாகும். இவற்றைப் பஞ்ச பூதங்களில் நின்று பெருமான் நடத்துகிறான். சிருஷ்டி பூமியிலும், ஸ்திதி நீரிலும், சங்காரம் அக்னியிலும், திரோபவம் வாயுவிலும், அனுக்கிரகம் ஆகாசத்திலும் இருந்து நடத்தப் படுகின்றன. பூமியால் சகலமும் உண்டாகும். நீரால் அவை விருத்தி அடையும் அக்னி யால் அழிக்கப்படும். வாயுவால் மறைக்கப்படும். ஆகாச வடிவாக இருக்கும் பிரானால் அனுக்கிரகிக்கப்படும்.

- சிவ மகாபுராணம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூத சுத்தி

சிவபூஜையின் முக்கியமான அங்கங்களுள் ஒன்று பூதசுத்தியாகும். இது பஞ்ச பூதங்கள் தம் முடலில் வியாபித்திருப்பதாகப் பாவித்து அதன் கலை, நிறம், தேவதை, காரணேசுவரர், தத்து வம் ஆகியவற்றைத் தியானித்து அவற்றைத் தூய்மைப் படுத்துவதாகும். இது நாம் அன்றன்று செய்த பாவங்களை நீக்குவதற்குரிய ஆன்மசுத்தி சாதனம் என்று ஒரு நூல் கூறுகிறது.

முதலில் பூமி ( ப்ருதிவி, தத்துவத்தை) பாதம் முதல் முழங்கால் வரை நிவர்த்தி கலை யில் நிறைந்திருப்பதாகவும், மஞ்சள் நிறத்துடன், நான்கு கோண சக்ரமாகவும், சத்யோஜாத மூர்த்தியை தேவதையாகவும் அதனைத் தொழிற் படுத்தும் பிரம்மதேவனையும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து தத்துவங்களை யும் தியானித்து இருதய மத்தியில் இருப்பதாகப் பாவித்து பூமி தத்துவத்தை சாந்தம் செய்ய வேண்டும்.

முழங்காலுக்கு மேல் நாபி (தொப்பூள்) வரை நீர் ( அப்புத்தலம்) தத்துவம் வியாபித் திருப்பதா கவும், பிரதிஷ்டா காலையின் வடிவமாகவும், வெண்மை நிறத்துடன் ஒளிர்வதாகவும் அர்த்த சந்திர வடிவாகவும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம் என்ற நான்கு குணங்கள் கூடியதாகவும், வாம தேவரை தேவதையாகவும் திருமாலையும் அதைத்தொழிற்படுத்தும் காரணேசுவரராகவும் தியானித்து சிரத்தில் சேர்த்து நீர்த் தத்துவத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

நாபி முதல் இருதயம் அளவாக நிறைந் திருப்பதாகவும் வித்யா கலையின் வடிவ மாகவும் சிவப்பு நிறத்துடன் ஒளிர்வதாகவும் முக்கோண வடிவாகவும் அகோர மூர்த்தியைத் தேவதையா கவும் அதை நடத்தும் உருத்திரரையும் சப்தம், பரிசம், ரூபம் என்னும் மூன்று குணங்களுடன் கூடியதாகவும் உள்ள அக்னி தத்துவத்தை வழிபட்டுச் சிகையில் சேர்த்து அந்த தத்துவத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

வாயு தத்துவம் இருதயம் முதல் புருவம் வரை நிறைந்திருப்பதாகவும், சாந்தி கலையின் வடிவ மாகவும் கருமை வண்ணத்துடன் அறு கோண வடிவானதாகவும், தத்புருஷ மூர்த்தியை தேவதையாகவும், அதை வழி நடத்தும் மகேசுவ ரருடன் சப்தம், ஸ்பரிசம் என்னும் இரண்டு குணங்களுடன் கூடிய தாகவும், தியானித்து கவசத் தானத் தில் இருப்பதாகப் பாவித்து வாயு தத்துவத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

ஆகாய தத்துவம் புருவம் முதல் பிரமரந் திரம் வரை நிறைந்திருப்பதாகவும், சாந்தியாதீத கலையின் வடிவமாகவும், புகைநிறத்துடன் வட்டமாகவும், ஈசான மூர்த்தியை தேவதையாக வும் காரணேஸ்வரனான சதாசிவருடன் கூடியதா கவும்சப்தகுணம் கொண்டதாகவும்அஸ்திர ஸ்தா னத்தில் சேர்த்து ஆகாச தத்துவத்தை சோதித்து சுத்தி செய்ய வேண்டும்.

யாக சாலை பஞ்ச குண்டங்களில் இறைவ னைப் பூசிக்கும் முறையும் இதுவே யாகும்.

எளிமையாகப் புரிந்து கொள்ள பட்டி யலிட்டுக் காணலாம்.

| உடலின்பகுதி | பாதம் -முழங்கால் வரை | முழங்கால் –நாபி | நாபி– கண்டம் | கண்டம்–புருவம் | புருவம்-பிரமரந்திரம் |
|---|---|---|---|---|---|
| பூதம் (ஏ)தத்துவம் | நிலம் | நீர் | தீ | காற்று | ஆகாயம் |
| கலை | நிவர்த்ரிகலை | பிரதிஷ்டாகலை | வித்யாகலை | சாந்திகலை | சாந்தியாதிகலை |
| வண்ணம் | மஞ்சள் | வெள்ளை | சிவப்பு | கருப்பு | புகை |
| குணம் | சப்த ஸ்பரிச,ரூப, ரஸ, கந்தம் | சப்த, ஸ்பரிச, ரூப, ரசம் | சப்த, ஸ்பரிச ரூப | சப்த, ஸ்பரிச | ஸப்த |
| தேவதை | சத்யோஜாதம் | வாமதேவம் | அகோரம் | தத்புருஷர் | ஈசானர் |
| தொழிற்படுத்துவோன் | பிரம்மா | விஷ்ணு | உருத்திரர் | மதேவர் | சதாசிவர் |
| சேர்க்குமிடம் | (மந்திரம்) | இருதயம், | சிரசு | சிகை | கவசம் அஸ்திரர் |
| குண்ட வடிவம் | நாற்கோணம் | பாதிசந்திரன் | முக்கோணம் | அறுகோணம் | வட்டம் |
| திசை | கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு | ஈசானர். |

தொடர்ச்சி அடுத்த பக்கம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பூமீசுவரர்

பஞ்சபூதங்களில் அதிக பயனாவதும் மக்களைத் தாங்கி நிற்பதும் பூமியாகும். பூமி வடிவாக விளங்கும் சிவபெருமான் பாரபூதன் என்றழைக்கப்படுகிறார். அவனுடைய தேவி தாரிகா. இவர்கள் அருளால் மண் மீது பலகோடி உயிர்கள் தோன்றி வாழ்ந்து மறைகின்றன. இவர்களுடைய மகள் பூமி தேவி எனப்படுகிறாள். அந்த பூமிதேவி தான் செழிக்கவும், கோடான கோடி உயிர்கள் நலம் பெற்று வாழவும் எப்பொழுதும் சிவபூசை செய்கின்றாள். அவளால் வழிபடப்பட்ட இறைவன் பூமீசுவரர் என்று அழைக் கப்படுகிறார். அனைத்து மாவட்டங்களிலும் பூமீசுவரர் எனும் பெயரில் சிவாலயங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்

## மரக்காணம் பூமீசுவரர்

சென்னை- பாண்டிச்சேரி கிழ்க் கடலோரச் சாலையில் சென்னையிலிருந்து 150 கி.மீ. தொலைவிலும்பாண்டிச்சேரியிலிருந்து 15கி.மீ.. தொ லைவிலும் அமைந்திருக்கும் ஊர் மரக் காணம் . கல்வெட்டுக்களில் மணல் கானம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரிலுள்ள கோயில் சோழர்கள் காலத்திய கற்கோயிலாகும். பெரு மான் பூமீசுவரர் அம்பிகை கிரிஜாம்பிகை.

கடலோரத்து மணல் வெளியிடையே சிறு சோலை சூழ்ந்த வளமான நீர் ஊற்றுக்களுடன் கூடிய ஊரானது கானம் எனப்படும். இவ்விடம் அத்தகைய சோலை சூழ்ந்த இடமாக இருந்த தால் இவ்வூர் மணற்கானம் எனப்பட்டது. அதனி டையே சோழ மன்னனுக்குப் பெருமான் தோன் றிக் காட்சியளித்தார் என்றும், அவன் பெரிய கற் கோயிலை அவருக்கு அமைத்தான் என்றும் கூறு கின்றனர். இத்தலத்துக்கு வடக்கேயுள்ள திரு விடந்தை வராகப் பெருமானிடம் உபதேசம் பெற்ற பூமிதேவி இங்கு வந்து சிவபூசை செய்து பேறுபெற்றாள் என்பர்

## மணச்ச நல்லூர் பூமீசுவரர்

திருச்சிக்கு அருகிலுள்ள தலம் இறைவர் பூமீசுவரர். யமனுக்கு அருள்புரிந்த திருப் பைஞ் ஞீலி அருகில் உள்ளது. பூமிதேவி தவம் செய்து அருள் பெற்ற தலம். யமன் இல்லாததால் பூமிக்கு பாரம் அதிகமாகியது. அதனால் யமனை உயிர்ப் பித்து அருளும்படி, பூமிதேவி தவம் செய்த தலம். திருவாவடுதுறை ஆதீனத்தால் பரிபாலிக்கப் படுகிறது.

## நல்லம் கோனேரி ராஜபுரம்

கும்பகோணம்- வடமட்டம் பாதையில் உள்ள கோனேரி ராஜபுரம் பிரிவிலிருந்து உள்ளே 3 கி.மீ. சென்றால் கோனேரி ராஜபுரத் தை அடையலாம். தேவாரத்துள் நல்லம் என்று குறிக்கப்படும் இத்தலம் இந்நாளில் கோனேரி ராஜபுரம் என்றழைக்கப்படுகிறது.

இறைவர் பூமீசுவரர், அம்பிகை பூமிதேவி வராகரிடம் உபதேசம் பெற்று அசுரரால் தீண் டப்பட்ட பாவம் நீங்க பூசித்த தலம். தீர்த்தம் பூமி தீர்த்தம். பூமிதேவி மகிழும் வண்ணம் பெருமான் நடனக்காட்சியளித்தார். அது பூமி தாண்டவம் எனப்படுகிறது. பெருமான் பூமி தேவிக்கு உமாமகேசுவரராகக் காட்சியளித்தார் என்று புராணம் கூறுகிறது.

## வீரவநல்லூர்

நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் - திருநெல்வேலி சாலையில் வீரவ நல்லூர்

---

முன் பக்கத் தொடர்ச்சி ....

சப்த,ஸ்பரிச,ரூப,ரச,கந்த என்ற ஐந்தும் முறையே ஓலி, கேட்டல்; தொடுதல் (ஒளி) வடிவம்,சுவை, நாற்றம் என்பனவாகும். இவை முறையே காது,உடல்,கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐம்புலன்களால் நுகரப் படும் அனுபவங்களாகும்.

சப்த(ஒலி),ஸ்பரிச தொடுதல், ரூப வடிவம்,ரச,சுவை,கந்த நாற்றம், என்ற ஐந்து குணங்களில் பூமி ஐந்தையும், நீர் ,நாற்றம் தவிர மற்ற நான்கையும், தீ சுவை நாற்றம் நீங்கலான மூன்றையும் காற்று சப்தம் (ஒலி) ஸ்பரிசரம் (தொடு உணர்ச்சி) ஆகிய இரண்டையும் ஆகாசம் ஒலியை (சப்தத்தை) மட்டும் கொண்டுள்ளன. இது பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி,நீரிடை நான்காய் நிறைந்தாய் போற்றி தீயிடை மூன்றாய் வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி,வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்போற்றி என்று திருவாசகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உள்ளது. இத்தலம் ஆதியில் புன்னை வனமாக இருந்தது.

ஒரு சமயம் பூமியின் பாரம் அதிகரித்ததால் பூமிதேவி வருத்தமுற்றாள். அவள் சிவபெருமானைச் சரணடைந்து, பூபாரத்தைக் குறைக்க வேண்டுமென்று விண்ணப்பித்தாள்.

பெருமான் புன்னை வனம் சென்று வழிபடுமாறு கூறினார். அவள் வழிபட்டதால் பெருமான் பூமீசுவரர் என்று அழைக்கப்பட்டார். மீண்டும் ஒரு முறை பூமி தேவி தன்னைக் கடலுக்கு அடியிலிருந்து மீட்டு வந்த வீரவராகப் பெருமானுடன் வழிபட்டாள். அவர் பெயரால் இத்தலம் வீரவராக நல்லூர் என்று அழைக்கப்பட்டு, இப்போது வீரவநல்லூர் என வழங்குகிறது. அம்பிகையின் பெயர் பூமியின் மீது பெரும் வளத்தைக்குறிக்கும் பச்சை வண்ணத்தோடு தொடர்புபடுத்தி மரகதவல்லி என வழங்குகிறது. தீர்த்தம் சிவகங்கை இது பூமியால் தோண்டப்பட்டு இறைவன் திருமுடியிலுள்ள கங்கையில் நிறைக்கப்பட்டது.

## திருச்சுழியல்

அருப்புக் கோட்டையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் திருச்சுழியல் அமைந்துள்ளது. ஒரு சமயம் பூமியை அழிக்கப் பொங்கி வந்த வெள்ளத்தைப் பெருமான் ஒரு பிலத்துள் செல்லுமாறு கூற, அது சுழித்து உட்சென்று அடங்கியதால் இத்தலம் திருச்சுழியல் என்றும், பெருமான் பிரளய விடங்கர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இங்குப் பூமிதேவி வழிபட்டுப் பெருமானின் மணக்கோலத்தைக் கண்டாள். பெருமான் பூமீசுவரர். சோமாஸ்கந்தர்பிரளயவிடங்கர். அம்பிகை துணைமாலை நாயகி. தீர்த்தம் பூமி தீர்த்தம், கௌவைக் கடல் என்பதாகும்.

## பூலோகநாதர்

உலகம் பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் என்ற மூவகைப்படும். காயத்திரி மந்திரம் பூர், புவ, சுவ என்று இம்மூன்று உலகங்களையும் குறிக்கின்றது. பூவுலகத்தில் மட்டுமே சிவபூசை செய்து மேன்மை பெற முடியும். பூமண்டலத்தின் பெயரால் சிவபெருமான் பண்ருட்டி வட்டம் நெல்லிக்குப்பத்தில் பூலோக நாதர் என்ற பெயரில் வீற்றிருக்கின்றார்.

## பூமிதேவி

ஸ்ரீ-பூமிதேவி

உலகம் படைக்கப்பட்டபோது ஆதிசக்தி எல்லையில்லாத பெருவெளியான ஆகாயமாகத் தோன்றினாள். வேதம் உமையை ஆகாச வடிவானவள் என்று புகழ்கிறது. பிறகு காற்று, தீ, தண்ணீர் ஆகியன படைக்கப்பட்டன. அவற்றை தொழிற்படுத்த அக்னிதேவன், பவணதேவன்(வாயு), வருணன் ஆகியோர் படைக்கப்பட்டனர். பின்னர் பூமியும் உயிர்த் தொகுதிகளும் படைக்கப்பட்டன. பூமி எல்லாவற்றையும் தாங்கியிருப்பதுடன் பொறுமையுடன் வளர்க்க வேண்டியிருப்பதால் அதற்கு தேவதையாக பூமிதேவி என்னும் பெண் படைக்கப்பட்டாள். அவள் மிகுந்த தபஸ்வினி. அவள் தன்னுடைய அம்சமாக அனேகரை உண்டுபண்ணினாள். அவளிடமிருந்து பூதேவி தோன்றி திருமாலை அடைந்து அவளுக்குத் தேவியானாள். புஷ்கலா தோன்றி மகாசாத்தனை அடைந் தாள். இப்படி எண்ணிலாத சக்திகள் தோன்றி அனேக தேவர்களை அடைந்தனர். பூமிதேவி பூமாதேவி என்றும், தாய் என்றும் கொண்டாடப்படுகிறாள்.

புராணங்கள் பூமிதேவி கரும்பச்சை வண்ணத்துடன் முத்துமாலைகளைச் சூடி, கருநெய்தல் பூவினை எந்தியுள்ளாள் என்று கூறுகின்றன .குடந்தை நாகநாதசுவாமி ஆலயத்தில் பிரளய கால ருத்ரரின் சன்னதியில் பூமிதேவி

சித்ராபூதேவி உடனாய பூதநாதப் பெருமானின் அருளினால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வாழி நலம் சூழ !!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

**வல்லரக்கர் தம்மை வளம்பெற வைத்த வானவ போற்றி !**
**வண்டமர் குழலிக்கும் வளர் ராவணர்க்கும் அருளினை போற்றி போற்றி !!**



# இராட்சத லிங்கம்

சிவபெருமான் பூதர்களோடு இராட்சதர்களையும் சேனைகளாக வைத்துள்ளான். சிவ ஆகமங்கள் சிவபூசையில் இராட்சதர்களுக்குரிய பங்கை அளித்து விலக்கி வைக்க வேண்டுமென்று கூறுகின்றன. இராட்சதர்களில் அநேகர் சிவ பக்தர்களாக இருந்துள்ளனர். அவர்கள் அமைத்த லிங்கங்களைப் புராணங்களும் பூஜாபத்ததி நூல்களும் இராட்சதலிங்கங்கள் என்று அழைக்கின்றன.

இராட்சதகுல திலகனான இராவணன் சிவனடியார்களால் பெரிதும் போற்றப்படுகிறான். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தாம் அருளிய பதிகங்களில் அவனுடைய ஒப்பற்ற ஆற்றலையும் அவன் செருக்கால் கயிலை மலையைப் பெயர்த்ததையும், இறைவன் அவனை மலையோடு அழுத்தி அழச் செய்து பின்னர் அவன் சாமகானம் பாடக் கேட்டு அருள்புரிந்ததையும் குறித்துள்ளனர். தமிழில் இராட்சசர்களை அரக்கர்கள் என்று அழைக்கின்றனர். பல தேவாரப் பாடல்களில் அரக்கர்களின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

அநேக அரக்கர்கள் சிவவழிபாட்டில் திளைத்திருந்த போதிலும், அவர்களைப் பற்றிய விரிவான செய்திகளைக் காண முடியவில்லை. இயன்றவரை கிடைத்த செய்திகளைத் தொகுத்து இராட்சத லிங்கம் என்ற பெயரில் பற்றிய செய்திகளைச் சிவமஞ்சரியின் 42வது மலரான இந்நூலின் சில பக்கங்களில் அளித்துள்ளோம்.

சிவபெருமான் பேய்களோடு ஆடுவதால், அவன் பேயன் என்று அழைக்கப்படுகின்றான். பேய் வடிவு கொண்ட பெருமாட்டி புனிதவதி யாரான காரைக் காலம்மையாரை அவன் அன்னையே என்று அழைத்து திருவாலங்காட்டில் தனது தூக்கிய திருவடிக்கீழ் என்றும், இருக்கும்படியான வரத்தைத் தந்துள்ளான். அந்த அம்மையாரைப் பற்றியும் சிவகணப் பேய்கள் பற்றிய செய்திகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

இம்மலரின் மூன்றாம் பகுதியாக அசுர லிங்கங்களைப் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. அசுரர்கள் பெற்றிருந்த மேன்மைகளையும், அவர்கள் அமைத்து வழிபட்ட லிங்கங்களைப் பற்றிய செய்திகளும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன.

இத்துடன் சில பக்கங்களில், யக்ஷர்கள், பெருங்கணத்தினரான மருத்துக்கள் முதலியோர் வரலாறுகளும் அவர் செய்த சிவவழிபாடுகளும் குறிக்கப்பட்டுள்ளன.

இராவணனுக்கு அருள் செய்த இமய வல்லி தழுவும் இராவணனான சிவபெருமான் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமாய் அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகிறேன்.

சிவசுந்தரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## புராணங்களில் இராட்சதர்கள்

அசுரர்கள், தைத்தியர் , இராட்சதர் ஆகிய மூவரும் வெவ்வேறு இனத்தினர். இராட்சதர்கள் பேருருவம் படைத்தவர்களாகவும், மிகுந்த வலிமை கொண்டவர்களாகவும், மாமிசம் உண்பவர்களாகவும், இரவில் திரிந்து அலைபவர்களாகவும் இருக்கின்றனர். இரவில் திரிவதால் நிசிசரர் (நிதி- இரவு: சரர் - திரிபவர்கள்) என்றும், இரவில் திரிதருவோர் என்றும் அழைக்கப் படுகின்றனர்.

இராட்சதர்கள் மேடான பகுதிகளிலும் மலைகளிலும், கடல் நடுவிலுள்ள தீவுகளிலும் வாழ்ந்தனர். திருஞான சம்பந்தர் இடும்பாவனப் பதிகத்தில் மலைமீது வாழும் அரக்கர் என்று குறித்துள்ளதைக் காண்கிறோம். திரிசிரன், தூஷணன், கரன் ஆகியோர் மலை மீதுள்ள சிவலிங்கங்களையே வழிபட்டதைக் காண்கிறோம் இராவணன் பூசித்த திருக்கோகர் ணம், கோகர்ணம், திருகோணமலை முதலிய தலங்களும் மலைமீதுள்ள தலங்களாகவே இருக்கின்றன.

## இராட்சதப் பெயர்களில் காலங்கள்

காலம் சில சமயம் அளப்பரிய சக்திகளோடு செயல்படும். அந்தச் சமயத்தை இராட்சத குணம் உடையதாகச் சித்தரிக்கின்றனர். அதைக் குறிக்கும் வகையில் அவைகளுக்கு இராட்சதப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

நடைமுறையில் உள்ள ஆண்டுப் பெயர்கள் வட்டத்தில் அறுபது பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதில் நாற்பத்தொன்பதாவது ஆண்டுக்கு இராட்சத வருடம் என்று பெயர் சூட்டியுள்ளோம். மேலும், பிங்கள, துந்துபி, விரோதிகிருதி, ரத்தாட்சி, குரோதன முதலான ஆண்டுப் பெயர்களும் இராட்சத கணத்தைச் சேர்ந்தவைகளாகும்.

நடைமுறையில் கொண்டாடப்படும் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்பது நட்சத்திரங்கள் இராட்சத கணத்தைச் சேர்ந்தவைகளாகும். எஞ்சியவற்றில் ஒன்பது மனித கணங்களாகவும் ஒன்பது தேவ கணங்களாகவும் குறிக்கப்பட்டுள்ளன.

## சூரியனுக்குக் காவல் புரியும் இராட்சதர்கள்

கண்ணால் காணும் தெய்வமாக விளங்குபவன் சூரியன் ஆவான். இவரது காவலர்களாக இராட்சதர்கள் உள்ளனர். சூரியனின் உதயத்தை அசுரர்கள் தடுக்கும்போது அவர்களை விலக்கிச் சூரியஉதயம் குறித்த நேரத்தில் நிகழ அரக்கர்களே துணையாக இருக்கின்றனர். மாதந்தோறும் பவனிவரும் சூரியனுக்குத் துணையாக வரும் ஆறு கணத்தினரைப் பற்றிய செய்திகளைப் புராணங்கள் கூறுகின்றன. இதன்படி சூரியன் தேருக்கு வடமாக விளங்கும் நாகர்கள் அவன் தேர்முன்னே நடனமாடும் அப்சரப் பெண்கள், வாழ்த்திப்பாடும் கந்தருவர்கள், வழிநடத்தும் ரிஷிகள், சூழ்ந்து யக்ஷர்கள், காவலர்களாக வரும் இராட்சதர்கள் ஆகிய ஆறுகணத்தினரைப் பற்றியும் அவர்களில் முதன்மை பெற்றவர்களின் பெயர்களையும் ஸ்ரீமத் பாகவதம் விரிவாகக் கூறுகிறது.

இதன்படி இராட்சதக் கூட்டத்தின் தலைவர்களாகக் குறிக்கப்பட்டுள்ள பெயர்களைக் காணலாம்.

சித்திரையில் ஹேதி; வைகாசியில் பிரஹேதி; ஆனியில் பௌருஷேயன்; ஆடியில் சித்திரஸ்மனன்; ஆவணியில் சுசர்யன்; புரட்டாசியில் வியாக்ரன்; ஐப்பசியில் பிரஹ்மாபேதன்; கார்த்திகையில் மகாபேதன் ; மார்கழியில் வித்யுத்சத்ரு ; தையில் சபூர்த்தணன் ; மாசியில் வாதன் ; பங்குனியில் ருது வர்ச்சஸ் ஆகியோர் தலைமை அரக்கர்களாகக் கூறப்பட்டுள்ளனர்.இவர்கள் தமது கணத்துடன் சூரியனின் ரதத்தைப் பின்னிருந்து நடத்துகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# இராட்சதர்களும் யக்ஷர்களும்

பதினெண் கணங்களில் மிகுந்த வலிமை பெற்ற கணமாக இராட்சதர்கள் விளங்குகின் றனர். இவர்கள் நிருதி உலகத்தில் வாழ்பவர் கள் அதையொட்டி நிருதர் எனவும் அழைக்கப் படுகின்றனர்.

ஒரு சமயம் பிரம்மன் தனது தாமச குணத்திலிருந்து எண்ணற்ற உயிர்களைப் படைத்தான். அவை பசியாலும் களைப்பா லும் வருந்திப் பயங்கரமாக அழுதன. தின்ப தற்கு எதுவும் கிடைக்காததால் தம்மைப் படைத்த பிரம்ம தேவர் மீதே பாய்ந்தன. பிரம்மன் அலறினார். என்னை இவர்களி டமிருந்து ரட்சியுங்கள். இவர்களுக்கு எதை யாவது தின்னக் கொடுங்கள் என்று கூறியவாறு மயக்கமடைந்தார்.

அப்போதுசிவபெருமான் தோன்றினார். பிரம்மா உதிர்த்த இரட்சியுங்கள் என்ற சொல்லைக் கொண்டு இராட்சதர்கள் என்றும், இவர்களுக்குக் கொடுங்கள் என்ற சொல் லிலிருந்து யக்ஷர்கள் என்றும், அவர்களுக்குப் பெயரிட்டார். இவர்கள் சகோதரக் கூட்டங் கள் ஆனார்கள். இந்த யுகத்தின் தொடக்கத்தில் இராட்சதர்களும் யக்ஷர்களும் காசிப முனிவ ருக்கு அவருடைய பத்தினியான திதி என்ப வளிடத்தில் தோன்றினர்.

குணத்தால் உயர்ந்த இராட்சதர்கள் நிருதி யின் தலைமையில் நிருத லோகத்தில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, நிருதர் என்று அழைக் கப்படுகின்றனர். தாழ்ந்த குணமுடைய ராட் சதர்கள் மலைக்குகைகளிலும் கடலோரங் களிலும் தீவுகளிலும் வாழ்கின்றனர். இராட்ச தர்களை அகத்தியர் வென்று தமிழகத்திற்கு வெளியே துரத்தினார் என்று புராணங்கள் கூறுகின்றன. அதுமுதல் தமிழகத்தின் எல்லை யிலுள்ள கடலில் அமைந்திருக்கும் தீவுகளில் வாழ்வதாகக் கூறப்படுகிறது.

யக்ஷர்கள் வடதிசையை அடைந்து குபேர உலகில் வாழ்கின்றனர். குபேரன் யக்ஷர்களின் தலைவனாவான். அவன் சிவபெருமானின் தோழனாகும் வரத்தைப் பெற்றான். அவனிடத் தில் நவநிதிகளும் பொருந்தியுள்ளன.

இராட்சதர்கள் பலம் பொருந்தியவர்கள். திறமையான பணியாளர்கள். அச்சமற்றவர்கள் தருமநெறிகளுக்குக் கட்டுப்பட்ட மாதவர்கள். இராட்சத குலத்தில் மாலியவான் இராவணன் விபீஷணன், இரணியன், இரணியாட்சசன் முதலிய புகழ்பெற்ற அரசர்கள் தோன்றி வாழ்ந்துள்ளனர்.

இராட்சதர்களைத் தமிழில் அரக்கர் என்று கூறுவர். அரக்கர்குல திலகமான இராவணனைத் திருஞான சம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் தமது பதிகங்களில் பாடிப் பரவியுள்ளனர். யக்ஷர்களின் திலகமான குபேரனைப் பற்றியும் திருமுறைகள் சிறப் புடன் குறிக்கின்றன.

ஆதியில் பூதர்களும் இராட்சதர்களும் வலிமை பெற்றிருந்தனர். இராட்சதர்கள் மாமி சம் உண்பவர்களாகவும், மனம் போல் திரிபவர்களாகவும் இருந்தனர். அவர்களில் இராவணனின் கூட்டம் பெருமை பெற்றிருந் தது. அவர்கள் அகத்தியரால் ஒடுக்கப்பட் டனர். இராமனால் அழிக்கப்பட்டனர்.

அவர்கள் தனியாக இயங்கி வந்ததுடன் மக்களுக்கு அதிகம் தொல்லை தராதவர்களாக இருந்தனர். எனவே அவர்களைப் பற்றிய செய்தி களைக் காணமுடியவில்லை. அவர்களில் பலர் சிறந்த சிவபக்தர்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாகமங்களில் இராட்சதர்களுக்குப் பூசைக்கு முன் சிறுபகுதியை அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, விபூதியைத் தரிப்பதற்கு முன் அதைச் சிறிது எடுத்துச் சுண்டித் தெரிப்பர். இதனை இராட்சதர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் பொருட்டுச் செய்வதாகப் பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. இது போன்று வேள்வி செய்யத் தொடங்குமுன் அதில் மூட்டும் தீயில் இருந்து ஒரு நெருப்புத்துண்டை எடுத்து நிருதி மூலையில் இராட்சதர்கள் மகிழ்ச்சியின் பொருட்டு இட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்று பல இடங்களில் இராட்சதர்களுக்கு உரிய இடம் கொடுத்துப் பூசை செய்யப்படுவது குறிக்கப்பட்டுள்ளது. பூசைகளின் தொடக்கத்தில் யக்ஷர்கள் மகாலட்சுமியுடன் பூசிக்கப்படுகின்றனர்.

இராட்சதர்கள், யக்ஷர்கள் சிவ வழிபாட்டில் குறைந்த அளவிலேயே இடம் பெற்றுள்ளனர்..

## நிருதீசர்

உலகைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் பரவி நின்று காவல் காக்கும் பணியைச் செய்பவர்கள் அட்டதிக்குப் பாலகர் எனப்படுவர்.

கிழக்குத் திசை பாலகனான இந்திரனின் சுவர்க்கலோகம் கிழக்கில் உள்ளது. அதில்தேவர்களுடன் தேவேந்திரன் வசிக்கிறான். இவ்வாறே தென்கிழக்கில் அக்கினி லோகமும், தெற்கில் யமன் உலகமும், தென்மேற்கில் நிருதி உலகமும், வடமேற்கில் வாயு லோகமும், வடக்கில் யக்ஷேந்திரனான குபேரனின் உலகமும் உள்ளன. குபேரபுரியில் யக்ஷர்களுடன் குபேரன் நவநிதிகளுடன் வசிக்கிறான். வடகிழக்கில் ஈசானன் என்னும் சிவவடிவம் பெற்ற தேவனும் பூதகணங்களும் வசிக்கின்றனர்.

தென்மேற்கில் இராட்சதர்கள் வசிக்கும் நிருதி உலகம் உள்ளது. அங்கு இராட்சதர்களின் தலைவனான நிருதி வசிக்கின்றான். அங்கு ஒழுக்கமும் சிவபக்தியும் மேன்மையும் பெற்றுள்ள இராட்சதர்கள் வசிக்கின்றனர். இந்த உலகில் வாழ்வதால் இராட்சதர்கள் நிருதர் எனப்படுகின்றனர்.

அந்த உலகத்தின் தலைநகரம் சம்யமணீபுரி நிருதியின் தேவி தீர்காதேவி, குந்தம் என்னும் ஆயுதத்தை ஏந்திஅவன் பூதவாகனத்தில் பவனி வருகிறான். ( நர வாகனம் உடையவன் என்றும் கூறுவர்.)

நிருதி முற்பிறப்பில் வேடனாக இருந்தான் எனினும், சிறந்த குணம் மிக்கவனாக இருந்தான். ஒருமுறை தவமுனிவர்களைக் கொள்ளைக் காரர்களிடமிருந்து காப்பாற்றப் போரிட்டு அப்போரில் மாண்டான். சிவபெருமான் அவனுக்கு அருள்புரிந்து தென்மேற்குத் திசையில் ஒரு நகரத்தை உருவாக்கியளித்து அத்திசைக்குக் காவலனாக்கினார்.

நிருதி வழிபட்ட லிங்கம் நிருதி லிங்கம் எனப்படும். திருவண்ணாமலையில் ஆலயத்துள் முதற்பிரகாரத்தில் நிருதி மூலையில் விநாயகருக்கு அருகில் நிருதி வழிபட்ட நிருதிலிங்கம் உள்ளது. இது முகலிங்கமாகும்.

மேலும் மலைச் சுற்றும் பாதையில், மலையைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் அட்ட திக்குப் பாலகர்களால் அமைக்கப்பட்டுள்ள எட்டு லிங்கங்களில் ஒன்றாகவும் நிருதி லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்திற்குப் பெரிய ஆலயம் அமைத்துள்ளனர்.

பல சிவாலயங்களில் நிருதி லிங்கம் வழிபாட்டில் உள்ளது. காசியில் நிருதி வழிபட்ட சிவாலயமும் தீர்த்தமும் உள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# இராட்சத லிங்கம்

இராட்சதர்கள் மகாபலசாலிகள்; பெருத்த உருவம் கொண்டவர்கள். வேதங்களைப் பயின்று மேன்மை பெற்றவர்கள் என்றாலும், மாமிசத்தை உண்டும், கள்ளைக் குடித்தும், பெண்களோடு போகத்தில் மூழ்கியும் களித்திருப்பவர்கள்.

அதே சமயம் மேற்சொன்னவற்றை விலக்கிவிட்டு தீவிரமாகத் தவங்களைச் செய்தும் சிவவழிபாடு செய்தும் மேன்மை பெற்றுள்ளனர். அவர்கள் நிறுவி வழிபட்ட லிங்கங்களைப் பூஜாபத்ததி நூல்கள் இராட்சத லிங்கங்கள் என்று அழைக்கின்றன.

இராவணன், விபீஷணன், கரன் முதலியோர் நிறுவியவை யாவும் இராட்சத லிங்கங்களாகும். இவை கேரளத்திலுள்ள கடுதுருத்தி, ஏட்டுமானூர், வைக்கம் ஆகிய மூன்றும் கரன் என்னும் ராட்சதனால் ஒரே வேளையில் பிரதிஷ்டிக்கப்பட்டன என்றும், அவை ராட்சதலிங்க வகையைச் சார்ந்தது என்றும் கூறுகின்றனர். கேரளத்தில் இராட்சதர்களால் நிறுவப்பட்ட அநேக லிங்கங்கள் உள்ளன என்று பல நூல்கள் கூறுகின்றன.

திருக்கோகர்ணத்திலுள்ள மங்களாம்பிகை உடனாய மருந்தீசர் இராவணனாலும் கார்த்த வீரியார்ச்சுனன் என்பவனாலும் வழிபடப் பட்டவர்.

அசுரர்களைப் பற்றிய அளவிற்கு இராட்சதர்களைப் பற்றிய செய்திகளை ஆலய வரலாற்றில் காண முடியவில்லை.

இப்பகுதியில் இராட்சதகுல வேந்தர்களான இராவணன், கரன், தூஷணன், இடும்பன், திரிபுராரிகள் முதலிய சில அரக்கர்களை வழிபட்டு மேன்மை பெற்ற செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிவமகாபுராணத்தில் விசுவகர்மன் என்னும் பெருந்தச்சன் செய்தளித்த சிவலிங்கங்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. அவன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவரவர் தகுதிக்கேற்ப சிவலிங்கங்களைச் செய்தளித்தான். அதை வழிபட்டு அவர்கள் மேன்மை பெற்றனர். அவன் அசுரர்களுக்கும் இராட்சதர்களுக்கும் கோமயத்திலான லிங்கம் செய்தளித்தான் என்று கூறப்பட்டுள்ளது. பிசாசர்களுக்கு இரும்பாலான லிங்கத்தையும் யக்ஷர்களுக்குத் தயிரால்லான லிங்கத்தையும் அளித்தான் என்று சிவமகாபுராணம் கூறுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# இராவணன்

இராட்சதகுலத் திலகனாக விளங்குபவன் இராவணன். பிரம்ம தேவனின் வழிவந்தவன். பிரம்மனின் நான்காம் வழிப்பேரன் என்பர். அவன் மாலிய வாளின் மகனான விசிர வசுவிற்குக் கேகசியிடம் உதித்த வழித் தோன்றல்.

இமயமலைச் சாரலில் கடும் தவம் செய்து சிவபெருமானைக் கண்டு வணங்கியவன். இறைவன் இவனுக்கு இராவணன் என்ற பெயரையும், முப்பத்து முக்கோடி அளவு வாழ்நாளையும், சந்திரகாசம் என்ற வாளையும் அளித்தார்.

அவன் கடலுக்கு நடுவில் உள்ள இலங்காபுரியை அடைந்து அங்குப் பெருந் தச்சனான மயனைக் கொண்டு பெரிய நகரை நிர்மாணித்தான். அவனுடைய மகளான மண்டோதரியை மணந்து மகா சாம்ராஜ்ய பதியாக வாழ்ந்தான்.

ஒருமுறை தான் செல்லும் வழியில் இருந்த கயிலைமலையை அகங்காரத்துடன் சிவபெருமானோடு பெயர்த்தெடுத்தான். கோபம் கொண்ட பெருமான் இடதுகால் கட்டை விரலை ஊன்றி அவனை மலையுடன் அழுத்தினார். வருந்திய அவன் சாமகானம் பாடிச் சிவனை மகிழ்வித்து அதிலிருந்து விடுபட்டான்.

வீணைக் கொடியை உடையவன் இசையில் பெரும்புலமை படைத்தவன். அகத்தியர் இவனை இசையால் வென்றார். இவன் தினமும் சிவபூசை செய்து வருபவன். தனது சாமகான இசையாலும் நாட்டியத்தாலும் சிவ பெருமானை மகிழ்வித்தான்.

இவன் சிவபூசை செய்ததைப் பல நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. இராவணனின் தாய் மிகுந்த சிவபக்தியுடையவள். அவளுக்காக இவன் பல சிவலிங்கங்களைப் பெயர்த்தெடுத்துச் சென்று அவள் பூசித்து மகிழும்படிச் செய்துள்ளான்.

துளுநாட்டுத் தலமான கோகர்ணம் இராவணனோடு தொடர்புடைய தலம். ஒருமுறை இராவணன் கயிலை மலைக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டான். சிவபெருமான் அவனுக்கு ஒரு சிவலிங்கத்தை அளித்தார். அவன் மகிழ்வுடன் அதை எடுத்துக்கொண்டு இலங்கைக்குப் பயணித்தான். மிகுந்த ஐஸ்வர்யத்துடன் விளங்கும் அவன் இலங்கையில் இந்த லிங்கத்தை நிறுவி வழி பட்டு வந்தால் மேலும் செல்வந்தனாகி விடுவான், அவனை வெல்ல முடியாது போய் விடும் என்று கருதிய தேவர்கள். விநாயகரைப் பணிந்து, அவனிடமிருந்து இலிங்கத்தைப் பறித்து பாரத தேசத்திலேயே நிலைப்படுத்தும்படி வேண்டினர்.

விநாயகர் சூட்சி செய்து இராவணனைத் தடை செய்து அந்த லிங்கத்தை மேலைக் கடலோரத்தில் கோகர்ணத்தில் நிலைப்படுத்தினார். அந்த லிங்கத்தைப் பெயர்க்க முயன்று தோற்ற இராவணன், அவரை மகாபலேசுவரர் என்று கூறி அவரை வணங்கி விட்டு இலங்கைக்குச் சென்றான்.

பாண்டிய நாட்டிலுள்ள திருக்கோகர்ணமும் இராவணன் வழிபட்ட தலமாகும். இங்கு இராவணனின் இரண்டு பெரிய சிற்பங்கள் தூண்களில் எதிர்எதிராக உள்ளன.

இராவணனின் மனைவியான மண்டோதரியும் மகாசிவபக்தை. தான் விரும்பிய போதெல்லாம் சிவபெருமான் நேரில் தோன்றிக் காட்சியளிக்க வேண்டும் என்ற வரத்தை அவள் பெற்றிருந்தாள். அவள் மடியில் சிவபெருமான் குழந்தை வடிவில் தவழ்ந்து அருள்பாலித்துள்ளார். பல லட்சம் தடவை அவள் நமசிவாய மந்திரத்தை ஓதி உருவேற்றி அருள்பெற்றவள்.

அதனாலேயே திருஞான சம்பந்தப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருமான் நமச்சிவாய பதிகத்தில் மண்டோ தரியைச் சிறப்பித்து "வண்டமர் ஓதி மடந்தை பேணின"" என்றும், அவனது கணவனால் பாடப்பட்டது என்பதைச் சிறப்பித்து "பண்டை இராவணன் பாடி உய்ந்தது" என்றும் கூறியுள்ளார்.

இலங்கையிலுள்ள திரிகோண மலையும் இராவணனால் தொழப்பட்ட பெருமைகளை உடையது.

இராவணன் பற்றிய செய்திகளைச் சிவமஞ்சரியின் முதல் தொகுப்பில் பக்கம் 85 முதல் 95 வரை உள்ள பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றை அங்கே காண்க)

## இராவணன் வழிபட்ட சுவர்ண லிங்கம்

ஸ்ரீமத் ராமாயணம் உத்தர காண்டத்தில் இராவணன் சிவபூஜை செய்வது குறிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக அவன் நர்மதைக் கரையில் செய்த பூஜை விவரமாகச் சொல்லப் பட்டுள்ளது.

ஒருமுறை அவன் தன்னை வெல்ல வல்லவர் யாருமில்லை என்று இறுமார்ந்தி ருந்தான். நாரதர் அவனிடம் கார்த்த வீரியார்ச் சுனன் என்னும் மகாசிவ பக்தன் உள்ளான். அவனை வெல்லல் அரிது என்றார்.

அதைக் கேட்ட இராவணன், நர்மதைக் கரையில் வாழும் அவனைத் தேடிச் சென்றான். நர்மதையைக் கண்டு மகிழ்ந்தான். நர்மதையில் நீராடி தர்ப்பணம் மற்றும் ஜபங்களைச் செய்தபின் தூய வெண்பட்டினை அணிந்தான். அவனுடைய சேவகர்கள் பூஜா திரவியங்களை எடுத்துக் கொண்டு மலைபோல் நடந்துவந்தனர்.

(ஐஸ்வர்யத்தை விரும்புகிறவர்கள் தங்க லிங்கத்தைப் பூசிக்க வேண்டுமென்று தந்திரங் களில் சொல்லப்பட்டுள்ளதால்) அவன் தங்க மயமான லிங்கத்தை அவன் பூசிப்பது வழக்கம். தான் செல்லுமிடத்திற்கெல்லாம் அந்த லிங்கத்தையும் கொண்டு போவான்.) அவன் நர்மதை நதிக்கரையில் மணல் மேடை அமைத்து அதன் மீது தனது தங்கலிங்கத்தை வைத்து நீராட்டி, மலர்களைச் சூட்டி அர்ச் சித்தான். பாலசந்திரனால் அலங்கரிக்கப் பட்ட சிரசை உடைய உமாபதியைப் போற்றி வணங்கியபின் அவன் சாமகானம் பாடி ஆனந்த நடனமாடினான்.

## கும்பகர்ணப் பிள்ளையார்

இராவணனைப் போலவே அவனுடைய தம்பி கும்பகர்ணனும் மிகுந்த சிவபக்தன். அவர் அருளால் பெரிய வரங்களைப் பெற்றவன். இவன் இராட்சத புத்தி மிகுங்காலத்தில் மக்களுக்கு அதிகமாகத் தொல்லை கொடுத்தான். அளவாலும் வலிமையாலும் பெரியவனாக இருந்ததால் தொல்லையும் பெரியதாக இருந்தது. மக்களும் தேவர்களும் பிரமனிடம் முறையிட்டனர். அவர் சமயம் வரட்டும் என்றார். கும்பகர்ணன் ஒருமுறை பிரம்மதேவனை நோக்கிக் கடுந்தவம் செய்தான். பிரம்மன் அவன் முன்னே தோன்றி, என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். கும்பகர்ணன் எந்நாளும் சாகாமல் இருக்கும் நித்தியத்துவம் தனக்கு வேண்டும் என்றான். அப்போது சரஸ்வதி அவன் நாவிலிருந்து அதைப் புரட்டி நித்திரத்துவம் வேண்டும் என்று தொனிக்கச் செய்துவிட்டாள். (நித்தியத்துவம்- சாகாத நிலை: நித்திரத்துவம்- தூங்கிக் கொண்டே இருப்பது) விசித்திரமான இத்தகைய வரத்தால் அவன் எப்போதும் தூங்கிக் கொண்டே இருந்தான்.

அதையறிந்த இராவணன் பிரமனிடம் வேண்டி, அந்த வரத்தை மாற்றி அவன் ஆறு மாதம் தூங்குவதும் ஆறுமாதம் விழித்திருப்பதுமாக ஆக்கினான். அவன் விழித்திருக்கும் காலத்தில் மக்களைத் துன்புறுத்துவான். ஒரு சமயம் அவன் சோழநாட்டுக் கடுவாய்க்கரைப் புத்தூருக்கு வந்தான். அவனைக் கண்டு அஞ்சி தேவர்கள் விநாயகரைச் சரணடைந்தனர். விநாயகர் அவனைத் துதிக்கையால் பற்றிக் கடலைத் தாண்டியுள்ள இலங்கையில் சென்று வீழும்படித் தூக்கி எறிந்தார். அதுமுதல் இங்குள்ள விநாயகருக்குக் கும்பகர்ணப் பிள்ளையார் என்ற பெயர் வழங்குகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## விபீஷணன்

இலங்கையின் மன்னனான இராவணனின் இளைய தம்பி விபீஷணன். சிறந்த சிவபக்தன். இவன் இவனுடைய தாய் கேகசி. தந்தை விசிரவசு. இவன் இலங்கையில் அநேக சிவாலயங்களை அமைத்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவன், இவனை வைணவர்கள் விபீஷண ஆழ்வார் என்று போற்றுகின்றனர். இவன் முன்பிறப்பில் பிரம்மனிடம் தோன்றிய புலஸ்தியர் என்ற முனிவராக இருந்தவன். ஒரு சமயம் பராசர முனிவர் அரக்கர்களை அழிக்கும் வேள்வியைச் செய்தார். அதை இவர் தடைசெய்து மேன்மை பெற்றதுடன், இராட்சதர்களால் போற்றப் பட்டார்.

ஒரு சமயம் இவர் சத்தியலோகம் சென்று தம் தாய் தந்தையரான சரஸ்வதியையும் பிரம்மனையும் வழிபட்டார். சரஸ்வதி இவரைத் தம் குமாரன் என்று விரும்பி அழைக்காததால், அவளை நதியாகும்படிச் சபித்தார். பதிலுக்கு அவள் புலஸ்தியரை அரக்கர் குலத்தில் பிறந்து புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒருசேரப் பெறும்படி சபித்தாள். அதன்படியே புலஸ்தியர் விபீஷணனாகப் பிறந்து சிவலிங்க பூஜையாலும், இலங்கைக்கு அதிபதியானாதாலும், மேன்மை பெற்றார். அதேசமயம் இராவணனோடு இல்லாமல் அவனைப் பிரிந்து வந்து அவனுக்குத் துரோகம் செய்ததால், இகழ்ச்சி அடைந்தார்.

இராமர், இராமேசுவரத்தில் சிவவழிபாடு செய்தபோது இவனும் உடனிருந்து வழி பட்டான். இராமேசுவரத்தில் இவனுக்கென வெள்ளியாலான பெரிய திருவுருவம் உள்ளது. ஆனிமாதம் நடைபெறும் இராமலிங்கப் பிரதிஷ்டை விழாவின்போது இவனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் ஐதீக விழா நடை பெறுகிறது.

இவன் அமைத்து வழிபட்ட லிங்கம் விபீஷண லிங்கம் என்றழைக்கப்படுகிறது. சிவபெருமானுக்கே விபீஷணன் என்ற பெயர் வழங்குகிறது. காஞ்சிபுரத்தில் சீதை, இராமர், இலட்சுமணர் ஆகியோர் தனித்தனியே சிவபூசை செய்தபோது இவனும் சிவபூசை செய்தான். அந்த லிங்கம் அமைந்த ஆலயம் சர்வ தீர்த்தக் கரையில் விபீஷணேசுவரம் என்னும் ஆலயத்தில் உள்ளது.

இவன் வீரசைவ குருவால் ஆட்கொள்ளப் பட்டு ஒரே இரவில் மூன்று கோடி லிங்கங்களை இலங்கைத் தீவில் அமைத்தான் என்று வீரசைவர்கள் கூறுகின்றனர்.

## இராட்சதத் தச்சன் மயன்

மயன் இராட்சதர்களின் பெருந்தச்சன். இராவணனுக்கு இலங்கையில் பெரிய மாளிகையை அமைத்துத் தந்தவன். திரிபுராசுரர்களுக்கு மூன்று கோட்டைகளையும் அதில் அமிர்த கிணற்றையும் அமைத்துத் தந்தவனும் இவனே என்பர்.

இவனது குமாரர்கள் மாயாவி, துந்துபி, குமாரத்தி, மண்டோதரி, சிறந்த சிவபக்தையான அவளை இராவணன் மணந்துகொண்டான். சிவபக்தனான துந்துபி, வாலியால் மாண்டான். அவன் வழிபட்ட லிங்கம் துந்துபீசுவரர் என்னும் பெயரில் உள்ளது.

மயன் நெடுங்காலமாக வாழ்ந்து வருபவன். தருமருக்கு ராஜசபையை அமைத்துத் தந்தான் என்று மகாபாரதம் கூறுகிறது. மயன் வழிபட்ட லிங்கம் மயனேசுவரர் என்று அழைக்கப்படுகிறது.

சிவமகாபுராணத்தில் உலக மக்களின் நன்மைக்காக அவரவர் பூசிக்க தகுதிக்கேற்ப பலவகையான பொருட்களைக் கொண்டு இவன் சிவலிங்கங்களைச் செய்து தந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவன் ஆலயங்கள், வாகனங்கள், பெரிய நகரங்கள் முதலானவற்றை உருவாக்குவதில் கைதேர்ந்தவன். இவன் இயற்றிய சிற்பநூல் மயமதம் ஆகும். அநேக மாணவர்களை உருவாக்கிக் கட்டிடக் கலையை மேம்படச் செய்தவன் இவன் என்று கூறுகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# கர-தூஷணர்கள் வழிபட்டது

இராமாயணத்தில் குறிக்கப்படும் இராட்சதர்களில் கரன், தூஷணன், திரிசிரன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பிரம்மனின் வழிவந்த விசிரவசுவின் குமாரர்கள். இவர்கள் இராவணின் ஒன்று விட்ட சகோதரர்களாவர். சிறந்த சிவபக்தர்கள்.

கரன் விசுவசிரசு என்பவனுக்கு இராகை என்கிற புஷ்போத்கடை என்பவளிடம் உதித்தவன். அவன் பல தலங்களில் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளான். அவன் வழிபட்ட தலங்கள் கரபுரி, கரபுரம் என்று அழைக்கப்படு கின்றன. சோழ நாட்டிலுள்ள திருக்கற்குடி என்னும் தலத்தில் கரன் வழிபட்டுப் பேறுபெற்றான் என்பர். இந்தக் கற்குடிக் கோயில் பெரிய குன்றின் மீது அமைந்துள்ளது. இந்நாளில் அது உய்யக்கொண்டான் மலை என வழங்குகிறது. இறைவன் உஜ்ஜீவனநாதர். அம்பிகை பாலாம்பிகை.

இலக்குவன் இவர்களின் தங்கையான சூர்ப்பனகையின் மூக்கையரிந்து அவமானப் படுத்தியதால், போர்க் கோலம் பூண்டு வந்தனர். இறுதியில் கரன் இராமபிரானால் அழிக்கப்பட்டான். இராமன் அவனைக் கடும் யுத்தம் செய்து அழித்ததை, வால்மீகி முனிவர் சுவேத வனத்தில் உருத்திரன் மருத்துவாசுரனை அழித்ததுபோல் இராமபிரான் கரனை அழித்தார் என்கிறார். அவன் இறுதியில் ஒளி வடிவுடன் சிவனோடு கலந்தான் என்பர்.

மேலும், கரன் கேரளத்தில் பல லிங்கங்களை அமைத்து வழிபட்டான் என்று கேரள நூல்கள் கூறுகின்றன. அவற்றை இராட்சத பிரதிஷ்டை என்பர்.

## தூஷணன் வழிபட்டுப் பேறு பெற்றது

விசிரவசுக்குக் கலை என்பவளிடத்தில் பிறந்தவன் தூஷணன். இவன் பூசித்த தலம் திருச்சியை அடுத்துள்ள திருஎறும்பூர். இங்குள்ள லிங்கம் சற்று வடபுறம் சாய்ந்துள்ளது. இதுவும் சிறு குன்றின் மேல் அமைந்துள்ளது. தூஷணனும் இராமரால் கொல்லப்பட்டான். இவனுடைய ஆன்மாவும் ஒளிவடிவுடன் சிவலிங்கத்தில் கலந்தது என்பர்.

## திரிசிரன் வழிபட்டது

விசிரவசுவுக்குக் காலை என்ற இராட்சத குலப் பெண்ணிடம் தோன்றிய குமாரன் திரிசிரன் என்னும் மூன்று முகங்கள் கொண்ட அரக்கன். இவன் போற்றி வழிபட்ட தலமே திரிசிராப்பள்ளி எனப்படும் திருச்சி மலை மேல் உள்ள ஆலயமாகும். இவனுடைய இரண்டு சிரங்களை இராமபிரான் வெட்டியபோதும் மூன்றாவது முகத்துடன் இருந்து அதிஉக்ரமாகச் சண்டை செய்து இறுதியில் மாண்டான். இவனும் பல தலங்களில் வழிபாடு செய்துள்ளான்.



**கரன் வழிபட்டது**

இங்கே நாம் குறிப்பது மேலே குறித்த கரனிடமிருந்து வேறுபட்ட இராட்சதன். இவன் கழுதை முகம் கொண்டவன் என்பதால் இப்பெயர் பெற்றான். ( கரம்-கழுதை). இவன் வழிபட்ட திருத்தலம் திருவிரிஞ்சிபுரமாகும். அதற்குக் கரபுரம் என்ற பெயரும் வழங்குகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# மகாகாளேசுவரரும் – தூஷணனும்

பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களின் வரலாற்றிலும் ஒரு தூஷணன் என்ற அரக்கனைக் காண்கிறோம். (இவன் ராமாயணத்தில் வரும் தூஷணன் அல்ல) இவன் இரத்தினமாலா என்னும் தீவை ஆட்சிபுரிந்து வந்தவன். சிவனருளால் எண்ணிலாத வரங்களைப் பெற்றவன். அந்த அகங்காரத்தால் சிவனடியார்களைத் துன்புறுத்திவந்தான்.

ஷிப்ரா நதிக் கரையிலுள்ள அவந்திகா என்னும் நகரில் வேதப்பிரியன் என்பவன் வசித்து வந்தான். அவனுக்கு தேவப்பிரியன், சுவிரதன், மேதன், தர்ம வான் என்ற நான்கு புதல்வர்கள் இருந்தனர். இவர்களும் இவ்வரைச் சார்ந்தவர்களும் மிகுந்த அன்புடன் சிவபூசை செய்து வந்தனர்.



ஒரு சமயம் இங்கு வந்த தூஷணன் இவர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்ததுடன் சிவபூசைகளை அழித்தான். இவர்கள் பெருமானைச் சரணடைந்தனர். பெருமான் அவர்கள் வழிபட்ட லிங்கத்திலிருந்து பேரொளிப் பிழம்பாக வெளிப் பட்டு தூஷணனைக் கொன்றார். அவனுடைய ஆத்மா அந்த லிங்கத்தில் கலந்தது. பெருமான் அவர்களுக்கு அருள்புரிந்தார். அந்த லிங்கம் மகாகாளேஸ் வரர் என்று அழைக்கப் படுகிறது. அந்தத் தலத்தில் விக்ரமாதித்தனுக்கு அருள்புரிந்த காளிதேவி கோயில் கொண்டுள்ளார்.

# திரிபுர இராட்சதர்கள்

சிவபெருமானின் வீரச்செயல்களில் உன்னதமாகப் போற்றப்படுவது திரிபுர சம்மாரமாகும். பெருமான் தாரகன், வித்யுன் மாலி கமலாட்சன் என்னும் மூன்று அசுரர்களின் பறக்கும் கோட்டைகளைப் புன்சிரிப்பினால் அழித்தார் என்பதை அறிவோம்.

வேறொர் யுகத்தில் மூன்று இராட்சதர்கள் மூன்று பறக்கும் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு அரசு புரிந்துள்ளனர். அவர்களையும் பெருமான் ஓரம்பினால் அழித்துத் தேவர்களுக்கு அருள்புரிந்தார் அவர்களை அழித்ததையே திருவாசகம், எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்து தோணோக்கம் என்றும் ,நெடுருளும் மும்மதில் நொடிவரை இடிதர வல்லை வாளரக்கர் புரமெரித்தானே என்றும் கூறுகிறது.

காஞ்சிபுரத்தில் முப்புராரிக் கோட்டம் என்னும் சிவாலயம் உள்ளது. அங்குச் சுதர்மன், சுசீலன், சுமுத்தி என்னும் மூவர் தவம் செய்து மூன்று கோட்டைகளுடன் அரசாளும் வரம் பெற்றனர் என்று கூறப்படுகிறது. இவர்களும் திரிபுராதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களைப் பெருமான் வென்று இருவரை வாயிற் காவலர்களாகவும், ஒருவனைக் குடமுழா முழக்குபவனாகவும் ஏற்றுக் கொண்டார் என்று புராணம் கூறுகிறது.

கும்பகோணத்தை அடுத்துள்ள திரிபுவனமும் முப்புராதிகள் வழிபட்ட தலமாகும். இங்கு வழிபட்டுப் பேறுபெற்ற அசுரர்கள் அசுவக்கிரீவன், வியாளக்கிரீவன், வ்ருஷபக் கிரீவன் என்பவர்களாவர். இவர்களையும் பெருமான் வென்று சேவர்களாக்கிக் கொண்டார் என்று தலபுராணம் கூறுகிறது. இவர்கள் முறையே குதிரை, புலி, மாடு முகங்கொண்டவர்கள் என்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# திரிசிரன்



மூன்றுமுகம் கொண்ட தெய்வங்கள், அசுரர்கள், ராட்சதர்கள், பூதங்கள் ஆகியோரைப் புராணங்கள் குறிக்கின்றன. இது ஆற்றல் மிக்க வடிவம் என்று கூறுவர்.

சிவபெருமானின் அறுபத்துநான்கு மூர்த்தங்களுள் ஒன்று ஜ்வரஹரேசுவரர் ஆகும். இவர் மூன்று முகங்களும், மூன்று கரங்களும், மூன்று கால்களும் கொண்டவர். இவரைப் போலவே மும்முக விநாயகரைக் காண்கிறோம். அவர் இயல்பான யானை முகத்துடன் குரங்கு, சிங்கம் ஆகிய இரண்டு முகங்கள் கொண்டு அருள்பாலிக்கிறார் என்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன.

காசியில் மும்முகம் கொண்ட கணநாதனான பூதம் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளது. அந்தப் பூதம் திரிசிரன் என்று அழைக்கப்படுகிறது.

அதுபோலவே மும்முகம் கொண்ட அசுரர்கள் சிலர் இருந்தனர். இவர்களைத் திரிசிரர் என்று அழைப்பர்.

திரிசிரன் என்னும் ஓர் அரக்கன் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் திரிசிராப்பள்ளி என வழங்குகிறது.

திருப்புகலூரிலும் திரிசிரன் என்பவன் வழிபட்டுள்ளான். அவன் மனிதன், பன்றி, பருந்து ஆகிய மூன்று முகங்களைக் கொண்டவன். பன்றி முகத்தால் நீரும், பறவை முகத்தால் மலரும் கொண்டு வந்து, மனித முகத்தால் மந்திரம் ஓதிச் சிவபெருமானை வழிபட்டான் என்பர். இவர் சிவபூசை செய்து வந்தபோதிலும், இராட்சத புத்தியால் அடியவர்களைத் துன்புறுத்தி வந்தான். ஒரு சமயம் இத்தலத்திற்கு வழிபட வந்த கந்தமாதனர் என்னும் முனிவரைக் கொல்லச் சென்றான். பெருமான் அவனை அடித்துத் துரத்தினார். பல இடங்களில் திரிந்த அவன், பாகற்காய் கொடியில் மறைந்து கொள்ளப் பெருமான் அவனைத் தேடிப்பிடித்து அழித்தார் என்று கூறப்படுகிறது. அது அங்கு ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அவனே இத்தலத்தில் புன்னை மரமாகி நிழல் பரப்பிக் கொண்டிருக்கிறான் என்று தலபுராணம் கூறுகிறது.

அசுரகுல ஆச்சார்யர்களுள் ஒருவரான துவஷ்டாவின் புத்திரன் விச்சுவவுருவன். இவன் மும்முகம் கொண்ட அசுரன் என்பர். தேவ குருவான பிரஹஸ்பதி தன்னை மறைத்துக் கொண்டு வெளிப்படாது இருந்தபோது, தேவர்களுக்குப் பெரிய வேள்வி ஒன்றைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உரிய ஆசாரியார் கிடைக்காததால், இவனைக் கொண்டு இந்திரன் அந்தப் பெரிய வேள்வியைச் செய்தான்.

அவ்வேளையில் விச்சுவவுருவன் வெளியில் தேவர்களுக்கு நன்மையுண்டாக வேண்டும் என்று கூறும் மந்திரங்களை ஓதிக் கொண்டு வேள்வி செய்தான். ஆனால் மனத்திற்குள் அசுரர்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டே இருந்தான். இதை உணர்ந்த இந்திரன், அவனது மூன்று தலைகளையும் வெட்டி வேள்வியில் வீழ்த்தினான். அவை கழுகு, பருந்து, காக்கை என்ற மூன்று வடிவம் கொண்டு ஓடின. அந்த மூன்று வடிவங்களுடன் அவன் சிவவழிபாடு செய்தான். திருக்கழுக்குன்றத்தில் கழுகாகவும், குரங்கணில் முட்டத்தில் காக்கையாகவும், சேயாற்றுப் பரிதிபுரத்தில் பருந்தாகவும் இருந்து வழிபட்டான் என்பர். பின்னர் அவன் பழைய வடிவம் பெற்று தன்னுலகை அடைந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# இடும்பன் பூசித்த இடும்பாவனம்

மகாபாரதத்தின் நாயகர்கள் தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பஞ்ச பாண்டவர்கள் ஆவர். அவர்களில் மிகுந்த வலிமை பெற்றவன் பீமன். அவன் ஒருமுறை காண்டீப வனம் என்னுமி டத்திற்குச் சென்றான். அந்த வனத்தை இடும்பன் என்ற அரக்கன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுடைய தங்கை இடும்பி.

தன்னிடத்திற்கு வந்த பீமனுடன் இடும்பன் கடும்போர் புரிந்தான். முடிவில் பீமன் இடும்ப னைக் கொன்றான். இடும்பி அவனது வீரத்தை மெச்சி அவன்மீது காதல் கொண்டாள். பீமன் அவளை மணந்துகொண்டு அங்கேயே சில காலம் தங்கியிருந்தான். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனே கடோற்கஜன் ஆவான்.

இடும்பனும் இடும்பியும் தமது கூட்டத்துடன் வசித்து வந்த காடே இந்நாளைய இடும்பாவனம் ஆகும். இது வேதாரண்யத் திற்கு அருகில் உள்ளது. இங்கு இராட்சதர்கள் வழி பட்ட சிவாலயம் மணல் மேட்டின் மீது உள்ளது. இடும்பியின் சகோதரன் இடும்பன் இவ்வூருக்கு அருகிலுள்ள குன்றகளூர் என்ற ஊரைத் தலைநக ராகக் கொண்டிருந்தான் என்று கூறுகின்றனர்.

திருஞான சம்பந்தர் இடும்பன் வழிபட்டுப் பேறுபெற்ற இந்த இடத்திற்கு வந்து சிவபெரு மானைப் பாடிப் பரவியுள்ளார். அவர்இங்குள்ள சிவபெருமானைச் சினம் மிகுந்த வளைந்த தெற்றுப் பற்களை உடைய அரக்கர்களுக்குரிய குன்றில் வாழும் சிவபெருமான் என்று போற்றி யுள்ளார். இந்நாளில் இறைவன் சற்குணநாதர் என்றும், அம்பிகை மங்களாம்பிகை என்றும், அழைக்கப்படுகின்றனர். இடும்பனைக் கொன்ற பாவம் தீர, பீமன் இங்குச் சிவபூசை செய்துள்ளான்.

வரலாற்றில் வேறொரு இடும்பனையும் காண்கிறோம். இவனும் இராட்சத குலத் திலகன். மகாசிவ பக்தன். சிவனருளாள் முருகனுக்கு அடிமைத் தொழில் பூண்டவன். இவன் மக்களுக்குத் தொல்லை தந்து வந்தான். இவனை அகத்தியர் வென்று அடிமை கொண்டார். அவனிடம் இமயச்சாரலில் உள்ள சக்திகிரி, சிவகிரி என்னும் இரண்டு குன்று களைப் பெயர்த்து, எடுத்துவந்து பாண்டிய நாட்டில் வைக்கும்படி ஆணையிட்டார். அதன் படி அவன், அவற்றைக் காவடித் தண்டில் கட்டித் தூக்கி வந்தான். பாண்டிய நாட்டில் அதை வைத் தான். சக்தி கிரி மீது முருகன் வந்து நின்றான். அதனால் இடும்பனால் காவடியைத் தூக்க முடியவில்லை. கார ணத்தை அறிந்து முருகனை வழிபட்டான். முருகன் அகத்தியரிடம் கூறி, அவனைத் தனக்குக் காவலனாக இருக்கும்படிச் செய்தார். அவன் சிவகிரி மீது கோயில் கொண் டான். அந்த சக்திகிரி, சிவகிரி என்னும் மலைகள் உள்ள இடமே இந்நாளைய பழனி மலையாகும். இங்கு ஒரு மலைமீது முருகனும் மற்றொரு மலை மீது இடும்பனும் அமர்ந்துள்ளனர்.

பழனிமலையிலுள்ள இடும்பனுக்கு நேர்ந்து கொண்டு மக்கள் பிரார்த்தனைகளைச் செலுத்து கின்றனர். அவன் பலியுண் கடவுளாக விளங்குகி றான். இவனுக்கு எனத் தனியே சக்கரம், மந்திரம் ஆகியவற் றுடன் பிரதிஷ்டா விதிகளும் உள்ளன. அவனைப் போற்றும் கவசம், மாலை ஆகியன உள்ளன. அவனை மழுவாயுதத்தின் வடிவிலும் நிலைப்படுத்தி வழிபடுகின்றனர்.

அனைத்து முருகன் ஆலயங்களிலும் இடும்பனுக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. அவன் வழிபட்ட சிவபெருமான் இடும்பேசுவரர் என்று

### இராட்சத தீர்த்தங்கள்

இராட்சதர்கள் நீராடி சிவபூசை செய்ய பல தீர்த்தங்களை உண்டாக்கினர். அவை இராட்சத தீர்த்தங்கள் என்றழைக்கப்படுகின்றன. கயிலை மலைச் சாரலில் இராவணின் பெயரால் இராட்சதல் என்னும் ஏரி உள்ளது. திருக்கோகர்ணத்திலும் அவன் பாறையைப் பிளந்து உண்டாக்கிய தீர்த்தம் உள்ளது. திருக்கோணமலையில் ஏழு புனித வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இவை இராவணன் தன் தாயாருக்கு இறுதிக் கடன்கள் செய்ய வேண்டி நின்றபோது திருமால் உண்டாக்கிய தீர்த்தங்கள் என்பர். இவற்றைக் கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கள் என்பர். பழனியில் இடும்பன் உண்டாக்கிய தீர்த்தம் உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அழைக்கப்படுகிறார். பல தலங்களில் இடும்பன் வழிபடப் படுகிறான். கந்தர் சஷ்டிக் கவசத்தில் இடும்பாயுதனே இடும்பா போற்றி என்று துதிக்கப்படுவதைக் காணலாம்.

பழனி மலையில் மலைப்பாதையில் இடும்பனுக்கென தனிச் சிற்றாலயம் உள்ளது. அதில் இடும்பன் அமைந்துள்ளான். அதற்கருகில் இடும்பனுக்கு அருள்புரிந்த குராவடிவேலர் கோயில் கொண்டுள்ளார். இங்கு இடும்பன் அகத்தியரின் அருள்பெறுதல். சிவசக்தி கிரிகளைக் காவடியாகக் கட்டிக் கொண்டு வருதல், முருகனோடு போர் புரிதல், முருகன் ஆட்கொள்ளுதல் ஆகியன ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

பழனிமலை அடிவாரத்தில் இடும்பன் குளம் எனும் பெரிய தீர்த்தக்குளம் உள்ளது. மலை மீது இடும்பன் தண்டத்தால் பாறையைப் பிளந்து உண்டாக்கிய இடும்பன் சுனை உள்ளது.

முருகன் ஆலயங்களில் பெருந்திருவிழா முடிந்ததும் இடும்பனுக்குப் பெருஞ்சோற்றுப் படையலிட்டு விழா கொண்டாடும் வழக்கம் இருந்துள்ளது. அதை இடும்பன் பூசை என்பர்.

ஆடிக்கிருத்திகை, தைப்பூசம் முதலிய முருகனுக்குரிய சிறப்பு நாட்களில் அன்பர்கள் காவடி எடுத்துப் பிரார்த்தனைச் செலுத்துகின்றனர். அப்போது மழுவாயுதத்தை நட்டு அதை இடும்பனாகப் பாவித்து வழிபடுவர். அதை



எடுத்து வருபவர் ஆணிகள் பதித்த முள்செருப்புகளை அணிவது வழக்கம்.

## இடும்பன் வாகனம்

சிவாலயங்களில் பூதவகானம் சிறப்புடன் இருப்பதைப் போலவே, முருகன் ஆலயங்களில் இடும்பன் வாகனமும் இருந்துள்ளது. பின்னாளில் தாரகாசுர வாகனம் புகழ் பெற்றதால் இடும்பவாகனம் வழக்கத்திலிருந்து மறைந்துவிட்டது.

### இடும்பி கமலக்கண்ணி

இடும்பி என்னும் இராட்சத குல மங்கை அரிய தவங்களைச் செய்து சிவனருளால் மேன்மை பெற்றாள் என்று கூறுவர். அவள் அழகிய வடிவம் பெற்றுக் கமலகண்ணி என்னும் பெயர் பெற்றாள். அவள் மூன்று காலங்களையும் எடுத்துரைப்பவன் என்று கூறுகின்றனர்.

செஞ்சியில் இராஜகிரி என்னும் மலை மீதுள்ள கோட்டைக்குச் செல்லும் பாதையில் கமலக்கண்ணி என்னும் அம்பிகை ஆலயம் உள்ளது. இவள் முன்பு பெரிய பலிபீடம் உள்ளது. இவள் முன்னாளில் மக்கள் மீது ஆவேசமாகி இறங்கி வந்து முக்காலத்தின் பலனையும் உரைத்ததாகக் கூறுகின்றனர். (இவளே இடும்பியாகவும் இருக்கலாமென்று கருதுகின்றனர்.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பிரம்மராக்கதம்

தர்மங்களை நன்றாக அறிந்திருந்தும் சுயநலத்தால் பிறருக்குத் தீமைகளைச் செய்து துன்புறுத்துபவர்கள் மறுபிறவியில் பிரம்ம ராட்சதர்களாகப் பிறக்கின்றனர். இவர்கள் நன்மையும் தீமையும் கலந்தவர்கள். நம்பிக்கையற்றவர்கள். அதிக கோபத்தாலும் தாபத் தாலும் துன்புறுத்துபவர்கள். இவர்களைச் சிவனருள் பெற்ற காளிதேவி அடக்கிப் பணி யாட்களாக வைத்திருக்கிறாள். இவர்கள் பெண்களை மோகித்து துன்புறுத்துவதால் பெண்களைத் தொடரும் பிரம்மராட்சதர்கள் என்று அறியப்படுகின்றனர். இவர்களால் துன்பப்படுபவர்கள் காளிதேவியிடம் முறையிடுவர். அவளுடைய ஆலயத்தில் கல்லில் நிலைப் படுத்துகின்றனர்.

தீயவர்கள் என்றாலும், தர்மத்தை அறிந்தவர்கள் என்பதால் காளிதேவி ஆலயத்தில் ஏவலராக இருந்து பூசையும் பலியும் பெறுகின்றனர். தென் தமிழ்நாட்டிலும் கேரளா நிலத்தி லுள்ள சில காளிதேவி ஆலயங்களில் பிரம்ம ராட்சதருக்கான சிற்றாலயங்களைக் காணலாம். திருச்சூர் (பாரமைக்காவு) பகவதி ஆலயத்தில் பிரம்மராட்சதர் சந்நிதி உள்ளது.

### கவி ராக்ஷசர்கள்

பார்க்கும்போது மலைக்க வைக்கும் பெரிய வடிவத்தை இராட்சச வடிவமென்று அழைக் கிறோம். கடலுக்கு நடுவே பாலம் கட்டுவது மலையை உடைத்து வழி அமைப்பது முதலான செய்வதற்கு அரிய பெரிய வேலைகளை இராட்சதவேலை என்கிறோம்.இப்படி நம்மை மலைக்க வைக்கும் அரும்பெரும் செயலையெல்லாம் இராட்சதர்களோடு தொடர்புபடுத்துகின்றனர். இராட்சதர்கள் உடல் வலிவும் மன வலிமையும் தளராத முயற்சியும் உடையவர்கள் எனவே, எந்த வேலையையும் எளிதாகச் செய்து விடுகின்றனர் என்பதால், இவை அவர்களால் மட்டுமே முடியும் என நம்புகிறோம்.

இதுபோன்று மொழியை சிறப்பாகக் கையாண்டு பெரும்புலமை மிக்க நூல்களை இயற்று வோரைக் கவிராட்சசர்கள் என அழைக்கின்றோம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் சம காலத்தவரான ஒட்டக்கூத்தர் கவிராட்சசன் என்று அழைக்கப் படுகிறார். திருவாவடுதுறை ஆதீன முனிவர்களுள் ஒருவரான கச்சியப்ப முனிவருக்கும் கவிராக்ஷசன் என்ற சிறப்புப் பெயர் வழங்கியது.

## திருப்பூவணமும் - இராட்சதரும்

மதுரைக்கு அருகிலுள்ள தலம் திருப்பூவணம். இத்தலத்தில் வழிபடுவதால் இராட்சத சாபம் நீங்கும். இதை விளக்கும் இரண்டு செய்திகளை இங்கே காணலாம்.முதலாவது செய்தி புராணத்தில் கூறப் பட்டுள்ளது.

வட இந்தியாவிலுள்ள கௌதமி நதி தீரத்தில் வாழ்ந்த வந்த திரணாசனர் எனும் முனிவர் தீர்த்தயாத்திரை செய்து கொண்டு இவ்வூருக்கு வந்தார். அவர் அம்பிகையை வணங்கி இறைவனை வணங்காது சென்றார். அப்பாவத்தாலும் முன் செய்த வினைகளாலும் அவர் இராட்சதனாகி விட்டார். பல இடங்களில் திரிந்தலைந்த பின், நாரத முனிவரின் உபதேசம் பெற்று மீண்டும் இத்தலத்திற்கு வந்து இந்திர தீர்த்தத்தில் மூழ்கி முன்னை வடிவு பெற்றார். அவருக்குப் பெருமான் முத்தி அளித்தார்.

இரண்டாவது செய்தி வைகையாற்றுக்கு அக்கரையில் உள்ள இராட்சதப் பிள்ளையார் பற்றியதாகும். இத்தலத்தில் வாழ்ந்த சித்தர் ஒருவரை மக்கள் இராட்சதர் என்று அழைத்தனர். அவர் சமாதி ஆனபின் அச்சமாதி மீது விநாயகர் உருவத்தை வைத்து வழிபட்டு வந்தனர். அந்தப் பிள்ளையாரை மக்கள் இராட்சதப் பிள்ளையார் என்று அழைக்கின்றனர். அந்த விநாயகர் கோயிலையொட்டி அமைந்த தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் ஆகும். இதற்கு ராக்ஷச மோசனம் என்ற பெயரும் உண்டு என்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# யக்ஷ லிங்கம்

யஜ் என்ற சொல்லின் அடிப்படையாகத் தோன்றியது யக்ஷன், யக்ஷி என்ற சொற்க ளாகும். இதற்கு அளிப்பவன், அளிப்பவள் என்பது பொருள். யக்ஷர்கள் இராட்சதர்களின் சகோதரர்கள். செல்வத்தில் திளைப்பவர்கள்.

யக்ஷர்களின் குல திலகமாக விளங்குபவன் குபேரன். அவனுடைய அணுக்கத் தொண்டர் கள் பத்மநிதியும் சங்க நிதியும் ஆவர். ஸ்ரீயாகிய மகாலட்சுமி இவனுடைய திருமுடியில் விளங்கு கிறாள். இவன் அரிய தவங்களைச் செய்து சிவ பெருமானுக்கு நண்பனாகும் பேறு பெற்றான். திருமுறைகள் அவனைச் சிவபெருமானுடைய தோழனென்று கூறுகின்றன. இவனுடைய தந்தை விசிரவசு, தாய் இனிபிளை. இவனது மனைவி சித்தரேகை .

இவன் பார்வதியின் அழகில் மயங்கி அவளை உற்று நோக்கினான். அதையறிந்த கணங்கள் அவனுடைய கண்ணைப் பறித்தனர். அவன் குருடனாக இருந்து வருந்திப் பல தலங்களில் சிவ பூசை செய் தான். சிவபெருமான் அவனுடைய பூசையால் மகிழ்ந்து அவனுக்குப் பொன் மயமான கண்ணை அளித்தார். அதனால் பொற்கணன் எனப்படுகிறான்.

காஞ்சியில் இந்திரனுடன் குபேரன் சேர்ந்து வழிபட்ட தலம் ஜ்வரஹரேசமாகும். இங்கு மூலத்தானத்தில் லிங்கத்தின் பின்புறம் இந்திரன் உள்ளான்.

முன்மண்டபத்தில் திருமுடியை கஜ லட்சுமி அலங்கரிக்கப் பெரிய உருவமாக குபேரனின் உருவம் உள்ளது.இக்கோயில் குபேரனு டைய பட்டினமான அழகாபுரியை நோக்கி யிருக்கும்படி வடக்கு நோக்கி உள்ளதும் குறிப் பிடத்தக்கது.

மேலும் இக்கோயில் வாசலின் இரு புறமும் சங்க நிதியும் பத்மநிதியும் யக்ஷர்கள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளனர்.

இந்த யக்ஷர்கள் பல கிளைகள் விட்டுச் செழித்திருக்கும் கற்பக மரத்தின் கீழ் அமைந் துள்ள நிலையில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளனர்.

திருநாவுக்கரசர் இவ்விரண்டு நிதிகளையும் குறித்துப் பாடியுள்ளார். குபேரனை இருநிதிக் கிழவன் என்று இலக்கியங்கள் போற்றுகின்றன. இரு நிதியாவன பத்மநிதி, சங்கநிதியாகும். இவை அமைத்து வழிபட்ட லிங்கங்கள் சங்கே சுவரர், பத்மேசுவரர் என்று அழைக்கப் படுகின்றன.

குபேரன் கீழ்வேளூர் அட்சய லிங்கரை வழிபட்டுப் பேறு பெற்றான். அவன் இங்குள்ள தியாகேசரின் அருளாணையின் வண்ணம் சந்திரகுப்தன் என்னும் வைஸ்யனுக்குப் பெரும்பொருள் அளித்தான் என்று தல புராணம் கூறுகிறது. இவ்வாலயத்தில் அம்பிகை சந்நிதியில் குபேரனின் திருவுருவம் தெற்கு நோக்கியவாறு தனிச் சந்நிதியில் அமைக் கப்பட்டு வழிபாடுகள் நடத்தப் படுகின்றன.

திருக்கழுக்குன்றத்தில் யக்ஷர்கள் வழி பட்டுப் பேறு பெற்றுள்ளனர் என்று தல புராணம் கூறுகிறது..

காளத்தியில் மணிமான் என்ற யக்ஷன் தலைமையில் யக்ஷர்கள் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். அவர்கள் வழிபட்ட லிங்கம் மணிகங்கேசுவரர் ஆகும். அது இந்நாளில் மணிகண்டேசுவரர் எனும் பெயரில் தனி ஆலயத்தில் உள்ளது.

காசியில் யக்ஷர் வழிபட்ட லிங்கம் யக்ஷேசுவரர் எனும் பெயரில் உள்ளது. அதன ருகில் யக்ஷ தீர்த்தமும் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# யக்ஷியர்

யக்ஷிகள் அருள் வழங்கும் தெய்வங்கள் பக்தர்களின் மந்திர தந்திர பூசைகளுக்குக் கட்டப்பட்டு அவர்கள் விரும்பியதைச் செய்து கொடுப்பவை. யக்ஷி என்பதற்கு வேண்டியதை விரும்பியவாறு கொடுப்பவள் என்பது பொருள். இவர்களைத் தமிழில் இயக்கியர் என்று அழைக்கின்றனர். இயக்கி வழிபாடு தென்னாட்டில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. இவர்கள் பெருங்கூட்டமாக இருப்பர். இவர்களில் அறுபத்து நான்கு பேரைச் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

சிவபெருமானைக் குறித்து அறுபத்து நான்கு இயக்கியர் தவம் செய்தனர். அவர்களுக்குப் பெருமான் அட்டமா சித்திகளை அருளிச் செய்து எண்குணம் கொண்டவராக மாற்றி அருள் புரிந்தார். அதனைத் திருவாசகத்தில் இயக்கிமார் அறுபத்து நால்வரை எண் குணம் செய்த ஈசனே என்று மாணிக்கவாசகர் குறித்துள்ளார்.

திருமந்திரத்தில் யக்ஷியர்கள் தேவியரின் கணங்களில் முதன்மை பெற்றவர்களாகக் கூறப்பட்டுள்ளது. திருமூலர்,

பூரித்த பூவிதழ் எட்டினுக்கு உள்ளேயோ
ஆரியத்தாள் உண்டு அங்கு எண்கன்னியர்
பாரித்தபெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்த சக்தியைத் தாம் கண்டாரே.

இருந்தனர் சக்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னியர் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்சக்கரத்தே
இருந்த கரம் இருவில் அம்புகொண்டே

என்பர். அவரை அடியொற்றி வந்த அபிராமிபட்டர் அன்னையைஅரிவையர் சூழ வந்து அஞ்சல் என்பாய் என்று வேண்டுகிறார். இதற்குப் பொருள் எழுதிய வர்கள் அரிவையர் என்பதற்கு அப்சரஸ் (தேவமாதர்) என்று எழுதியுள்ளனர்.

திருமந்திரத்தின் கருத்துக்களே அபிராமி அந்தாதியில் எடுத்தாளப்பட்டிருப்பதால் அரிவையர் என்பது அறுபத்து நான்கு யக்ஷியரையே குறிக்கும் என்பர்.

சாக்த நூல்கள் தேவியின் சந்நிதியில் முதன்மை பெற்ற 64 யோகினியரைக் குறித்துப் போற்றுகின்றன. அவர்களுக்கு வடநாட்டில் சில இடங்களில் ஆலயங்கள் அமைந்துள்ளன. யோகினிகள் பைரவரின் தேவியர்க ளாகக் குறிக்கப்படுகின்றனர். (யோகினிகளும் யக்ஷி களும் வெவ்வேறு கூட்டத்தினராவர்.)

காம்ய யக்ஷி என்ற சொல்லே காமாட்சி ஆனதென்பர். காம்யம்- விருப்பம்; யக்ஷி தருபவள் காம்யயக்ஷி - விரும்பியதைத் தருபவள் அவளுடைய இடம் காமகோட்டம். அன்னை பராசக்தியே காமாட்சியாக விளங்குகிறாள்.

# கந்தர்வர்கள் – கின்னர – கிம்புருஷர்கள்

யக்ஷர்களோடு கந்தர்வர் கின்னர, கிம்புருஷர்களும் புராணங்களில் போற்றப்படுகின்றனர். கந்தர்வர்கள் பூக்கூடைகளை ஏந்திச்சென்று அற்புதம் நடத்தும் இடங்களில் எல்லாம் மழைபோலப் பூக்களைப் பொழிகின்றனர். இந்தப் பூமழை புஷ்பவிருஷ்டி என்று அழைக்கப்படுகிறது புராணங்களில் அநேக இடங்களில் இந்தப் பூமழை குறிக்கப்பட்டுள்ளது.

கந்தர்வர்களில் ஒருவரான புஷ்பதந்தன் என்பவர் சிவமகிமைத் தோத்திரம் என்ற நூலை இயற்றியுள்ளார். இதற்குப் பலர் பொருள் எழுதியுள்ளனர். இது சிவபெருமானைக் குறித்தே எழுதப்பட்டது என்றாலும், இதிலுள்ள பாடல்களுக்கு விஷ்ணுவைப் போற்றும் வகையிலும் பொருள் கண்டு எழுதியுள்ளனர்.

கின்னர கிம்புருஷர்கள் இடுப்பிற்குக் கீழ் பறவை உடலும், இடுப்புக்கு மேல் மனித உருவமும் கொண்டவர்கள். கையில் யாழ் அல்லது வீணை மீட்டிப் பாடியவாறு பறந்து கொண்டே இருக்கின்றனர். இவர்கள் பெயரால் கின்னரி என்ற இசைக்கருவி இருந்ததாகக் கூறுவர். ஒருவகை இசைப்பாட்டு கின்னரம் என்று அழைக்கப்பட்டது. சிவபெருமான் கின்னரம் பாடிச் செல்வதாகக் கூறுவர். திருவாரூரில் கின்னரர்கள் வழிபாடு செய்து பேறுபெற்றுள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அசுரர்கள்

தேவர்களும் அசுரர்களும் காசிபரின் புதல் வர்களாகத் தோன்றியவர்கள். காசிபருக்குப் பதின் மூன்று மனைவிகள் தேவர்கள் அவரது முதல் மனைவியான அதிதிக்கும் அசுரர்கள் இரண்டாவது மனைவியான திதி என்ப வளுக் கும் பிறந்தவர்கள் திதியின் புதல்வர்களானதால் தைத்தியர்கள் என்று அழைக்கப்பட் டனர்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடை யில் எப்போதும் போராட்டம் தான். அசுரர் கள், தேவர்களுடைய சுகமான உலகத் தையும் வளமான வாழ்வையும் கண்டு அதன் மேல் ஆசைகொண்டு அவர்களைத் துரத்திவிட்டு அதைக் கைப்பற்றி ஆளுகின்றனர். தேவர்கள் வலிமையற்றவர்களுடன் சூதும் வாதும் நிறைந்த வர்கள் நேரிடையாக போராட முடியாதவர்கள், தேவர்கள் திருமாலின் துணைகொண்டு அசுரர் களை வென்று மீண்டும் தமது செல்வத்தை அடைகின்றனர்.

தேவர்கள் மரணமில்லாத வாழ்வைத் தரும் அமுதத்தைப் பெற விரும்பினர். பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும் என்பதை அறிந்தனர். அதைத் தனியே சென்று கடைய வலிமை இல்லை என்பதால் அசுரர்களையும் துணைக்கழைத்துக் கொண்டனர். அவர்கள் கடைந்த போது முதலில் அமுதத்திற்குப் பதில் விஷமே தோன்றியது. அந்த விஷத்தின் கொடு மையால் பாம்பின் தலைப்பக்கம் நின்ற அசுரர்களின் உடல் கருகியும், வெந்தும் அழகற்ற தாகி விட்டது.

சிவனருள் பெற்று மீண்டும் அவர்கள் கடைந்த போது முதலில் அழகிய பெண்கள் மதுக் குடங்களுடன் தோன்றினர். பெரும்பா லான அசுரர்கள் அப்பெண்களுடன் பாதாள உலகிற்குச் சென்று அவர் கொண்டு வந்து மது வை உண்டு அவர்களுடன் சுகம் அனுபவித்துக் கொண்டு அதிலேயே மன மகிழ்ச்சியுடன் தன்னை மறந்திருந்தனர்.

எஞ்சிய அசுரர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதம் பெறும் வரை உடனிருந்தனர். அவர்க ளைத் திருமால் வஞ்சித்து அமிர்தத்தைத் தேவர்களுக்கு மட்டுமே அளித்துவிட்டு எஞ்சியதை தேவலோகத்தில் நாகங்களின் காவலில் வைத்தார். அதற்குச் சுதர்சனத்தி லிருந்து உண்டான பெரிய சக்கரத்தை வேலி யாக வைத்தார்.

அசுரர்கள் பாதாளத்தில் வாழ் கின்றனர். அவர்கள் அசுரர்களை தானவர்கள் என்று அழைக்கின்றனா. அவர்கள் சோமபானம், சுரா பானங்களை பருகி பெண்போகத்தில் மூழ்கி விடுவதால் அவர்களுடைய தவமும் வலிமை யும் வீணாகி விட்டன.

அசுர வம்சத்தில் பலி, முப்புராதியர், தாரகன், மகிஷன் வக்கரன் முதலிய பேரரசர்கள் தோன்றி மண்ணுலகை ஆண்டு பெருமை பெற்றுள்ளனர்.

## அசுரர்களின் ஆத்ம லிங்கங்கள்

தேவர்கள் சிவலிங்கம் நிறுவி வழிபட்டதைப் போல அசுரர்கள் வழிபட்ட லிங்கங் களை அதிகம் காண முடியவில்லை. அவர்கள் உடல்உறுதி படைத் தவர்களாதலால் பெரிய பூஜையையும் தவங்களையும் செய்து மேன்மை பெற்றனா். அவர் களின் எண்ணம் திரண்டு அவர்க ளுடைய ஆத்மா வில் சிவலிங்கமாக உருவானது. அவர்கள் இறந்தபின் அந்த ஒளி வடிவான லிங்கத்தை எடுத்து ஆலயம் அமைத்தனர். அவைகளை ஆத்மலிங்கங்கள் என்று கூறுகின்றனர்.

துர்க்கை மகிஷாசுரனை வென்றழித்தபின் அவனுடைய கண்டத்திலிருந்த ஆத்ம லிங்கத்தை திருவண்ணாமலையில் நிலைப்படுத்தினாள் என்று கூறுகின்றனர். இப்போது துர்க்கை ஆலயத்தில் கட்க தீர்த்தமும் ஆத்ம லிங்கமும் உள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பாணாசுரன்

சோணித புரத்தை ஆண்டு வந்த அசுர மன்னனான பாணாசுரன் மிகுந்த சிவபக்தி உடையவன். உபமன்யு முனிவரிடம் சிவதீக்ஷை பெற்று சிவபூசை செய்து வந்தான். அதற்கு மகிழ்ந்து சிவபெருமான் காட்சியளித்த போது, தினமும் ஓராயிரம் சிவலிங்கங்களை ஒரே நேரத்தில் பூசிக்க இரண்டாயிரம் கரங்களைப் பெற்றான்.

மேலும், சிவபெருமான் அவனுக்கு அக்னிக்கோட்டையையும் அழியாத வரத்தையும் அளித்தார். தானே அவனது கோட்டைக்குக் காவலனாக இருக்கும் வரத்தையும் அளித்துத் தானே கோட்டையைப் பாதுகாத்தும் வந்தார்.

பாணன் தனது விருப்பப்படியே நாள் தோறும் ஆயிரம் லிங்கங்களைப் பூசை செய்து அவற்றை நர்மதை நதியில் விட்டுக் கொண்டிருந்தான். அவன் பூசித்த அந்த லிங்கங்களில் பெருமான் நீங்காது வாசம் புரிகிறார். மேலும், பல தலங்களுக்குச் சென்று அங்கெல் லாம் சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டுள்ளான். அவையும் பாணலிங்கங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

ஒரு சமயம் தனக்கு இணையாக எதிர்த்து நின்று போரிட யாரும் கிடைக்காததால் தனது வீரம் வெளிப்படாதிருக்கிறது என்று கூறிச் செருக்குடன் சிவபெருமானைப் பிரார்த்தித்த ான். அவர் நீ கண்ணனோடு போர் புரிவாய். அவன் உனது வீரத்தை வெளிப்படுத்துவான் என்றார்.

பாணாசுரனுடைய மகள் உஷா. அவள் கண்ணபிரான் மகனான பிரத்யும்னனைக் காதலித்தாள். பிரத்யும்னன் யாரும் அறியாதவாறு அவளுடைய அந்தப்புரத்திற்கு வந்து அவளோடு இன்பம் துய்த்திருந்தான். அதையறிந்த பாணாசுரன் அவனைப் பிடித்துச் சிறைவைத்துவிட்டான்.

அவனைச் சிறைமீட்கக் கண்ணன் பெரும் படையுடன் வந்து போரிட்டான். அப்போது வாயிற்காவலராக நின்ற பெருமான் பாணனிடம் உன் போர் தினவைத் தீர்த்துக்கொள்; உம்மிடம் மூன்று முறை தோற்று ஓடிய கண்ணன் போருக்கு வந்துள்ளான் என்றார். கடும் யுத்தத் திற்குப் பிறகு கண்ணன் அவனது 998 கரங்களை வெட்டி வீழ்த்தினான். சிவபூசையைத் தொடர்ந்து செய்ய இரண்டுகரங்களை மட்டும்விட்டு விட்டான். சிவபெருமான் பாணனுக்குச் சிவ பூசை செய்யும் போது மட்டும் ஆயிரம் கரங்களும் தோன்றுமாறு அருள் செய்தார்.

வாணன் தனது மகள் உஷையை பிரத்யும்னனுக்கு திருமணம் செய்து கொடுத்தான்.

நீண்ட காலம் அரசு செலுத்திய பின்னர் கயிலை மலையை அடைந்தான். அங்கு பெருமானுடைய சபையில் குடமுழா முழக்குபவனாக இருந்து வருகிறான்.

## பானுகம்பன்

பாணாசுரனுடன் உடன் வைத்துப் போற்றப்படுவன். பானுகம்பன் என்னும் பெரிய அசுரன். ஆயிரம் முகங்களைக் கொண்டவன். நெடுநாள் உலகை ஆட்சிபுரிந்தவன். பின்னர் சிவபெருமானுக்குச் சேவகனாகி அவர் சந்நிதியில் சங்கு முழங்கும் பணியைச் செய்து வருகின்றான். அவன் தனது ஓராயிரம் வாய்களாலும் ஓராயிரம் சங்குகளை முழங்குகின்றான்.

சில நடராசர் திருமேனிகளின் அருகில் ஒரு முகத்துடன் சங்கு ஊதும் பானுகம்பனைக் காண்கிறோம். தென்காசி ஆலயத்தில் வீரபத்திரரின் பீடத்தில் ஏழுமுகங்களுடன் சங்கு ஊதும் பானுகம்பனின் புடைப்புச் சிற்பத்தைக் காணலாம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பாண லிங்கம்



பாணாசுரன் தினமும் ஆயிரம் லிங்கங்களை வைத்து வழிபடுவான். பிறகு அவற்றை நர்மதையாற்றில் இட்டு விடுவான்(விசர்ச்சனம் செய்த) அப்படியேஅவனால் விடப் பட்ட லிங்கங்களே இப்போது நமக்குக் கிடைக் கின்றன. அந்த லிங்கங்களை பாணலிங்கங்கள் என்று அழைக்கின்றோம்.

இவை கையளவு முதல் யானை அளவு வரை இருப் பதாக (ஹஸ்தப் பிராமாணம் ஹஸ்தி பிரமாணம்) புராணங்கள் கூறுகின்றன. கோழி முட்டை தாழங்குடை முதலியவற்றைப் போன்ற உச்சியைக் கொண்டவை. பொன் நிறம், தேன்நிறம், கருமை நிறம், செம்மை நிறம் போன்ற பல நிறங்கள் கொண் டவை சிலவற்றில் ரேகைகளும் கொண்டவை. அடர்ந்த நீலம், கருமை வண்ணம் கொண்டவை உயர்ந்தவைகளாகப் போற்றுகின்றன.

இந்தியா முழுவதிலும் லட்சக்கணக்கான ஆலயங்களில் விசுவநாதர் என்ற பெயரில் பாண லிங்கங்கள் வைத்து வணங்கப்படுகின்றன. அன்பர்கள் பஞ்சாயதன பூசையில் சிவபெருமா னுக்குரியதாக பாணலிங்கங்களை வைத்து வழிபடுகின்றனர்.

பாணலிங்கங்களைச் சிவாலயங்களில் நிறுவி வழிபடும் போது பஞ்சாவரண பூசையில் இரண்டாம் ஆவரணத்தில் அஷ்டவித்யேசுவரர்களுக்குப் பதிலாக தரர், துருவர், சோமர் ஆபர் அநிலர் அனலர், பிரத்யூஷர், பிரபாவர் ஆகிய எட்டு வசுக்கள் பூசிக்கப்படுகின்றனர். இந்த எண்மரே அஷ்ட வசுக்கள் என்பர். இவர்கள் பூமியின் எட்டு திசையிலிருந்தும் அதைக் காக்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் பூமிக்கு வசுமதி என்னும் பெயர் வழங்குகிறது.

இதுபோன்று இராட்சத லிங்கங்கங்களுக்கு யக்ஷர், இராட்சசர், வைசாசர், சித்தர்கள், வித்யாதரர், கின்னர், கிம்புருஷர், சர்வசித்தர் ஆகிய எண்மர் பலிதேவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

பாணலிங்கங்கள் குளிர்ச்சியும் வழவழப்பும் திண்மையும் கொண்டவை.

## அசுர வாகனம்

பூதர்கள் சிவபெருமானைத் தோளில் சுமக்கும் பேறு பெற்றவர்கள்.அதையொட்டி அவர்களைக் குறிக் கும் பூத வாகனங்கள் ஆலயத்தில் உள்ளன.அப்படி அசுரர்கள் சிவ பெருமானைச் சுமப்பதில்லை என்றாலும்,அசுரவேந்த னான இராவணேசுவரனை ஒரு வாகனமாக அமைத்துள் ளனர். இராவணன் கயிலைமலை யைத் தூக்கி அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு, சாம கானம் பாடி இறையருள் பெற்றதை நினைவூட்டுவதாக இவ்வாகனம் அமைந் துள்ளது. இதில் இராவணன் வீணை மீட்டிப் பாடும் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளான்.

இடுப்பிற்கு மேல் ரிஷி உடலும் இடுப்பிற்குக் கீழ் சிங்க உடலும் கொண்ட விநோத உருவம் புருஷா மிருகம் என்று அழைக்கப்படுகிறது. இதை ஒத்ததாக அசுர உருவ மும் புலியின் உடலும் கொண்டது அசுர மிருகமாகும். இத்தகைய வாகனமொன்று திருமங்கலக்குடியில் உள்ளது. இவன் நீண்ட சூலாயுதத்தை இரண்டு கரங்களில் பற்றியுள்ளான். பெருந்திருவிழாவின் இரண்டாம் நாள் காலையில் இந்த வாகனத்தில் பெருமான் பவனி வருகிறார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## வாணாசுரன் ( பாணாசுரன் ( 2 )

இவன் முன்பக்கத்தில் கூறப்பட்ட வாணாசுரன் அல்ல இவன் வேறு பாணாசுரன்.

இவனுடைய தாயான கும்பலா என்பவள் தினமும் ஓராயிரம் சிவலிங்கங்களை வைத்துப் பூசிப்பது வழக்கம். வாணன் தன் தாயின் விருப்பப்படி ஆங்காங்குள்ள லிங்கங்களைப் பெயர்த்தெடுத்து வந்து அளிப்பான். பூஜை முடிந்ததும் மீண்டும் அவற்றை எடுத்த இடத்திலேயே வைத்துவிடுவான்.

அவன் ஒரு சமயம் சரண்யபுரம் எனப்பட்ட திருப்புகலூருக்கு வந்தான். அங்கே இருந்த கோணேசப் பெருமானை வணங்கி னான். அந்த லிங்கத்தின் பெருமைகளைத் தன் தாயிடம் கூறினான். அவள் அந்த லிங்கத்தைப் பூசிக்க விரும்பினாள்.

பாணன் திருப்புகலூர் வந்து லிங்கத்தைப் பெயர்க்க முயன்றான். சுற்றிலும் அகழ்ந்தான். அப்படி அகழ்ந்த இடம் ஒரு அகழி போல ஆகிவிட்டது. என்றாலும் பெருமான் அசைந்து கொடுக்கவில்லை. அவன் தாயின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமற் போனதற்கு வருந்தினான்.

சிவபெருமான் நான் இங்கிருந்தே தலை வளைத்து உனது அன்னையின் பூசனையை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்றார். அதன்படி சற்றுத் தலையைச் சாய்த்துக் காட்டினார். சற்றுக் கோணலாக வளைந்ததால், அவர் கோணப் பிரான் என்று அழைக்கப்படுகிறார். வாணாசுரன் நெடு நாட்கள் பூசை செய்து மகிழ்ந்தான். (இது அப்பர் முத்தி பெற்ற தலமாகும்)

இறைவன் கோணப்பிரான். அம்பிகை கருந்தாழ்குழலி. இவ்வாலயத்தில் பாணாசுரனின் அழகிய உலாத்திருமேனி உள்ளது. ஆலய முகப்பில் பாணன் லிங்கத்தைப் பெயர்த்தெடுக்கும் கோலம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது.

## வக்ராசுரன்

வக்கிரன் என்பவன் எதிர்மறைச் சிந்தனைகளை உடையவன். அவன் தேவர்களுக்கு ஓயாது துன்பமளித்து வந்தான். பெருமான் திருமாலுக்கு ஆழி( சக்கரத்தை) நல்கி அவனை அழிக்கும்படி கூறினார். அவரால் அவனை அடக்க முடிந்ததே தவிர அழிக்க முடியவில்லை. அவர் சப்த மாதர்களின் துணையை வேண்டினார். அவர்கள் அவனுடன் போரிட்டு அவனை வென்றனர்.

அவனைக் கொன்ற பாவம் தீரச் சப்தமாதர்கள் சங்கராபரணி ஆற்றங்கரையில், சந்திரசேகரரின் ஆலய முற்றத்தில் பெரிய லிங்கம் அமைத்து வழிபட்டனர். அந்த லிங்கத்தில் வக்ராசுரனின் ஆன்மா ஒளிவடிவுடன் வந்து கலந்தது. அந்த லிங்கம் அவன் பெயரால் வக்ராசுர லிங்கமென்றும், வக்ர லிங்கமென்றும் அழைக்கப்படுகிறது.

சென்னை- திருச்சி நெடுஞ்சாலையிலுள்ள திண்டிவனத்திற்குத் தென்கிழக்கில் 15 கி.மீ. தொலைவில் திருவக்கரை உள்ளது. இது பாடல் பெற்ற திருத்தலமாகும். இங்குள்ள பெரிய சிவாலயத்தில் கருவறையில் சிவபெருமான் சந்திரசேகரர் எனும் பெயரில் மும்முக லிங்கமாக வீற்றிருக்கின்றார்.

இவருடைய ஆலயத்தில் ராஜகோபுரத்தைத் தாண்டியதும் வடக்கு நோக்கியவாறு சப்தமாதர்கள் சந்நிதியும் அதற்கு அருகில் மேற்கு நோக்கியவாறு வக்ரலிங்கம் அமைந்த சந்நிதியும் உள்ளன



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# காஞ்சியில் அசுர லிங்கங்கள்

முத்தி தரும் தலங்கள் ஏழில் முதன்மை பெற்றது காஞ்சிபுரம். அங்கு ஏராளமான தெய்வ ஆலயங்கள் உள்ளன. இதில் தேவர்கள் முனிவர்கள் அமைத்ததைப் போலவே அசுரர்களால் அமைத்து வழிபடப்பட்ட சிவாலயங்களும் உள்ளன. பெரிய தவங்களைச் செய்யுமுன் அசுரர்கள் பலவேறு தலங்களுக்குத் தீர்த்த யாத்திரை சென்று வருவது வழக்கம். அதன்படியே தவத்தைத் தொடங்குமுன் இத்தலத்திற்கு வந்த அசுரர்கள் லிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

## இரண்யேசுவரர்

இரண்யாசுரன் சுக்கிராச்சாரியாரின் அறிவுரைப்படி காஞ்சிபுரத்திற்கு வந்து சகல செல்வங்களையும் அளிக்கும் சிவபூசையைச் செய்ய விரும்பினான்.

தம்பி இரண்யாட்சசன், அவன்புதல்வன் அந்தகாசுரன், தனது மகன் பிரகலாதன் மற்றும் மனைவி மக்களுடன் வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அவன் சுற்றத்தினரும் தத்தம் பெயரால் லிங்கங்கள் அமைத்து வழிபட்டனர்.

இரணியன் அமைத்து வழிபட்ட சிவாலயம் இரணியேசம் என்று அழைக்கப்படுகிறது. இது காஞ்சிபுரம் சர்வதீர்த்தத்தின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

(இவனைத் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்துக் கொன்றார். மகாசிவபக்தனான அவனை அழித்த பாவம் தீர சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அது காஞ்சிபுரத்தை ஒட்டி அமைந்துள்ள தாமலில் நரசிம்மேசுவரர் என்னும் பெயரில் தனிச் சிற்றலாயத்தில் உள்ளது.)

இரண்யன் மரணமடைந்த பின் அவனது ஆன்மா ஒளி வடிவில் இந்த லிங்கத்தில் நிலை பெற்றது என்று கூறப்படுகிறது.

## ஓணகாந்தன் தளி

காஞ்சிபுரத்திற்கு மேற்கில் அரக்கோணம் செல்லும் சாலையிலுள்ள பஞ்சுப் பேட்டையில் உயர்ந்த மேடைமீது அமைந்துள்ள ஆலயம் ஓணகாந்தன் தளி ஆகும். இதில் இரண்டு லிங்கங்கள் ஒரே மதிலுக்குள் தனித்தனி ஆலயங்களில் உள்ளன.

பாணாசுரனுடையசேனாதிபதிகளான ஓணன், காந்தன் என்பவர்கள் நிறுவி வழிபட்ட தலமே ஓணேச்சரமும், காந்தேச்சரமும் ஆகும். இவற்றில் ஓணேச்சரர் மிகப்பெரிய லிங்கமாக விளங்குகிறார்.

## ஜலந்தரேசம்

மேலே குறித்த ஓணகாந்த தளியை ஒட்டித் தனிச் சிற்றாலயமாக ஜலந்தரேசம் என்னும் சிவாலயம் உள்ளது. இது ஜலந்தரன் என்பவனால் அமைக்கப்பட்ட சிவாலயமாகும்.

ஜலத்தில் உண்டானதால், இவ்வசுரன் ஜலந்தரன் என்று அழைக்கப்பட்டான். பின்னாளில் மிகுந்த சிவபக்தனாகி அரிய வரங்களைப் பெற்றான். அவனுடைய துன்பங்களைப் பொறுக்க மாட்டாத தேவர்கள் சிவ பெருமானிடம் அவனை அழித்து தம்மைக் காக்கும்படி வேண்டினர்.

சிவபெருமான் அவனை ஒரு சக்கரத்தால் இரண்டாகப் பிளந்தார். அவனுடைய ஆன்மா ஒளி வடிவம் பெற்று அவன் பூசித்த இந்த லிங்கத்திலேயே கலந்தது என்று தலபுராணம் கூறுகிறது. (ஜலந்தரனின் விரிவான வரலாற்றைச் சிவமஞ்சரி பக்கம் 1081ல் காண்க)

தமிழகத்தில் எங்கும் காணக்கிடைக்காத ஜலந்தரவத மூர்த்தி என்னும் வடிவம் பல்லவர் காலச் சிவாலயங்களில் வடக்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. அளவில் பெரியதாக விளங்கும் இச்சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவைகளாகும்.

## வாணேசம்

உபமன்யு முனிவரிடம் தீட்சை பெற்ற வாணாசுரன் சிவபெருமானை நோக்கி அனேக தவங்கள் செய்து பெரும்பேறு பெற்றவன். அவன் இங்கு வழிபட்டுப் பேறுபெற்றுள்ளான்.

இன்னும் திரிபுரர் முதலான அநேக அசுரர்களும் இங்கு வழிபட்டுப்பேறு பெற்றுள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தாரகன்

தாரகம் என்பதற்கு மூலத்திற்கும் மூலமான, ஆதிமூலமாக விளங்குவது என்பது பொருள். உலகப் படைப்பிற்கு ஆதாரமான "ஓம்' எனும் பிரணவ மந்திரம் தாரக மந்திரம் என்றழைக்கப்படுகிறது.

உலகின் தொடக்கத்தில் தோன்றிய இராட்சதர்களில் தாரகன் என்ற பெயரைச் பலர்சூடியிருந்தனர். திரிபுராதியர்களின் தந்தையின் பெயர் தாரகன் என்பதாகும். திரிபுராதியில் ஒருவனுக்குத் தாரகாட்சன் என்பது பெயராகும். இவர்கள் சிவனருள் பெற்று மேன்மை அடைந்தவர்கள்.

சிவனருள் பெற்று தனது ஒப்பற்ற தவவலிமையால் மூவுலகங்களையும் வென்று அரசாண்டவன் தாரகன். மகாபலசாலி .யான அந்த அரக்கனை எவராலும் வெல்ல முடிய வில்லை. சிவபெருமான் அவனை அழிக்கக் காளியைத் தோற்றுவித்தார். அவளிடம் தொல்லை மிகு தாரகனை அழித்து வருக என்றார். அவள் அவனுடன் போரிட்டு அவன் ம்ார்பைப் பிளந்து கொன்றாள்.

அவனை அழித்ததால் காளி தாரகேசுவரி என்று அழைக்கப்படுகிறாள். காளி தாருகனை அழித்து வெற்றி கொண்டதைச் சிலப்பதிகாரம், சூருடை கானகம் உகந்த காளி, தாருகன் பேருரம் (பேர்+ உரம்) ( பெரிய மார்பை) கிழித்த பெண் என்றும் கூறுகிறது.

சிவபெருமான் காளியைத் தோற்றுவித்து தாரகனை அழித்து வருக என்று கூறியதைத் திருஞானசம்பந்தர்,

வல்லைமிகு காளியை வகுத்து வலியாகி
தொல்லைமிகு தாரகனை கொல்லென
விடுத்தருள்புரிந்த சிவன்

என்று காளத்தி தேவாரத்துள் குறித்துள்ளார்.

இன்னும் பல இலக்கியங்கள் பெருமான், தாரகன் என்னும் அரக்கனை அழித்து அவனுக்கு அருள்புரிந்த வரலாற்றைக் கூறுகின்றன.

தாரகாரி முருகன்

தாரகன் அமைத்து வழிபட்ட சிவலிங்கம் தாரகேசுவரர் என்று அழைக்கப்படுகிறது. சீர்காழியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொண்டல் (கரிய வனநகர்) என்னும் தலத்தில் பெருமான் தாரக பரமேசுவரர் என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளார்.

சிவனருளால் 1008 அண்டங்களை 108 சதுர்யுகங்கள் ஆட்சி புரியும் வரத்தைப் பெற்றவனான சூரபத்மனின் தம்பியருள் ஒருவன் தாரகன் என்று அழைக்கப் படுகிறான். அவன் தாரக ரூபமான ஓங்காரத்தை நினைவூட்டும் வகையில் யானை முகம் கொண்டவனாக விளங்கினான். அவன் கிரௌஞ்ச கிரியில் வசித்து வந்ததாகக் கந்த புராணம் கூறுகிறது. முருகப்பெருமான் அந்த மலையைத் தூளாக்கியதுடன் அவனையும் அழித்தார். அதுமுதல் அவருக்குத் தாரகாரி என்பது பெயராயிற்று. கந்தர் கலிவெண் பாவில்,தாரகனும் மாயத் தடங்கிரியும்

தூளாக வீரவேல்விடுத்தோனே

என்று குமரகுருபரர் துதிக்கிறார்.

---

தாரகாசுரனை அழிக்க முருகன்பெரும் படையுடன் சென்றார். பலவாறு முயன்றும் அவனை அழிக்க முடியவில்லை. அப்போது தேவர்கள் அவரிடம் தாரகனின் அங்கத்தில் ஆத்மலிங்கம் உள்ளது. அது இருக்கும்வரையில் அவனை அழிக்க முடியாது என்றனர். சிவபெருமான் ஞான வேலை அனுப்பினார். அது அந்த ஆத்ம லிங்கத்தை அவனுடலிலிருந்து விலக்கியது. அந்த லிங்கம் ஐந்து துண்டுகளாகப் பிளந்து பூமியில் விழுந்தது. அதில் முதன்மைத் துண்டு விழுந்த இடமே ஆந்திர மாநிலத்தில் உள்ள திராட்சாராமம் பீமேசுவரலிங்கம் ஆகும். இது சக்தி பீடமும் ஆகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## கயாசுரன் சிவலிங்கமானது

தெய்வீகமான அசுரர்களில் கயாசுரன் ஒருவன். மகிஷாசுரனின் மைந்தனான அவன், தம் தந்தையான மகிஷனை துர்காதேவி வதைத்து அழித்தாள் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் கோபம் கொண்டான். பெரிய படையைத் திரட்டிக் கொண்டு தேவர்கள்மீது படையெடுத்து வந்தான்.

மகிஷாசுரனுக்கு அஞ்சி நடுங்கிய தேவர்கள், யானை வடிவுடன் ஆர்ப்பரித்து வரும் கயா சுரனைக் கண்டு உயிர் போனதுபோல உணர்ந்தனர். அவனுக்கு அஞ்சிப் பல இடங்களில் ஓடி ஒளிந் தனர். எங்குச் சென்றாலும் அவன் விடாது தொடர்ந்து வந்தான். இறுதியாக தேவர்கள் காசி நகருக்குள் சென்று மணிகர்ணிகைக் கரையில் அமைந்துள்ள மணிகர்ணிகேசுவர லிங்கத்தைக் கண்டு வணங்கி அபயம்!, அபயம்!! என்று ஓலமிட்டனர்.

அவர்களின் அச்சம் மிகுந்த ஓலக்குரலைக் கேட்ட சிவபெருமான், சூலபாணியாக வெளிப்பட்டார். அவ்வேளையில் கயாசுரனும் பூமி அதிர அவர் முன்னே வந்தான். பெருமான் அவனைப் பற்றித் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக் கொண்டார். அவனைச் சூலத்தில் குத்தித் தூக்கித் தலைக்குமேல் குடைபோலப் பிடித்தார்.

சூலத்தால் குத்துண்டதால் கயாசுரனுக்கு நல்லறிவு உண்டானது. அவன் மகாதேவரைத் துதித்தான். காமனை வென்றவரான தங்கள் கையால் மரணமடைவதை மங்களமாகக் கருதுகிறேன். எல்லோரும் ஒருநாள் இறக்க வேண்டியவர்களே என்றாலும், தங்களால் அளிக்கப்படும் மரணத்தால் நான் புனிதனானேன் என்றான்.

அதைக்கேட்ட சிவபெருமான், உனது பக்தியால் மகிழ்ந்தேன். தானவனே! உனக்கு வேண்டியதைக் கேள்! என்றார். பெருமானே! இந்த ரணக்ஷேத் திரத்தில் ஜயிக் கப்பட்டதும், திரிசூலத்தின் நெருப்புக்களால் துளைக்கப்பட்டதும், நீள அகலங்களால் பெரியதும், சுகத் தைக் கொடுப்பது மான எனது தோலை எப்போதும் போர்த்திக் கொண்டிருக்க வேண்டும். இந்தத் தோல் தங்களுடைய கிருபையால் உத்தமவானை உள்ளதாகவும், மிருதுவாகவும், நிர்மலமானதாகவும் தங்களுக்கு அலங் காரமாகவும் இருக்க வேண்டும். எனது தோல் உம்மால் புண்ணியம் அடைந்திருக்கிறதென்றான்.

பின்னர் எனது தோலில் தாங்கள் வாசம் செய்வதால் கிருத்தி வாசன் என்ற பெயருடன் விளங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். இந்த மொழிகளைக் கேட்டவுடன் பெருமான் அப்படியே ஆகட்டும் என்றார்.

பின்னர், அவனை நோக்கி, புண்ணிய நிதியே! உனக்கு இன்னும் மேலான வரத்தை அளிக்கப் போகிறேன். நீ முக்தி பெறுவாய். இந்த அவிமுக்தி திருத்தலமான காசியில் யுத்தம் செய்து தேகத்தை விடுகிறாய். அந்த உடல் எனது வடிவமான லிங்கமாக இங்கே நிலை பெற்றிருக்கும்.

அதனுடைய பெயர் கிருத்திவாசர் என்று வழங்கும். அது எல்லோருக்கும் முக்தியை வழங்கும் என்றார். இதுவே இங்குள்ள லிங்கங்களுக்கெல்லாம் தலைமை லிங்கமாக இருக்கும் என்றார். அதனருகில் சூலத்தால் உண்டான தீர்த்தம் அம்ச தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

அசுரனுடைய உடல் பரமன் அருளால் சிவலிங்கமாகக் காட்சியளிப்பதை இவன் வரலாற்றில் மட்டுமே காண்கிறோம்.

## அசுர குலகுரு சுக்கிராச்சாரியார்

அசுர குலத்தின் குலகுருவாக விளங்குபவர் சுக்கிராச்சாரியார். ப்ருகு முனிவரின் குமாரனாகத் தோன்றியதால், பார்க்கவன் என்று அழைக்கப்படுகிறார் இவர் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து " மிருத சஞ்சீவினி" என்னும் மந்திரத்தை அறிந்து கொண்டார். இம்மந்திரம் இறந்தவர்களை எழுப்பிக்கும் ஆற்றல் பெற்றதாகும்.

சுக்கிரன் சிவனருளாள் கிரகபதவியும் அசுரர்களுக்கு குலகுருவாகவும் விளங்கும் பேறு பெற்றவர். ஒரு சமயம் அந்தகன் அந்தகாரி என்ற அசுர சகோதரர்கள் வெற்றியடையும் பொருட்டு மிருத சஞ்சீனி மந்திரத்தைக் கொண்டு இறந்த சேனைகளை எழுப்பிக்கொண்டே இருந்தார். அதைக் கண்டு கோபித்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தி தேவர் அவரைப்பிடித்துப் பழமாக்கி சிவனிடம் அளித்து உண்ணும்படி வேண்டினார். அப்படியே அவரைச் சிவபெருமான் விழுங்கினார். அவருடைய வயிற்றில் சுக்கிரன் பலகாலம் கிடந்து துன்புற்று வருந்தி அழுதான். பெருமானைப் பலவாறு துதித்தான். அவனுக்கு இரங்கிய சிவபெருமான், சுக்கில வடிவில் வெளியிட்டார். அதனால் மிகுந்த பிரகாசமும் வெண்நிறமும் கொண்டிருப்பதுடன் சிவகுமாரன் என்ற பெயரையும் பெற்றார்.

இவருடையமனைவி சுகிர்தி, மகள் தேவயானி அரசி, மகன் துவஸ்டரன், தாத்ரி, கன்னன் முதலியோராவர். வாகனம் கருடன்.

பின்னொரு சமயம் இவர் ராட்சத பெண்ணை மணந்து அநேக ராட்சதர்களைப் பெற்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் அரக்கன் என்றும் அழைக்கப்படுகிறார். மேலும், இவரை பார்க்கவன், கவி, காவ்ய மணி, வான்மழைத் தலைவன் (மழை தருவோன்) விடியல் நட்சத்திரம், வெள்ளி, ஹிமாபன், குந்தவளன், கருணா சிந்து, வேத வேதாங்கபரன், என்ற பல பெயர்களால் அழைப்பர்.

கஞ்சனூர் அசுர குலகுருவான பார்க்கவர் பூசித்த தலம்.திருநாவலூரிலும் அசுரகுல குருவான சுக்கிரன் பூசித்த பெரிய சிவலிங்கம் உள்பிராகாரத்தில் அமைந்துள்ளது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஏழு சிவாலயங்களில் ஒன்றான வெள்ளீச்சரம், கபாலீசுவரர் ஆலயத்தின் தென்புறம் உள்ளது. இங்கே சுக்கிரனுக்குப்பெருமான் கண்ணொளி வழங்குதல் வைகாசி மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவில் எட்டாம் நாள் ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

## மருத்துக்கள்

தொன்மை வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்த கூட்டம் மருத்துக்கள் ஆவர். இவர்கள் நாற் பத்தி ஒன்பதின்மராவர்.

காசிபரின் மனைவியான திதி என்பவள் அசுரர்களை அழித்த இந்திரன் மீது கோபம் கொண்டாள். இந்திரனை வெல்லத்தக்க புதல்வனைப் பெற வேண்டி கடுந்தவம் புரிந்தாள். காசிபரிடம் கூடி கருவைத் தாங்கினாள். அதில் அதிசூர பராக்கிரமம் மிக்க சக்தி உண்டானது.

அதையறிந்த இந்திரன் கலக்கமடைந்தான். காற்று வடிவில் அவள் கருப்பைக்குள் சென்று அவள் அறியாவண்ணம் அந்தக் கருவை ஏழு பங்காகச் சிதைத்தான். குழந்தைகள் அழுவதன் மூலம் நடந்ததை அறிந்த திதி மருதா மருதா என்று அழைத்தாள். அதை யொட்டி இவர்கள் மருத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.அக்கரு உரிய காலத்தில் குழந்தைகளாகி வெளிவந்தன.

முதலில் அவர்கள் தாயின் சொற்படி இந்திரனை எதிர்த்தனர். பின்னாளில் அவனுக்கு நண்பர்கள் ஆயினர். அவர்கள் மந்திரப் பூர்வமாக வழிபடப்படுகின்றனர்.

இவர்கள் வாயு (காற்று) வடிவானவர்கள் ஏழு முதன்மை பெற்றவர்கள்.பூமி முதல் மேகக் கூட்டம் வரையுள்ளவன் ஆவஹன்; அது முதன் சூரியன் வரை வியாபித்துள்ளவன் ப்ரவதஹனன்; அதுமுதல் சந்திரன் வரையுள்வன். உத்வஹன் சந்திரன் முதல் நட்சத்திர மண்டலம் வரை சுவஹனன். அதற்கு மேல் கிரக மண்டலம் வரை விவஹன் அதற்கு மேல் சப்தரிஷி மண்ட லம் வரை பராவஹன். அதற்குமேல் துருவ மண்டலம் வரை பர்வஹன்.இது இவர்கள் எல்லை என்று வாயு புராணம் கூறுகிறது.

ரிக்வேதம், வாயுபுராணம், பாரதம் முதலிய நூல்கள் இவர்களைத் துதிக்கின்றன.

சில நூல்கள் இவர்களை வாயுவேகர், வாயுபலர், வாயுஹன், வாயுமண்டலர், வாயுஜ்வாலன், வாயுரேதஸ், வாயுசக்ரர் என்ற ஏழு ரிஷிகளும் அவர்களிடமிருந்து தோன்றியவர்கள் என்று கூறுகின்றன. இவர்கள் பிராணனைக் காப்பவர்கள் என்றும் வழித்துணையாக வருபவர்கள் என்றும், மருத்து கணங்கள் என்றும் துதிக்கப்படுகின்றனர். அனுமன், சீதை முதலியோர் மருத்து கணங்களைத் துதிப்பதை இராமாயணத்தில் காண்கிறோம்.

சிவபெருமான் அகோர மூர்த்தியாக விளங்குகையில் அவரைச் சுற்றி நின்று மருத்து கணங்கள் போற்றித் துதிக்கின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# சமய வழிபாட்டில் பேய்கள்

வாழ் நாட்களில் நிறைவேற்ற முடியாத ஆசைகளில் பற்றுக் கொண்டு அவைகளை அடைந்திட வேண்டி இறந்தபின்னும் ஓயாது உழன்று துன்பமடைந்து கொண்டிருக்கும் நிலையே பேய் நிலையாகும். அது பசி, தூக்கம், மனநிம்மதி ஆகிய வற்றை இழந்து அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் நிலைக்குத் தள்ளிவிடுகிறது. அதனால் "பேய் நிலை" என்றதும், அச்சமூட்டும் வடிவத்தையே நம் மனக் கண்ணில் காண்கிறோம்.

பேய் நிலை என்பது" ஒன்றில் மட்டுமே மனம் நிலைபெற்று மட்டுமே பற்றி அதையே சிந்தித்து அதில்ஒன்றியிருக்கும்நிலையாகும். உலகியல் நெறி யிலிருந்து மாறுபட்டுள்ள இந்நிலையை அடைய வேண்டிப் பெற்றவர்கள் தம்மைப் பக்தி நெறியில் பேய் என்று பெயரிட்டு அழைத்துக் கொண்டனர்.

சைவ சமயத்துள் இறைவனால் அம்மையே என்று அழைக்கப்படும் பேறு பெற்ற காரைக்கால் அம்மையார் தம்மைப் பேயார் என்று அழைத்துக் கொண்டார்.

திவ்விய பிரபந்தத்தை அருளிச் செய்த முதல் மூன்று ஆழ்வார்களில் ஒருவர் பேயாழ்வார் என்று அழைக்கப்படுவதும் இங்கு எண்ணத் தக்கதாகும்.

ஒரு காலத்தில் பேயார் என்று பெயர் சூட்டிக் கொள்வதும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. சங்கம் மருவிய இலக்கியமான ஐங்குறுநூற்றில் முல்லைத் திணையைப் பாடியவர் பெயர் பேய னார் என்பதாகும். ஆண்களேயன்றிப் பெண்களில் பலரும் பேய்ப் பெயர் சூட்டிக் கொண்டிருந் தனர். பாலை பாடிய பெருங்கடுக்கோவைப் பாடிய பெண்பாற்புலவர் பெயர் பேய் மகள் இள வெயினி என்பதாகும்.

உலகிலுள்ள பதினெட்டு கணங்களில் பேய்க் கணமும் ஒன்றாகும். பேய்கள் முன்வினைப் பயனால் சிவவழிபாடு செய்து பேறு பெற்ற தலங்கள் பேயீச்ச ரங்கள் என்றழைக்கப்படுகின்றன. சிறப்பு மிக்க பேய்கள் தொடர்பான செய்திகளைத் தாங்கிச் சிவமஞ்சரியின் இந்த மலர் மலர்கிறது.

காளியோடாடி கனகாசலத்தாடி கூளியோ டாடி (பேய்) குவலயத்தே ஆடும் பிரான் அன்பர் களுக்கு சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த் திக்கிறோம்.

- சிவசுந்தரி

## மாந்துறைப் பேய்

லால்குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள திருத்தலம் திருமாந்துறை. இந்நாளில் வடகரை மாந்துறை என்றழைக்கப்படுகிறது. இவ்வூரிலுள்ள ஆம்ரவனேசுவரர் ஆலயத்தின் கோபுரத்தில் மகாவிஷ்ணுவின் அம்சமான பேயின் உருவம் உள்ளது என்று டாக்டர் உ.வே.சா. அவர்கள் எழுதியுள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## பேய்கள்- சிந்தனைத் துளிகள்

ஒரு சமயம் சிருஷ்டித் தொழிலை மறந்து திகைத்த பிரமன் அழுதான். அவனுடைய கண்ணீர்த் துளிகளிலிருந்து அச்சமும் அருவருப்பும் தரும் உயிர்கள் தோன்றின. அவையே பேய்கள் எனக்கொள்ளப்பட்டன.

திருநீறிடாதவர், பஞ்சாட்சரம் ஓதாதவர், குற்றமுடைய உணவுகளை உண்பவர்கள், வாழ்க்கை கடன்களை நிறைவேற்றாதவர்கள், மெழுகி, தூய்மைப்படுத்தி விளக்கேற்றாத வீடுகளில் உள்ளவர், குற்றம்புரிந்தவர் இடும் உணவை உண்பவர், திருடி உண்பவர் முதலான பலரும் பிசாசாக ஜென்மம் எடுப்பர் என்று இயம்பப் படுகிறது.

பிசாசுகள் சுடலைகளிலும் ஆழ்கடலிலும் பயனற்றும் ஆளரவமற்றும், கள்ளிகள் விளைந்துள்ள காட்டிலும் வாழும்..

குடமுழுக்குக்கு முன்பாக யாகசாலையில் நிலத்தைத் தூய்மை செய்ய அங்கு பேய்களுக்கான கோலமிடப்படுகிறது.

பேயை நிகண்டுகள் பிசாசம், கழுது, கிருத்தியம், கூளி, அலகை, மயன்மருள் சோரு வேதாளம், பிரேதகணம், பைசாசம், வியந்தரம், அழன், குணபாசி முதலிய பெயர்களால் குறிக்கின்றன.

பேய் வடிவமானது தசைகள் வறண்ட தோல் போர்த்திய எலும்புக் கூடு போன்றது. கண்கள் குழி விழுந்து பற்கள் வெளியே துருத்திக் கொண்டிருக்கும். வயிறு ஒட்டி உலர்ந்திருக்கும். பேய்கள் எப்போதும் பசியால் வருந்திக் கொண்டிருக்கும். யாரையாவது பற்றிக்கொண்டு அவர்களை வருத்தி, மிகைபடப் பேசவைத்து அச்சப்படுத்திக் கொண்டே இருக்கும்

பேய்கள் சுடலையில் வாழ்வதாகக் கூறுவர். தேவாரத்தில் அனேக இடங்களில் சுடலை எனப்படும் சுடுகாடு சிறப்பிக்கப்பட்டிருப்பதுடன் பேய்கள் கண்டு களிக்கப் பெருமான் நடனமாடுவது குறிக்கப்பட்டுள்ளன.

அங்காளம்மன் ஆலயங்களில் சிவபெருமான் நடராசர் தாண்டவராயர் என்ற பெயரில் காட்சியளிக்கிறார். அவர் பேய்கள் சூழ நடனமாடுகிறார். அவருடைய தேவியான காளி பேய்ச்சியாக உடனாடுகிறாள்.

## பிசாசுமோசன தீர்த்தம்

தருமங்களைச் செய்பவர்களுக்கு இடையூறு செய்பவர்களும் அதை அழிப்பவர்களும் சிவஅபராதமான காரியங்களைச் செய்பவர்களும்பேயாகித் திரிவர். அச்சூழுட்டும் அந்த வடிவுடன் அலைந்து துன்புற்று வாடி வருந்துவர். அவர்கள் புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய புனிதர்கள் உதறிய தீர்த்தத் துளிகள் தம்மீது பட அவர்கள் புனிதம் அடைகின்றனர். இத்தகைய பல வரலாறுகள் தல புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இப்படி புனிதமளித்த தீர்த்தங்கள் பிசாசு மோசன தீர்த்தங்கள் என்றழைக்கப்படுகின்றன.

காசியில் பிசாசு மோசன தீர்த்தம் உள்ளது. காசிக் கண்டத்தில் இதன் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

கோதாவரிக் கரையில் பிரதிஷ்டானம் என்ற நகரில் பிசாசு ஒன்று இருந்தது. அது மெலிந்து துன்புற்றுப் பசியாலும் தாகத்தாலும் வருந்திச் சோர்ந்து கிடந்தது. பணத்தாசை பிடித்த ஓர் அந்தணனின் உடலில் அது புகுந்து கொண்டு காசி நகரின் எல்லைக்கு வந்துவிட்டது.

அந்த அந்தணன் காசியில் உள்ளே நுழைந்த போது அவனுடைய பாவங்கள் வெளியேறிய தால், அந்தப் பேயும் வெளியேற வேண்டியதாயிற்றுக். காசியைச் சுற்றியுள்ள காடுகளில் அது திரிந்து கொண்டிருந்தது. ஒரு சமயம் ஒருவர் பஞ்சாட்சர ஜபம் செய்வதைக் கேட்டு அதற்கு சிறிது புண் ணியம் உண்டாயிற்று. அதையே உச்சரித்துக் கொண்டே காசி நகருக்குள் நுழைந்து விட்டது.

ஒரு முனிவர் அதைக் கண்டார். அது அவரிடம் சரணடைந்தது. அவர் சுடலைச் சாம்பலையே விபூதி யாக மந்திரித்து அதற்கு இட்டு விமலோதகம் என்ற தீர்த்தத்தில் மூழ்கும்படிச் செய்தார். மூழ்கிய உடனேயே அதன் வடிவம் நீங்கி தேவனாகியது. அன்று முதல் அது பிசாசு மோசன தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. இதற்கு சர்வ பாபநாசனம் என்ற பெயரும் வழங்குகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பேய்கள் கொண்டாடும் திருவாலங்காடு

பேய் என்றதும் சைவர்களுக்குத் திருவாலங்காடு நினைவுக்கு வரும். அதன் சரித்திரத்தில் இரண்டு பேய்களைப் பற்றிய வரலாறுகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. இதில் முதற்பேய் காரைக்கால் அம்மையார் ஆவார். இவர் தாம் அருளிய மூத்த திருப்பதிகத்தில் தன்னைக் காரைக்கால் பேய் என்று அழைத்துக் கொள்கிறார். அவர் அருளிய மூத்த திருப்பதிகங்களும் திருவாலங்காட்டில் உள்ள பேய்களின் உறைவிடமான முதுகாட்டை(சுடுகாட்டை)யும் அதில் மகிழ்ந்து நடனமாடும் பெருமானையும் போற்றுவதாகவே அமைந்துள்ளன.

இரண்டாவது பேய் வரலாறு இங்கு வாழ்ந்த வேளாளர் பெருமக்களை ஒரு பெண் பேய் வஞ்சப்படுத்திப் பழிவாங்கி அவர்களை அழித்ததைக் குறிக்கிறது. அந்தப் பெண்பேயே பின்னாளில் சாந்தநிலை எய்தி இறையருள் பெற்று இயக்கியம்மன் என்ற பெயரில் தென் தமிழ்நாட்டில் குடிகொண்டு அருள் பாலித்து வருகிறாள்.

இந்த வரலாறு திருஞானசம்பந்தப் பெருமானால்,... மூனை நட்பாய் வஞ்சப் படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு அஞ்சும்பழையனூர் என்று குறிக்கப்பட்டுள் ளது.

மேலும் பெருமான் திருவாலங்காட்டில் பேய்களோடு ஆடுவதை, காடும் சுடலையும் கைக்கொண்டு எல்லி கணப் பேயோடு ஆடும்... ஆலங்காடன்என்று குறித்துள்ளார்.இந்தச் செய்திகளைத் தொடர்ந்து அம்மையார் பாடும் வாலங்காட்டினைப் பற்றிச் சுருக்கமாகக் காணலாம் சரிந்த மார்பகங் களுடன் நரம்புகள் எழுந்து, கண்கள் குழி விழுந்து, பற்கள் துருத்திக் கொண்டு, வயிறு ஒட்டிப்போய், நீண்டு ஒல்லியான கைகளையும் கால்களையும் கொண்ட தம் வடிவத்தை இங்கே அம்மையார் காட்டுகிறார். அம்மை பாடும் அந்தத் திருவாலங்காட்டில் சடைகள் எட்டுத் திசைகளிலும் அலம்ப, உடல் குளிர்ச்சியாக இருக்கும்படி அனல் இடையே பெருமான் ஆடுகிறான். அக்காட்டில் உள்ள பேய்களை அம்மையார் கீழ்வருமாறு கூறுகின்றார்.

ஒரு பேய் கள்ளி மரத்தின் கட்டைகளை எடுத்து எரித்து மையாக்கி அதை இட்டுக் கொண்டு விரைந்து நகைத்து பயந்து நரிகளைக் கண்டு துள்ளிப் பிணத்தைச் சுடும் நெருப்பில் விழுந்து கோபித்து அதை அவிக்க புழுதியை அள்ளி வீசுகிறதாம். அத்தகைய சுடுகாட்டிடையே பெருமான் ஆடுகின்றான்.

வாகை மரம் பரந்து நிற்கிறது. அதன் முற்றிய காய்கள் காற்றின் அசைவால் ஓசை எழுப்புகின்றன. நடு இரவில் கோட்டான், ஆண்ட லைப் பறவைகள் பாடுகின்றன. ஆந்தை மரக் கிளைமேல் துள்ளிக் குதித்து ஓடுகிறது. ஈகைக் கொடிகள் படர்ந்திருக்கும் அடர்ந்த கள்ளி மரங்களின் நிழலில் பிணங்கள் சுடப்பட்டு எரிந்து கொண்டுள்ளன. அத்தகைய காட்டில் பெருமான் உள்ளமும் உடலும் குளிர நடனமாடிக் கொண்டிருக்கின்றான்.

ஆழமாக வெட்டப்பட்ட பிணமிடும் குழியில் இடப்பட்ட சோற்றை எடுத்துச் சிறு நரிகள் தின்ன, அதை முன்னமேயே நாங்கள் பார்க்கவில்லையே என்று கோபம் கொண்ட பேய்கள் பிணங்களின் கைகளை ஒடித்து அவைகளை ஒட்டுகின்றன.

பேய்கள் தன் குழந்தைப் பேய்களுக்கு நெய்ப்பசை(கொழுப்பு) நிரம்பிய மாமிசத்தை ஊட்டித் தலையோடுகளால் ஆன மாலைகளை அணிவித்துக் காளி என்ற பெயர் சூட்டிச் சீராட்டி வளர்த்து, புழுதி துடைத்து, தன் முலைப்பால் கொடுத்து வெளியே சென்றன. நெடுநேரம் அவை திரும்பி வராததால் குழந்தைப் பேய்கள் அலறி அழுது அடங்கி உறங்கி விட்டன.

தட்டையான அடிகளையும் நீண்ட நகங்களையும் பருந்து போன்ற கூரிய நகம் கொண்ட கால்களையும் உடைய பேய்கள், பருந்து, கோட்டான், பகண்டை(கௌதாரி), ஆந்தை முதலியன சூழ்ந்திருக்க, குறுநரிகளுடன் தெய்வமேறி ஆடுவதுபோல் ஆடி பிணங்களைப் பிய்த்து எறிந்து பிணங்கள் புரட்டித் தள்ளுகின்றன.

சுழல்கின்ற, நெருப்பு வீசும் கண்களை உடைய கொள்ளிவாய்ப் பேய்கள் சூழ்ந்து, துணங்கை என்று கூத்தை ஆடி ஓடி, நெருப்புள் எரிந்து கொண்டிருக்கும் பிணங்களைப் பிய்த்துத் தின்று ஆடுகின்றன.

" பகண்டைப் பாட கொள்ளிகள் எரிந்து ஒளிவீசபெருங்குரலிட்டு பேய்கள் பாட நரி ஊளையிட்ட யாழ் அமைப்ப பெருமான் ஆடும் அற்புதக் கோலத்தைசெடித்தலை காரைக்கால் பேயார் ' என்று தம்மை அழைத்துக் கொண்ட காரைக்கால் அம்மையார் கண்டு காட்டியதுபோல் யாரும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## தேவாரத்துள் பேய் பற்றிய செய்திகள்

தேவாரத்துள் பல இடங்களில் இறைவன் ஆடும்பொழுது பேய்களும் மகிழ்ந்தாடுவது குறிக்கப்பட்டுள்ளது. பேய், கழுது என்று பல வகையான பேய்கள் பெருமான் ஆடும்போது அவை பெருங் குரலெடுத்துப் பாடுகின்றன. மகிழ்ச்சியால் ஆடுகின்றன என்பதை, தேவாரம்,

பேய்கள் பலபாட நடமாடும் (திருவையாறு) என்றும்பேயாயின பாட பெரு நடமாடிய பெருமான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. பெருமான் ஆட்டத்தைக் கண்டு பேய்கள் மகிழ்ச்சியால் கைகொட்டி சிரித்து தாமும் ஆடுகின்றன பாரிடம் பாணி செய்யப் பாடலாடம்( திருஒற்றியூர்) குறட் பாரிடம் போற்றிக் குனித் தாட (திருப்புகலூர்) என்றும் நாவிரி கூந்தனற் பேய்கள் நகை செய்ய (கடம்பூர்) என்றும்,

பேய்கள் பிணம் எரியும் கொள்ளிகளை விளக்காக ஏந்துகின்றனஎன்பதை பேயுயர் கொள்ளி கைவிளக்காக என்றும்,பேய்கள் மகிழ்ந்து கைதொழுது வாழ்த்துவது கழுதொடு பாரிடம் கைதொழு தேத்த என்றும், பேய்க்கணம் சூழ ஆடும்மெம் அடிகள் என்றும், பல்கணப் பேய்கள் அவை சூழ மகிழ்ந்தாடும் பிரான் என்றும், மொய்த்தன பேய்கள் முழக்க முதுகாட்டினில் ஆடும் பிரான் என்றும் தேவாரத்துள் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.திருஅச்சிறுபாக்கம் தேவாரத்துள் பெருமான் வெம்மை மிகுந்த சுடலையில், அதையே அரங்கமாகக் கொண்டு கழுது, பாரிடம் பேய்க் கணங்கள் சூழ்ந்து கைதொழுது ஏத்த அனவரத தாண்டவம் ஆடுகிறார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

## மயானங்கள்

உலகில் வாழ்ந்து முடிந்தவர்களின் நல்லுடல்கள் புதைக்கப்பட்டோ எரித்தோ விடப்படுகின்றன. அந்த இடங்கள் இடுகாடு, சுடுகாடு, சுடலை, ஈமக்காடு எனப் பலபெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஆசைகள் நிறைவேறாது தற்கொலை செய்துகொண்டு இறந்து போனவர்களின் உயிர்கள் பேய்நிலை அடைந்து அங்கு வசிக்கின்றன.

மயானங்கள் பேய்களின் வீடாகும்.. பிணம் வேகும் காட்டில் சிவ பெருமான் உகந்து நடனமாடி மகிழ்கிறான். சுடுகாட்டுப் பிணங்களின் சாம்பலை அணிந்தும், எலும்புகளை மாலையாக அணிந்தும் நள்ளிருளில் நடமாடுகிறான் என்று இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. சிவபெருமானின் நள்ளிருட் கூத்து தரிசனம் கிடைக்கப்பெற்ற தலங்கள் மயானங்கள் என்று போற்றப்பட்டன. இவ்விடத்தில் வழிபடும் அடியார் கள் தம்மைப் பேய்க் கணத்தினர் என்று கூறிக்கொண்டனர். இவர்களில் ஒருவரே அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காரைக் காலம்மையார்.

பின்னாளில் இவ்வழிவந்தவர்கள் புதிய கோயில்களை உருவாக்கியபோது அவற்றிற்கு மயானம் என்று பெயரிட்டனர். கச்சி மயானம், காழி மயானம், வீழி மயானம், கடவூர் மயானம் என்பன இவ்வாறு உருவானவையாகும். இவ்விடங்களில் பிணங்கள் சுடப்படவில்லை என்றாலும், இச்சமயவாதிகள் மயானம் என்ற பெயரைச் சூட்டினர். காசிக்கு மகாஸ்மசானம் என்பது பெயர். திருவெண்காடு பிரம்ம மயான மென்று போற்றப்படுகிறது.

திரு ஒற்றியூர்க் கல்வெட்டு ஒன்றில், மயானமும் மடமும் உடைய பண்டிதர் என்று குறிக்கப்பட்டுள்ளது.இதில் மயானம் என்பது ஆலயத் தின் பெயராகும்.

திருக்கச்சி மயானமும், நாலுார் மயானமும் கடவூர் மயானமும் பாடல் பெற்ற தலங்களாகும். பல தேவாரப் பாடல்களில் பெருமான் சுடுகாட்டில் நடமாடுவது சிறப்பாக விவரிக்கப் பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருப்பதிகத்திலேயே' காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன்' என்று அருளிச் செய்திருப்பதை இங்கே நினைவு கூரலாம்..

நாலூர்க் கல்வெட்டுக்களில் இறைவன் மயானே சுவரர் என்றழைக்கப்படுகிறார். நாலூர் என்கிற நாலூர் மயானம் ஞானபரமேசுவரர் ஆலயக் கல்வெட்டில் பெருமான் மயானத்துப் பரமசுவாமி என்றும் திருக்கடவூர் மயானத்துக் கல்வெட்டுக்களில் மயானத்துப் பரமசாமி என்றும் குறிக்கப்பட்டுள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பேய் வடிவு வேண்டிப்பெற்ற பெருந்தவச் செல்வி காரைக்காலம்மையார்

வங்கக் கடலோரத்தில் உள்ள சோழநாட்டுப் பெரு நகரங்களில் ஒன்று காரைக்கால். இங்கு தனதத்தன் என்ற பெருந்தன வணிகன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவனுக்கு நெடு நாட்கள் புத்திரப் பேறு இல்லை. இறை யருளால் அழகிய பெண்குழந்தை பிறந்தது. அது நல்ல சிவபக்தியுடன் வளர்ந்தது. அதற்குப் புனிதவதியார் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். காலங்கள் வளர்ந்தன. அக்குழந்தை மணப்பருவம் அடைந்தாள்.

பரமதத்தன் என்ற பெரிய வாணிகனுக்கு அவளை மணமுடித்து வைத்தனர்.அவள் சிவபக்தியோடும், அன்பு டனும் கணவன் மனம் அறிந்தும் இல்லறம் நடத்தி வந்தாள்.

ஒரு சமயம் பரமதத்தனிடம் பணி நிமித்தமாக வந்த வர்கள் இரண்டு மாம்பழங்களை அவருக்குத் தந்தனர். அவன் அவற்றை ஏவலரிடம் கொடுத்து வீட்டில் அளிக் கும் படி ஏவினான்.ஏவலர்கொடுத்த பழங்களைப் புனிதவதி யார் பெற்றுச் சமையல் அறையில் வைத்திருந்தார்.

அன்று முற்பகலில் ஒரு சிவனடியார் அவர்களு டைய இல்லத்திற்கு வந்தார். “அம்மையே நான் மிகுந்த பசியுடன் களைத்திருக்கிறேன். எனக்குஉணவை இப்போ தே தருக” என்றார். அவ்வேளையில் சோறு மட்டுமே ஆகியிருந்தது.துணைப்பதார்த்தங்கள்எதுவும் சமைக்கப் படவில்லை.

வந்தவர் மிகுந்த பசியோடிருந்ததால், அம்மையார் இலையில் சோறிட்டுக் கணவன் அனுப்பிய மாம்பழங் களில் ஒன்றை இட்டார். மிகுந்த மகிழ்ச்சியுடன் அடியவர் உண்டு பசியாறி விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

நண்பகலில் மதிய உணவருந்த பரமதத்தன் வீட்டுக்கு வந்தான்.உணவு படைத்த அம்மையார் எஞ்சிய மாம்பழத்தை அவனுக்குப் பரிமாறினார். அவன் ‘இந்தப் பழம் அதிக சுவை உடையதாக இருக்கிறது. இன்னொன் றைம் இடு’ என்றான்.

அம்மையார் திகைத்து, உள்ளே சென்று இறைவ னிடம் இடர் நீக்குமாறுமனதுள் முறையிட்டார். சிவனரு ளால் அவர் கையில் மாம்பழம் ஒன்று தோன்றியது. அம்மையார் மகிழ்வுடன் அதைக் கணவனிடம் அளித்தார்.

அதை உண்டு மகிழ்ந்த அவன், அன்பே நான் முதலில் உண்ட கனியின் சுவையைவிட இது அதிக சுவை உள்ளதாக இருக்கிறது. மேலும், தெய்வீக மண மும் சுவையும் கொண்டு இனிக்கிறது. இதன் காரணம் விளங்கவில்லை என்றான்.



அம்மையார் நடந்ததை ஒளிக்காமல் இது சிவன ருளால் கிடைத்தது என்றார். தனதத்தன் நம்பாமல், அவ் வாறானால் இன்னொன்றைப் பெற்றுத் தருக என்றான். அம்மையார் உள்ளே சென்று மீண்டும் பெருமானிடம் முறையிட்டார்.முன்போலவே அவர் கையில் மாங்கனி தோன்றியது. அம்மையார் அதைக் கணவனிடம் அளித்தார்.

அதை வாங்கி அதிசயத்துடன் பார்த்துக் கொண்டி ருந்த போதே அது மறைந்து விட்டது. அவன் உள்ளத் தில் அச்சம் தோன்றியது. தன் மனைவி தெய்வத் தன்மை உடையவள் என்று உணர்ந்தான். தெய்வத் தன்மை பொருந்தியவரோடு இல்வாழ்க்கை நடத்த அவன் மனம் இடம் தரவில்லை. அதை வெளிக் காட்ட வும் முடியவில்லை.

பின் ஒரு நாள் மனைவியிடமும் சுற்றத்தாரிடமும் வெளிநாடு சென்று வியாபாரம் செய்யப் போவதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு கலமேறினான். அயல் நாடு சென்று பெரும் பொருளீட்டினான். திரும்பியவன் காரைக்காலுக்கு வராமல் பாண்டியநாட்டிற்குச் சென்றான். அங்கு ஒரு பெண்ணை மணந்து கொண்டு வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒருகுழந்தை பிறந்தது. அம்மகவிற்குப் புனிதவதி என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கணவனின் வரவை எதிர்பார்த்துப் புனிதவதியார் பல ஆண்டுகள் காத்திருந்தார். அவருடைய சுற்றத்தினர் பல இடங்களில் விசாரித்து அவன் இருக்குமிடத்தை அறிந்தனர். புனிதவதியாரைப் பல்லக்கில் ஏற்றி நிறைந்த செல்வத்துடன் அவனிருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களின் வரவைக் கேள்வியுற்ற அவன் தன் மனைவி மகளுடன் நகரத்து எல்லைக்கு வந்தான். புனிதவதியார் இருந்த பல்லக்கை மும்முறை வலம் வந்து வீழ்ந்து வணங்கினான். அதைக் கண்டு எல்லோரும் வியப்படைந்து அதன் காரணத்தைக் கேட்டனர்.

அவன் நடந்ததைக் கூறினான். தெய்வத்திற்கு இணையான அவருடன் இல்லறம் நடத்துவது நேர்மை அற்ற செயல். அவரை எனது குல தெய்வமாகக் கொண்டு விட்டேன். எனவே, என் மகளுக்கு அவருடைய பெயரைச் சூட்டியிருக்கிறேன் என்று உரைத்தான்.

அம்மையார் எல்லோருக்கும் விடை கொடுத்தார். துறவு வாழ்வை மேற்கொண்டார். இளமையும் அழகும் இனி எனக்குத் தேவையில்லை. எனது தெய்வீக வாழ்க்கைக்கு இவை இடையூறு செய்யும். பெருமானே, 'யாவரும் பயந்து ஒதுங்கும் பேய் வடிவைத் தந்து எம்மை ஆட்கொள்க' என்று வேண்டிக் கொண்டார்.

இமைப்பளவில் அவருடைய அழகு மறைந்தது. குழி விழுந்த கண்களும் எலும்பும் தோலுமான உடலும் உடைய பேயாக உருமாறினார்.

காரைக்கால் அம்மையார் சிவபெருமானைப் பேய்க் கணங்களின் தலைவனாகக் கண்டார். அதனால் அவனுடைய கணங்களில் ஒன்றான பேயாகவே இருக்க விரும்பினார். அவராகவே வேண்டி அவ்வடிவத்தைப் பெற்றார் என்பதைச் சேக்கிழார்,' வானமும் மண்ணுமெல்லாம் வணங்கும் பெருமைசேர் பேய் வடிவம் வேண்டிப் பெற்றனள்' என்று கூறுகின்றார்.

தன்பேய் வடிவத்தை விளக்கி அம்மையார், ' ' கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண், வெண்பற்குழி வயிற்றுப் பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு பாடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்' என்று திருவாலங்காட்டு மூத்தப் பதிகத்தில் குறித்துள்ளார்.

விண்ணிடை தேவர்கள் துந்துபி முதலான வாத்தியங்களை இசைத்துப் பூமாரி பொழிந்தனர். பின் அம்மையார் சிவத் தலங்களில் சிவபிரானைக் கண்டு போற்றிக் கயிலையைக் காணவிழைந்தார். கயிலை மலையை அடைந்தார். அதைக் கால்களால் மிதிப்பது என்று கைகளை ஊன்றியவாறு மலை ஏறி,. சிவசந்நிதியை அடைந்தார்.அவரைக் கண்டு உமாதேவியார் இவர் யார் எனக்கேட்டாள்.சிவபெருமான் எழுந்தோடி வந்து அம்மை யே என்று ஆரத் தழுவிக் கொண்டார்.

அம்மையே நீ வேண்டும் வரம் யாது என்றார்?

அப்பனே! மீண்டும் பிறவியை எடுக்கக்கூடாது. அப்படிப் பிறக்க நேர்ந்தால் உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும் என்று கேட்டார். அப்படியே ஆகட்டும் என்றான் சிவபெருமான்.

" ஐயனே! நீ ஆடும்அடிக்கீழ் என்றும் இருக்க வரம் தர வேண்டும்" என்றார். அன்னையே நீ திருவாலங்காடு சென்று நமது சபையில் திருவடிக் கீழ் இருப்பாய் என்றார். அவரிடம் விடைபெற்றுக் கொண்ட அன்னை, திருவாலங்காட்டை அடைந்தாள். அங்கு உட்செல்வதற்கு முன்பாக என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். ஆலங்காட்டில் பெருமான் அண்டமுற நிமிர்ந்தாடும் ஆனந்தக் கூத்தைக் கண்டுகளித்து என்ற பதிகத்தை அருளிச் செய்தார்.

அவை நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் பதிகங்களுக்கும் முன்பாகத் தோன்றியதாலின், மூத்த திருப்பதிகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அம்மையார் அரனடிக்கீழ் ஆராத இன்ப வெள்ளத்தில் மகிழ்ந்தவாறு வீற்றிருக்கின்றார்.

## திருவண்ணாமலை பேய்க் கோபுரம்

முக்தி தரும் தலமான திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் மலையை நோக்கி மேற்கே அமைந்துள்ள ராஜகோபுரம் பேய்க்கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. மேலைக் கோபுரம் என்ற சொல்லே பேய்க் கோபுரம் ஆனதென்பர். அது பொருத்தமாகத் தோன்றவில்லை எவ்வளவோ ஆலயங்களில் மேற்குக் கோபுரம் அதே பெயரில் இருக்க இங்கு மட்டும் அது எப்படி மருவும்?

அகால மரணமடைந்து பேய்களான உயிர்கள் மேன்மை பெற முன்னாளில் இக்கோபுரத்தடியில் சிறப்பு வழிபாடுகளும், இறந்தவர்களுக்காக மேலே மோட்ச தீபங்களும் ஏற்றப்பட்டன. அதையொட்டியே இது பேய்க் கோபுரம் எனப்பட்டது. இந்தக் கோபுரத்தின் காற்றுப்பட்டால் பேய்களின் நிலை மாறி சாந்தமாகும் என்பது இறை நம்பிக்கையாகும்.

திருவிடைமருதூர் கோபுரத்தில் பிரம்மஹத்தியும், மதுரையில் பாண்டி முனீசுவரரும் இருக்கக் காணலாம். பாண்டி முனீசுவரருக்குரிய மாலையைக் கோபுரத்திற்கு நிலை மாலையாக அணிவிப்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# வேதாளர்கள்

வேதாளர்கள் சிறந்த தவமும் ஒழுக்கமும் உடையவர்கள். மறைமுகமாக தீய நடவடிக் கைகளில் ஈடுபட்டால் மறுபிறப்பில் வேதாளமாகப் பிறக்கிறார்கள். அவர்கள் வேதத்தையும், தர்மத்தையும் அறிந்தவர்கள் என்றாலும், பிறருக்கு அடிமையாகி ஏவல் தொழில் செய்கின்றனர். வேதாளங்கள் வாழும் உலகம் வேதாள உலகம் என்று அழைக் கப்படுகிறது. இவர்கள் ஆந்தை போன்ற முகம் உடையவர்கள்.

அதிபலமும் நுண்ணறிவும் உடையவர்க ளாக இருந்தும் இராட்சதர்களைப் போல் ரத்தவெறி கொண்டவர்களாக வேதாளர்கள் உள்ளனர். பைரவர் வேதாளப் படையை உடையவர். அவருடைய பஞ்சாவரணத்தில் பத்து வேதாளர்கள் பூசிக்கப் படுகின்றனர். இவர்கள் பத்துத் திசைகளில் இருந்தும் காவல் புரிகின்றனர். (பார்க்க ஸ்ரீபைரவர் 60வது மலர்)

காசிக்கண்டத்தில் பைரவரின் சேனாதி பதிகளான அறுபத்து நான்கு வேதாளர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 24 பேர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த இருபத்து நான்கு வேதாளர்களுக்கும் செய்யூர் முருகன் ஆலயத் தில் மதிலில் மாடங்கள் அமைந்து கல்திரு மேனி கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர்கள் முறையே 1. வித்யு ஜிஹ்வன், 2. லலஜ்ஜிஹ்வன், 3. க்ரூராஸ்யன், 4. க்ரூரலோசனன், 5. உக்ரன், 6. விகடதம்ஷ்ட் ரன், 7. வக்ரமுகன், 8. வக்ரநாஸிகன், 9. ஜம்பகன், 10ஜ்ரும்பணமுகன், 11 ஜ்வாலா நேத்ரன், 12. வ்ருகோதரன், 13. கர்த்தநேத்ரன், 14. மகாநேத்ரன் 15. துச்சநேரத்ரன், 16. அந்தர மண்டலன், 17. ஜ்வலத்கேசன், 18. கம்புஸிரா, 19. ஹர்வக்ரீவன் 20. மஹாஹனு, 21. மஹா நாசா, 22. லம்பகர்ணா, 23. கர்ணப்ரவர்ணா, 24. அநஸா என்பவையாகும்.

மேலும், காசியில் அக்னி சித்தன் என்ற வேதாளம் இருப்பதாகவும், அதை செவ்வாய்க் கிழமை வழிபட்டால் விரும்பியதை அடையலாம் என்று காசிக் கண்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் சந்நிதிக்கு அருகில் வேதாள குண்டம் என்ற தீர்த்தம் உள்ளது. அதில் மூழ்கி வேதாளத்தை வழிபட்டால் சகல சித்திகளையும் பெறலாம் என்று கூறப்படுகிறது.

பெருநகர் பிரம்மபுரீசுவரர் ஆலயத்தில் சுவாமி சந்நிதிக்கு நேராக (கொடிமர பலி பீடத் தை அடுத்து) அமைந்த தூணிலும் அம்மன் சந்நிதிக்கு நேராக ( சிங்கம் பலிபீடத்திற்கு முன்புறமும்) அமைந்த தூணிலும் வேதாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆந்தை முகமும் இரண்டு கைகளும் உடையவை. கைகளில் கபால மும் தண்டமும் ஏந்தியுள்ளன. இத்தூண் களின் உச்சியில் விளக்கேற்றும் வழக்கம் இருந்துள்ளது.

சிவபெருமான் அகோரமூர்த்தியாக வெளிப்படும்போது வேதாளத்தை ஆயுதமாக ஏந்துகிறார். அதை ஏவி பகைவர்களை அழிக் கிறார். திருக்கழுக்குன்றம், திருவெண்காடு முதலிய தலங்களில் உள்ள அகோரமூர்த்தியின் வலது கரத்தில் வேதாளத்தைக் காண்கிறோம்.

திருவிடைமருதூரில் வேதாளம் வழிபட் டுப் பேறுபெற்றுள்ளது. வேதாளத்திற்குப் பெருமான் அருள் செய்வது தைப்பூசப் பெருந் திருவிழாவின் ஆறாம்நாள் ஐதீக விழா வாகக் கொண்டாடப்படுகிறது. அப்போது வேதாளம் போல் வேடம் புனைந்தவர் கொடிமரத்திற்கு அருகில் வந்து இறைவனை ஆடி மகிழ்வித்து அருள்பெறுவது நடத்தப்படுகிறது.

திருநெல்வேலியில் அந்நகரின் காவல் தெய்வமான பிட்டாபுரத்தி அம்மன் ஆலயத் தில் அம்பிகைக்கு நேர் எதிரில் வேதாளம்(வாக னமாக) அமைக்கப்பட்டுள்ளது.(தென்மாவட்ட கிராமிய தெய்வ ஆலயங்கள் பலவற்றில் வேதா ளங்கள் உள்ளன).

முருகப்பெருமான் வேதாள கணங்களால் தொழப்படுகிறான் என்பதை அருணகிரிநாதர் வேதாள கணம்புகழ் வேலவனே என்று கந்தர் அநுபூதியில் கூறுகிறார். அவற்றின் இயல்பை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூதவேதாள வகுப்பில் விவரித்துள்ளார். வேதா ளப் படையைக் கொண்டிருப்பதால் அம்பிகை வேதாளி என்று அழைக்கப்படுகிறாள். அம்பி கைக்கு அமைக்கப்படும் யாகசாலைகளில் பத்து ஆயுதங்களில் ஒன்றாக வேதாளமும் வைத்துப் பூசிக்கப்படுகிறது.

❀அம்பிகை வேதாளத்தைக் கொடியாகக் கொண்டிருக்கின்றாள் என்று புராணங்கள் கூறுகின்றன. காளி வேதாளக் கொடியைக் கொண்டவள்.

❀திருவிடை மருதூரிலும் காசியிலும் வேதாள வரதம் என்னும் பெயரில் தீர்த்தங்கள் இருந்ததைப் புராணங்களால் அறிகிறோம். இவற்றில் மூழ்கிப் பெருமானை வழிபட்டால் மனக் குழப்பம், தடுமாறுதல், . தவறாக முடிவெடுத்து துன்பப்படுதல் முதலியவற்றி லிருந்து விடுபட்டு நன்மை பெறலாம்.

❀வேதாளங்கள் சுடுகாட்டிலுள்ள முருக்க மரங்களில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் என்று நாட்டுப்புறச் செவி வழிக் கதைகள் கூறுகின்றன. வேதாளம் முருக்க மரத்தில் ஏறியது போல் என்ற பழமொழி வழங் குகிறது. வேதாளங்கள் பிடித்த பிடியை விடாதவை.

## சிவசந்நிதியில் பூதங்களும் - பேய்களும்

சிவபெருமானின் சந்நிதியில் எல்லோரும் சிறப்பிக்கப்படுகின்றனர். வானவர்களாகிய தேவர் களுக்கு அருள்புரிந்ததைப் போலவே அவர்களின் எதிரிகளான (தானவர்) அசுரர்களுக்கும் பெருமான் அருள்புரிந்து அவர்களையும் தனக்குப் பணியாளர்களாக வைத்துக் கொண்டுள்ளார்.

அமிர்த மயமான திருமேனியில் கொடிய நஞ்சையும் கொண்டுள்ளார். மணக்கும் மல்லிகையும், அழகிய கொன்றை மலர்களையும் சூடுவது போலவே விஷமுள்ளதும், கடுமணமுள்ளதுமான ஊமத்தை மலர்களையும் சூடுகின்றார். பொன்னாபரணங்களைப் பூண்ட திருமார்பில் எலும்பையும் பாம்பையும் அணிந்துள்ளார், சடையில் பாம்பையும் அதற்குப் பகையான சந்திரனையும் சூடியுள்ளார். இப்படி அனேக நேர் எதிர் குணங்களைக் கொண்ட வை கள் சிவசந்நிதியில் ஒன்றாக இருக்கக் காண்கிறோம்.

இப்படியான நேர்எதிர் குணங்களைக் கொண்டவைகளே பேயும் பூதங்களும் என்றாலும், இவை இரண்டும் சிவசந்நிதியை அலங்கரிப்பதுடன் அவருக்குப் பணிபுரிகின்றன. அவர் நடனமாடும் போதுபேய்களும் பூதங்களும் பாடுவதுடன் பலவிதமான இசைக் கருவிகளை இசைக்கின்றன. திருமுறைகளில் இரண்டையும் சேர்த்தே பாடியுள்ளனர். கழுதொடுபாரிடம் கை தொழுதேத்த (கழுது- பேய் ; பாரிடம்- பூதம்) எனவரும் தொடர்களால் இதை அறியலாம். பின்வரும் பட்டியலில் பேய் பூதங்கள் ஆகியவற்றின் எதிரெதிர் குணங்களைக் காணலாம். பேய்கள் பட்டினியால் வருந்தி அழுபவை. பூதங்கள் மலைபோல் உணவை உண்டு மகிழ்பவை ❀ பேய்கள் வறண்ட தோலையும் எலும்புகள் துருத்திக்கொண்டிருக்கும் மெல்லிய நெடிய உடலை உடையவை. பூதங்கள் அகன்ற மார்பையும் பருத்த உடலையும் குள்ளமான தோற்றமும் கொண்டவை. ❀ பேய்கள் உட்குழிந்த கண்களைக் கொண்டவை. பூதங்களுக்கு அகன்ற ஆந்தை போன்ற கண்கள். ❀ பேய்கள் எப்போதும் ஏதாவது கவலையில் மூழ்கி முணுமுணுத்துக் கொண்டிருக்கும். பூதங்கள் கவலையற்று ஆடிப்பாடி மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும்.

**பொன்மலைவல்லி உடனாய இராட்சதர்க்கருள் இராவணன் அருளால் எல்லோரும் எல்லாம் பெற்று இனிது வாழ்க.!**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கேடில் ஞானம் அளிக்கும் மாமுனி போற்றி !
ஏழ்இருடிகளுக்கு இறைவா போற்றி போற்றி!!



# ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர்

உலக மக்களின் நல்வாழ்விற்கு வேண்டியவற்றைத் தமது தவத்தாலும் ஞானத்தாலும் கண்டறிந்து வெளிப்படுத்தியவர்கள் ரிஷிகள். சமய வழிபாட்டில் இவர்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளனர். ரிஷி என்பதற்கு உருவாக்குபவர், கண்டறிபவன், வழி நடத்துவோன் என்ற பொருள்கள் உண்டு. வேத மந்திரங்களைக் கூறும்போது அதைக் கண்டறிந்து வெளிப்படுத்திய ரிஷிகளும் நினைவு கூரப்படுகின்றனர்.

உலகம் தோன்றிய காலம்தொட்டு ஏ்ண்ணற்ற ரிஷிகள் மனிதகுல மேன்மைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி மக்களுக்குப் பயனாகுமாறு செய்துள்ளனர். மருத்துவம், விஞ்ஞானம், பாதுகாப்பு, பயிர்த்தொழில் எனப் பலதுறைகளிலும் ரிஷிகள் அருஞ்சாதனை செய்துள்ளனர். அனைத்து ரிஷிகளையும் வணங்கி வழிபடுவது வழக்கம். சிறந்த பணிகளைத் தொடங்குமுன் ரிஷிகளை வழிபடுவது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கம். ஆகம நூல்கள் பஞ்சரிஷிகள் வணக்கத்தையும் அவர்க்கு நடத்த வேண்டிய பூஜை முறைகளையும் கூறுகின்றன. புராணங்களும் வேதங்களும் ஏழு ரிஷிகளைச் சிறப்புடன் பேசுகின்றன. சிவபெருமான் இமயமன்னனிடம் உமையவளைத் தமக்குத் திருமணம் பேச சப்தரிஷிகளை அனுப்பியதிலிருந்தே இவர்களின் பெருமையை உணரலாம்.

நாம் ரிஷிகள் எல்லோருக்கும் பொதுவான வணக்கத்தைச் சொல்லி வழிபட்ட போதிலும்அவற்றுள் தலைசிறந்தவர்களாகக் கருதப்படும் ஏழு பேர்களைச் சிறப்புடன் போற்றுகின்றோம் அவர்களைஅந்த எண்ணிக்கையின் பெயரால் சப்தரிஷிகள் என்று அழைக்கின்றனர். அந்த ஏழு ரிஷிகளின் பெயராலும் அவர்களைப் போற்றுவதாகவும் சிவமஞ்சரியின் இந்த நாற்பத்து மூன்றாவது மலர் மலர்கிறது. இதன் பின்பகுதியில் குறிப்பிடத்தக்க ரிஷிகள் சிலர் சிவபூசை செய்து மேன்மை பெற்றது விளக்கப்பட்டுள்ளது.

ஒப்புயர்வற்ற ஆற்றல் படைத்த ரிஷிகளின் அருளினாலும், அவர்களுக்குத் தலைவனாகச் சித்தயோகேசுவரியுடன் வீற்றிருக்கும் ரிஷிபுரேசன் அருளினாலும் அன்பர்கள் சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ இறை யருளைப் பிரார்த்திக்கின்றோம்.

– சிவசுந்தரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நாற்பத்தெட்டும் ரிஷிகளும்

தமிழில் ஒவ்வொரு எண்ணுக்கும் ஒருவித தெய்வீகம் அல்லது அசுர சக்தி உள்ளது. ஏழு என்பது எண்ணிக்கையில்லாத நிலை யைக் குறிக்கும் எண்ணாக உள்ளது. ஆறு ஆற்றலையும் எட்டுச் செல்வங்களையும் குறிக்கும் எண்ணாகும். 14 சாத்திரங்களை யும் 12 ஒளியையும் குறிக்கின்றன. எனவே, சாத்திரங்களைப் பதினான்காகவும் ஒளி தரும் சூரியர்கள் பன்னிரண்டாகவும் ஒளிவடிவ மாகத் தோன்றி அருள்பாலித்த லிங்கங்களை பன்னிரண்டு ஜோதிர்லிங்கம் என்ற அடிப் படையிலும் வகுத்துள்ளனர். அவ்வகையில் கண்டு பிடிப்பாளர்கள், கவிதை எழுதுவோர் ஆகியோரை நாற்பத்தெட்டு என்ற எண்ணிக் கையால் குறித்தனர்.

ரிஷிகளை 48,000 பேர் என்று புராணங் கள் கூறுகின்றன. தாருகாவனத்து ரிஷிகள் 48,000 பேர் என்று வழுவூர்த் தலபுராணம் கூறுகிறது. இந்த ரிஷிகள் வழுவூரை அடுத்த தாருகாவனத்தில் சிவபெருமானால் ஆட் கொள்ளப்பட்டு மந்திர உபதேசம் பெற்றனர் என்று கூறுவர். இதை விளக்கும் நீண்ட ஓவியம் ஒன்று அக்கோயிலில் உள்ளது.

காஞ்சிபுரத்தில் 48,000 ரிஷிகள் கூடி வழிபட்ட லிங்கம் நாற்பத்தெண்ணாயிர ஈசர் என்னும் பெயரில் இருப்பதாகக் காஞ்சிப் புராணம் கூறுகிறது.

## –பல்வகை ரிஷிகள்–

ரிஷிகளில் பிரம்மரிஷி, சிவாத்மஜ ரிஷிகள் என இருவகை உள்ளனர். பிரம்ம ரிஷிகள் வேதங்களையும் மந்திரங்களையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்தவர்கள்.

சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட ரிஷிகள் அவரிடமிருந்து ஆகமங்களைப் பெற்றுச் சிவபூஜைகளையும் வாழ்வியல் உண்மைகளையும் உலகிற்கு அறிவித்த வர்கள். இரண்டு நிலைகளிலும் இவர்களுக் குப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள் ளன. இதனால் இவர்களை இனங் கண்டு தெளிவுபடுத்திக் கொள்வது மிகுந்த கடின மான காரியமாக உள்ளது.

ரிஷி என்ற பதம் வெளிப்படுத்துபவன் என்னும் பொருளைத் தருகிறது. பரமாகாச த்தில் ஒலி வடிவில் ஏராளமான மந்திரங் களும் அவற்றின் ஆற்றல்களும் மறைந்துள் ளன. அவற்றைத் தன் தனிப்பெரும் ஆற்ற லால் கண்டறிந்து வெளிப்படுத்தியவர்கள் ரிஷிகள். மந்திரங்களை ஓதும் போது அதைக் கண்டுபிடித்த ரிஷிகளும் நினைவு கூரப்படு கின்றனர்.

ஆதியில் பிரம்மன் தன் படைப்புத் தொழிலுக்கு உதவியாக அநேக ரிஷிகளைப் படைத்தான். அவர்களைப் பிரம்ம ரிஷிகள் எனப் புராணங்கள் அழைக்கின்றன.

பின்னாளில் பலர் தமது தவத்தால் பிரம்ம ரிஷிகளாயினர். இப்படிப்பட்டவர் களில் முதன்மை பெற்றவர்கள் காவ்யர், பிரகஸ்பதி, கச்யபர், சியவனர், உசத்தியர், வாமதேவர், அபாஸ்யர், கர்த்தமர் ஆகியோ ராவர். தவத்தால் பிரம்மரிஷியானவர்களின் விசுவாமித்திரர் உயர்ந்தவராகப் போற்றப் படுகிறார். சிலர் தமது மகிமையால் பிரம்ம ரிஷிகளாயினர்.சிலர் தமது சத்யமான வாழ் வால் மேன்மை பெற்று ரிஷிகளாயினர்.

வாசகர்களின் கவனத்திற்கு : அகத்தியர், வியாக்ரபாதர், பதஞ்சலி, ப்ருங்கி முதலான முதன்மை பெற்ற ரிஷிகளைப் பற்றிய செய்திகள் சிவமஞ்சரியில் ஆங்காங்கு இடம் பெற்றுள் ளன.ரிஷிகளின் பெருமைகள் விரிவாக விளக்க முடியாதவை.இயன்றவரை முதன்மைபெற்ற சிறு குறிப்புக்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சப்தரிஷிகள் தோற்றமும் சிவவழிபாடும்

உலகைப் படைக்கும் பிரம்மனுக்கு உதவியாக இருக்கத் தோன்றியவர்கள் சப்த ரிஷிகள். இவர்களைச் சப்தப் பிரம் மாக்கள் எனவும் கூறுவர். சப்தரிஷிகள் வாழ்வை நன்கு நடத்துவதற்கான உரிய வழிமுறைகளை மக்க ளுக்கு வகுத்து அளித்தனர். அந்தரத்துள் மறைந்து கிடக்கும் இரகசிய மந்திரங்களைக் கண்டுபிடித்து உலகிற்கு அளித்தவர்களாவர். இவர்கள் வழிவந்த ரிஷிகள் ஒவ்வொருவரும் மந்திரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஒவ் வொரு மந்திரத்திற்கும் உரியவராக ஒரு ரிஷி கருதப்படுகின்றார்.

உலகின் நீண்ட காலவெளியில் பதி னான்கு மன்வந்திரங்கள் நடக்கும். மன்வந் திரம் என்பது ஒரு மனு தோன்றி மக்களை நன்கு வழிநடத்தி ஆட்சிபுரியும் காலமாகும். இப்போது நடக்கும் காலவெளியை ஆள்பவர் வைவஸ்வதன் எனும் மனு ஆள்வார். அவர் பெயரால் இது வைவஸ்வத மன்வந்திரம் என்றழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு மன்வந்திரத்திலும் அப்போது படைப்புத் தொழில்புரியும் பிரம்மனுக்கு உதவியாகஏழு ரிஷிகள்அவனால் தோற்றுவிக் கப்படுவார்கள்.

அவ்வகையில் இந்த மன்வந்திரத்தில் தோன்றிய ரிஷிகள் 1.மரீசி, 2)ஆங்கீரசு, 3)புலஸ்தியர், 4)புலகன், 5)கிரது 6) அத் திரி 7) வசிட்டர்ஆகியோராவார். இவர்களை பிரம்ம ரிஷிகள் எனவும் அழைக்கின்றனர்.

இவர்கள் ஏழுபேரும் கர்த்தமன் என் னும் பிராஜபதியின் குமாரிகளை மணந்து தம் ரிஷிவம்சத்தை விருத்தி செய்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

இவர்கள் எழுவரும் சிறந்த சிவபக்தர் கள். ரிஷிகளில் மிகவுயர்ந்தவர்களாக விளங் கும் இவர்கள் சிவபெருமானுக்காக இமய மன்னனிடம் பார்வதியைப் பெண் கேட்கச் சென்றவர்கள் என்பதிலிருந்தே இவர்களது மேன்மையை உணரலாம். இவர்கள் காஞ்சீ புரம், காசி, இமயம் முதலிய தலங்களில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

அவை சப்தரிஷீசுவரங்கள், சப்தஸ்தானம், முதலான பெயர்களால் அழைக் கப் படுகின்றன. இவர்கள் தங்களுக்கென ஒரு நட்சத்திர மண்டலத்தை அமைத்து அதில் வாழ்ந்து வருகின்றனர். அது சப்தரிஷி மண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

இவர்களைப் பற்றிய சிறு குறிப்புக்களை இங்கு காணலாம்.

## மரீசி

பிரம்மனின் மூத்த குமாரனான மரீசியானவர் சம்பூதி என்பவளை மணந்தார். இவர்களுக்கு காசிபர் என்னும் மகனும், பூர்ணிமாசி என்னும் மகளும் தோன்றினர். காசிபர் தட்சப் பிரஜாதியின் பதின்மூன்று பெண்களை மணந்து கொண்டான். அவர்கள் மூலம் உலகிலுள்ள ஊர்வன, பறப்பன, விலங்குகள் முதலியவற்றையும், மனிதர், தேவர், ராட்சசர் முதலியோரைப் படைத்து உலகினை மேம்படுத்தினான் அவனால் மேன்மைப் படுத்தப்பட்டதால் பூமிக்குக் காசினி என்ற பெயரும் உண்டாயிற்று.

இவர் உலகில் உயிர்களை உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெற அமைத்து வழிபட்ட லிங்கத்திற்குக் காசிபேசுவரர் என்பது பெயராகும்.

இவர் மாயை என்பவளைக் கூடி சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் அஜமுகி ஆகியோரைப் பெற்றெடுத்தான். இவர்கள் சிவனருள் பெற்று உலகை ஆண்டனர். முருகன் தோன்றி இவர்களை அழித்தார் என்று கந்தபுராணம் கூறுகிறது.

காசிபனின் சகோதரியான பூர்ணமாசி காலக்கணக்கிடுகளை வகுத்தாள் என்பர்.

## ஆங்கீரச

இரண்டாவது குமாரரான ஆங்கீரச ரிஷியானவர் சிரத்தா என்பவளை மணந்தான். இவனுக்கு உதத்தியன் பிரகஸ்பதி என்னும் புதல்வர்களும் ஸீநீவாலி, குஹூ, ராகா, அனுமதி ஆகிய பெண்களும் தோன்றினர். பிரகஸ்பதி தவம் செய்து தேவர்களுக்குக் குருவானான். இவனை வியாழன் என்றும் கூறுவர்.

## புலஸ்தியர்

பிரம்மனின் காதிலிருந்து வெளிப் பட்டவர் புலஸ்தியர். இவர் அவிர்ப்பூ என்பவளை மணந்தார். இவருக்குத் தோன்றியவர்கள் இராட்சதர்கள். இராவணன் இவர்கள் வழியில் வந்தவன். ஒருமுறை கார்த்த வீரியர்ச்சுனனைக் காணச் சென்ற இராவணன் அவனை அவமதித்தான், அதனால் கோபம் கொண்ட கார்த்தவீரியன் இராவணனைச் சிறைசெய்து பாதாளத்தில் அடைத்து விட்டான். புலஸ்தியர் சென்று இராவணனை விடுவித்தார்.

பராசர முனிவன் அரக்கர்களை அழிப்பதற்குச் செய்த யாகத்தைப் புலத்தியர் தடுத்து நிறுத்தி அரக்கர்களைக் காத்தார். பராசரரை மகிழ்விக்க அவர்மீது ஒரு புராணத்தைப் பாடியுள்ளார்.

இவர் வழிபட்ட லிங்கம் பராசரலிங்கம் எனப்படுகிறது. காஞ்சீபுரத்தில் பராசரேசுவரம் என்னும் சிவாலயம் உள்ளது. இவருக்கு விக்கிர சிவன், அகஸ்தியன் என்ற புதல்வர்கள் தோன்றினர். இந்த அகஸ்தியர் மகா அகத்தியரிலிருந்து வேறானவர்.

## புலகன்

இவர் பிரம்மதேவனின் கொப்பூழிலிருந்து தோன்றியவர் கதி என்பவளை மணந்து கர்மசிரேஷ்டர், சஹிஷ்ணு என்பவர்களைப் பெற்றார். இவர் வழிபட்ட லிங்கம் புலகேசு வரர் என்பதாகும்.

## கிரது

பிரம்மா அஞ்சலி செய்து கொண்டிருந்தபோது அந்த கைகளுக்குள் தோன்றியவர் கிரியை என்பவளை மணந்து 60,000 வாலகில்யர் என்னும் முனிவர்களைப் பெற்றனர். அவர்கள் கட்டை விரல் அளவே உயரம் இருந்தனர். மேலும், மகா தபஸ்விகள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## அத்திரி

பிரம்மதேவனின்கண்ணிலிருந்து தோன்றியவர். மகா பதிவிரதையான அனசூயை மணந்தவர். இவருக்குச் சந்திரன், துருவாசர், தத்தாத்ரேயர் என்ற மூன்று புதல்வர்கள் தோன்றினர். அனுசூயாதேவி தம்மைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கிப் பாலூட்டி தொட்டிலில் இட்டு சீராட்டியவள். அத்திரி முனிவருக்கு ஒரு சமயம் அன்னை பராசக்தி மகளாகத் தோன்றினாள். அதை யொட்டி அவள் அத்திரிஜா என்று அழைக்கப்படுகிறாள். இவர் வழிபட்ட சிவாலயங்கள் அத்திரீசம் என்று அழைக்கப் படுகின்றன.

### வசிட்டர்

ஏழாவது ரிஷியாக விளங்கும் வசிட்டர் பிரம்மன் நெடுமூச்சு விட்ட போது மூச்சுக் காற்றில் இருந்து அவதரித்தாகக் கூறப்படுகிறது.

இவர் கல்வி கேள்விகளில் பெரியவர். இவர் வாயால் பிரம்மரிஷி என்னும் பட்டம் பெற விசுவாமித்திரர் பெரும் தவம் செய்தார். இட்சுவாகு வம்சத்தின் குலகுருவாக விளங்கி இராமருக்கு முடிசூட்டியவர்.

இவரது மனைவியான அருந்ததி, கற்பின் இலக்கணமாக இருப்பவள். சப்தரிஷி மண்டலத்தில் இவளும் நட்சத்திர மாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றாள். திரும ணத்தின் போது மணமக்களிடம் இவளைப் பார்க்கும்படிக் கூறுவர். இவருக்கு ஏழு புதல்வர்களும் ஒரு பெண்ணும் தோன்றினர். வசிட்டர் மிகுந்த தவவலிமை படைத் தவர் இவரிடம் காம தேனு இருந்துசேவை செய்துள்ளது. இவர், காமதேனு தனது பாலால் நிறைந்த திருக் குளத்திலிருந்து திரண்ட வெண் ணெயைத் திரட்டி சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அத்தலம் சிக்கல் என்னும் பெய ருடன் நாகப் பட்டனத்திற்கு அருகிலுள்ளது.

காஞ்சிபுரத்தில் இவர் வழிபட்ட லிங்கம் வசிட்டேசுவரர், வெடித்துக் கூடிய வசிட்டேசுவரர் என்னும் பெயர்களில் உள்ளன.

ஆலயங்களில் சப்தரிஷிகளை எழுந்தருளுவித்து வழிபடும் வழக்கம் முன்னாளில் இருந்துவந்தது. காலவெள்ளத்தில் அது இல்லாமல் போய்விட்டது. காசியில் சப்த ரிஷிகள் எப்போதும் சிவபூசை செய்து கொண்டிருக்கின்றனர்.

## கொங்குநாட்டில் சப்த ரிஷிகள்

கொங்கு நாட்டில் சப்த ரிஷி வழிபாடு சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. கொங்கு நாட்டில் பல இடங்களில் ஏழு ரிஷிகள் ஒரே வரிசையில் அமர்ந்துள்ள புடைப்புச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களைப் புராணங்கள் கூறும் ஏழு ரிஷிகள் என்பர். வேறு சிலர் இவ்வட்டாரத்தில் கோயில் பூசை செய்துவரும் ஆதி சைவர்களின் குருமார்கள் என்றும் கூறுவர்.

### திட்டக்குடி

திட்டக்குடிக்கு அருகில் நிவா நதி ஓடுகிறது. இதற்குப் பொன்னை என்பதும் பெயர். ஏழுமுனிவர்கள் நீராடவும் சிவபூசை செய்யவும் கங்கையை வேண்டினர். அவள் ஒரு சிற்றாறாகப் பெருகிவந்தாள். முனிவர்கள் நீ வா என்று அழைத்ததால் அதை நிவா நதி என அழைக்கின்றனர். இதில் முனிவர்கள் ஏழு துறைகளை உண்டாக்கினர். அவையே ஆதித்துறை (காரியனூர்) திருஆலந்துறை, மாந்துறை, ஆடுதுறை, திருவத்திட்டத்துறை (திட்டக்குடி) திருவரத்துறை, திருக்கைத்துறை என்ற ஏழாகும். திட்டக்குடி வசிட்டர் பூசித்ததாகும்.

### காசியில் சப்தரிஷி பூஜை

காசியில் நாள்தோறும் மாலை வேளையில் சப்தரிஷிகள் அருவநிலையில் வந்து விசுவநாதப் பெருமானைப் பூஜை செய்கின்றனர். அதை நாம் கண்ணெதிரே கண்டு களிக்க ஏழு பண்டாக்கள் (அருச்சகர்கள்) ஆரத்தி மணி ஏந்தி பெருமானுக்கு பூஜை செய்கின்றனர். இதற்கு சப்தரிஷி பூஜை என்பது பெயர். அவ்வேளையில் இசையுடன் சாம கானம் பாடப்படுகிறது. உடுக்கை, மணி, டக்கா முதலியவை இசைக்கப்படுகின்றன. விசுவநாதருக்கு பூக்களால் அலங்காரம் செய்து பூவாளியால் நீராட்டியவாறே இப்பூசை நடைபெறுகிறது. இது தினமும் நடைபெறும் சிறப்பு வழிபாடாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சப்தரிஷீச்சுவரங்கள்

சப்தரிஷிகள் ஒன்றுகூடி தமது ஆத்மசக்தி மேம்படவும், உலகம் நலம் பெறவும், அசுரர்களை அழிக்கவும் பூமிக்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துள்ளனர். அத்தலங்கள் அவர்கள் பெயரால் சப்த ரிஷீசுவரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

காஞ்சிபுரம், லால்குடி, ஒடுக்கத்தூர், காசி முதலான தலங்களில் சப்தரிஷீசுவரர் ஆலயங்களைக் காணலாம். இவற்றைப் பற்றிய சிறுகுறிப்புகளை இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## லால் குடி திருத்தவதுறை

திருத்தவத்துறை என்று புராணங்களிலும் நடைமுறையில் லால்குடி என்றும் அழைக்கப்படும் தலத்தில் சப்தரிஷிகள் கூடி வழிபட்ட சப்தரிஷீஸ்வரர் ஆலயம் உள்ளது. இங்குள்ள அம்பிகையின் பெயர் பெருந் திருப் பிராட்டி என்பதாகும். லால் என்பதற்கு உருது மொழியில் சிவப்பு என்பது பொருள். சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட கோயிலாக இருந்ததால் லால்குடி என அழைத்தனர் என்பர்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் தழற்பொறியாகத் தோன்றிய முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் திருவுருவம் தாங்கினார். சப்தரிஷிகள் தமது மனைவியரிடம் அந்தக் குழந்தைகளுக்குப் பாலூட்டும்படிக் கூறினர். வசிஷ்டரின் மனைவியான அருந்ததி அதற்கு உடன்படவில்லை. அதையடுத்து அறுவரின் மனைவியரும் மறுத்துவிட்டனர். முனிவர்கள் கார்த்திகைப் பெண்களைப் பாலூட்டுமாறு செய்தனர். பின்னர் பாலூட்ட மறுத்த தம் மனைவி யரைச் சபித்தனர். அதையறிந்த முருகப் பெருமான் ஏழு முனிவர்களையும் கோபித் தார். அவருடைய கோபத்தால் வருந்திய முனிவர்கள் மண்ணுலகில் வந்து காவிரிக் கரையில் அமைந்த இத்தலத்தில் வழி பாடு செய்து மேன்மை பெற்றனர்.

சப்தரிஷிகள் கூடி வழிபட்டதால் இத் தலத்து இறைவர் சப்தரிஷீசுவரர் என்று அழைக்கப்படுகிறார். இவ்வூர் அம்பிகை மீது பாடப்பட்டுள்ள பிள்ளைத் தமிழில் ஏழு இருடிக்கிறை என்று குறிக்கப்பட்டுள்ளார்.

இத்தலத்தில் தனிச் சந்நிதியில் ஒரே வரிசையில் ஏழு முனிவர்களும் எழுந்தருளியுள்ளனர்.

இத்தலத்திலுள்ள தேரில் ஏழு முனிவர்கள் கோயிலில் வழிபடும் காட்சியும் இத்தலத்தில் திருப்பணி செய்த மன்னனின் திருவுருவமும் இடம் பெற்றுள்ள மரப் பலகைச் சிற்பம் உள்ளது.

## ஒடுக்கத்தூர் சப்தரிஷீசுவரர்

வேலூரிலிருந்து 35 கிலோமீட்டர் தொலைவில் ஒடுக்கத்தூர் என்னும் தலம் உள்ளது. ரிஷிகள் மனத்தை ஒடுக்கி நெடுங் காலம் யோக நிலையில் வீற்றிருந்த தால் இத்தலம் ஒடுக்கத்தூர் ஆன தென்பர். உடுக்கள் என்றால் நட்சத்திரங்கள் உடுக்களில் மேன்மை பெற்ற நட்சத்திரங் களாக விளங்கும் சப்தரிஷிகள் தங்கி வழிபட்டுப் பேறு பெற்றால் உடுக்கத்தூர் என்று வழங்கி இந்நாளில் ஒடுக்கத்தூர் என வழங்குகிற தென்பர்.

இறைவன் சப்தரிஷீசுவரர், அம்பிகை அபீத குசாம்பாள்.

## காஞ்சியில் சப்தஸ்தானம்

ஒரு சமயம் சப்தரிஷிகளான அத்திரி, குத்ஸன், வசிட்டன், பிருகு, கௌதமர், காசிபர், ஆங்கீரஸ் என்னும் முனிவர்கள் எழுவரும் இமயமலைச் சாரலில் தவம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னே பிரமன் தோன்றினார். அவரிடம் முனிவர்கள் பெறுதற்கரிய முத்தியைப் பெரும் வழியைத் தங்களுக்குக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிரம்மன் பலவிதமான தருமங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறிச் சிவ லிங்கத்தை உன்னதமான ஒரு தலத்தில் வழிபட்டால் உடனே பலன் கிடைக்கும் என்றார். பின்னர் சிவ பூசையின் பலனைத் ஒன்றுக்குப் பல மடங்காகத் தரும் தலம் காஞ்சிபுரமாகும். அத்தலத்தில் அவர்கள் சிவலிங்கம் ஸ்தாபித்து வழிபட்டால் விரைவில் முத்தி பெறலாம் என்றான்.

அவர்கள் அவன் கூறியபடியே காஞ்சிக்கு வந்து ஏகாம்பரநாதர் முதலான அநேக தலங்களை வழிபட்டு அந்த நகரின் நடுவில் ஓடும் மஞ்சளாற்றின் (திருமஞ்சன நதி) கரையில் தனித்தனியே லிங்கங்களை அமைத்து வழிபட்டனர். முதன்மை லிங்கத்திற்கு சப்தத்தானேசுவரர் என்பது பெயர். அவரைச் சுற்றித் தனித்தனி இடங்களில் அத்திரீகர், குச்சேசர், வசிட்டேசர் முதலிய லிங்கங்கள் உள்ளன. வசிட்டர் வழிபட்ட சிவலிங்கம் வசிட் டேசுவரர் எனும் பெயரில் உள்ளது. வியாச சாந்தாலீசுவரர் ஆலயத்திற்கு அருகில் வெடித்துக் கூடிய வசிட்டேசுவரர் ஆலயம் உள்ளது.

## காசிநகரில் சப்தரிஷீசுவரர்

காசி நகரில் ரிஷிகள் பூசித்த எண்ணற்ற தலங்கள் அவரவர் பெயராலேயே உள்ளன. இவற்றில் சிறந்த லிங்கங்களாக சப்தரிஷீ சுவரங்கள் போற்றப்படுகின்றன. இந்த ஏழு லிங்கங்களைத் தரிசிப்பதைச் சப்தரிஷி யாத்திரை என்று கூறுகின்றனர். ஒவ்வொரு பஞ்சமியும் சப்தரிஷியாத்திரைக்கு ஏற்ற புண்ணிய நாளாகும்.

ஜங்கம்பாடி ரோடில் காஸ்யபேசுவரர், ஆங்கீரசர் ஆலயங்களும்; ஓதை சௌக்கில் அத்ரீசுவரர் ஆலயமும், நாக கூபத்தில் மர்சீ சுவரர்ஆலயமும்; ததோலியாவில் கௌதமேஸ்வரர் ஆலயமும் மணிகர்ணிகை சுவர்க்கத் துவாரத்தில் புலகீசுவரர் ஆலயமும், சங்கடாகாட்டில்வசிட்டேசுவரர் ஆலயமும் உள்ளன.



வசிட்டேசுவரர் ஆலயத்தின் அருகிலேயே அருந்ததி பூசித்த லிங்கம் அருந்ததீசுவரர் எனும் பெயரில் உள்ளது.

காசிக் கண்டத்தில் பதினெட்டாவது அத்தியாயத்தில் சப்தரிஷிலோக வர்ணனை சிறப்புடன் விளக்கப்பட்டுள்ளது.

## அன்பில்

அன்பில் என்று அழைக்கப்படும் அன்பில் ஆலந்துறையிலுள்ள சத்தியவாகீசுவரர் ஆலயத்தில் சப்தரிஷிகள் வழிபட்டுப்பேறுபெற்றுள்ளனர். அவர்கள் லிங்கத்தை வழிபடுவது இக்கோயிலில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட் டுள்ளது.

திருச்சிராப்பள்ளி, திருப்பராய்த்துறை, திருவிடைமருதூர் முதலிய பல தலங்களில் சப்தரிஷிகள் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளனர்.

## குடந்தை சப்தரிஷீசுவரர்

கோவில் நகரமான கும்பகோணத்தில் சப்த ரிஷிகள் ஆங்காங்கு சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளனர். அவர்கள் ஒன்று கூடி வழிபட்ட சிவாலயம் சப்த ரிஷீசுவரர் கோயில் என்று அழைக்கப் படுகிறது. இது குடந்தைக்குக் கிழக்கே மயிலாடுதுறை சாலையிலுள்ள அம்மா சத்திரத்தில் அமைந்துள்ளது. இறைவன் சப்தரிஷீசுவரர், அம்பிகை வேதநாயகி, இது தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தாரால் நிர்வகிக்கப்படுகிறது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ரிஷிபுரேச்சரங்கள்

**ரி**ஷிகள் கூடி சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற தலங்கள் அவர்கள் பெயராலேயே ரிஷிபுரேச்சரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. திருவிடை மருதூர் காஞ்சி, ரிஷிவந்தியம், திருவாரூர் முதலிய தலங்கள் ரிஷிகள் கூடி வழிபட்ட தலங்களாகும். அவற்றுள் இரண்டை இங்கே சிந்திக்கலாம்

## ரிஷிவந்தியம்

தென்னாற்காடு(கடலூர்) மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலிருந்து திருக்கோயிலூர் செல்லும் வழியில் 25 கி.மீ. தொலைவில் ரிஷிவந்தியம் உள்ளது. ரிஷிகளால் வந்திக்கப்பட்டஇடமாதலின் ரிஷிவந்தி யம் எனப்பட்டது. ரிஷிபுரம் எனவும் கூறுவர்.

இங்குள்ள சிவபெருமானை இந்திரன் வழிபட்டான். அவனுக்குப் பெருமான் இங்கே அர்த்தநாரீசுவரராகக் காட்சியளித்தான். அதை நினைவூட்டும் வகையில் இங்குக் கருவறையில் உள்ள லிங்கத்திற்குத் தேன் அபி.ஷேகம் செய்தால் லிங்கத்தின் பாணப் பகுதியில் அர்த்தநாரீசுவரரின் நிழல் உருவத்தைத் தரிசிக்கலாம்.

இறைவன் : ஸ்ரீ அர்த்தநாரீசுவரர்
இறைவி: ஸ்ரீ முத்தாம்பிகை. தீர்த்தம்: அக்னி தீர்த்தம்.

ஞானபோதனார்களாகிய ரிஷிகள் இங்கே உண்டாக்கிய தீர்த்தம், ஐயாயிரம் குளம் என வழங்குகிறது. இது 5000 குழி அளவுள்ளதாலும் இப்பெயர் பெற்ற தென்பர். இதன் கரையில் ஸ்ரீதேவி எனும் பெயர் கொண்ட மண்டபம் உள்ளது.

## திருவிடைமருதூர் ரிஷீபுரேசர்

ஒரு சமயம் ரிஷிகள் கூடி பிரம்ம தேவனிடம் பெரிய யாகத்தைச் செய்து மேன்மை அடைவதற்குப் புனிதமான இடத்தைக் காட்டியருள வேண்டுமென்றனர். அவன் திருவிடைமருதூருக்குச் சென்று மகாலிங்க சுவாமியை வழிபட்டு அத்தலத்தில் வேள்வி செய்க என்றான். அதன்படியே அவர்கள் இங்கு வந்து பெருமானை வழிபட்டு வேள்வி செய்தனர். அந்த இடத்தில் தம் பெயரால் பெரிய சிவாலயத்தை அமைத்தனர். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தின் மேற்கு மாட வீதியில் மேலைக் கோபுரத்திற்கு அருகில் கிழக்கு நோக்கியவாறு ரிஷிபுரேசுவரர் ஆலயம் உள்ளது.இப்போது இக்கோயிலில் திருப்பணி நடைபெற்று வருகிறது

---

**ஆர்ஷ லிங்கங்கள்: ரி**ஷிகள் நிறுவி வழிபட்ட லிங்கங்களை ஆகம நூல்கள் ஆர்ஷ லிங்கம் என்று குறிப்பிடுகின்றன. இத்தகைய லிங்கங்களைச் சுற்றி அமைந்துள்ள பலிபீடங்களில் ஸ்ரீபலியைப் பெறும் தேவர்கள் விருஷபம், அக்னி, சப்தமாதர்கள், விநாயகர், சுப்ரமண்யர், ஜேஷ்டா, துர்க்கை, சண்டேசுவரர் ஆகியவர்களாவர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ரிஷிகளின் ஆரண்யங்கள் (ரிஷிகளின் காடுகள் )

ரிஷிகள் தவம் செய்வதற்கும், சத்சங்கம் கூடுவதற்கும், தெய்வீக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், பிறருக்கு உபதேசிக்கவும், தூய்மையான இடங்களை நாடினர். அத்தகு இடங்கள் புனிதமாகப் போற்றப்படுகின்றன. இவற்றுள் நைமிசாரண்யம், தண்டகாரண்யம், பஞ்சவடி, தாருகாவனம் முதலியவை சிறப்புப் பெற்றவைகளாகும். வடநாட்டில் உள்ள இந்த தலங்களுக்கு ஈடாகத் தென்னாட்டிலும் பல தலங்கள் உள்ளன. அத்தகைய ரிஷிவனங்கள் இரண்டை அறிந்து மகிழலாம்.

## நைமி சாரண்யம்

சிறப்புடன் முனிவர்கள் கூடி வாழும் தலங்களில் முதன்மை பெற்றது நைமிசாரண்யமாகும். ஒரு சமயம் முனிவர்கள் பிரம்ம தேவனிடம் தாங்கள் நெடுநாட்கள் தங்கிப் புண்ணியம் தரும் யாகங்களைச் செய்து மேன்மை பெற உதவும்படியான புனிதம்மிக்க இடம் ஒன்றைக் காட்டியருளுக என்றனர்.

பிரம்மன் ஒரு தருப்பையை எடுத்துச் சுற்றி சக்கரம் போல் செய்து பூமியில் உருட்டினார். முனிவர்களே இந்த தர்ப்பைச் சக்கரம் எங்குச் சென்று நிற்கிறதோ அதுவே உங்களுக்குப் புண்ணியம் தரும் பூமியாகும் என்றார். உருண்டோடும் அந்த நேமியின் (சக்கரத்தின்) பின்னே முனிவர்கள் சென்றனர். அது பூமியில் விழுந்து காட்டிய இடமே நைமிசாரண்யம் எனப்படுகிறது. (நேமி சக்கரம், ஆரண்யம் காடு )

அந்த இடத்தில் முனிவர்கள் நிலையாகத் தங்கினர். அவ்வப்போது பெரிய யாகங்களைச் செய்தனர். அந்த யாகங்க ளின் போது கிடைத்த ஓய்வு நேரங்களில் சூதர் முதலானோர் உலகிலுள்ள தலங் களிலுள்ள பெருமைகளை விளக்கிக் கூறும் புராணங்களை அருளிச் செய்தனர். அதை யொட்டி நைமிசாரண்யம் புராணம் விளைந்த பூமியாகப் போற்றப்படுகிறது.

## தாருகாவனம்

தென்னாட்டிலுள்ள தாருகாவனம் இந்நாளில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள பெருஞ்சேரியாகும். இங்கு 48,000 முனிவர்கள் தங்கியிருந்து வேத வழிபட்ட யாகங்களைச் செய்து வந்தனர். அவர்கள் இறைவனை மதியாது இருந்ததுடன் அவரை அவமதித்தனர். தாங்கள் செய்யும் யாகங்களுக்கு ஏற்க பலனை அவர்கள் தர வேண்டிய கடமை உள்ளவர்கள் என்று கருதினர். தாம் மனம் அடங்கிய யோகிகள் என்றும் தமக்கு மேலானவர் எவருமில்லை என்றும் கருதியிருந்தனர். அவர்களது மனைவியரோ கற்பில் தம்மைவிட உயர்ந்தவர்கள் யாருமில்லை என்று கர்வம் கொண்டிருந்தனர்.





Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்களது புலனடக்கமின்மையைவெளிப்படுத்தவும் கர்வத்தை அழிக்கவும் திருமால் மோகினியாகவும் சிவ பெருமான் பிட்சாடனராகவும் வந்தனர். அவர்கள் அழகில் மயங்கிய முனிவர்கள் தமது தவத்தைக் கைவிட,முனி பத்தினிகளும் நிலையழிந்தனர்.திருமாலும் சிவபெருமானும் மறைந்தனர். நடந்ததை உணர்ந்து கோபித்த முனிவர்கள் சிவ பெருமானை அழிக்கப் பெரிய வேள்வியைச் செய்து அதிலிருந்து அடுத்தடுத்துத் தோன்றிய மண்டையோடு, மான், புலி, பூதம், பாம்பு, யானை ஆகிய வற்றைஏவிஅவரைக் கொன்று வரும்படி அனுப்பினர்.

சிவபெருமான் அவைஒவ்வொன்றையும் அழித்து தமது உடைமைப் பொருளாக்கிக் கொண்டார். இறுதியாக வந்த யானையை உரித்துப் போர்வையாகப் போர்த்திக் கொண்டார். யானையை உரித்துப்போர்த்திக் கொண்ட இடமே வழுவூர் வீரட்டானமாகும். பின்னர் அவர் செயலிழந்து நின்ற 48,000 ரிஷிகளுக்கும் தட்சிணாமூர்த்தியாக இருந்து பிரம்ம ஞானத்தை உபதேசித்தார். வழுவூர் ஆலயத்தில் 48,000 ரிஷிகளுக்கு உபதேசம் செய்யும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது

## பாரத்வஜேஸ்வரங்கள்

பாரத்வாஜர் எனும் பெயரில் பல ரிஷிகள் இருந்துள்ளனர். இவர்கள் வழிபட்ட தலங்கள் பாரத்வாஜேஸ்வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்தும் தோன்றி சிவாகமங்களைப் பெற்ற ஐந்து ரிஷிகளில் ஒருவர் பாரத்வா ஜேஸ்வரர். திருப்புகலூரில் சிவபெருமானின் ஐந்து முகங்களை நினைவூட்டும் வகையில் ஐந்து லிங்கங்கள் உள்ளன. இவற்றை ஆகமம் கூறு ஐந்து ரிஷிகளும் பூசித்தனர். இவற்றில் பாரத் வாஜர் பூசித்த லிங்கம் பெரிய சந்நிதியில் சிறப்புடன் அமைந்துள்ளது.

வேத வழிபட்ட பாரத்வாஜேஸ்வரர் என்னும் ரிஷியையும்அன்பர்கள் சிறப்புடன் போற்று கின்றனர். இவரும் பல சிவாலயங்களை அமைத்து வழிபட்டுள்ளார். இவர் வலியன் குருவி வடிவம் கொண்டு வழிபட்டார் என்பர்.அதனால் வலியன் குருவிக்குப் பாரத்வாஜம் எனும் பெயர் உண்டாயிற்று.

சென்னையில் கோடம்பாக்கம் புலியூரிலும், பாடல் பெற்ற திருவலிதாயத்திலும், வலிவலத்திலும் பாரத்வாஜ வழிபட்டுப் பேறுபெற்றார் என்று தலபுராணங்கள் கூறுகின்றன.

காளத்தியில்(காளஹஸ்தி) பாரத்வாஜர் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார். மலைகளுக்கு நடுவே பகுதியின் நடுவே அமைந்துள்ள தெப்பக் குளத்தின் கரையில் பாரத்வாஜர் அமைத்து வழிபட்ட சிவாலயம் உள்ளது.

## ரிஷி தர்ப்பணம்

சிவாச்சார்யர்கள் தங்களின் தினக்கடமைகளில் ஒன்றாகத் தேவர்கள், ரிஷிகள், பிதுர்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. நீராடும் போது ஒருமுறையும், நித்திய அனுஷ்டானத்தின்போது ஒருமுறையுமாக ரிஷிகளுக்காக நீர்விட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.பெரிய விழாக்களில் நடைபெறும் சிறப்பு சந்தியா வந்தனங்களின் போது, 1.அத்ரி, 2, வசிஷ்டர், 3,புலஸ்தியர்,4.க்ருது,5.பாரத்வாஜர்,6.விஸ்வாமித்திரர்,7.ப்ரசேதஸ், 8.ரிச்சகர்,9.அகஸ்தியர், 10.ததீசி,11.துருவாசர் முதலான பதினோரு ரிஷிகளுக்கும் தங்களது கோத்திர ரிஷிகளுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஏரண்ட மகரிஷி

ஏரண்டம் என்றால் ஆமணக்குக் கொட்டை. அத்திரி முனிவரின் குமாரரான ஆத்திரேயர் ஏரண்டவனத்தில் (ஆமணக் குக் காட்டில்) வாழ்ந்து வந்தார். இந்த ஏரண்ட வனம் சுவாமிமலைக்கு அருகிலுள்ள கொட் டையூராகும். ஆமணக்குக் கொட்டைகள் அதிகமாக விளைந்ததால் இவ்வூர் கொட் டையூர் எனப் பட்டது. இந்த கொட்டை யூரில் ஆமணக்கு வனத்தில் வாழ்ந்ததால் ஆத்ரேய முனிவர் ஏரண்ட மகரிஷி என்று அழைக்கப்பட்டார். இவர் காலத்தில் கனக சோழன் என்பவன் சோழ நாட்டை ஆண்டு வந்தான்.



ஒரு சமயம் பூமியில் பெரிய பள்ளம் தோன்றியது. அதுவரை ஓடிவந்த காவிரி ஆறு பள்ளத்தில் ( பிலத்துள்) வீழ்ந்துபாதாளத்திற்குச் சென்று விட்டது. தண்ணீர் இல்லா ததால் மக்கள் பயிர்த் தொழி லைச் செய்ய முடியாமல் தவித்தனர். அதையறிந்த சோழ மன்னனும் வருந்தி னான். சிவபெருமானையும் விநாய கப் பெருமானையும் சரணடைந்தான். அப்போது விண்ணொளி ஒன்று மன்னனும் அவன் மனைவியும் அல் லது ஒரு ரிஷி அல்லது தன்னலமற்ற தியாகி ஒருவர் அந்தப் பள்ளத் துள் குதித்து உயிர்த் தியாகம் செய்தால் காவிரி நதி மீண்டும் பழையபடியே ஓடுமென்று தெரிவித்தது. அரசனும் அரசியும் மகிழ்ந்து அதில் குதிக்க முற்பட்டனர்.

அவ்வேளையில் அங்கு வந்த ஏரண்ட முனிவர் அரசனும் அரசியும் மக்களுக்குத் தாயும் தந்தையுமாவர். எல்லோரையும் காக்க வேண்டியது அவர்களது கடன். என்னைப் போன்ற ரிஷிகள் தம் உயிரைத்தந்தேனும் மற்றவர்களைக் காக்க வேண்டும்.

ததீசி முனிவர் தன் எலும்புகளைக் கொடுத்துத் தேவர்களைக் காத்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. அவ்வழி வந்த நான், இப்பிலத்தில் குதித்து காவிரியை மீட்பேன் என்று கூறிக் குதித்தார்.

பள்ளம் நிறைந்தது.காவிரி வெளிப் பட்டு, மகிழ்ச்சியால் வலம் சுழித்து ஓடி னாள். அந்த இடமே இந்நாளில் திருவலஞ் சுழி என்றழைக்கப்படுகிறது. சிவபெரு மானும் விநாயகரும்அங்கே தோன்றி ஏரண்ட முனிவரை உயிர்ப்பித்து அவ ருக்குஅருள் புரிந்தனர். நெடுங் காலம் தவம் புரிந்த அவர் சிவனோடு கலந்தார்.

அவர் கலந்து மறைந்த லிங்கம் திருவலஞ்சுழி கபர்த்தீ சுவரர் ஆலயத்தில் கருவறைக் குத் தென் கிழக்கில் திருவலஞ் சுழிநாதர் என்னும் பெயரி லுள் ளது. மேலும், ஏரண்ட முனிவ ரின் திருவுருவம் ஒன்றும் இந்த ஆலயத்தில் உள்ளது.

திருவலஞ்சுழியில் பிலத்துள் வீழ்ந்த முனிவர் எழுந்த இடம் வலம்புரம் என்ற அழைக் கப்படுகிறது. இந்நாளில் இந்த இடத்தைப் பெரும்பள்ளம் என்று அழைக்கின்றனர். இங்குள்ள இறைவன் வலம்புரி நாதர், அம்பிகை வடுவகிர்கண்ணி, இந்த ஆலயத் தில் ஏரண்ட முனிவரின் திருவுருவம் உள்ளது.

காவிரியைச் சோழநாட்டுக்குத் தந்த முனிவர் அகத்தியர்.காவிரியைமீட்ட முனிவர் ஏரண்ட முனிவராவார். ஏரண்டர் பூஜித்த சிவபெருமான் கொட்டையூரில் கோடீஸ் வரர் என்ற பெயரில் எழுந்தருளி உள்ளார். இங்கு அவர் ஆமணக்குச் செடியின் கீழ் தவம் செய்யும் கோலத்திலான சிலையுருவம் உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# கபிலமுனி

கபிலை என்ற சொல் கருநிறம் உள்ள பசுக்களைக் குறிக்கிறது. இவற்றின்பால் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது. சிவபெருமானின் அபிஷேகத்திற்கு கபிலையின் பாலே சிறந்ததாகும்,

உடல் முழுவதும் மின்னும் கருமை அல்லது கருநீல நிறத்திலும் நெற்றி, வயிறு, மடி ஆகியவை தூய வெண்ணிறத்திலும் இருக்கும் பசுவே கபிலையாகும். இவற்றைக் காராம் பசு என்றும் அழைப்பர். இத்தகைய பசுக்களின் மத்தியில் தோன்றிய முனிவர் கபில முனியாவார். அவர் சிறந்த சிவபக்தியும் உயர்ந்த ஞானத்தையும் உடையவர். மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றியவர் கபிலர் என்று பெயர் சூட்டிக் கொள்ளும் வழக்கம் மக்களிடையே பரவலாக இருந்து வருகிறது.

சங்கப் புலவர்களில் கபிலர் என்னும் புலவர் சிறப்புடன் போற்றப்படுகின்றார். திருமுறை ஆசிரியர்களில் ஒருவருக்கும் கபிலதேவர் என்ற பெயர் வழங்குகிறது. கபிலமுனி என்ற பெயரில் பலர் வாழ்ந்துள்ளனர்.அவர்களில் சிலரை இங்கே காணலாம்.

பகீரதச் சக்கரவர்த்தி போற்றி வழிபட்ட முனிவர் கபிலர். இவருடைய அறிவுரையின் பேரில் தான் பகீரதன் ஆகாச கங்கையை வானத்திலிருந்து பூமிக்கும் பாதாளத்திற்கும் அழைத்து வந்து, தம் முன்னோர்களுக்கு கதிமோட்சம் அளித்தான். இவர் பூமிக்கு வந்து பல தலங்களில் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார். கபிலமுனியும் பசுக்கூட்டமும் சேர்ந்து வழிபட்ட தலம் திருப்பதி மலை அடிவாரத்தில், கபிலேச்சரம் எனும் பெயரிலுள்ளது. இங்குள்ள தீர்த்தம் கபில தீர்த்தமாகும்.

மருத்துவத்தில் சிறந்தவரான கபிலமுனி வழிபட்ட தலம் திருக்கழிப்பாலை ஆகும். அவர் சித்த மருந்துகளின் கலவையுடன் கள்ளிப் பாலையும் கபிலை எனப்படும் பசுவின் பாலையும் கலந்து இத்தலத்தில் லிங்கம் அமைத்து வழிபட்டார் என்பர். அந்த லிங்கத்திலிருந்து சிவபெருமான் உமையுடன் வெளிப்பட்டு அவருக்குத் தமது திருமணக் கோலத்தைக் காட்டினார் என்பர். இந்த லிங்கம் சிறந்த மருத்துவ குணங்களைக் கொண்டதாகும்.(இந்த லிங்கம் பற்றிய விவரங்களைச் சிவமஞ்சரி (பக்கம் 489- தொகுதி 4.ல் காண்க.)

திருஇடைச்சுரத்துறை ராமநாதபுரம் கள்ளில் முதலியனவும் கபிலர் பூசித்த தலங்களாகும்.

**சுவேத முனி** – இவர் அகத்தியரின் மாணாக்கர். அங்காரகை என்னும் அரக்கி இவரை அழிக்க வந்தாள். அப்போது தம் மந்திர ஆற்றலால் அருகிலிருந்த பெரும்பாறையைத் தானே எழுந்து பறந்து சென்று அவளை அழிக்கும்படி ஏவினார். அந்த அரக்கி பாறை வேகத்துடன் தம் மீது வருவதைக் கண்டு அஞ்சி ஓடினாள். எங்கு சென்றாலும் பாறையும் துரத்தியது. இறுதியில் அவள் (இராமேசுவரம்) சென்று கடலில் வீழ்ந்தாள். பாறை அவள் மீது வீழ்ந்து அவளை அழிந்தது. அப்போது அவள் கிருதாசி எனும் அப்சர மங்கையாக எழுந்தாள். பாறையும் மறைந்து ஊர்வசியானது. ஊர்வசி சுவேத முனியைப் பணிந்தாள். விசுவாமித்திரரின் சாபத்தால் தாம் பாறையாகக் கிடந்ததாகவும், இவர் அருளால் சுயவடிவம் பெற்றதாகவும் கூறினாள். மூவரும் ராமேசுவரத்தில் வழிபட்டுப் பேறுபெற்றனர். சுவேதமுனி பல தலங்களில் தங்கிச் சிவவழிபாடு செய்துள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நாரத மகரிஷி

**பல** பிறவிகளில் செய்த புண்ணியத்தால் தோன்றியவர் உப பர்ஹன் என்ற கந்தர்வர் . இவர் வீணை வாசிப்பபதில் வல்லவர்.

ஒரு சமயம் சில முனிவர்கள் கூடி யாகம் செய்த போது இவரை வீணை வாசிக்க அழைத்தனர். அங்குச் சென்று வீணை வாசித்துக் கொண்டிருந்த போது இவர் அங்கிருந்த பெண்களில் சிலருடன் மோகம் கொண்டு பழகினார். அதை யறிந்த முனிவர்கள் இவரைச் சபித்தனர். அதனால் ஒளி குறைந்து வருந்தினார். அவர் அநேக ரிஷிகளையும் சாதுக்களையும் பூசித்து அப்புண்ய பலத்தால் ஒளிகுறைந்த தனது கந்தர்வ தேகம் நீங்கிப் பிரம்ம தேவனின் மகனாகத் தோன்றினர்.

மகதி என்ற வீணையை வாசித்துக் கொண்டு, எப்போதும் இறைவனின் நாமங்களைப் பாடிக் கொண்டிருப்பதால் இவரை ஆதிரிஷி என்றும் கூறுவர். இவரை கலகப் பிரியர் என்றழைப்பர் என்றாலும் இவர் கலகம் எப்போதும் நன்மையிலேயே முடியும்.

இவரைக் கர்மதேவதைகளுக்குத் தலைவர் என்பர். இவரில்லாமல் ஈசுவர காரியம் எதுவும் நடப்பதில்லை. இவர் ஞானங்களின் இருப்பிடம், இணையற்ற பேச்சுத்திறமை கொண்டவர்.

பகவத் கீதையில் தேவரிஷிகளுக் குள் நானே நாரதன் என்று கிருஷ்ண பரமாத்மாவே கூறியிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

நாரம் என்பதற்கு ப்ரம்ம ஞானம் என்பது பொருள். சதாசர்வகாலமும் பிரம்ம ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருந்ததால் இவர் நாரதர் என்றழைக்கப்பட்டார்.

பிரஜாபதியாக விளங்கிய தட்சனுடைய புதல்வர்களுள் ஆயிரம் பேருக்கு இவர் பிரம்ம ஞானத்தை அடையச் செய்தார். தட்சன் மீண்டும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கும் நாரதர் ஞானத்தை உபதேசித்து மோட்சமடையும் படிச் செய்தார். அதனால் கோபம் கொண்ட தட்சன், அவர் ஓரிடத்தும் நிலையாக இராமல் அங்குமிங்கும் ஓடிக் கொண்டே இருக்கும்படியான சாபத்தை அளித்தான்.

இவர் பெயரால் நாரதீயம் என்னும் புராணம் உள்ளது. காஞ்சிபுரத்தில் நாரதர்



முருக வழிபாட்டிலும் நாரதர் சிறப்பான இடம் பெறுகிறார். வள்ளியம் மையை முருகனுக்கு மணமுடித்து வைத் தவர் நாரதரே ஆவார். வள்ளித் திருமணக் காட்சிகளில் நாரதர் முதன்மை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். திருப்பரங் குன்றத்தில் முருகன் வள்ளியுடன் நாரதரை யும் காணலாம். தம்மைச் சுற்றி வந்த விநாயகருக்குச் சிவபெருமான் மாங்கனி அளிக்கும் காட்சியிலும், பார்வதி கல்யா ணத்திலும் வள்ளி கல்யாணத்திலும் நாரதர் திருவுருவம் அமைக்கப்படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூசித்துப் பேற்ற நாரதீசம் என்னும் சிவாலயம் உள்ளது. புகழ்பெற்ற கயிலாசநாதர் கோயிலில் அதன் அங்கமாக அதன் முன்புறம் இந்த ஆலணயம் அமைந்துள்ளது. காசியிலும் நாரதேசுவரர் வழிபட்ட லிங்கம் உள்ளது.

## தும்புரு, நாரதர், கௌசிகர்

தும்புரு,

நாரதர்,

தும்புரு, நாரதர், கௌசிகர் ஆகிய மூவரும் இசையில் வல்ல வர்கள். இவர்கள் சிவசந்நிதியில் அவரைப் புகழ்ந்து பாடி மகிழ் விக்கின்றனர். சிவபெருமானின் திருமணக் கோலக் காட்சியில் நாரத ரையும், குதிரை முகத்துடன் கூடிய தும்புருவையும் காணலாம்.

இதுவரை எண்ணிலாத நாரதர்கள் தோன்றி அரும்பெரும் சேவைகளைச் செய்துள்ளனர். அவர்களில் எண்மரைச் சிறப்புடன் போற்றுகின்றனர். இவர்கள் அவர்களின் சிறப்புப் பெயரைச் சார்த்தி ரிஷிநாரதர், கந்தர்வ நாரதர், முனி நாரதர், மகா நாரதர், ஜேஷ்ட நாரதர், திரிலோக சஞ்சாரி நாரதர், கலக நாரதர், நாராயண நாரதர் என்று அழைக்கப்படுகின் றனர். புராணங்கள் இந்த எண்மரை அஷ்டநாரதர் என்று அழைக்கின்றன.

## ரோமச ரிஷி

பிரம்மன் முனிவர்களுடன் வாதம் செய்யத் தம் முடியிலிருந்து இவரை தோன்று வித்தான் என்பர். பின்னாளில் இவர் புசுண்ட ரிஷியின் புதல்வனாகப் பிறந்தார். இவர் ஒரு வைத்திய நூலை இயற்றினார். அதை சட்டைமுனி அழிக்க எண்ணினார். அதனால் அந்த சுவடிகளை புசுண்டர் தம் சடையில் ஒளித்து வைத்து அகத்தியரிடம் கொடுக்க அவர் நெடுநாள் கழித்து அதை வெளிப்படுத் தினார்.

ரோமரிஷிக்கு உடலெல்லாம் முடி, இவர் உடலில் மூன்றரை கோடி முடிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது, ஒரு பிரம்மனின் ஆயுள் முடிந்தால் அதில் ஒரு முடி உதிரும். அப்படிப்பட்ட நீண்ட வாழ் நாளைப் பெற்றிருந்தார். திருஒற்றியூரில் ரோம ரிஷி வழிபட்டுப் பேறுபெற்றார். இவர் மயிலானந்தர் எனும் பெயரில் தோன்றி அத்தலத்தில் வழிபட்டார் என்கின்றனர். இவருக்கென தனி ஆலயம் அங்கு உள்ளது.

சீர்காழியில்ரோமரிஷி வழிபட்டு தம்முடைய மும்மலமும் நீங்க வேண்டி வழிபட்டார். அதனால் சீர்காழிக்குக் கழுமலம் என்பதும் பெயராயிற்று, திருவிடை மருதூரில் ரோமரிஷி நீண்டகாலம் தங்கிச் சிவபூசை செய்த தாகத் தலபுராணம் கூறுகின்றது

**புசுண்டர்**-இவர் காக வடிவில் வாழ்ந்தவர். அதனால் காகபுசுண்டர் என்றும் அழைக்கப் படுகிறார். இவர் வழிபட்ட சிவாலயம் கடலூருக்கு அருகில் ஆலப் பாக்கம் எனும் ஊரில் உள்ளது. இவர் சோதிட சாத்திரச் சுவடிகளை எழுதியுள்ளார். ரோமரிஷி இவருக்கு மகனாகத் தோன்றினார் என்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பராசரர் –வியாசர்– சுகப்பிரம்ம ரிஷி

விஷ்ணுவின் அம்சமாகப் போற்றப் படும் பராசரர் வியாசர் சுகர் ஆகிய மூவரும் சிறந்த சிவபக்தர்கள். பிரம்மஞானத்தை உணர்ந்து உயர்ந்த நிலையில் வாழும் முனிவர்கள் சப்தரிஷிகளில் ஒருவரான வசிட்ட ரின் வழிவந்தவர்கள்.

பராசரர், வசிட்ட முனிவரின் பேரர். இவருடைய தாய்தந்தையர் சக்தி-திரசக்தி தம்பதியர். பராசரர் கருவில் இருக்கும் போது இவரது தந்தையை உக்கிரன் என்னும் அரக்கன் கொன்றான். அதை அறிந்த இவர், தாயின் கர்ப்பத்திலிருந்தவாறே மந்திர உச்சாடனம் செய்து தாயின் வயிற்றின் வலப்பகுதியை கிழித்துக் கொண்டு வெளியே வந்து அவனைக் கொன்றார். அதனால் பராசரன் எனப்பட்டார். பின்னும் கோபம் அடங்காதவராய் அரசுரர்களை பற்றி இழுத்து அழிக்கும் படியான பெரிய வேள்வி யைச் செய்தார்.

அவ்வேள்வியில் அரக்கர்கள் தாமே வலிய வந்து வீழ்ந்து மாண்டனர். அஷ்ட திக்குப் பாலகர்களில் ஒருவனான நிருதியின் வாகனமான அரக்கனையும் அந்த வேள்வி மந்திரங்கள் இழுக்க, அவன் ஓலமிட்டுச் சிவ பெருமானை அழைத்தான். சிவபெரு மான் தோன்றி அந்த வேள்வியை நிறுத்திவிட் டார். புலஸ்தியரான, அரக்க குரு பராசர முனிவரைத் துதித்து அவர் மகிழும் வண்ணம் அவர் மீது ஒரு புராணம் பாடினார். அதனால் மகிழ்ந்த பராசரர் அரக்கர்களுக்கு நன்மை உண்டாகும்படியான பல வரங் க்ளைத் தந்தார்.

அசுரர்களை அழிக்கும் ஆற்றலைப் பெற, காஞ்சிபுரத்தில் அவர் சிவபூசை செய் தாரென்று காஞ்சி புராணம் கூறுகிறது. அத்தலம்இந்நாளில் பராசரேசம் என்றழைக் கப்படுகிறது. காஞ்சிபுரம் காந்தி சாலை யிலுள்ள வழக்கறுத்தீசுவரர் கோயில் வளா கத்திலுள்ள பராசரலிங்கத்தை வழிபடு வர்களின் எதிரிகள் நாசம் அடைவரென் றும், அவர்களால் தொல்லை வராதென் றும் நம்புகின்றனர். இவர் அரக்கர்களை யாகத் தில் இட்டு அழித்த பாவம் தீர, பல தலங் களில் சிவலிங்க வழிபாடு செய்துள்ளார்.

இவர் பகைவர்கள் தம்மீது செலுத்தும் அம்பைத் தமது தவ ஆற்றலால் அவர்கள் மீதே திரும்பிச் சென்று தாக்கும்படிச் செய்யும் வல்லமை படைத்தவர். இவருக்கு எண்ணற்ற புதல்வர்கள்.

ஒரு சமயம் பராசரரின் புதல்வர்கள் தத்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், பரிதி பாணி, மாலி என்னும் அறுவர். மகரமீன் (முதலை) வடிவு கொண்டு சரவணப் பொய் கையில் விளையாடிக்களித்தனர். அதனால் நீர் கலங்கி மீன், ஆமை முதலான பல உயிர்கள் செத்து மிதந்தன.

இதையறிந்த பராசரர், தம் புதல்வர் களை அந்தக் கொடிய மீன் வடிவிலேயே இருங்கள் என்று சபித்து விட்டார். அவர்கள் தமது சாபத் திற்குப் பரிகாரம் வேண்டினர். பராசரர் குமாரர்களே, முருகப்பெருமான் இந்தப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவதாரம் செய்வார். அவருக்குக் கார்த்திகை மாதர்கள் முலைப்பாலூட்டுவர். அதை அவர் பருகும் போது கடைவாய் வழியாக வழியும் பால் நீரில் சிந்தும். அதை நீங்கள் குடிக்கும் போது உங்கள் மீன் வடிவம் மறைந்து, சுயவடிவம் பெறுவீர்கள் என்றார். அதன் படியே முருகன் அவதரித்துக் கார்த் திகைப் பெண்களின் பாலை அருந்தியபோது சிந்திய பாலை அருந்திப் பழைய வடிவம் பெற்றனர். அவர்கள் முருகப் பெருமானை வணங்கி மேன்மை பெற்றனர்.

பராசர முனிவர் ஒரு சமயம் கங்கை யாற்றைக் கடக்க வேண்டி ஒரு படகில் ஏறினார். அதை மச்சகந்தி என்னும் செம்பட வப் பெண் செலுத்தினாள். நடுஆற்றில் செல்லும் போது உயர்ந்த மாமனிதன் பிறக்க கூடிய கோள்கள் ஒன்று சேர்வதைக் கண்டார். அதை அப்பெண்ணிடம் கூறி அவளுடன் ஒரு தீவுக்குச் சென்று அங்கே இருந்து அவளைக் கூடினார். அப்பெண் உடனே திருமாலின் அம்சமாக ஒரு பிள்ளையைப் பெற்றாள். அவரே வியாசர் எனப் புகழ் பெற்றார். வியாசர் மகா பாரதத்தை எழுதி னார். வேதம் புராணங்கள் முதலியவற்றைத் தொகுத் தளித்தார்.

பராசரர் மீனவப் பெண்ணைக் கூடிய தால் உண்டான தனது குற்றம் நீங்க சீர்காழி யில் சிவபூசை செய்தார். அதனால் அதற்கு கொச்சை வயம் என்பதும் பெயராயிற்று. கொச்சை என்பது மீனவப்பெண்ணைக் கூடியதால் உண்டான குற்றமாகும்.

## வியாசர்

பராசரரின் குமாரரும் வேதங்களைத் தொகுத்தவரும் புராணங்களை வகுத்தவ ருமான வியாசர், பல தலங்களில் வழிபாடு செய்துள்ளார். அவை வியாசேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. காசியில் வியாசர் வழிபட்ட பெரிய சிவாலயம் உள்ளது.

ஒரு முறை காசியில் வழிபாடு செய்த வியாசர் நாராயணனே பரப்பிரம்மம் என்று கூறியதுடன் கையைத் தூக்கி இது சத்தியம் என்றார். அதைக் கண்டு கோபித்த நந்தி தேவர் தூக்கிய கையை அப்படியே இருக் கட்டும் என்று கூறிச் சபித்தார். கையை மடக்க முடியாது பல துன்பங்களுக்கா ளான வியாசர், காஞ்சிபுரத்திற்கு வந்து லிங்கம் அமைத்து வழிபட்டார். அதன் பயனால் கை முன்போலவே இயங்கியது. அவர் வழி பட்ட லிங்கத்திற்கு வியாசசாந்தாலீசுவரர் என்பது பெயராகும்.

இந்த ஆலயத்திற்கு அருகிலேயே இவரது முப்பாட்டனான வசிட்டர் பூசித்த வெடித்துக் கூடிய வசிட்டேசுவரர் எனும் லிங்கம் அமைந்துள்ள ஆலயம் உள்ளது.

வியாசர் ஒருநாள் நெருப்பு வேண்டி அரணியைக்( நெருப்பு கடையும் கட்டை) கடையும் வேளையில் கிருதாசி என்பவள் கிளி வடிவில் வந்து மரக்கிளையில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டு அவள் மீது காதல் கொண்டதால் அவரது வீரியம் நெருப்பில் வீழ்ந்தது. அந்தக் கணத் திலேயே அவருக்குக் கிளி வடிவுடன் ஒரு மகன் பிறந்தார். அவரே சுகப்பிரம்மம் ஆவார்.

திருப்பரங்குன்றத்தில் வியாசருக்கும் அவரது தந்தையான பராசர முனிவருக்கு மான திருவுருவச் சிலைகள் பெரியதாகவும், கம்பீரமாகவும் பாறையில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட் டுள்ளன. இவற் றிற்கு தினப்பூசைகள் செய்யப்படுகிறது. இருவர் தலையிலும் பெரிய வட்டமான சடாமுடி தலைப்பாகை போல் அமைந் துள்ளது.

## சுகப்பிரம்மம்

வியாசரின் குமாரனான சுகர் பிரம்ம ஞானியாவார். நாரதரிடம் ஞான உபதேசம் பெற்றவர் அவர் பல இடங்களில் சிவ வழி பாடு செய்துள்ளார். அத்தலங்களில் பெரு மான் சுகநாதேசுவரர் சுகேசுவரர் என்னும் பெயருடன் வீற்றிருக்கின்றார்.

சேலம், பூவனூர், காஞ்சிபுரத்தை அடுத்த களத்தூர் முதலியவை சுகர் வழி பட்ட தலங்களாகும். சுகர் அருளியதாகச் சொல்லப்படும் நாடி சோதிடம் பெருஞ் செல்வாக்குடன் உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## புண்டரீகர்

கர்க கோத்திரத்தில் வந்த கர்த்தமன் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றிய இவர் பௌண்டரீகயாகம் என்பதைச் செய்தார். அதனால் புண்டரீகர் எனப் பெயர் பெற்றார். அதில் தங்களுக்கு அவிர்பாகம் வேண்டுமென்று இராட்சசர்கள் (அசுரர்கள்) கேட்டனர். அவர்களுக்கு அஞ்சிய தேவர்கள் யாகசாலைக்குள் ஓடி ஒளிந்து கொண் டனர்.

பிறகு இவர் மாயையால் ஒரு மண்டபத்தைச் சிருஷ்டித்து அதில் வாத்ய கோஷங் களைச் செய்தும், ஒரு பிரம்மச்சாரியிடம் விதவை காதல் வசனம் பேசும்படியும் செய்தார். அந்த வாத்ய ஒலியிலும் அவர்களுடைய காமப்பேச்சிலும் ஈடுபட்ட இராட்சதர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள்.

அந்த நேரத்தைப் பயன்படுத்தி புண்டரீகர் தேவர்களுக்குத் தம் யாகத்தில் அவிர்பாகம் அளித்து யாகத்தை நிறைவு செய்தார். அசுரர்களை ஏமாற்றி வஞ்சித்த பாவம் தீர, காசியிலும் . குடந்தையிலும். காஞ்சியிலும் சிவவழிபாடு செய்து பேறு பெற்றார்.

திருநாகைப் புராணத்தில் புண்டரீகர் எனும் முனிவர் கூறப்பட் டுள்ளார். இவர் தம் பூத உடலோடு முக்தி பெற விரும்பி தவம் செய்தார். சிவபெருமான் இவருக்கு மூன்று முறை காட்சியளித்து அருள் பாலித்தார். மூன்றாம்முறை நாகப் பட்டினத்தில்வழிபட்ட போது அவரைப் பூதஉடலுடன் தம்முள் சேர்த்துக் கொண்டு காயாரோகணர் ஆனார்.

## மதங்கர்

**ம**தங்கர் தாழ்ந்த குலத்தில் பிறந்து தவபலத்தால் மேன்மை பெற்று ரிஷியானவர். யானைகளின் நடுவில் இருந்ததால், மதங்கர் எனப்பட்டார். இவருடைய இடம் மதங்காசிரமம் எனப்பட்டது, வாலி, துந்துபி என்னும் அரக்கனை வென்றபின் அவன் உடலைத் தூக்கி இவர் ஆசிரமம் இருந்த மலைமீது எறிந்தான். அதைக் கண்டு இவர் கோபித்து தன் எல்லைக்குள் வந்தால் அவன் தலை வெடிக்கட்டும் சாபமளித்தவர்.

சூரியனிடமிருந்து இந்திரவில்லைப் பெற்று பரசுராமனுக்கு அளித்தவர். பிரியம்வதன் என்ற கந்தர்வன் தன்னை மதிக்காததால் அவனை யானை யாகும்படிச் சபித்தவர். அவன் ஐராவதம் வழிபட்ட திருவெண்காட்டை அடைந்து பெரு மானை வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றான். திருவெண்காட்டில் மதங்கர் பூசித்த மதங்கேசுவரர் உள்ளார்.

காஞ்சிபுரத்தில் மதங்கர் வழிபட்ட மதங்கேசுவரம் உள்ளது. அது பல்லவர்களால் கட்டப்பட்ட கலைக்கோயிலாக விளங் குகிறது.

பார்வதி தேவி இவருக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து சிவபெருமானை மணந்து கொண்டாள். அதை யொட்டி அவள் மாதங்கி என்று அழைக் கப்படுகிறாள். அபிராமி அந்தாதியில் பட்டர், அம்பிகையை மதங்கர் குலப் பெண்களில் தோன்றிய பெருமாட்டி என்கிறார்.

மதங்கேசுவரம்–காஞ்சிபுரம்

## ரிஷ்ய ச்ருங்கர்

**வி**பாண்ட ரிஷியின் புதல்வர். ரோம பாதரின் மகளான சாந்தையை மணந்தவர். தசரதன் வேண்டுகோளின்படி புத்திர காமேஷ்டி யாகம் செய்து இராமரும் அவர்களது சகோதரர்களும் பிறக்கச் செய்தவர். இவர் வழிபட்ட தலம் மப்பேடு ஆகும். இவர் பெயரால் இங்குள்ள இறைவன் ச்ருங்கேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். தமிழில் இவரைக் கலைக்கோட்டு முனிவர் என அழைப்பர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## விசுவாமித்திரர்

புரூரவனின் பேரனும் காதிராஜனின் புதல்வருமானவர் விசுவாமித்திரர். இவருக்கு 108 புதல்வர்கள். ஒரு சமயம் வேட்டைக்குச் சென்று களைத்த போது அங்கிருந்த வசிட்டர் இவரை உபசரித்தார்.

வசிட்டர் காமதேனுவிட மிருந்து வேண்டியதை விரும்பியவாறு பெறுவதைக் கண்டார். அந்தக் காமதேனுவை எப்படி யாவது அடைய வேண்டு மென்று விரும்பினார். அந்தப் பசுவைப் பிடித்து வரும்படி காவலர்களை ஏவினார். முயன்றார். அப்போது காமதேனுவின் உடலிலிருந்து தோன்றிய பெரும்படை இவருடைய படையை அழித்ததுடன் இவரையும் துன்புறுத்தியது.

அதைக் கேட்டுக் கோபித்த இவருடைய புதல்வர்கள் போரிட வந்தனர். அவர்களை வசிட்டர் தனது கோபாக்கி னியால் எரித்துச் சாம்பலாக் கினார். அதன் மூலம் தவமே பெரியது என்பதை உணர்ந்த விசுவாமித்திரர் கடுந்தவம் மேற் கொண்டார்.

தவ ஆற்றால் ப்ரம்ம ரிஷி என்ற பட்டத்தைப் பெற்றார். திரிசங்கு என்ற மன்னனுக்காகப் புதிய சுவர்க்கத்தை அந்தரத்தில் படைத்தவர். சிவனைத் தனது உக்ர மயமான தவத்தால் மகிழ்வித்து ப்ராம ணன் ஆனவர். இவருக்கு கௌசிகர் என்ற பெயரும் உண்டு. காஞ்சியில் இவர் வழிபட்ட ஆலயம் கௌசிகேசம் என்ற பெயரில் காமாட்சியம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ளது.

இவர் தீர்த்த யாத்திரை செய்து அனேக சிவத் தலங்களை வழிபட்டுப் பேறு பெற்றவர். இவரை ராஜரிஷி என்பர்.

இவர் தனக்கென ஒரு உலகைப் படைத்து அதில் விசுவாமித்திரர் என்ற நட்சத்திரமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்.

தர்ப்பைப் புல்லில் ஒரு வகைக்கும் விசுவாமித்திரம் என்ற பெயர் உண்டு. விலங்குகளில் நரியை விசுவாமித்திரம் என்பர்.

விசுவாமித்திரர் இராமர் லட்சுமணர்களுக்கு பலா, அதிபலா மந்திரத்தை உபதேசித்தவர். இராமரைச் சீதையின் சுயம்வரத்திற்கு அழைத்துச் சென்று மண முடிக்கச் செய்தவர். ௐ

மந்திரங்களின் மாதா என போற்றப் படும் காயத்திரி மந்திரத்தைக் கண்டறிந்து உலகிற்கு வெளிப்படுத்தியவர் விசுவாமித்திரர் இந்த சொல்லுக்கு பேரண்டத்தின் நண்பன் என்பது பொருள்.

இவருக்கு மேனகையிடம் பிறந்த மகள் சகுந்தலை. அவளை துஷ்யந்தன் மணந்தான். அவர்கள் இருவருக்கும் பிறந்த வன் பரதன். பரதன் சக்ரவர்த்தியாக முடி சூடி நாட்டை ஒரு குடைக்கீழ் ஆண்டான். அவன் பெயராலேயே இந்த நாடு பாரத தேசம் என்று அழைக்கப்படுகிறது.

## குச்சகர்

கடகமென்னும் பட்டினத்திலிருந்தவர். இவரது குமாரன் கௌசிகன் இவர் தம் பிள்ளைக்கு உசத்திய ரிஷியின் பெண்ணான விருத்தை என்பவளை மணம் பேசி முடித்தார். திருமணத்திற்கு முன்பாக அப்பெண்ணை யானை துரத்த, அவன் மடுவில் வீழ்ந்து மாண்டாள். அவர் தம் தபோபலத்தால் யமனை அழைத்து மீண்டும் அவளை உயிர்ப்பிக்கச் செய்தார். அவளைத் தம் மகனுக்கு மணமுடித்தார்.

இவர் கோட்டூரில் வழிபட்டுப்பேறுபெற்றார் என்று தலபுராணம் கூறுகிறது ௐ



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## காலவன்

பிரம்மதேவனின் பேரனும் பிரம்ம புத்திரரான மகனான காசிபனின் மகனுமாக இருப்பவர் காலவன். இவன் மிகுந்த தவம் செய்து மோட்சம் வேண்டி பல தலங்களை வணங்கியபின் கோவை பேரூர் சென்றார். அங்கு பட்டிப் பெருமானுக்கு வடகிழக்கில் காலவேச்சரமென்னும் ஆலயத்தை அமைத்து அதில் தம் பெயரால் காலவேசர் என்னும் சிவலிங்கத்தைத் தாபித்து நெடுங் காலம் சிறப்புடன் வழிபட்டான்.

அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் உமையுடன் விடை மேலி ருந்து காட்சியளித்தார். அவன் அவரைப் போற்றிப் பணிந்து முக்தியரு ளும்படி வேண்டினான். பெருமான் அங்குள்ள அரசம் பலத்தில் நாம் அர்த்தநாரீசுவரராக நின்று நடம் புரிவோம். அதைக் காணும் வேளையில் உனக்கு முக்தி தருவோம் என்றார். அதன்படியே பூசித்து தவம் மேற்கொண்ட அம்முனிவன் நெடுநாள் சென்றபின் ஒருநாள் அரசம் பலத்தில் பெ ரு மானின் திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்து முக்தி எய்தினான்.

கோவை பேரூர் பட்டீசுவரர் ஆலயத் திற்கு அருகில் காலவேச்சரமென்னும் ஆலய முள்ளது.அதிலுள்ள பெருமான் கால வேசர். இங்கு நுழைவாயில் மீது கோபுரத் திற்குப் பதில் பெரிய நந்தியின் திருவுருவம் சுதைச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. பேரூர்ப் புராணத்தில் காலவன் வழி பட்டுப் பேறுபெற்றது சிறந்த சித்தாந்தக் கருத்துக் களுடன் கூறப்பட்டுள்ளது. ஆதியில் இங்குள்ள அரச மரத்தின் கீழேயே அரசம் பலம் அமைந்தி ருந்தது என்று தலபுராணம் கூறுகிறது.

## கொங்கணர்

இவர் கொங்குநாட்டில் தோன்றிய ரிஷி யாதலின் இப்பெயர் பெற்றார். பளிக்க சாதியார், ஒருசமயம் இவர் தனது வைத்திய குளிகையை வீரட்டகாச மூர்த்தியான சிவ லிங்கத்தின் மீது வைத்தார். அந்தக் குளிகை எதையும் சாம்பலாக்கிவிடும் தன்மை கொண் டது.சிவலிங்கம் அதை உள்ளே இழுத் துக் கொண்டது.உடனே வருந்தி சிவ பெருமானைப் பூசித்து அக்குளிகையை மீண்டும் பெற்றார்.

இவர் காட்டில் தவம் செய்து கொண் டிருந்தபோது ஒரு கொக்கு இவர் மீது எச்ச மிட் டது. அதைக் கோபத்தோடு நோக்கி னார்.உடனே அது எரிந்து சாம்பலாகி விட்டது.

பிறகு இவர் திருவள்ளுவர் இல்லத் திற்குப் பிச்சை கேட்டு வந்தார். திருவள்ளு வரின் மனைவி உள்ளே கணவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்ததால் பிட்சை கொண்டுவரக் காலதாமதமாகி விட்டது. தாமதித்துப் பிச்சையிட வந்த வாசுகியை அவர் உற்று நோக்கினார்.

வாசுகி, என்னைக் கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா என்றாள். அதைக் கேட்டு கொங்கணர் ஆச்சர்ய மடைந்தார். காட்டில் நடந்ததும் தனக்கு மட்டுமே தெரிந்ததுமான அந்த செய்தியை வீட்டில் இருந்தபடியே இவள் எப்படி அறிந்தாள் என வியந்தார். பிறகு அவளி டம் ஞான உபதேசம் பெற்று மேன்மை அடைந்தார்.

இவரை அகத்தியர், போகர் ஆகி யோரின் சீடரென்றும் கூறுவர். தஞ்சாவூ ரில் இவர் லிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறுபெற்றார் என்பர். இவர் அமைத்த லிங்கம் கொங்கணேசுவரர் என்று அழைக் கப் படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# புராணங்களைச் சொன்ன ரிஷிகள்

மூத்தோர் சொல் வார்த்தை அமுதம் என்பது பழமொழி. ஒழுக்கம் மிகுந்த பெரியோர்கள் பல நீதிகளைக் கதைகளாகவும் வரலாறாகவும் கூறியுள்ளனர். அவர்களால் சொல்லப்பட்டவைகளே நம்மை நல்வழிப்படுத்துகின்றன. அதனால் பெரியோர்களிடம் சென்று அவர்கள் கூறுவதை மனதில் வாங்கி அதன்படி நடக்க வேண்டும் ரிஷிகளும் முனிவர்களும் அநேக புராண வரலாறுகளை மக்களுக்காக எடுத்துக் கூறியுள்ளனர். பெரும்பாலான புராணங்கள் ரிஷிகள் கூறியதாகவே உள்ளன.

ரிஷிகளும் முனிவர்களும் பெரிய வேள்விகள், விழாக்கள் நடைபெறும் இடங்களில் கூடியிருக்கும் போது இடை இடையே கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் பயனுடையதாக்கிக் கொள்ள பெரியோர்களிடம் பழைய வரலாறுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். அவைகளே நூல்களாகப் பின்னர் வடிவம் பெற்றன. புராணங்களில் அரிய நீதிகளும், வாழ்வியல் ஒழுக்கங்களும் ஆற்ற வேண்டிய கடமைகளும் கூறப்பட்டுள்ளன. புராணங்களை கூறும் ரிஷிகளில் சிலரை இங்கே சிந்திக்கலாம்.

## சூத முனி

பெரும்பாலான புராணங்கள் சூத முனிவர் கூறியதாகவே உள்ளது. இவர் வேள்விகள், விழாக்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அங்குக் கூடியிருக்கும் முனிவர்கள், அன்பர்கள் வேண்டினால் புராணங்களை எடுத்துக் கூறுவது வழக்கம்.

இவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சொன்ன புராண வரலாறுகள் ஏராளமாகும். இவரை ஆதிபௌராணிகள் என்பர் (பௌராணிகள் என்போர் புராணங்களை எடுத்துக் கூறுபவர்)களாவர். வியாசர் இவருக்கே முதலில் புராணங்களைக் கூறினார். இவர் மூலமே புராணங்கள் உலகில் பரவின.

இவர் பெயரால் சூதசம்ஹிதை என்ற நூல் உள்ளது.

## அகத்தியர்

அகத்தியரும் பல புராணங்களை மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். திரு மயிலைப் புராணம் முதலியவை அகத்தியர் கூறியதாக உள்ளன.

## உபமன்யு முனிவர்

உபமன்யு முனிவர் வியாக்ரபாத முனிவரின் குமாரர். இவர் பசியால் பால் வேண்டி அழுதபோது சிவபெருமான் பாற்கடலையே தோன்றுபடிச் செய்தார். இவர் அடியவர்களின் வரலாற்றை வடமொழியில் எழுதியுள்ளார். அது உபமன்யு பக்த விலாசம் என்று அழைக்கப்படுகிறது.

சேக்கிழார், பெரிய புராணத்தில் உபமன்யு முனிவரே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றையும் அவர் மூலமாக நாயன்மார்களின் வரலாற்றையும் கூறுவதாகப் பாடியுள்ளார்.

## தௌமியர்

இவர் உத்தசம் என்னும் ஆற்றங் கரையில் வாழ்ந்திருந்தவர். பாண்டவர்களின் குலகுருவாகத் திகழ்ந்தவர். இவர் பாண்டவர்களைத் திரௌபதியின் சுயம் வரத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு அவளைத் திருமணம் செய்து வைத்தவர். இவர் பல தலங்களுக்குச் சென்று சிவ வழிபாடு செய்துள்ளார். மகாசிவபக்தர் அருச்சனனுக்குப் பல தலங்களின் சிறப்புக்களைக் கூறி அவனைத் தீர்த்த யாத்திரை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்யுமாறு கூறியவர். தமிழ்நாட்டில் வழங்கும் சில புராணங் கள் தௌமியரால் கூறப்பட்டதாக உள்ளது. சில தலங்களில் தௌமி யருக் குத் திருவுருவங்கள் உள்ளன.

### சனத்குமாரர்

சனற்குமாரமுனிவர் பெரும்புரா ணங் களின் சில பகுதிகளைக் கூறியுள்ளார். சிவபுராணத்திலுள்ள ஒருபகுதி சனத் குமார சங்கிதை என வழங்குகிறது. இவரி டமிருந்து சிவஞானம் பெற்றவர்கள் சைவ சித்தாந்தத்தை விவரித்துள்ளனர். இவர் சைவ சித்தாந்திளின் குருவாகப் போற்றப் படுகிறார்.

இதுபோன்று ஏராளமான ரிஷிகள் தல புராணங்கள் நீதிக் கதைகள், தெய்வ லீலைகள் ஆகியவற்றை விளக்கிக் கூறியுள்ளனர்.

## ரிஷிகளும் விலங்குகளும் பறவைகளும்

புராணங்களில் ரிஷிகளில் பலர் பறவை கள், விலங்குகளின் பெயரால் குறிக்கப்படு கின்றனர். விசுவாமித்திரம் என்பது நரியை யும் விசுவாமித்திரரையும், வியாக்ரம், வியாக் ரபாதமுனியையும், புலியையும் பாரத்வாஜம் பாரத்வாஜ ரிஷியையும், வலியன் பறவை யையும், கோகிலம் கோகில முனியையும், குயிலையும் , கேகயம் கேகய முனிவரையும் மயிலையும், ஜம்பு என்பது ஜம்பு ரிஷியையும் நரியையும், மதங்கன் என்பது யானையை யும் மதங்கமா முனிவரையும் குறிக்கின்றன.

இவ்வாறே விலங்குகள் பறவைகளுக்குரிய அநேக பெயர்கள் ரிஷி களுக்குப் பெய ராக உள்ள தைக் காண் கிறோம்.

இதற்கு, பல கார ணங் கள் கூறப்படுகின்றன. முதல் வகையில் இம்முனி வர்கள் தம் தவத்தை மற்ற வர்கள் கலைக்காதிருக்க விலங் கு கள், பறவைகள் வடிவம் கொண்டிருந்தனர் என்று கூறுவர்.

சில சமயம் பறவைகள், விலங்குகள் மீதுள்ள அன்பால் அவற்றின் உருவத்தைக் கொண்டனர் என்றும் கூறுவர்.

இம்முனிவர்கள் இயற்கையின் அதிச யத்தால் தோன்றி மேற்குறித்த பறவைகள் விலங்குகளால் வளர்க்கப்பட்டுப் பெரிய நிலையை அடைந்தார்கள் என்பர். ஐம் பெரும் காப்பியங்களில் ஒன்றான மணி மேகலையில் ஒருவன் ஆபுத்திரனைப் பசு பெற்ற மகன் என இழித்துப் பேசஅந்த வேளையில் ஆபுத்திரன், வேதம் கூறும் ரிஷி களில் பலர் பறவைகள், விலங்குகளில்இருந்து தோன் றியதை அவனுக்கு எடுத்துக் கூறுவதைக் காண் கிறோம்

ப சு வி ட மி ரு ந் து அசலனும் மானிடமி ருந்து ச்ருங்கனும் புலியிட மிருந் துரு விரிஞ் சனும், நரியி டமிருந்து கேச கம்பலனும் பிறந்ததாக அதில் கூறப்பட் டுள்ளது.

சில சமயங்களில் முனி வர்களும், ரிஷிகளும் பிறரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

டம் பெற்ற சாபத்தால் பறவை அல்லது விலங்குகளின் உருவத்தைப் பெற்று,. அவ்வடிவில் இருந்து சிவபூசை செய்து மேன்மை பெற்றுள்ளனர்.

காரணம் பல இருப்பினும் ரிஷிகளைப் பறவைகள் விலங்குகளோடு தொடர்புபடுத்தும் வழக்கம் நெடுங்காலமாக இருந்துவருகிறது.

பல திருத்தலங்களில் முனிவர்களும் ரிஷிகளும் பறவைகள், விலங்குகள் உருவுடன் வழிபட்டதாகக் கூறுவர். பாரத் வாஜம் என்பது கரிக்குருவியாகும். இதனை வலியன் என்பர். வலியன் வடிவில் இருந்த முனிவர் பாரத்வாஜர் எனப்பட்டார். இவர் வழிபட்ட சிவலிங்கம் பாரத்வாஜேஸ்வரம் என்றழைக்கப்படுகிறது.

நகுலம் எனில் கீரிப்பிள்ளை. கீரிப்பிள்ளை வடிவில் இருந்த முனிவர் வழிபட்ட தலம் நகுலேசுவரம். இது இலங்கையில் உள்ளதாகும். நகுல முனியை கீரிமுனி எனவும் அழைக்கின்றனர்.

வியாக்ரபாதர் புலிக்கால்களைக் கொண் டிருந்ததால் அப்பெயர் பெற்றார். அவர் வழிபட்ட தலங்கள் புலீச்சரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

ச்ருங்கமுனி மான் கொம்புகளைப் போன்ற நீண்ட கொம்புகளைக் கொண் டிருந்த தால் இவர் ரிஷ்யசிருங்கர் எனப்பட்டார். அவர் வழிபட்ட தலம் திருவள்ளூரை அடுத்த மப்பேடு ஆகும். இவரைக் கலைக் கோட்டு முனிவர் எனவும் கூறுவர். இவரது மனைவி சாந்தை இவர் தசரதனுக்குப் புத்திர காமேஷ்டி யாகம் செய்து இராமன் முதலியவர்களைப் புதல்வராகப் பெறும்படிச் செய்தார் என்று இராமாயணம் கூறுகிறது.

காக மாமுனிவர் காக வடிவில் இருந்து வழிபட்டுள்ளார். காகபுஜண்டரும் காக வடிவில் இருந்து வழிபட்டுள்ளார். அவர் வழிபட்ட தலம் ஆலப்பாக்கம் ஆகும்.

மணங்கர் எனும் முனிவர் சாபத்தால் முயல் வடிவம் பெற்றதுடன் அவ்வடிவில் திருப்பாதிரிப்புலியூரில் வழிபட்டுப் பேறு பெற்றார்.

தலபுராணங்களிலும், மகாபுராணங்களிலும், ரிஷிகளைப் பறவைகள், விலங்குகளோடுதொடர்புடுத்திக் கூறப்பட்டுள்ளனர். ௐ

## குண்டலி ரிஷி

**குண்டலினீ என்பது உடலில் மறைந்துள்ள அபூர்வ சக்தியாகும். அந்தச் சக்தியை எழுப்பி அதன் மூலம் சிவநிலை எய்திய ரிஷியைக் குண்டலர் என்றழைக்கின்றனர். இவர் வாழ்ந்து சிவநிலை எய்திய தலம் திருவக்கரையாகும். திருவக்கரையிலுள்ள சந்திரமௌலீசுவரர் ஆலயத்தின் தெற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள தனிச் சந்நிதியில் குண்டலி ரிஷியைத் தன்னுள் ஏற்றுக்கொண்ட லிங்கம் உள்ளது.** ௐ

## காஞ்சி மாநகர் சிவாலயங்களில் வழிபட்டுப் பேறுபெற்ற முனிவர்களில் சிலர்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்க்கண்டேயர் | பார்க்கவர், | பராசரர், | கௌச்சகேச்வரர், | குச்சன் , |
| ஜைகிஷவ்யர் | கௌசிகர், | தௌமியர், | கண்ணீசர், | பெரிகுச்சர், |
| வியாச சாந்தாலீசர், | வசிட்டர் | பஞ்சதபர், | கௌசிகர் 2, | உரோமேசர், |
| மதங்கர், | கௌதமர், | சிகி, | வீதகவ்யர், | மௌத்தகல்யர், |
| மாண்டு கன்னீ, | காசிபர், | கிஷிபர், | குணரகிதர், | முற்கலர் |
| நாரதேசர், | ஆங்கீரசர், | உக்ரர், | வியாசர் , | கூரேசர் |

**இவர்கள் வழிபட்ட லிங்கங்கள் இவர்கள் பெயராலேயே தனி ஆலயங்களிலோ ஆலயங்களின் பிராகாரங்களிலோ அமைந்துள்ளன.** ௐ


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# கௌதமர் – அகல்யாதேவி

பாரததேசத்தின் மிகப் புராதனமாக கோத்திரங்களில் கௌதம கோத்திரம் முதன்மை பெற்றதாகும். இதைத் தோற்று வித்தவர் கௌதமரிஷி ஆவார்.

கௌதமர் என்னும் பெயரில் அநேக ரிஷிகள் தோன்றி மக்களுக்கு உயரிய உபதே சங்களைச் செய்தும், மந்திரங்களைக் கண்டு பிடித்து அளித்தும் உதவியுள்ளனர். அவர் களில் குறிப்பிடத்தக்க இருவரைப் பற்றிய செய்திகளை இங்கே அறிந்து மகிழலாம்.

முதல் கௌதமர் சிவாகமங்களில் கூறப் பட்டுள்ள கௌதமரிஷியாவார். சிவபெரு மானால் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சரிஷி களில் ஒருவர். சிவபெருமானிடமிருந்து ஆகம ஞானத்தைப் பெற்று உலகில் பரப்பி யவர். இவரிடமிருந்து ஒரு சிவாச் சார்ய குலம் தழைந்தது.

இவர் பூமியில் அநேக இடங்களில் சிவபூசை செய்து பேறு பெற்றுள்ளார். பார்வதி தேவி இவருக்கு மகளாகத் தோன்றி னாள். அதையொட்டி கௌதமி என்று அவள் அழைக்கப்படுகிறாள். ஒருசமயம் சிவபெருமானின் சாபத்தால் பூமிக்கு வந்த பார்வதி தேவியார் இவரிடம் சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு சிவபூசை செய்து அதன் பயனால் மீண்டும் சிவபெருமானை அடைந் தாள்.

பச்சையம்மன் ஆலயங்களில் கருவ றைக்கு நேர் எதிரில் அவளை நோக்கிய வாறு இவர் எழுந்தருளியிருப்பார். நீண்ட சடையுடன் விளங்கும் இவர் வலது கையில் சிவலிங்கத்தையும்இடது கையில் ஜபமாலை யும் கொண்டு அம்பிகைக்கு உபதேசம் செய்யும் கோலத்தில் உள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவண்ணாமலையில் கௌதமர் நெடுங்காலம் தங்கித் தவமியற்றியுள்ளார். அவர் ஆசிரமம் இருந்த இடம் இப்போதும் கௌதம ஆசிரமம் என்றே அழைக்கப் படுகிறது. அங்கே பெரிய மண்டபமும் கௌதமர் ஆலயமும் உள்ளன.

கௌதர் வழிபட்ட லிங்கம் கௌதமேசுவரர் என்று அழைக்கப்படுகிறது.

இரண்டாவதாகச் சொல்லப்படும் கௌதமர் புராணங்களில் கூறப்படும் பிரம்ம சிருஷ்டியால் உண்டான ரிஷியாவார். இவருடைய மனைவி அகல்யா.

இவர் பிரம்மகிரியில் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். இவருடைய மனைவி அகல்யா வருணனை உபாசித்து அவருடைய அருளைப் பெற்றிருந்தாள். அதனால் அவளிருக்கும் இடத்தில் பருவம் தவறாது மழை பொழிந்து எப்போதும் அந்த இடம் செழிப் பாகவே இருக்கும்.

ஒரு சமயம் உலகில் மழை பொய்த்து விட்டது. எல்லா இடங்களிலும் பஞ்சம் தலைவிரித் தாடியது. அகல்யாதேவியின் வருண உபாசனையால் கௌதமருடைய ஆசிரமம் மட்டும் செழிப்பாக இருந்தது. அதைக் கண்டு எல்லோரும் வியந்தனர். கௌதமர் தம்மைத் தேடி வந்த ரிஷிக் கூட்டத்தாரை அன்புடன் வரவேற்று தம்முடைய ஆசிரமத்தில் தங்க வைத்து உபசரித்தார். அவர்கள் மகிழ்வுடன் இருந் தனர்.

சில நாட்கள் கழிந்தன. அந்த முனிவர் களில் சிலருக்கு கௌதமர் ஆசிரமத்தின் வளத்தைக் கண்டு அதை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன் றியது. அதற்காக பல முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

ஒரு சமயம் குளத்தில் நீர் எடுப்பதில் அகல்யாவுக்கும் முனிபத்தினிகளுக்கும் மனக் கசப்பு உண்டானது. முனிபத்தினிகள் தமது கணவர்களான ரிஷிகளிடம் சென்று அகல் யாவைப் பற்றிக் குறைகூறி அவள் தம்மை அவமதித்தாள் என்று கூறினர்.

கோபம் கொண்ட ரிஷிகள் கௌதமரை அவமானப்படுத்தவும் அந்த ஆசிரமத்தைவிட்டுத் துரத்தவும் முடிவு செய்தனர்.

தமது மாயத்தால் ஒரு பசுவை உண்டாக்கி கௌதமர் ஆசிரமத்தின் அருகே அது மேயும்படிச் செய்தனர். கௌதமர் ஒரு கோலெடுத்து அதைத் துரத்தினார். ரிஷிகளின் சூழ்ச்சியால் அந்தப் பசு வீழ்ந்து மாண் டது.முனிவர்கள் உடனே கௌதமர் பசுவைக் கொன்று பெரும்பாவம் செய்து விட்டார். இனி அவர் முகத்தில் விழிக்கவும் தகாது என்று கோஷமிட்டனர். அவரையும் அகல்யா வையும் தள்ளி வைத்தனர்.

அவர்கள் தங்களுடைய ஆசிரமத்திலேயே பார்க்கவும் பேசவும்தகாதவர்களாக அவமதிக்கப்பட்டனர்.

கௌதமர் அவர்களிடம் சென்று தாம் கோவதை செய்யவில்லை என்றும், அது தானாகவே விழுந்து மாண்டது என்று பலமுறை பவ்யமாகக் கூறினார். அவர்கள் கௌதமரே, இந்த பிரம்மகிரியை ஒரு லட்சம் தரம் சுற்றி வந்து சிவபூசை செய்ய வேண்டும். கங்கைக்குச் சென்று நீராடித் திரும்ப வேண்டும், அப்போதுதான் உமது பாவம் தொலையும் என்றனர். அவர் கங்கைக்குச் செல்லும் போது அவரது ஆசிர மத்தை அபகரித்துக் கொள்ளவே அவ்விதம் கூறினர்.

கௌதமரும் அகல்யாவும் பிரம்ம கிரியை ஒரு லட்சம் முறை வலம் வந்தனர். கோடிமுறை பஞ்சாரட்சர ஜெபம் செய்த னர். அவர்களுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் உமாதேவியுடன் அங்கே தோன்றினார். இவரையும் ஆசீர்வதித்தார்.

கௌதமரிடம், கங்கையைத் தேடி நீங்கள் செல்ல வேண்டாம் அவளை உங்களுக் காக இங்கேயே வரவழைக்கிறேன் என்றார். தன் சடையில் இருந்து கங்கையின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒரு கூற்றை எடுத்து அங்கிருந்த நெல்லி மரத்தடியில் வைத்தார். அனைவரையும் வணங்கியபின் அங்கிருந்து அவள் பெருகி ஓடினாள். அந்த ஆறே இந்நாளில் கோதாவரி என்று அழைக்கப்படுகிறது. சிவபெருமான் அங்கே மகாலிங்கமாக எழுந்தருளினார். அவருக்குத் த்ரயம்பகேசுவரர் என்பது பெயராயிற்று. அந்த மகாலிங்கம் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கௌதமர் அகல்யாவுடன் அங்கேயே அருவநிலையில் இப்போதும் வசித்து வருவதாகக் கூறு கின்றனர்.

அகல்யாதேவி பேரழகி ஒருமுறை இந்திரன் அவளது அழகில் மயங்கி அவளி டம் இன்பம் துய்க்க விரும்பினான். ஒருநாள் அதிகாலையில் விடிவதற்கு வெகுநேரம் இருக்கும் போதே ஆசிரமத்திற்கு வந்து சேவல் வடிவம் கொண்டு கூவினான். முனிவர் பொழுது விடியும் வேளை வந்து விட்டது என எண்ணி விரைந்து எழுந்து ஆற்றுக்குச் சென் றார்.

அந்த வேளையில் இந்திரன் கௌதமர் வடிவுடன் அகல்யாவிடம் சென்றான். அவள் கௌதமர் வந்தார் என்று எண்ணி அவனு டன் இன்பம் துய்த்தாள். நெடு நேர மாகியும் பொழுது விடியா ததால், சந்தேகம் கொண்ட கௌதமர் ஞானதிருஷ்டியால் நடந்ததை அறிந்தார். விரைந்து ஆசிரமத்திற்கு வந்தார். அதை அறிந்த இந்திரன் பூனை வடிவம் கொண்டு ஓடினான். கௌதமர் அவன் செயலைக் கண்டு கோபித்தார்.

அவன் மேனி எங்கும் பெண்குறிகளா கும்படிச் சபித்தார். அதனால் அவன் மேனி எங்கும் பெண் குறிகளாகிவிட்டது. அவன் வெட்கமடைந்து பூமிக்கு வந்து ஒரு தாமரைத் தடாகத்தில் ஒளிந்து வாழ்ந்து வந்தான். ஶ்ரீ

## கண்வர்

கண்வர் அப்பிரதிரதன் என்பவருடைய குமாரர். இவருடைய குமாரர் மேதாதி. அவர் கடுமையான தவத்தை மேற்கொண்ட போது அவர்மீது புற்று வளர்ந்தது. அவரை மூடிவிட்டது. அதன்மீது ஒரு மூங்கில் முளைத்து, மூன்றாகக் கிளைத்தது. பிரம்மன் அதை வெட்டியெடுத்து மூன்று விற்களாக்கினான். அவற்றிற்குக் காண் டீபம், சார்ங்கம், பினாகம் என்று பெயரிட்டான். சாரங்கத்தைத் திருமாலும் பினாகத்தைச் சிவபெருமானும் எடுத்துக் கொண்டனர்.

கண்வரின் ஆசிரமம் அயோத்திக்கு மேற்கில் (லக்னோ வுக்கு அருகில் உள்ள) லட்சுமணபுரிக்கு அருகிலுள்ள பெருங்காட்டுக்குள் இருந்ததாகக் கூறுகின்றனர். இவர் விசுவாமித்திர முனிவருக்கும் மேனகைக்கும் பிறந்த சகுந்தலையை வளர்த்து அவளைத் துஷ்யந்தனுக்கு மணம் செய்து கொடுத்தவர். சிறந்த சிவபக்தர். சகுந்தலையிடம் துஷ்யந்தனுக்குப் பிறந்தவன் பரதன். அவன் பெயரா லேயே நம்நாடு பாரததேசம் என்று அழைக்கப் படுகிறது.

பல ஊர்களில் விசுவாமித்திரர் மேனகை வடிவங்கள் உள்ளன. மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலய ராஜ கோபுரத் தில் இடம் பெற்றுள்ள சகுந்தலையை ஏந்திக் கொண்டு நிற்கும் மேனகை அவளை மறுத்துப் பிரிந்து செல்லும் விசுவாமித்திரர் சிற்பங்களை இங்கே காணலாம் ஶ்ரீ



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நெடுநாட்களுக்குப் பிறகு தமது குருவான பிரகஸ்பதியின் வழிகாட்டு தலின் படி அவன் கடம்ப வனம் (மதுரை) சென்று சோமசுந்தரரை வழிபட்டான். சிவபெருமான் அவன் முன்னே தோன்றி .அவனுக்கு அருள்புரிந்து அவன் உடலில் பெண் குறிகள் யாவும் கண்களாகும்படிச் செய்தார். அது முதல்அவன் ஆயிரங் கண்ணன் ஆனான்.

கௌதமர் தன்னையும் உணராது வந்தனையும் உணராது இன்பத்தில் மகிழ்ந் திருந்த அகல்யாவைக் கல்லாகும் படிச் சபித்தார். பின்னானில் அந்தக் கல்லின் மீது ராமர் பாதம் பட்டதால் அவள் சாப விமோசனம் பெற்று மீண்டும் கௌதமரை அடைந்தாள். அப்போது சீதையை உபசரித்து தன்னிடமிருந்த உயர்ந்த பொருட்களை அவளுக்கு அளித்தாள்.

கௌதமர் பதிவிரதையான தமது மனைவி அகல்யாவைச் சபித்த பாவம் தீர பல தலங்களில் சிவபூசை செய்தார்.கௌதமர் பூசித்த லிங்கங்கள் கௌதமேசுவரர் என்று அழைக்கப்படுகின்றன. அகல்யையும் சிவ பூசை செய்தாள். அவள் வழிபட்ட லிங்கம் அகல்யேசுவரர் என்று அழைக்கப் படுகிறது.

கௌதமரின் நண்பராக விளங்கியவர் கண்வ மகரிஷி. இருவரும் சேர்ந்து பல தலங்களில் சிவபூசை செய்துள்ளனர். அச்சிறுபாக்கம் ஆட்சீவரர் திருக்கோயில் முதலானவற்றில் கௌதமரும் கண்வரும் பூசித்துப் பேறுபெற்றுள்ளனர் .

# கௌதமரிஷியும் திரியம்பகலிங்கமும்

கௌதமரும் அகல்யாதேவியும் வசித்து வந்த கௌதம ஆசிரமம் கோதாவிரியின் உற்பத்தித் தானமான பிரம்மகிரியில் உள்ளது. இது பன்னிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றான திரியம்பகம் ஆகும். பெருமான் இங்கே திரியம்பகேசுவரராக விளங்குகிறார்.

மும்பைக்கு அருகி லுள்ள நாசிக் ரோடு ஸ்டேஷன் என்னும் இருப்புப்பாதை நிலையத் திலி ருந்து ஏறத்தாழ 60 கி.மீ. தொலைவில் திரியம்பகம் உள்ளது. இங்குள்ள மலை யே பிரம்மகிரியாகும். மலை யடி வாரம் வரை நல்ல சாலை உள்ளது. இதனை திருவண் ணாமலையை வலம் வருவதுபோல் கிரி வலம் வருகின்றனர். இந்த பாதையின் நீளம் 30 கி,மீட்ட ராகும். மலைமீது கோதாவிரியின் உற்பத்தித் தானம் உள்ளது. இங்கே சிறிய கோதாவிரி அம்மன் ஆலயமும் உள்ளது.

மலையடிவாரத்தில் கௌதம குண்டம் என்னும் பெரிய குளம் உள்ளது. இங்கி ருந்தே கோதாவரி ஓடத் தொடங்குகிறது. கோதாவிரி ஆற்றின் கரையில் உயர்ந்த மேடான பகுதியில்கௌதமர் அகல்யா வுக்கு அருள்புரிய ஜோதிர்லிங்கமாகத் தோன்றிய திரியம்பகேசுவரர் ஆலயம் உள்ளது. கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயத் தின் உச்சியில் தங்கக் கலசமும் திரிசூலமும் உள்ளன.

கருவறைஆறடி ஆழத்தில் உள்ளது. சற்று இருட் டாக உள்ளது. பெருமான் ரோஜா மொட்டு போல் 3 சிறிய லிங்கமாகக் காட்சிய ளிக்கிறார். சுற்றிலும் நீர் சுரந்து ஓடிக் கொண்டே இருக்கிறது. கருவறைக்குள் பெண்கள் செல்வதில்லை.

மரணத்தை வென்று வாழ வைக்கும் மிருத்யுஞ்ஜய மந்திரத்தின் தேவதையாகப் பெருமான் விளங்குகிறார். இவர் பெயராலேயே அம்மந்திரம் "திரயம்பகம் யஜாமஹே சுகந்திம்" எனத் தொடங்குகிறது.திரியம்பகேசுவரர் கோயிலுக்கு அருகில் கங்காதேவி ஆலயம் உள்ளது. அதற்கு வடக்கே நீலாசலம் என்னும் நீலமலை உள்ளது. அதன்மீது நீல தீர்த்தமும் தத்தாத்திரேயர் ஆலயமும் உள்ளன.

கார்த்திகை மாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பமேளா நடைபெறுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# துருவாசர்

சிவபெருமான் திரிபுரமெரித்தபோது எழுந்த தீ முப்புரங்களை அழித்த பிறகு ஒரு குழந்தை வடி வில் நின்றது. தேவர்கள் இக்குழந்தை யார் எனக் கேட்கச் சிவபெருமான் இவன் துருவாசன் நாம் இவனை அத்திரி-அனுசூயைக்கு மகனாக அளித் தோம் என்றார்.

அதன்படி, அக்குழந்தை அத்திரி-அனுசூயா தம்பதியரை அடைந்தது, அனசூயாவின் கருவில் புகுந்து உரிய வேளையில் வெளிப்பட்டது. அவருக் குத் துருவாசர் என்று பெயர் சூட்டினர்.

பிறந்த எட்டாம் நாளில் துருவாசர், அத்திரி மகரிஷியைக் சொல்ல வந்த ஏகயன் என்ற அரக்கனை அழித்துத் தந்தையைக் காத்தார். அனுசுயாதேவி யின் மகனாக வளர்ந்தவர். கண்ணன், இராமன் முதலி யோரால் வழிபடப்பட்டவர். மிகுந்த கோபமும் ஆற்றலும் கொண்டவர்.

திருவண்ணாமலையில் மலை சுற்றும் பாதையில் தனிக்கோயிலில் இவர் வீற்றிருக் கின்றார். அண்ணா மலை ஆலயத்துள் கன்னிமூலை கணபதிக்கு அருகி லும் இவருடைய கல்திருமேனி அமைந்துள்ளது. இவ்விரண்டு இடங்களிலும் இவருக்குத் தினசரி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில் உற்சவ காமாட்சி சந்நிதியின் தெற்குக் கோட்டத்திலும் துர்வாச முனிவரின் திருவுருவத்தை அமைத்து வழிபடுகின்றனர். அம்பிகை அத்திரி முனிவரின் மகளாகத் தோன்றியதால் துர்வாச முனிவருக்குச் சகோதரி ஆகிறாள். இவரை உருத்திர முனி என்பர்.

திருக்களர் எனும் தலத்தில் துருவாசர் தவம் செய்து பெருமானின் திருநடனக் காட்சியைக் கண்டார். அந்தத் தாண்டவம் பிரம்ம தாண்டவம் என அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் நடராச ருக்கு நேர்எதிரில் என்றும் நின்று ஆனந்தக் கூத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கும் கோலத்தில், துருவாசரின் திருவுருவம் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது.

மாசி மாதம் (பௌர்ணமி) மக நாளில் துருவா சரும் கந்தமாதனத்து முனிவர்கள் 60,000 பேரும் காணப் பெருமான் திருநடனம் புரிந்தது ஐதீக விழாவாக நடை பெறுகிறது. துருவாசரின் உலாத் திருமேனி உலாவரச் செய்யப் படுகிறது. இத்தலத்தில் துருவாசர் அமைத்த தீர்த்தம் உள்ளது.

துருவாச முனிவர் செய்த புராணம் தௌர்வாசம் என்ப தாகும்.

### தத்தாத்திரேயர்

துருவாசரின் சகோதரர் தத் தாத்திரேயர். இவர் உயர்ந்த ரிஷி யாகப் போற்றப்படுகிறார். இவர் ஸ்ரீ சைலம், திருவிடை மருதூர் முத லான தலங்களில் சிவனை வழி பட்டுப் பேறு பெற்றுள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அத்திரி -அனசூயா

சப்தரிஷிகளில் ஒருவரான அத்திரி முனிவர் பிரம்மனின்கண்ணில் இருந்து தோன்றியவர். உயர்ந்த பதிவிரதையான அனசூயா தேவியை மணந்தவர். இவர் பல தலங்களில் சிவபூஜை செய்துள்ளார். அவை அத்ரீசங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இவர்களுக்கு சோமன், துருவாசர், தத்தாத்ரேயர் ஆகிய மூவரும் புதல்வராகத் தோன்றினர்.

சிவபெருமானின் கோபத்திலிருந்து தோன்றிய குழந்தையான துருவாசர் அவர் அருள் பெற்று அத்திரிக்கு மகனாகப் பிறந்தார்.

மூன்றாவது புதல்வரான தத்தாத்திரேயர் மும்மூர்த்திகளின் அம்சமாகத் தோன்றியவர். மூன்று முகங்களும் ஆறுகரங்களும் கொண்டவர். கரங்களில் சூலம், தாமரை ,அட்சமாலை, கமண்டலம், சங்கு, சக்கரம் ஏந்தியவர். பசுக் கூட்டங்களுடன் இருப்பவர். இவரைச் சுற்றிலும் வேதங்கள் நாய் வடிவில் சூழ்ந்துள்ளன. வடநாட்டி லுள்ள பெரும்பாலான துறவிகள் தத்தாத்திரேயரை வழிபட்டு தெய்வமாகவும் ஆதிகுருவாகவும் கொண்டுள்ளனர். கும்பமேளாவின் போது அலங்கரித்த பல்லக்கில் இவருடைய பாதுகைகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்று கங்கையில் நீராட்டுவதுடன் தாங்களும் நீராடுவர்.

ஒரு சமயம் பெரிய சபையொன்றில் எல்லோரும் பதிவிரதைகளில் உயர்ந்தவர் அனசூயாதேவி என்று கூறினர். அதைக் கேட்ட மும்மூர்த்திகளின் மனைவியரான பார்வதி, லட்சுமி, சரஸ்வதி ஆகியோர் பொறாமை கொண்டனர். தமது பதிகளான மும்மூர்த்திகளிடம் சென்று அனசூயாவின் கற்பைச் சோதித்து வருக என்றனர். அவர்களிடம் மும்மூர்த்திகள் அனசூயா மிகுந்த சக்திபடைத்தவள். அவளை சோதிக்க முற்படு வது துன்பத்தைத் தரும் என்றனர்.

முப்பெரும் தேவியர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. விடாப் பிடியாக இருந்து அவளைச் சோதித்து வருக என அவர்களை அனுப்பினர்.

மும்மூர்த்திகளும் தவசிகள் வடிவில் அத்திரியின் ஆசிரமத்தை அடைந்தனர். அப்போது அத்திரிமுனிவர் வெளியே சென்றிருந்ததால் அனுசூயா தனியாக இருந்தாள். அவள் அந்த மூவரையும் வணங்கி வரவேற்றாள். அவர்கள் அவளிடம் இரும்பினால் செய்த கடலைகளைத் தந்து உடனே வறுத்துத் தரும்படிக் கூறினர். அவள் அதைப் பெற்றுஒரு நொடியில் வறுத்துக் கொடுத்த ாள். அவர்கள் அதைக் கண்டு அதிசயித்தனர்.

அவளிடம், எங்களுக்குப் பசியாக இருக்கிறது. நாங்கள் விரும்பியவாறு உணவிட்டால் உண்டு பசியாறுவோம் என்றனர். அப்படியே ஆகட்டும் உமது விருப்பத்தைக் கூறுங்கள் என்றாள்.

அவர்கள் தாங்கள் ஆடையில்லாமல் பிறந்த கோலத்துடன் இருந்து எமக்கு உணவு அளிக்க வேண்டும் என்றனர். அதைக் கேட்டு ஒரு கணம் அவள் திகைத்தாள்.

என்றாலும், அப்படியே ஆகட்டும் என்றாள். ஒரு நொடியில் அந்த மூவரையும் கைக்குழந்தைகளாக ஆக்கி விட்டாள். அவர்கள் விருப்பப்படியே இருந்து உணவு புகட்டினாள். ஆசிரமத்திற்கு வந்த அத்திரி முனிவர் மூன்று குழந்தைகளைக் கண்டார். நடந்ததை அறிந்து மகிழ்ந்தார்.

முப்பெரும் தேவியர், அனசூயாவிடம் சென்ற தமது கணவன்மார்கள் நீண்டநாட்களாகியும் திரும்பி வராத தால் கவலை அடைந்தனர். புறப்பட்டு அத்திரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு கணவர்மார்கள் மூவரும் குழந் தை களாக மாறி விட்ட தையும் அவர்களை அனசூயா தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதையும் கண்ட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னர். தமது கணவன் மா ரை மீண்டும்சுயவடிவம் பெறச் செய் யப் பல வாறு முயன் ற னர்.அவர்களால் முடிய வில்லை. மனம் சோர்ந்த னர்.

அங்கு வந்த நாரதர் அனசூயாவின் சக்திக்கு முன்னால் உங்கள் சக்தி பயன ற்றது. நீங்கள் அவ ளைச்சரணடைந்து வேண் டினால் மட்டுமே உங்கள் கணவரைப் பெற முடி யும் என்றார்.

அ த ன் ப டி யே அவர்கள் அனசூயா தேவி யைப் பணிந்தனர். அனசூயாதேவிமும் மூர்த்திகளையும் முன் போலவே ஆக்கி தேவியரிடம் அளித்தாள்.

அனசூயா இவ்வாறு மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கித் தொட்டிலிலிட்டு ஆட் டிய இடம் சுசீந்திரம் என்பர். அங்கு தாணு மாலயப் பூந்தொட்டில் உள்ளது. (தாணு+ மால்+அயன்; உருத் திரன்+ விஷ்ணு+ பிரம்மா = தாணுமாலயன்)

அத்திரி முனிவர் ஒரு சமயம் தென்னகம் வந்து சிவசைலத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். அப்போது உமாதேவியாரை மகளாக இருக்கும்படி வேண்டினார். அதன் படி அவள் குழந்தையாகத் தோன்றி னாள். அவளுக்குப் பரமகல்யாணி என்பது பெயர்.

அத்திரியின் மகளானதால் அவளுக்கு அத்ரிஜா என்பதும் பெயரானது. சிவசைலத் தில் அவளை மணக்க வந்த இறைவன் கயிலாயநாதராக வீற்றிருக்கின்றார்.

கௌதமர் பிரம்மகிரியில் கோதாவ ரியை உற்பத்தி செய்தது போல் அத்திரி சிவசைலத்தில் கடனா நதி யைத் தோற்று வித்தார் என்கின் றனர்.

## ஜமதக்னி

**இரிஷிக** முனிவருக்குச் சத்தியவதியிடம் பிறந்த புதல்வர் ஜமதக்னி. இவரது மனைவி ரேணுகை. புதல்வர் கள் பரசுராமன் மற்றும் பலர். இவர் வில்வித்தை பயின்றபோது எய்த அம்புகளை ரேணுகா எடுத்து வந்து தந்தாள். அப்போது உச்சி வெயிலால் களைத்தபோது சூரியன் ரேணுகைக்குக் குடையும், பாரதட்சைகளையும் அளித்தான்.

ஜமதக்னி ரிஷியைக் கார்த்த வீரியார்ச்சுனன் கொன்றான். அவர் ஒளியுடல் பெற்றுச் சிவலோகம் சென்றார். ரேணுகை மாரியம்மன் எனும் பெயரில் கிராமிய தெய்வமானாள். ஜமதக்னி வழிபட்ட லிங்கம் ஜமதக்னீசுவரர் என்று அழைக்கப்படுகிறது,

**ரிஷிபஞ்சமி :** மானுடகுலத்தின் குல முதல்வர்களான ரிஷிகளை விநாயகர் சதுர்த்தியைத் தொடர்ந்து வரும் ஆவணி மாத வளர்பிறை பஞ்சமியன்று சிறப்புடன் வழிபடுகின்றனர். இந்த நாளை ரிஷிபஞ்சமி என்று அழைக்கின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# வசிஷ்டர்– அருந்ததி

சப்தரிஷிகளில் ஒருவராகத் திகழ்பவர் வசிட்டர். இவருடைய மனைவி அருந்ததி இவருக்கு நூறு புதல்வர்கள். இவர் ஒருமுறை தேகமின்றிப் போக வேண்டுமென்று நிமி எனும் அரசனால் சபிக்கப்பட்டு சிவனருளாள் மீண்டும் அகத்தியருக்குச் சகோதரராகப் பிறந்தவர்.

இக்ஷ்வாகு குலத்திற்குக் குலகுருவாக விளங்கியவர் இராமனுக்கு முடிசூட்டியவர். பின்பு அவனுக்கு ஞான வாசிஷ்டத்தை உபதேசித்தவர். வேதத்தின் சில பகுதிகள் இவரால் செய்யப்பட்டுள்ளன.

இவர் தனக்கென ஒரு நட்சத்திர மண்டலத்தை உருவாக்கி அதில் இருப்பவர். இவர் இருக்குமிடம் சப்தரிஷி மண்டலமாகும்.

இவரிடம் தெய்வீகப் பசுவான காமதேனு இருந்தது, அதை அடைய கௌசிக மன்னன் முயன்றான். அவனுக்காக அவனுடைய புதல்வர்கள் 100 பேரும் வசிட்டரை எதிர்த்து வந்தனர். அவர்களை வசிஷ்டர் தபோ பலத்தால் சாம்பலாக்கி விட்டார். அதையறிந்த கௌசிக மன்னன் கடுந்தவம் செய்து இவர்

வாயாலேயே பிரம்ம ரிஷி என்று பாராட்டும் பெற்றார். அந்த கௌசிக மன்னரே பின்னாளில் புகழ்பெற்ற விசுவாமித்திரர் ஆனார். (இவரும் தனக்கென ஒரு நட்சத்திர மண்டலத்தைப் படைத்து அதில் வசித்தார்.) வசிட்டர் சிறந்த சிவபக்தர். அநேக இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளார். அவை வசிட்டேசுவரர் என்று அழைக்கப்படகின்றன. காஞ்சி, காசி முதலிய தலங்களில் வசிட்டர் அமைத்த வசிட்டே சுவரர் ஆலயங்கள் உள்ளன.

பாடல் பெற்ற திருத்தலமான திருவதிட் டக்குடி (திட்டக்குடி)யில் வசிட்டர் பூசித்துப் பெறு பெற்றார். அவர் பெயரால் இங்குள்ள ஆலயம் வசிட்டேசுவரம் என்று அழைக்கப் படுகிறது. அவர் இங்கு நானூறு அந்தணர்க ளைக் குடியேற்றி பூசைகள் செய்ய ஏற்பாடு செய்ததுடன் வேண்டும் நிபந்தனைகளையும் அளித்தார் என்று தலபுராணம் கூறுகிறது. வசிட்டர் பெயரால் இத்தலம் வசிட்டர்குடி என வழங்கி வதிட்டகுடியாகி இப்போது திட்டக்குடி என வழங்குகிறது என்பர்.

## அருந்ததி

கர்த்தமன் என்னும் பிரஜாபதியின் மகள். வசிட்டரின் மனைவி. புராணங்கள் போற்றும் உயர்ந்த கற்புடைய மங்கையர் ஐவரில் இவ ளும் ஒருத்தி. பாரத தேசத்தில் வைதீக வழி திருமணத்தின் போது இவளைக் காட்டி இவளைப் போல் உயர்ந்த கற்புடன் விளங்க வேண்டு மென்று கூறுவர். வசிட்டர் இவளை கருஞ்சிவப்பு நிறமான நட்சத்திர மண்டலத் தில் வீற்றிருக்கும்படிச் செய்தார். துருவ மண்ட லத்திற்கு அருகில் சப்தரிஷி மண்டலம் என்னும் நட்சத்திர மண்டலம் உள்ளது. அதில்தான் அருந்ததியின் நட்சத்திரம் உள்ளது.

இவளுக்கு சக்தி முதலான 100 புதல்வர் கள் தோன்றினர். சத்தியின் மகனே பராசரர். பராசரிடம் தோன்றியவரே வியாசர்.

காசியில் அருந்ததி வழிபட்ட அருந்ததீசு வரர் ஆலயம் உள்ளது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## வசிட்டர்

இவர் புலியின் கர்பத்திலிருந்து வியாக்ர பாதர் முதலிய 19 பேர்களை உற்பத்தி செய்தார். அந்நாளில் வைகானசம் என்னும் மடுவில் பலினர் என்னும் அரக்கர்கள் வசித்த வந்தனர் அவர்கள் அவ்வப்போது வெளிவந்து தேவர்களைத் துன்புறுத்தி வந்தனர். வியாக்ரபாதரும் அவருடைய சகோதரர்களும் தமதுகோபாக்கினியால் அவர்களைக் கொன்றனர். அசுரர்களால் தூய்மை குறைந்த அந்த மடுவை ஆகாச கங்கை பெருகிய கங்கை யால் நிறைபச் செய்தனர். அதன் கரை உடைந்தது. அதுவே சரயு நதியாகப் பெருகி ஓடியது. .ஓ

## வசிட்டரும் விசுவாமித்திரரும்

வசிஷ்டரும்விசுவாமித்திரரும் ராமனோடு தொடர்பு கொண்டவர்கள். இராமருக்கு விசுவாமித்திரர் பலா அதிபலா மந்தி ரத்தை உபதேசித்தார். அவர்களைக் கொண்டு தாடகியை வென்றார். இராமலட்சுமணரை மிதிலைக்கு அழைத்துச் சென்று இராமர் சீதை மற்றும் இராமனின் சகோதரர்களுக்கும் திருமணம் செய்வித்தவர். வசிட்டர் ராமனுக்கு முடிசூட்டியவர்.அரிச்சந்திரன் வாய்மை தவறாதவன் என்று வசிட்டர் சொல்ல அவனை எப்படி யாவது பொய் சொல்ல வைப்பேன் என்று சபதம் செய்து அவனைப் பல இன்னல்களை அனுபவிக்கச் செய்தவர் இறுதிவரை அரிச்சந்திரன் பொய் சொல்லாததால் தோற்று அவனுக்கு நாடு நகரங்களை வழங்கினார். வசிட்டர் அரிச்சந்திரன் பெயரால் ஊர்களை உண்டாக்கி அரிச்சந்திரபுரம் என்று பெயரிட்டுள்ளார். ஓ

## --ததீசி முனிவர்--

சிவனடியார்களில் முதன்மை பெற்றவர். சிவனருள் பெற்றவர். இவர் தேகம் வஜ்ர மயமானது. ஒரு சமயம் திருமால் இவர் மீது கோபம் கொண்டு இவரை அழிக்கத் தனது சக்ராயுதத்டைித ஏவினார். அது அவருடைய உடலை கூறுசெய்ய முயன்று கூர்மழுங்கி அழிந்தது. திருமால் கலங்கி தாமே போருக்கு வந்தார். ததீசி தம் கால் விரல் நகங்களின் இருந்து பல திருமால் வடிவங்களைத் தோற்றுவித்து போருக்கு அனுப்பினார். அதைக் கண்டு அஞ்சி நடுங்கிய திருமால் இவரைச் சரணடைந்தார்.

தட்சனுடைய யாகத்திற்குச் சென்று அவனிடம் சிவபெருமானை அழைத்து முறையாக வேள்வி செய்ய அறிவுரை கூறி னார். அவன் ஏற்காததுடன் இவரை அவம தித்தான். அவன் யாகம் அழியும் படியும், அவனைத் தலையை இழக்கும்படி யும் சாபம் அளித்தவர்.

ஒரு சமயம் இந்திரன் தன் ஆயுதத்தை இழந்தான்.அதையறிந்த அசுரர்கள் அவன் மீது படை யெடுத்து வந்தனர். அதையறிந்த இந்திரன் திருமாலிடம் சென்று ஆயுதங் களைப் படைத்து அளிக்கும்படி வேண்டி னான். அவர் தேவர்கள் எல்லோரும் கூடிப் பாற்கடலைக் கடையச் சென்ற போது தமது ஆயுதங்களை ததீசி முனிவரிடம் கொடுத்து வைத்தோம். பாற்கடலில் கிடைத்த அமுதத் தை உண்டதாலும், அப்சரப் பெண் களு டன் விளையாடி மகிழ்ந்ததாலும் ஆயு தங் களை மறந்து போனோம்.அவர் ஆயுதங் களை மந்திர வலிமையால் உண்டு ஜீர ணித்து விட்டார். ஆயுதங்களின் சாரம் அவர் எலும்புகளில் கலந்துவிட்டது.அவர் எலும்பு களை உவந்து தந்தால் அரிய சக்தி மிக்க வஜ்ராயுதம் கிடைக்கும் என்றார்.

இந்திரன் ததீசி முனிவரிடம் சென்று ஆயுதத்திற்காக அவருடைய எலும்புகளைக் கேட்டான்.அவர்தன் யோக சக்தியால் உடலைவகுத்து அவனிடம் தந்தார். இந்தி ரன் அவருடைய முதுகெலும்பை எடுத்து வஜ்ராயுதமாகச் செய்து கொண்டான். அரக்கர்களை வென்றழித்தான்.

இந்திரன் ததீசி முனிவரின் உடலை அழித்து எலும்புகளைப் பிரித்தெடுத்த பாவம் தீர, பல தலங்களில் சிவ வழிபாடு செய்தான். . ஓ



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிற்ப ஓவியங்களில் ரிஷிகள்

சிவாலயங்களில் கோபுரங்கள், விமானங்கள் முதலியவற்றில் ரிஷிகளின உருவங்கள் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீ விமானத்தில் எட்டு திசைகளையும் நோக்கியவாறு எட்டு ரிஷிகள் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

தட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தில் அவருடைய உபதேசத்தைக் கேட்டு மகிழும் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் ஆகிய நான்கு ரிஷிகளின் உருவத்தை அமைக்கின்றனர். பிரம்ம தேவனைச் சுற்றிலும் ரிஷிகளை அமைக்கும் வழக்கமும் உள்ளது.

வேதாரண்யத்தில் வேதங்கள் நான்கு ரிஷிகளின் வடிவில் வழிபட்டன. அதையொட்டி அங்கு நான்கு வேதரிஷிகளின் உலாத் திருமேனிகள் உள்ளன.

பிட்சாடனர் கோலத்தைச் சுதை வடிவில் அமைக்கும் போது அவருடன் மோகினியையும் அமைப்பர். மோகினி யைச் சுற்றி காம வயப்பட்டவர்களான முனிவர் திருவுருவங்களை அமைத்துள்ளனர். மோஹினி வீதியுலா வரும் விமானத்தின் நாற்புறமும் ரிஷிகளின் உருவத்தை மரத்தால் செய்து வண்ணம் தீட்டிப் பொலிவுபடுத்தி வைத்துள்ளனர்.

ஆலயத் தூண்களில் ஏராளமான ரிஷிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரிஷிகள் இருக்குமிடம் இடத்தில் புனிதம் நிலவும் என்பதால் மண்டபத்திலும் மதில்களிலும் அவர்கள் திருவுருவங்களை அமைத்திருப்பதாகக் கூறுகின்றனர்.

திருவாரூரில் தியாகராஜர் புற்றிடங் கொண்டநாதர் கருவறைச் சுற்றியுள்ள மதில்களில் ரிஷிகளின் திருவுருவங்களை வரிசையாக அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

இறைவன் எழுந்தருளும் வாகனங்களான ஸ்ரீ கயிலாபர்வத வாகனம், சூரியப் பிறை, நாகம் முதலிய வாகனங்களைச் சுற்றிலும் ரிஷிகள் பலரின் திருவுருவங்களைக் காண்கிறோம்.ஸ்ரீகயிலாய மலையில் சிலர் ஒற்றைக் காலில் நின்றும், சிலர் மலைக் குகையில் வீற்றிருந்தும், சிலர் விலங்குகளுக்கு நடுவில் இருப்பவர்களாகவும் பலரைக் காண்கிறோம். சூரிய பிரபையின் நாற்புறமும் ஜெபம் செய்து கொண்டிருக்கும் முனிவர்களின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. இடபவாகனத்திலும் நடராஜர் பீடத்திலும், பதஞ்சலி வியாக்ரபாதர் ஆகிய முனிவர்களைக் காணலாம்.

சிவபெருமான் பிட்சாடனராகப் பெருந் திருவிழாவில் பவனிவரும் வேளையில் அவரைச் சுற்றிலும், காமமோகிதர்களாக விளங்கும் தாருகாவனத்து ரிஷிகளின் திருவுரு வங்கள் வண்ணந்தீட்டிய பதுமைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம். மக்கள், ரிஷிகளின் திருவுருவங்களைச் சிறப்புடன் போற்றுவதுடன் அவற்றை உயர்ந்த இடங்களில் நிலைப்படுத்தி வழிபடுகின்றனர். ௐ

## ரிஷி கோபுரம்

தொண்டை மண்டலத்தில் உள்ள பெரிய சிவாலயங்களில் அமைந்திருக்கும் இரண்டா வது உள்கோபுரத்திற்கு ரிஷி கோபுரம் என்பது பெயர். ரிஷிகள் இங்கிருந்தவாறு இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பது நம்பிக்கையாகும். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம், பெருநகர் பிரம்மபுரீசுவரர் ஆலயம், திருக்கழுக்குன்றம் பக்தவத்சலேசுவரர் ஆலயம் முதலியவற்றில் அழகிய பெரிய ரிஷி கோபுரங்கள் உள்ளன. ௐ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

உலகில் உயிர்கள் இயங்குவதற்கு, அடிப்படை ஞானம் அவசியமாகும். இறைவன் இந்த ஞானத்தை உயிர்களுக்குப் பிறவியிலேயே வழங்குகிறான். உயிர்வாழ நல்லன தீயனவற்றை அறிந்து ஒழுகவும், பகைவரிடமிருந்து போரிட்டோ, பதுங்கியோ தற்காத்துக் கொள்ளவும், அடிப்படை ஞானம் அவசியமாகிறது. அதனைப் பெற்ற உயிர், தன்னை மேலும் மேலும் தகுதிப்படுத்திக் கொள்ள ஓயாது அறிவைத் தேடி அலைகிறது. அந்த உயிர்களுக்கு அவற்றைத் தேடி அருள்புரிய இறைவன் குருவடிவில் வருகிறான். அறியாமையை நீக்கி ஞானத்தைப் போதிக் கிறான்.

தாய் தன்னிலையில் குழந்தைகளுக்கு அறிவை போதிக்கிறாள். அதையடுத்து தந்தை உலக அறிவை விளக்கம் பெற வைக்கிறான். மேலும் இறை அறிவை குரு உண்டாக்குகிறார். பலருடைய அனுபவங்களை மாணவனுக்குப் போதித்து அவன் அறிவைப் பிரகாசப் படுத்தி மேன்மை பெற வைக்கிறார். உலகியல் அறிவுடன் உயிர் இறைவனை அறிந்து பேறு பெற ஞான குருமார்கள் துணைநிற்கின்றனர். இந்தக் குருமார்களுக்கெல்லாம் ஆதிகுருவாக விளங்குபவன் பரமேசுவரன் ஆவார். இதையொட்டியே மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தி, தாய் தந்தைக்குப் பிறகு குருவைத் தெய்வத்திற்கு முன்பாகவைத்துப் போற்றுகின்றோம்

இறைவன் ஞானத்தின் திருவுருவமாக விளங்கி அதை போதிக்கும் ஆசானாகத் திருக்கோலம் தாங்கி வரும் போது தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார். தட்சிணா என்ற வடசொல்லுக்கும் "தென்னன்" என்ற தமிழ் சொல்லுக்கும் ஆற்றல், ஆளுமை, யோகம், வீரம் என்பன பொருளாகும். அதனால் அவர் தட்சிணாமூர்த்தி எனப்படுகிறார். அவர் ஆலமரத்தடியில் வீற்றிருந்து போதித்துக் கொண்டிருக்கின்றார். எனவே, ஆலமர் செல்வன், ஆலமர் கடவுள் என்று அழைக்கப் படுகிறார். அவர் மூலமாகவே ஆற்றல், வீரம், அறிவு யாவும் உயிர்களை அடைகின்றன. அவர் தென்முகக் கடவுள் என்று போற்றப்பட்டுத் தென் முகமாக வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

சிவாலயங்களில் கருவறையின் தெற்குக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். இது மகேசுவர வடிவங்கள் இருபத்தைத்துக்குள் ஒன்றாகக் கூறப்பட்டாலும் அவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்டதாகும். உலகம், தட்சிணாமூர்த்தியிடமிருந்து தோன்றி அவரிடமே ஒடுங்குவதாக மகா புராணங்களும் தலபுராணங்களும் கூறுகின்றன. அது இயங்குவதற்கான ஞானமும், அருளும் அவரிடமிருந்தே வெளிப்படுகிறது.

சிறப்புமிக்க, ஆதிமூல மூர்த்தியான தட்சிணாமூர்த்தியைச் சிந்திப்பதற்காகச் சிவமஞ்சரியின் இந்த நாற்பத்து நான்காவது மலர் மலர்கிறது. இதில் தட்சிணாமூர்த்தியின் பல்வகைக் கோலங்கள், அவருக்குரிய தலங்கள், சிறப்பு வழிபாடுகள் முதலான செய்திகள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அன்பர்கள் அனைவருக்கும் தென்பாலையோக கௌரி உடனாய தட்சிணாமூர்த்திப்பெருமான் எல்லையில்லா ஞானத்தை வழங்குவதுடன் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகிறோம்.

– சிவசுந்தரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## தட்சிணாமூர்த்தி உபநிஷத்

உபநிஷத் என்பதற்கு, பிரம்மவித்தையை எளிய முறையில் (பசுமரத்து) ஆணித்தரமாக உறுதிப்படுத்திக் கூறுதல் என்பது பொருள், அனேக உபநிஷத்துகள் உள் ளன அவற்றுள் தலையானது 108 ஆகும், இதிலொன்றாக தட்சிணா மூர்த்தி உபநிஷத் திகழ்கிறது. இது கிருஷ்ண யஜுர் வேதத்தைச் சார்ந்ததாகும்.

மார்க்கண்டேயரிடம். சௌகாதி ரிஷிகள் கேட்ட கேள்விகளுக்கு அவரால் விரித்துரைக்கப் பட்டதாக இந்நூல் அமைந்துள்ளது, ஒரு சமயம் ப்ரம்மவர்த்தத்தில் பெரிய யாகத்தைச் செய்ய வந்த ரிஷிகள், பெரிய ஆல மரத்தின் அடியில் கூடியிருந்தனர், அவர்கள் தத்துவங் களை விளக்கமாக அறிய ஆவல் கொண்டனர், அங்கு இருந்த, என்றும் மாறாத பதினாறு வயதுடைய சிரஞ்சீவி யான மார்க்கண்டேயரிடம் தத்துவங்களை விளக்குமாறு கேட்டனர்,

அவர், "சிவனே குரு. சிவனே வேதம். சிவனே தேவன். சிவனே தலைவன். சிவனாகவே நான் இருக்கி றேன், அவனே உலகினைப் படைத்தவன். சிவன் எல்லா மாகவும் இருக்கிறான், சிவனைக் காட்டிலும் வேறொன்று மில்லை. தட்சிணாமூர்த்தியே அனைத்து சித்திகளையும் கொடுப்பவர். இதை அறிவதைக் காட்டிலும் எளிய மார்க் கம் வேறு ஏதும் இல்லை" என்று கூறி இதற்கான விளக் கங்களை அளித்தார், இதை எவன் அறிகிறானோ. அவன் நற்பத மடைகிறான் என்றார் இதுவே தட்சிணா மூர்த்தி உபநிஷத்தின் கருத்தாகும்.

## தட்சிணாமூர்த்தியும் - நடராசரும்

தட்சிணாமூர்த்தியிடமிருந்தே இந்த அண்டசராசரங்கள் தோன்றின. அவர் அமர்ந்துள்ள மலை மண்ணையும், கமண்டலம் நீரையும், கையிலுள்ள கனல் நெருப்பையும், பாம்பு வாயுவையும். விண்ணோக்கிய ஆலமரம் வானையும் குறிக்கின்றன. இவை ஐந்தின் கூட்டுறவால் அனைத்தையும் அவர் படைத்தார். பின்னர், அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனித் தன்மைகளை அளித்தார். அவற்றிற்கான நுண்ணறிவையும். ஆற்றலையும் தந்தார். அவை தோன்றிய படியே மீண்டும் அவரிடம் அடங்கும். அவர் பிரபஞ்சத்தின் மூலமும் முடிவுமாக இருக்கிறார்.

தோற்றத்திற்கும் முடிவுக்கும் இடையே இடையறாது ஐந்தொழில் நடைபெறுகிறது. அந்த ஓயாத சுழற்சியை விளக்கும் வகையில் அவர் நடராசராக ஆடிக்கொண்டிருக்கின்றார், அந்நிலையில் ஐந்தொழில் இடையீடின்றி நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. அதனால் உலகமும் உயிர்களும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன என்பர். தட்சணாமூர்த்தி என்னும் நிலைத்த ஆற்றலாகவும். நடராசர் என்ற இயங்கு ஆற்றலாகவும் உள்ள திருக்கோலங்களில் பரசிவம் தன்னை வெளிப்படுத்துகிறது, மற்றைய மூர்த்தங்கள் யாவும் இரண்டுக்கும் இடைப்பட்ட நிலைகளில் உள்ளனவேயாகும்.

இந்த இரண்டிலும் பெருமான் வலதுகாலை அபஸ்மாரம் எனப்படும். முயலகன் மீது ஊன்றியுள்ளார். இடது மேற்கரத்தில் அக்கினியை ஏந்தியுள்ளார். சடையில் கங்கை, மண்டை ஓடு, ஊமத்தம் பூக்களைத் தரித்துள்ளார். இரு நிலையிலும் அவருடன் பாம்பு, புலி, மான் ஆகியவை உள்ளன.

## குருவழிபாடும் தட்சிணாமூர்த்தியும்

பல தெய்வங்களுக்கு ஒரே மாதிரியான பெயர்கள் அமைந்துள்ளன அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாததால் அனேக வழிபாடுகள் முறை மாறி நடப் பதை வரலாற்றில் காண்கிறோம். அவற்றிலொன்று குரு என்ற கிரகத்திற்குச் செய்ய வேண்டிய பரிகாரங்களைத் தட்சிணாமூர்த்திக்குச் செய்வதாகும். குரு என்பவன் பிரம்மாவின் புத்திரனான ஆங்கீரஸின் குமாரன் அவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து தேவர் களுக்குக் குருவாகவும் நவக்கிரகங் களில் ஒருவனா கவும் இருக்கும் பேறுபெற்றான். அவனை வாசஸ்பதி, பிருகஸ்பதி, குரு, எனப்பலவாறு அழைப்பர் அவன் தேவர் களின் குருவாக இருப்பதால் தேவ குரு எனப்படுகிறான். அவன் திருமணங்களைக் கூட்டு விப்பவன் பொன்னா பரணங்களைப் பூண்டவன். வடக்கு திசை நோக்கி இருப் பவன். உயிர்களுக்கு உலக போகங் களை அருள்பவன்.

தட்சிணாமூர்த்தி மூலசிவமாக இருப்பவர் அவரிட மிருந்தே உலகம் தோன்றி நிலைபெற்று மீண்டும் ஒடுங்கு கிறது. அவர் காமனை வென்றவர். மகாயோகி. கல் லாடை புனைந்தவர். தெற்குநோக்கி இருப்பவர். உலக மாயா பாசங்களை நீக்கி மோட்சத்தை அருள்பவர். இப்படி மாறுபட்ட நிலைகள் இருவருக்கும் இடையே உள்ளன.

மக்கள் பெயர்க் குழப்பத்தால் தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் ஆடைகளை அணிவித்தல், கொண்டைக்கடலை மாலைகளை அணிவித்தல் மஞ்சள் அபிஷேகம் செய்தல் முதலியவற்றைச் செய்கின்றனர். இவையாவும் அறியா மையால் செய்யப்படும் செயல்களாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தட்சிணாமூர்த்தி

உலகத்தைத் தோற்றுவித்த மூல பரம்பொருள் அறிவுதிரண்டு உருத்தாங்கி வந்ததுபோல் மண்மேல் வந்து குருவடிவாகி ஆலின் கீழ் அமர்ந்து அறம் பகர்ந்தது. அவரிடமிருந்து ஒப்புயர்வற்ற ஞானத்தைப் பலர் பெற்றனர்.

ஆதிசக்தி அவரிடம் ஆகமங்களைக் கேட்டு உலகிற்கு உப தேசித்தாள். பஞ்ச ரிஷிகளான கௌதமாதியர் அவரிடம் ஞான பாகங்களைக் கேட்டு உணர்ந்து அவற்றை ஞான நூல்களாக பூமி யில் பரப்பினர். சனகாதி முனிவர்கள் அவரிடம் நால்வேதம் ஆறங் கங்களைப் பெற்றனர். அவர்கள் வேதாந்தங்களையும் சித்தாந்தங் களையும் பரப்பினர். திருமூலர் முதலானவர் தந்திரங்களைக் கேட்டு உலகில் எண் திசைகளிலும் சென்று திருமடம் அமைத்து அந்த நல்ஞானத்தைப் பரப்பினர்.

❖ பதஞ்சலி முனிவருக்கு யோகத்தை அருளினார். அவர் மூலம் யோக சாத்திரம் விரிவடைந்தது. சுகர், தும்புரு, நாரதர் முதலான இசைக் கலைஞர்களுக்கு இசை நுணுக்கங்களை உபதேசித்தார்.

இவ்வாறு, உலகில் எல்லோருக்கும் எது எப்போது தேவையோ அப்போது தோன்றி அவர் அருள்பாலித்தார். அவர் இமயமலைச் சாரலில் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்து அறம்பகர்ந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

அவர் யோகத்தையும், உலக மாயையையும் குறிக்கும் பாம்பு, அறியாமையைச் சுட்டெரிக்கும் தீச்சுடர் (அல்லது மழு) உலக பிறப்பு ,இறப்பு வட்டத்தை உணர்த்தும் ஜபமாலை, சின்முத்திரை ஆகிய வற்றைத் தாங்கி இருந்தார்.

அவருக்கு யோக தட்சிணாமூர்த்தி, கேய தட்சிணாமூர்த்தி, ஞானதட்சிணாமூர்த்தி, வியாக்யான தட்சிணாமூர்த்தி என்று ஏற்கும் கோலங்களுக்கேற்ப பெயர்கள் அமைந்திருக்கின்றன.

ஆதியில் அவருடைய ஆலயங்கள் நதிக் கரைகள். மலைச்சரிவுகளில் இருந்தன. பின் னாளில் சிவாலயங்களில் தெற்குக் கோட்டத் தில் அவரை எழுந்தருளி வைத்து வழிபடத் தொடங்கினர். அவருடைய வழிபாடு மூவாயிரம் ஆண்டுகளாகப் பழமை மாறாமல் தொடர்ந்து வருகிறது.

# தென்முகத் தெய்வங்கள்

கேதாரநாதர் ஆலயத்தில் பாசுபதர்கள் போற்றும் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். அவர் சூலமும் சின்முத்திரையும் யோக முத்திரையும் கபாலமும் ஏந்தியுள்ளார். (அங்கு அவரை கிருஷ்ணன் என்று பெயர் எழுதியுள்ளனர். (மான் மழு, அபய வரதமுத்திரை கொண்ட சந்திரசேகரர் – தேவியுடன் எழுந்தருளியுள்ளார். அவர் பெயரையும் லட்சுமி நாராயணன் என்று எழுதியுள்ளனர்.)

❖ காசி விசுவநாதர் ஆலயத்தில் சுவாமி, தாரக பரமேசுவரராக விசுவநாதர் என்ற பெயரில் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். அவருக்கு மேற்கில் முக்தி மண்டபம் உள்ளது. அங்குத் தெற்கு நோக்கியவாறு ஒரு பீடம் உள்ளது. இது பெருமான் ஞானாசிரியராக வீற்றிருந்து உபதேசித்த இடமாகும் (இதில் அமர்ந்து உபதேசம் செய்கின்றனர்).

❖ காசி சக்ரலிங்கேசுவரர் ஆலயத்தில் அர்த்தநாரீசுவர தட்சிணாமூர்த்தியின் பெரிய உலாத் திருமேனி உள்ளது.

ஆவுடையார் கோயில் (எ) திருப்பெருந்துறையில் சிவபெருமான் அரூப தட்சிணாமூர்த்தியாக ஓங்கார ரூபராக எழுந்தருளியுள்ளார். அவர் குருவாக வீற்றிருந்து மாணிக்க வாசகர் முதலான எண்ணற்றவர்களுக்கு ஞான உபதேசம் செய்துள்ளார். தில்லையில் நடராசப் பெருமான் தெற்கு நோக்கி ஆடுகிறார்.

இவை நான்கும் மோட்சம் நல்கும் தலங்களாகும். இவை யாவும் தெற்கு நோக்கியவாறு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாலயங்களில் ஸ்ரீ விமானத்திலும் கோபுரங்களிலும் தட்சிணாமூர்த்தி வடிவங்கள்

தட்சிணாமூர்த்தி வழிபாடு ஐயாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்ததாய் இருந்தாலும் அவருக்கெனத் தனியே ஆலயம் அமைத்து அவரை வழிபடும் வழக்கமில்லை. அனைத்துச் சிவாலயங்களிலும் அவரைக் கோட்ட மூர்த்தியாவே அமைத்து வழிபடுகின்றனர். அவருக்கு ஒருகால பூஜை மட்டுமே நடை திருவண்ணாமலை, திருஆனைக் காவல், திருக்கண்டலம் முதலிய ஒரு சில தலங்களிலுள்ள ஆலயங்களில் மட்டுமே அவருக்குத் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவிமானத்தில் அவரை விமான மூர்த்தியாகச் சுதைச் சிற்பங்களில் அமைத்துள்ளனர். ஸ்ரீவிமானங்களில் தெற்கு நோக்கிய கோட்டங்களில் அவரை நான்கு ரிஷிகள் சூழ்ந்திருக்கும் ஞான தட்சிணா மூர்த்தியாக அமைக் கின்றனர். சிலதலங்களில் ஸ்ரீவிமானத்தின் ஒவ்வொரு நிலையிலும் (அடுக்கிலும்) வீணாதர தட்சிணா மூர்த்தி, அர்த்தநாரீசுவர தட்சிணா மூர்த்தி, என்று வெவ்வேறு வகையான தட்சிணாமூர்த்தி வடிவங்களை அமைத்துள்ளனர். இவை வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்கு கின்றன.

இதையொத்ததாக, ராஜகோபுரங்களின் தெற்கு நிலைக் கோட்டங்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் பல வகையான தட்சிணாமூர்த்தி வடிவங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சோழர்கள் காலத்தில் அவருடைய கோட்டத்தைச் சற்று முன்னே வளர்த்திக் கட்டி அழகுப்படுத்தினர். செட்டிநாட்டுத் கலைஞர்கள் காலத்தில் அது உன்னத நிலையை அடைந்தது. அவர்கள் திருப்பணி செய்த ஆலயங்களில் அவருக்கு முன்புறம் இரண்டு தூண்கள் அமைத்து கோட்டத்தைச் சிற்றாலயம் போலவே ஆக்கினர். நகரத்தார் கோயில்களில் தட்சிணாமூர்த்தி கோட்டம் சிறப்புமிக்க கலை நயத்துடன் அமைக்கப்பட்டுள்ளன இளையான்குடி ஆலயத்தில் உள்ள கொடுங்கைகள் விமானம் வேலைப்பாடு தனியிடம் பெற்றுள்ளது.

★ சிவாலயங்களிலுள்ள கோபுரம் ஸ்ரீ விமானங்களில் மட்டுமின்றி விநாயகர், முருகன் ஆலயங்களிலும் விமானம் ராஜகோபுரங்களில் தெற்கு நோக்கிய முகங்களில் தட்சிணாமூர்த்தி வடிவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சில கலைஞர்கள் தட்சிணாமூர்த்திக்குப் பதிலாக அவரைப் போலவே கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து அக்னி, நாகம், புத்தகம், சின்முத்திரை ஏந்தியவராக விநாயகரையும் முருகனையும் அம்பிகையும் கூட அமைக்கின்றனர்.

★ திருவகீந்திரபுரம், உத்திரமேரூர், முதலான திருமால் ஆலயங்களிலும் ஸ்ரீ விமானத்தில் தட்சிணாமூர்த்தி அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

### சாலையோர தட்சிணாமூர்த்தி

ஆலயங்களில் கருவறைமீது ஸ்ரீ விமானத்திற்குப் பதிலாக அந்த ஆலயத்தின் மூர்த்தியைப் பெரிய அளவில் செய்து வைப்பது பரவலாக உள்ளது. பெரும்பாலும் ஆஞ்சநேயர் கோயில்களில் இம்முறை உள்ளது. சென்னை. திருச்சி நெடுஞ்சாலையில் (NH45) அச்சிறுபாக்கம் மலையின் தெற்கில் தத்தாத்திரேயர், பஞ்சமுக விநாயகர் ஆலயங்கள் உள்ளன. இதன் மதிற்சுவரை ஒட்டி தட்சிணாமூர்த்தி ஆலயம் உள்ளது. இந்த சந்நிதியில் ஸ்ரீ விமானத்திற்குப் பதிலாக சுமார் 20 அடி உயரமுள்ள தட்சிணாமூர்த்தி வடிவம். கம்பீரமாகத் திகழ்கிறது.

★ தட்சிணாமூர்த்தியை (பெயருக்கேற்ப) தெற்குத்திசை நோக்கியே அமைக்க வேண்டும் என்றாலும் வசதிகருதியும், அறியாமையாலும் பிறதிசைகளை நோக்கியும் அமைத்துள்ளனர். புராணங்களும் தத்துவ நூல்களும் அவரைத் தென்முகம் நோக்கியவராகவே குறித்துள்ளன.

“உருத்திரரே! உமது கருணைகொண்ட தெற்கு முகத்தால் எம்மைக் காத்தருளும்” என்று சுவேதாசுவதரம் என்ற உபநிடதவாக்கியம் கூறுகிறது.

கடல்நீர் மழைமேகமாகி மழையாகப் பொழிந்து மக்களை வாழ்விப்பதுபோல் எங்கும் நிறைந்த பரம்பொருள் குருவடிவம் தாங்கி அன்பர்பால் வலியவந்து ஆட்கொண்டு அருள்புரிகிறது என்று திருவாசகம் கூறுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தட்சிணாமூர்த்தியின் எண்வகை வடிவங்கள்...

சிவபெருமான் ஒருருவம் ஒரு நாமம் இல்லாதவர். என்றாலும் அன்பர்களுக்குப் பல்வேறு வடிவங்களில் காட்சியளித்து அருள்புரிகிறார். இத்தகைய வடிவங்கள் அனைத்தையும் சிற்பமாக அமைத்து வழிபட முடியாது என்பதால் சிறப்புமிக்க 64 வடிவங்களைத் தேர்ந்தெடுத்து அஷ்டாஷ்ட விக்கிரகங்கள் எனப்போற்றி வழிபடுகின்றனர். சில நூல்கள் இருபத்தைந்து வடிவங்களை மகேசுவர வடிவங்கள் என்று கூறிக் கொண்டாடுகின்றன.

இத்தகைய வடிவங்களில் தலைசிறந்ததாகத் தட்சிணாமூர்த்தி வடிவம் விளங்குகிறது. இந்த வடிவத்திலும் பலவகையான உருவவேறுபாடுகள் உள்ளன. இவை அறுபத்து நான்கு என்றும், முப்பத்து இரண்டு என்றும், இருபத்து நான்கு என்றும், எட்டு என்றும் சிற்பநூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

இங்கு, காமிகாகமத்தில் கூறப்பட்டுள்ள எட்டு வகையான தட்சிணாமூர்த்தி வடிவங்களைக் காணலாம். இவர்களுடைய திருமேனி விளக்கங்களை அந்நூல் விரி வாகக் கூறுகிறது.

### 1. யோக தட்சிணாமூர்த்தி

சந்திரனைப் போல் வெண்மையாகப் பிரகாசிக்கும் இவர். வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இடையில் பாம்பு தவழ்கிறது. முழங்காலின் மீது கையை நீட்டியுள்ளார். முனிவர்களால் சூழப்பட்டுள்ளார். மூன்று கண்களைக் கொண்டவர்.

### 2. வீணாதர தட்சிணாமூர்த்தி

முத்துப்போல் வெண்மையான நிறம் கொண்டவர். எண்ணமயமான (மனோமயமான) பாம்பைப் பூணூலாக அணிந்தவர். அக்னி, அட்சமாலை ஏந்தியவர் பொன்னா லான வீணையை ஏந்தி மீட்டுபவர். கயிலை மலை மீது விளங்குபவர்.

### 3. மேதா தட்சிணாமூர்த்தி

ஸ்படிகம் போல் தூய வெண்ணிறம் கொண்டவர். ஞானமுத்திரை, புத்தகம், அக்னி, நாகம் ஆகியவற்றைத் தாங்கியவர். அழகிய முகத்துடன் விளங்குபவர். முத்து மாலை அணிந்து கிரீடம் தரித்தவர். ஆல மரத்தடியில் அமர்ந்து சிவாகமப் பொருளை விளக்குபவர்.

### 4. ஆசீன தட்சிணாமூர்த்தி

வெண்நிறம் கொண்டவர் மூன்று கண்களுடன் திகழ்பவர். வலது கரங்களில் மழுவும் அம்பும் இடது கரத்தில் மானும் வில்லும் ஏந்தியவர். வியாக்யான பீடத்தில் அமர்ந்துள்ளவர். புலித்தோலை ஆடையாக அணிந்தவர். பாம்பைப் பூணூலாகத் தரித்தவர். (இத்தகைய தட்சிணா மூர்த்தி வடிவம் ஆலயங்களில் இல்லை.)

### 5. வர தட்சிணாமூர்த்தி

முழங்கால் மீது கால்போட்டு அமர்ந்திருப்பவர். அபஸ்மாரன் எனப்படும் முயல்கனை மிதித்துக் கொண்டிருப்பவர். ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சன காதியருக்கு வாய் பேசாமல் சின் முத்திரை மூலம் வேதாந்தங்களை போதிப்பவர். ஞானமுத்திரை அட்ச மாலை, அக்னி, வேதச் சுவடிகளைத் தாங்கியவர். அனேக தலங்களில் இந்த வடிவமே வழிபாட்டில் உள்ளது.

### 6. யோக பட்டஅபிராம தட்சிணாமூர்த்தி

ஒருமுகமும் மூன்று கண்களும், விரிந்த சடையும் கொண்டவர். வீணை வாசித்துக் கொண்டு வியாக்யான பீடத்தில் அமர்ந்திருப்பவர். பாம்பைப் பூணூலாக அணிந்தவர்.



★ ஆசீன தட்சிணாமூர்த்தி★



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## 7. ஞான தட்சிணாமூர்த்தி

ஒருமுகம் மூன்று கண்கள் ஸ்படிகம் போன்று ஒளிர் பவர். நான்கு கைகளில் சூலம், கபாலம், வீணை, சின்முத்திரை கொண்டவர். சனகாதி முனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிப்பவர்.

## 8. சக்தி தட்ணாமூர்த்தி

ஸ்படிகம் போன்ற தூய நிறம் கொண்டவர் முத்துக் களால் ஆன அக்ஷமாலை, நிறைவுடன் கூடிய அமுத கலசம் கொண்டவர். சின்முத்திரையுடன் பாம்பைக் கைகளில் தரித்தவர். சந்திரனைச் சூடியவர். பூணு லுடன் விளங்குபவர்.

பலவிதமான தட்சிணாமூர்த்தி வடிவங்களைப் பற்றிய விவரங்கள் சில்பரத்தினம், சகளாதிகாரம், தந்திர சாத்திரங்கள் சிற்ப சிந்தாமணி முதலிய அனேக நூல் களில் விளக்கப்பட்டுள்ளன.

☆ சாக்த தந்திர நூல்களில் எட்டுவகையான தட்சி ணாமூர்த்தி வடிவங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை, மேதா தட்சிணாமூர்த்தி, கீர்த்தி தட்சிணாமூர்த்தி, லட்சுமி தட்சிணாமூர்த்தி, ஞான தட்சிணாமூர்த்தி, சாம்ப தட்சிணாமூர்த்தி, வீர தட்சிணாமூர்த்தி, சம்ஹார தட்சிணாமூர்த்தி, குரு தட்சிணாமூர்த்தி என்பனவாகும்.

☆ திருவிடைமருதூர் தட்சிணாமூர்த்தித் தலமாகும். இங்கு பெருமான் சாம்பவி தட்சிணாமூர்த்தி வடிவில் எழுந்தருளியுள்ளார் என்று புராணம் கூறுகிறது. இங்கு விமானம், கோபுரம், சித்திரப்பிரகாரம், அலங்காரம் மண்டபத்தின் தூண்கள் ஆகிய இடங்கில் அனேக தட்சிணாமூர்த்தி வடிவங்கள் இடம்பெற்றுள்ளன.

## நால்வகை தட்சிணாமூர்த்திகள்

சிற்ப ஆகம நூல்கள், பலவகையான தட்சிணாமூர்த் திகளைக் குறித்து விரிவாகப் பேசுகின்றன. அவற்றை நான்காக வகைப்படுத்தியுள்ளனர். அவையே பெரும் பாலான ஆலயங்களில் நிலைப்படுத்தப்பட்டு உள்ளன.

இவைஞான தட்சிணாமூர்த்தி, தர்ம வியாக்யான மூர்த்தி, கேயமூர்த்தி (வீணாதரர்), யோகமூர்த்தி என்று அழைக்கப்படுகின்றன.

ஞானதட்சிணாமூர்த்தி பின்கரங்களில் அட்சமாலை, நீலோற்பலமலர் (அ) தாமரை ஏந்தி முன்கரங்களில் ஞானமுத்திரை புத்தகம் தாங்கி வீராசனத்தில் வீற்றிருக் கின்றார். இத்தகைய திருவுருங்களை திருவிடைமருதூர், சுசீந்திரம், மயிலாடுதுறை முதலிய ஆலயங்களில் காண்கிறோம்.

தர்ம வியாக்யானமூர்த்தி கரங்களில் நாகம், தீயகல், சின்முத்திரை, புத்தகம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளார். பெரும்பாலான ஆலயங்களில் இம்மூர்த்தியே உள்ளார்.

கேயம் என்பதற்கு பாடுதல், இசைக்கருவி மீட்டுதல் என்பன பொருளாகும், பெருமானை வீணைவாசிப்பவராக அனேக ஆலயங்களில் அமைத்துள்ளனர். இதில் முன்கரங்களால் வீணை மீட்டுவதுடன் பின்கரங்களில் பாம்பு ஜபமாலை ஆகியவற்றைத் தாங்கியுள்ளார்.

யோகம், வாழ்வில் இறைவனை அடையும் குறிக் கோளை அடையத் துணைநிற்பதுடன் ஆற்றலைத் தருகி றது. ஆற்றலை விளக்கும் தட்சிணாமூர்த்தி யோக தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார். யோகத் தால் உடல் அமுதம் உண்ட வலிமையைப் பெறுகிறது என்பதை உணர்த்த யோக தட்சிணாமூர்த்தி அமுத கலசம் ஏந்திக் காட்சியளிக்கிறார்.

இந்த நான்கு மூர்த்தங்களே சிற்சில மாறுதல்களு டன் அனேக மூர்த்தங்களாகக் காட்சியளிப்பதுடன் ஆலயங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# வீணாதர தட்சிணாமூர்த்தி

வீணை தெய்வீக இசைக்கருவியாகும். அறிவின் சின்னமாகவும்; கலைமகளின் கைப்பொருளாகவும் போற்றப்படுகிறது. சிவபெருமான் வீணை வாசித்து மகிழ்வது ஆகமங்களிலும் தமிழ்வேதங்களிலும் திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளன.

அவன் வீணையை மீட்டிக் கொண்டு என் உள்ளத்திற்குள் வருகிறான் என்பதை "மிகநல்ல வீணைதடவி மாசறு திங்கள் கங்கைமுடிமேல் அணிந்து என் உளமே புகுந்து";

எனவரும் தேவாரத் தொடர்களால் அறியலாம், அவன் இரவலனாக இல்லம்தோறும் சென்று பலி ஏற்கும் வேளையிலும் வீணை மீட்டிப் பாடிக்கொண்டே செல்கிறான். இதையொட்டிப் பிட்சாடனரை வீணையேந்திப் பாடிச் செல்லும் விடங்கராக அமைத்துள்ளனர். உருத்திரரும் வீணைமீட்டிப் பாடிக்கொண்டு செல்வதாக அமைக்கின்றனர். இவருடைய வீணைக்கு உருத்திர வீணை என்பது பெயர்.

இறைவன் தான் வீணையை மீட்டிப் பாடி மகிழ்வதுடன் அதனைப் பிறருக்கும் கற்பிக்கின்றான். இசை கற்பிக்கும் ஆசிரியனாக விளங்கும் சிவனே வீணாதர தட்சிணாமூர்த்தியாக விளங்குகிறான் என்கின்றனர். அவன் மீட்டும் வீணையின் நாதமே உயிர்களுக்கு ஆன்ம ஞானத்தை அறிவித்து இன்பக் கடலுள் ஆழ்த்திவிடுகிறது.

ஒரு சமயம் நாரதர், சுகர், தும்புரு முதலிய ரிஷிகள் சிவபெருமானைத் தொழுது இசைஞானத்தில் தேர்ச்சி பெறவும் சாமவேதத்தை வீணையில் மீட்டி பாடும் வகையை அறியவும் அருள்புரியும்படி வேண்டினர். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் வீணையை மீட்டிப் பாடியதுடன் பாடவேண்டிய முறைகளையும் இசைக் கருவியான வீணையை மீட்டும் முறையையும் விளக்கிக் கூறினார். அந்தத் திருக்கோலமே வீணாதர தட்சிணாமூர்த்தி என்று சிவபராக்கிரமம் கூறுகிறது.

"கேயம்" என்பதற்குப் பாடுதல் இசைக்கருவி வாசித்தல் என்பது பொருள். வீணைவாசித்துக் கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தியைக் கேய தட்சிணாமூர்த்தி என்று உத்ரகாமிகாமம் . கூறுகிறது. இவரை வழிபடுவதால் வாழ்வில் ஞானம் உண்டாகும் என்று அந்நூல் கூறுகிறது.

இவர் முன் கைகளால் வீணையை மீட்டிக்கொண்டிருக்கிறார். பின் கரங்களில் அட்ச மாலையும் தீயகலும் உள்ளன. சுகர், நாரதர், கந்தர்வர்கள், கின்னரர்கள் முதலானோர் அவரைச் சூழ்ந்துள்ளனர்.



அம்சுமத்பேதாகமம்; உத்தரகாமிகம் சில்ப ரத்தினம் பூர்வகாரணாகமம் முதலிய நூல்களில் வீணாதர தட்சிணாமூர்த்தியைப் பற்றிய விளக்கங்கள் உள்ளன.

ஒரு யுகசங்கார காலத்தில் எல்லாம் அழியும் போது, தனித்து நின்று பெருமான் வீணை வாசிப்பான், அந்த வாசிப்பு உச்சநிலையை அடையும் போது மீண்டும் உலகம் படைக்கப்படும். உடுக்கை ஓசையால் உலகைத் தோற்றுவிப்பதைப் போலவே வீணையை மீட்டி இசை மழை பொழிந்தும் இறைவன் உலகினைத் தோற்றுவிப்பான் என்று கூறுகின்றனர்.

சிவபெருமான் யுகசங்கார காலத்தில் வீணை மீட்டிக் கொண்டிருப்பான் என்பதை,

'உலகமெல்லாம்' ஒடுங்கியபின் வேதத்து
ஒலிகொண்டு வீணைகேட்பார்

என்றும் வீணையை இசைத்து மீண்டும் உலகைப் படைப்பான் என்பதை,

பெருங்கடல் மூடிப் பிரளயம் கொண்டு
பிரமனும் போய் ... வருங்கடல் "மீளநின்று"
எம் இறை நல் வீணைவாசிக்கும் என்று

திருநாவுக்கரசர் பாடிப் பரவுகிறார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நின்று வீணை வாசிக்கும் நிமலன்

பொதுவாக, கற்பக மரத்தின் கீழ் அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருப்பவராகவே வீணாதர தட்சிணாமூர்த்தியை அமைக்கின்றனர். சில இடங்களில் நின்றவாறு வீணை வாசிக்கும் நிமலனைக் காண்கிறோம்.

இதில் சிவபெருமான் நின்ற வாறு பின் கரங்களில் பாம்பும் சுடரும் முன் கரங்களில் வீணையை ஏந்தி வாசித்துக் கொண்டிருக்கிறார். இடது திருவடியை முயலகன் மீது ஊன்றி யுள்ளார். சடையை வட்டணையாகக் கட்டி முடிந்துள்ளார். இத்த கைய அற்புத தட்சணாமூர்த்தி மணக்கால் ஐயம்பேட்டை ஆலயத்தில் உள்ளார். ஆந்திர மாநிலத்திலுள்ள நாகலாபுரம் ஆலயத்திலும் நின்றவாறு வீணையை மீட்டும் நிமலனைக் காண்கிறோம்.

திருத்தருமபுரத்தில் உள்ள யாழ்மூறிநாதர் என வழங்கும் திருவுருவமும் நின்ற நிலையிலான வீணாதர தட்சிணாமூர்த்தியேயாகும். இத்தலத்தில் திருஞான சம்பந்தர் யாழ்மூறிப் பதிகம் பாடியுள்ளார். அந்த நிகழ்ச்சியை இத் திருமேனியுடன் இணைத்து இவரை யாழ்முறி நாதர் என்றழைக்கின்றனர்.

### அமர்ந்து வீணைவாசிக்கும் தட்சிணாமூர்த்தி

உடுக்கை போன்ற தாமரைப் பீடத்தில் அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தியைத் திருப்பூந்துருத்தி புஷ்ப வனேசுவரர் ஆலயத்தில் காண்கிறோம். தலையில் ஜடாமண்டலம் உள்ளது, மேற்கரங்களில் பாம்பையும். அட்சமாலையையும் தாங்கியுள்ளார். உத்குடிகாசனத்தில் வீற்றிருக்கும் பெருமான் இனிமையாக வீணைவாசித்துக் கொண்டிருக்கிறார். இத்தலத்துத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் இவரைப் "பண்ணார்த்த வீணை பயின்றான் தன்னை" என்றுச் சிறப்பித்துள்ளார்.

### இடபத்தின் மீதமர்ந்து வீணை வாசிக்கும் தட்சிணாமூர்த்தி

இடபத்தின் மீதமர்ந்து வீணைவாசித்து, மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் தட்சணாமூர்த்தியை மேல்பாடி (திருவலத்திற்கு அருகிலுள்ள) சிம்மேந்திர சோழீசுவரர் ஆலயத்தில் காண்கிறோம். அவர் வலது திருவடியை நிலத்தில் ஊன்றி திருவலம் வில்வநாதேசுவரர் ஆலயத்தில் நந்தி மீது அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருக்கும் பெருமானாகக் காட்சி அளிக்கிறார்.

### அர்த்தநாரீசுவர வீணாதரர்

அர்த்தநாரீசுவர வடிவில் வீணைவாசித்துக் கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தியையும் சில தலங்களில் காண்கிறோம்.

## மிருதங்கம் வாசிக்கும் தட்சிணாமூர்த்தி

வ.உ.சி. மாவட்டம் சங்கரன் கோயிலிலிந்து கோயில்பட்டி செல்லும் சாலையில் கழுகுமலை உள்ளது. இங்கு மலையைச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ள வெட்டுவான் கோயில் என்ற ஆலயம் உள்ளது. இதன் விமானத்தில் தெற்கு நோக்கியவாறு தட்சிணாமூர்த்தி அமைக்கப்பட்டுள்ளார். இவர் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருப்பது எங்கும் இல்லாத புதுமையானதாகும். பின் கரங்களில் அட்சமாலையும் மழுவும் உள்ளன முன்னிரு கரங்களால் மிருதங்கத்தை வாசிக்கிறார். வலது காலை மடித்து இடது காலைத் தொங்விட்டுள்ளார். அந்தத் திருவடி முயலகன் மீது ஊன்றியுள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சக்தி தட்சிணாமூர்த்தி

தட்சிணாமூர்த்தி வழிபாடு அம்பிகை வழிபாட்டுடன் இணைந்துமுள்ளது. அவருடன் விளங்கும் அம்பிகை யோக பாலா என்று அழைக்கப்படுகிறாள். திருவாசகம் இவளைத் தென்பாலை என்றழைக்கிறது. "மங்கையோடி ருந்து யோகு செய்தானே" என்பது திருவிசைப்பாவாகும்.

அம்பிகையோடு கூடிய தட்சிணாமூர்த்தியைச் சக்தி தட்சிணாமூர்த்தி என்று ஆகம நூல்களும் சிற்ப நூல் களும் குறிக்கின்றன. நடைமுறையில் சாம்பவி தட்சிணா மூர்த்தி என்று அழைக்கின்றனர்.

சக்தி தட்சிணாமூர்த்தி கோட்ட தெய்வமாக வீற்றி ருக்கும் தலம் சுருட்டுப்பள்ளியாகும். இங்குள்ள பள்ளி கொண்டேசுவரர் ஆலயத்தில் இவர் காட்சியளிக்கிறார். பெருமான் வலது காலைத் தொங்கவிட்டு முயலகன் மீது ஊன்றியுள்ளார். இடதுகாலைக் குத்திட்டுப் பீடத்தில் ஊன்றி, அதில் யோக பட்டம் தரித்துள்ளார். வலது முன்கை சின்முத்திரை காட்ட, இடது கையை முழங்கால் மீது நீட்டியுள்ளார். பின் கரங்களில் மானும் மழுவும் உள்ளன. இடது புறம் நிற்கும் அன்னை அவரைத் தழு விக் கொண்டிருக்கிறாள். பீடத்தின் இருபுறமும் முனிவர் கள் உள்ளனர். இந்த அம்பிகையைச் சாந்தி என்றழைக் கின்றனர். ஞானம் நிறைந்த இடத்தில் சாந்தி தழுவி நிற்பது இயற்கையாக நிகழ்வதேயல்லவா?

திருவிடைமருதூரில் சாம்பவி தட்ணாமூர்த்தி தனிச்சிறப்புடன் சுதைச் சிற்பங்களாக விளங்குகிறார். இவற்றில் முதன்மைபெற்றது மகாலிங்கசுவாமி ஆலயத் தின் முகமண்டபத்தில் வடக்குச்சுவரையொட்டித் தெற்கு நோக்கியவாறு அமர்ந்துள்ள வடிவமாகும் (இது உமா மகேசுவர வடிவமேயாகும்.) சுவாமி முன்கரங்களில் சின் முத்திரையும் சுவடிகளையும் கொண்டுள்ளார். இது அம் பிகைக்கு ஆகமங்களை விளக்கும் கோலமாதலின் சாம் பவி தட்ணாமூர்த்தி என்றழைக்கப்படுகிறது. சுவாமியின் பாதத்தடியில் நந்தி படுத்துள்ளார்.

இக்கோயில், சித்திரப் பிரகாரத்தின் பஞ்சரங்களில் உமையோடு கூடிய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் பல உள்ளன. அவற்றில் இரண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாவதில் சுவாமியும் அம்பிகையும் உயர்ந்த பீடத்தில் உத்குடிகாசனத்தில் வீற்றிருக்கின்றார். சுவாமி இடது கையைக் குத்திட்ட தனது முழங்கால் மீது நீட்டி யுள்ளார். வலது முன்கையை யோக தண்டத்தில் வைத் திருப்பது போல் அம்பிகையின் முழங்கால் மீது ஊன்றி யுள்ளார். பின்கரங்களில் மான், மழு ஏந்தியுள்ளார். சடையை வட்டணையாக முடிந்துள்ளார். வலப்புறம் வீற்றி



ருக்கும் அம்பிகை இரண்டு கரத்திலும் மலரேந்தி யுள்ளாள். அருகில் ஏட்டுச்சுவடியைத் தாங்கியவாறு ஒரு பூதம் நின்றுள்ளது. இதுவே மங்கையோடிருந்து பெருமான் யோகு செய்த நிலையாகும்.

இரண்டாவதில் பெருமான் வீராசனத்தில் வீற்றிருக்க அம்பிகை அருகில் நிற்கிறாள். (இதுபோன்ற புடைப்புச் சிற்பம் தஞ்சாவூர் புதுக்கோயில் சந்திலுள்ள தண்டாயுத பாணி ஆலயத்தில் வழிபாட்டில் உள்ளது. இதில் பின் னணியில் மரமும் செதுக்கப்பட்டுள்ளது.)

திருவிடைமருதூர் தேவாரத்துள், கல்லால் நிழற்கீழ் வாடாமுலை மங்கையும் தானும் மகிழ்ந்து உறைகின்ற இடைமருது என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடியில் சக்தி தட்சிணாமூர்த்தியின் உலாத்திருமேனி உள்ளது.

பாடல்பெற்ற திருத்தலமான திருக்கள்ளில் (திருக்கண்டலம்) சிவானந்தேசுவரர் ஆலயத்தில் சக்தி தட்சிணாமூர்த்திக்கெனத் தனிச் சந்நிதி அமைக்கப் பட்டுள்ளது.

இதில் பெருமான் தேவியை மடிமீது அமர்த்திக் கொண்டுள்ளார். மேற்கரங்களில் ஜெபமாலையும் அமுத கலசமும் உள்ளன. முன்கரங்களில் சின்முத்திரை, புத்த கம் ஆகியவற்றைக் கொண்டுள்ளார். இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அர்த்த நாரீசுவர தட்சிணாமூர்த்தி

ஆதிமூல சிவமான பரம்பொருள் தனது அருளைச் (சக்தி என்னும்) பெண்வடிவில் தோற்றுவித்தது. அந்தச் (சக்தியான) பெண், ஆண்வடிவான பரசிவத்தின் பக்கத்

★ காசியிலுள்ள அனுமன் காட்டில் சக்ரலிங்கேசுவரர் (புவனேசுவரி தேவதா) ஆலயம் உள்ளது. இங்கு நமது புரவலர் திருவையாறு வே. ரமணன் அவர்கள் அழகிய அர்த்தநாரீசுவரதட்சிணாமூர்த்தியின் திரு உலாத்திருமேனியை எழுந்தருளி வைத்துள்ளார். பிரதோஷத்தின் போது இவருக்கு ருத்ராபிஷேகம் சிறப்பு மலர் அலங்காரம் முதலியன செய்யப்படுகின்றன. பெருமான் வலது மேற்கரத்தில் பாம்பு சுற்றிய டமரு இடது மேற்கரத்தில் நீலோற்பலமலர், வலது முன்கரத்தில் சின்முத்திரை, இடது கரத்தில் புத்தகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.

தில் நின்றாள். இருவரும் சேர்ந்து அண்ட சராசரங்களைப் படைத்துக் காத்து, அழித்து, அருளி, மறைத்து ஓயாது செயற்படுகின்றனர் அந்தச் சிவத்தையும் சக்தியையும் அன்பர்கள் ஏக உருவில் தரிசிக்க விரும்பினர். அவர்கள் விருப்பத்தினைப் பூர்த்தி செய்ய இருவரும் இணைந்து அர்த்தநாரீசுவர வடிவில் காட்சியளித்தனர். மாதொரு பாதியனாகப் பெருமான் சக்தியுடன் நின்றதைக் கண்டு அன்பர்கள் மகிழ்ந்தனர்.

இந்த வடிவைக் கண்டு மகிழ்ந்து விரும்பிக் கொண்டாடிய அன்பர்கள் அர்த்தநாரீசுவர நடராசர், அர்த்தநாரீசுவர தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவர ரிஷபாந்திகர், அர்த்தநாரீசுவர, வீணாதரர் என்று பலவடிவங்களில் வழிபடத் தொடங்கினர். இவ் வழிபாட்டில் அர்த்தநாரீசுவர தட்சிணாமூர்த்தி வடிவம் தனிச்சிறப்புடன் எங்கும் பரவியது.

அர்த்தநாரீசுவர தட்சிணாமூர்த்தியைத் 1. தனித்தும், 2. இடபத்தின் மீது அமர்ந்தவாறும், 3. வீணைவாசித்துக் கொண்டிருப்பவராகவும், 4. இடபத்தின் மீது அமர்ந்து வீணைவாசிப்பவராகவும் என்று பலவகைகளில் அமைத்து வழிபடத் தொடங்கினர்.

இந்தத் தட்சிணாமூர்த்தி, கல்லாலமரத்தின் கீழ் அமர்ந்துள்ளார். சுற்றிலும் பிரம்மா விஷ்ணு, சுகர் நாரதர், முதலியோர் உள்ளனர். புலி, கிளி, பாம்பு, மான் முதலியவை சூழ்ந்துள்ளன.

சித்தர்கள் பெருமளவு இம் மூர்த்தியை வழிபடுகின்றனர். பழனி மலையடிவாரத்தில் பெரும் அன்னதானக் கூடத்தை நிறுவிய சாதுசாமிகள் தமது வழிபடு தெய்வமாக அர்த்த நாரீசுவரதட்சிணா மூர்த்தியைத் கொண்டிருந்தார். தனது பூஜா மண்டபத்தில் பெரிய திருவுருவமாக எழுதிவைத்திருப்பதுடன் அபிஷேக மூர்த்தியாகச் சிறிய உலோகத் திருமேனியையும் செய்து வைத்து வழிபட்டு வந்துள்ளார். அவரைத் தொடர்ந்து வருபவர்கள் அம்மூர்த்திகளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

அர்த்தநாரீசுவர தட்சிணாமூர்த்தியை இடபத்தின் மீது அமைக்கலாம் என்றும் கூறுகின்றனர். அத்தகைய மூர்த்தியை ஆலயங்களில் வழிபாட்டில் காணமுடிய வில்லை. விமானம், கோபுரங்களிலுள்ள சுதைச் சிற்பங் களாகவே காணமுடிகிறது.

★ நாகப்பட்டினத்தில் சட்டநாதர் (எ) வைரவர் ஆலயம் ஆதிகாயாரோகணசுவாமி ஆலயத்தில் வளாகத்தில் உள்ளது. கட்டுமலை மீது வைரவர் எழுந்தருளியுள்ளார். அவருக்கு வலப்புறம் சோமாஸ்கந்தரும் இடப்புறம் தட்சிணா மூர்த்தியும் உலாத்திருமேனிகளாக எழுந்தருளியுள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# யோக தட்சிணாமூர்த்தி

## (சம்ஹார தட்சிணாமூர்த்தி)

"தட்சிண" என்ற வட சொல்லுக்கும் "தென்ன" என்ற தமிழ்ச் சொல்லுக்கும் ஆற்றல் என்பது பொருள். ஆற்றலை வெளிப்படுத்தும் மூர்த்தங்களுக்குத் தட்சிணா மூர்த்தி என்றும் பெயர் வழங்குகிறது. தன் ஆற்றலால் ஜலந்தரன், மன்மதன் ஆகியோரை அழிக்கச் சிவபெருமான் கொண்ட கோலங்களும் தட்சிணாமூர்த்தி என்றே போற்றப்படுகின்றன. இந்நிலையில் ஆயுதங்களை ஏந்தாமல், இருந்த இடத்திலிருந்தே யோக பலத்தாலேயே எதிரிகளை அழிக்கிறார். இவரை சம்ஹாரதட்சிணா மூர்த்தி எனவும் கூறுவர்.

ஜலந்தர வதத்திலும் காம தகனத்திலும் பெருமான் தட்சிணாமூர்த்தியாக விளங்குகிறார். காஞ்சி கயிலாய நாதர் ஆலயத்தில் "ஜலந்தர வதம்" பெரிய சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இது மேலும் கீழுமாக இரண்டு பகுதிகளைக் கொண்டது. மேற்பகுதியில் யோகபட்டத்துடன் கூடிய சுவஸ்திகாசனத்தில் பெருமான் வீற்றிருக்கின்றார். முன் இரண்டு கைகளையும் முழங்கால்களின் மீது நீட்டியுள்ளார். பின்னிரண்டு கரங்களிலும் அட்சமாலையும், குண்டிகையும் விளங்குகின்றன. இவர் பிரமனுக்கு அருள் புரிந்தவர். அவனால் தியானிக்கப் படுபவர் அதனால் பிரம்ம தட்சிணாமூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறார்.

கீழ்ப்பகுதியில் பருத்த உடல் கொண்ட ஜலந்தரன் வீழ்ந்து கிடக்கின்றான். அவன் தோள்மீது அவனைப் பிளந்து கொண்டு சக்கரம் செல்கிறது. அவன் முகம் அச்சத்தால் வெளிறியுள்ளது.

இங்கு, வடக்கில் பிரமனை அமைப்பதற்குப் பதிலாகப் பிரமனுக்கு அருள்புரிந்த தட்சிணாமூர்த்தியை அமைத்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

காமனை எரித்த கோலத்தில் விளங்கும் சிவபெருமான் தட்சிணாமூர்த்தி என்று போற்றப்படுகிறார். சிவபெருமான் சனகாதியர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் வேளையில் மன்மதன் அம்பெய்து அவருடைய யோக நிலையைக் கலைக்க முற்பட்டான். அதனால் கோபம் கொண்ட அவர் தனது நெற்றிக் கண்ணால் அவனை எரித்து அழித்தார். அக்காட்சியைக் கண்ட பிரமன், திருமால், இந்திரன், நந்திதேவர் ஆகியோர் திகைத்து நின்றனர். காம தகனரான தென்முகக்



கடவுள் குறுக்கையில் சபா மூர்த்தியாக வீற்றிருக்கின்றார்.

கொருக்கை (திருக்குறுக்கை) அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள சபை "காமாங்க நாசினி" சபை என்றழைக்கப் படுகிறது. பெருமான் மேற்கரங்களில் மான் மழு தரித்து முன் வலது கரத்தில் சின்முத்திரை தாங்கியுள்ளார். இடதுகரத்தை முன்னே நீட்டியுள்ளார்.

காமதகனரைக் குறிக்கும் அற்புதமான சுதைத் திருவுருவம் சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலய ராஜகோபுரத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் பெருமான் மரத்தடியில் அமர்ந்துள்ளார். அவருக்கு மேற்கில் வலப் புறம் அம்புவிடும் கோலத்தில் மன்மதன் நிற்கிறான். அவன் எரிந்து கொண்டிருக்கிறான் என்பதை அவனைச் சுற்றிலும் உள்ள தீயின் நாக்குகள் விளக்குகின்றன. அவனுக்குப் பின்புறம் நிற்கும் இரதி மடியேந்தி இறைவனிடம் கணவன் உயிரைப் பிச்சையாகக் கேட்கிறாள்.

கிழக்குப்புறத்தில் பிரம்மா, நந்தி, திருமால் ஆகியோர் உள்ளனர். சுதைச் சிற்பங்களில் இது அருமையானதாகும்.

திருப்பெருந்துறையில் மன்மதன் ரதி ஆகியோரின் நெடிய உருவங்கள் தூண்சிற்பங்களாகத் தியாகராஜ மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மன்மதன் வில்லை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வளைத்துப் பஞ்சபாணங்களைத் தொடுக்கிறான். அவனுக்கு நிகழப் போகிற தீவினையை உணர்ந்த ரதி வருத்தத்துடன்அன்னத்தின் மீது அமர்ந்துள்ளாள். (அனேக மண்டபத்து தூண்களில் ரதியும் மன்மதனும் கிளி, அன்னத்தின் மீது அமர்ந்திருக்கக் காணலாம். அங்கு இருவரும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பவராக இருப்பர். இங்கு அவர்கள் காமதகன வரலாற்றை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.)

காமனை எரித்த தட்சிணாமூர்த்தியைச் சம்ஹார தட்சிணாமூர்த்தியென்று புராணங்களும், சிற்ப நூல் களும் கூறுகின்றன.

❖ காமதகனம், ஜலந்தரவதம் போன்ற அனேக நிகழ்ச்சிகளின் போது பெருமான் சம்ஹார தட்சிணா மூர்த்தியாக இருந்தார் என்று கூறப்படுகிறது. சாக்த தந்திரங்கள் இவரைச் சிறப்புடன் போற்றுகின்றன.

❖ காமிக ஆகமம் கூறும் வில்லேந்தி வீற்றிருக்கும் ஆசீன தட்சிணாமூர்த்தியும் சம்ஹார தட்சிணா மூர்த்தியே ஆவார்.

## இடபத்தின் மீது அமர்ந்திருக்கும் மேதா தட்சிணாமூர்த்தி

இடபத்தின் மீது அமர்ந்து ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருக்கும் ஞான தட்சிணாமூர்த்தியைச் சிற்பநூல் கள் மேதா தட்சிணாமூர்த்தி என்று அழைக்கின்றன.

தருமத்தின் வடிவமாக விளங்குபவர் இடபதேவர். தருமத்தின் பொருளை விவரிக்கும் தட்சிணாமூர்த்தி யுடன் அவரையும் சேர்த்து வழிபடுகின்றனர்.

சில தலங்களில், தட்சணாமூர்த்தி இடபத்தின் முதுகின் மீது அமர்ந்து அறம் பகர்ந்து கொண்டிருப் பதைக் காணலாம். சில தலங்களில் பெருமானின் பீடத் தின் பின்புறம் இடபம் நிற்கின்றது. சிலவற்றில் அறம் கேட்கும் பாவனையில் முகத்தைத் திருப்பி அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

திருவிடைமருதூர் சாம்பவி தட்சிணாமூர்த்தி வடிவத்தில் பெருமானின் காலடியில் நந்தி படுத்திருக் கின்றார். அவர் முதுகின் மீது பெருமான் வலது காலைப் பதித்துள்ளார்.

❖ சுருட்டுப் பள்ளியில் பெருமானின் பின்புறம் நந்தி தேவர் காட்சியளிக்கிறார். சிவபெருமானைத் தேவி தழுவி மகிழ்கிறாள்.

❖ தட்சிணாமூர்த்தி இடபத்தின் மீதமர்ந்து வீணை மீட்டிக் கொண்டிருப்பதை மேல்பாடியிலுள்ள சோழசிம் மேசுவரம் எனப்படும் சோம நாதீசுவரர் ஆலய விமானத் தில் காணலாம்.

❖ கொள்ளிடக்கரையிலுள்ள சேந்தமங்கலம் ஆபத் சகா யேசுவரர் ஆலயத்தில் சுமார் நான்கடி உயரமுள்ள மேதா தட்சிணாமூர்த்தி தனிச்சிற்பமாக உள்ளார்.

❖ மாயூரம் வள்ளலார் ஆலயத்திலுள்ள மேதா தட் சிணாமூர்த்தி தனிச்சிறப்புடன் திகழ்கிறார், இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன, குரு பெயர்ச்சி யின் போது பெருவிழா கொண்டாடுகின்றனர்,

சிவபெருமானிடம் உபதேசம் பெற்றவர்களில் முதன் மையானவர் நந்தியம்பெருமான் ஆவார். அவரிடமிருந்தே ஞானம் பலருக்கும் பரவியது. அவரிடம் உபதேசம் பெற்ற வர்கள் ஞானங்களைப் பரப்பி மற்றவர் பேறு பெறத் திருமடங் களை அமைத்தனர். அதனால் பெருவாரியான மடங்களுக்கு நந்தி ஞானமுதல்வராக உள்ளார்.

❖ திருமடங்களில் ஆதிகுருபிரானான தட்சிணா மூர்த்தியையும் நந்தியம்பெருமானையும் சிறப்புடன் கொண்டாடுகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தட்சிணாமூர்த்தி ஆலயங்கள்

★ தட்சிணாமூர்த்தி அனைத்துச் சிவாலயங்களிலும் கருவறையின் தென் தெய்வ மாடத்துள் (கோட்டம்) அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். அப்படியின்றி அவர் தனி ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிப்பதைச் சில தலங்களில் மட்டுமே காணமுடிகிறது. அவற்றுள் சிலவற்றைக் கண்டு மகிழலாம்.

## திருப்புறம்பயம்

★ காவிரி வடகரைத் தலமான திருப்புறம்பயம் சுவாமி மலைக்கு அருகில் உள்ளது. இங்குள்ள சாட்சி நாதே சுவரர் ஆலயத்திற்கு முன்பாக தட்சிணாமூர்த்திக்குத் தனிச் சிற்றாலயம் உள்ளது. இதற்குப் பின்புறம் தீர்த்தக் குளம் உள்ளது. இவரை வழிபட்ட பின்னரே ராஜகோபு ரத்தை வணங்கி ஆலயத்திற்குள் செல்ல வேண்டும். ஓர் அன்பர் கோயில் மூடிய பின்பு இங்கு வந்தார். அவ ருக்கு அருள்புரியத் தட்சிணாமூர்த்திப் பெருமான் வெளியே வந்து காட்சி அளித்தார் என்றும் அதை நினைவூட்டிக் கொண்டிருக்கும் வகையில் வெளியிலேயே தனிச்சந்நிதி கொண்டார் என்றும் கூறுகின்றனர்.

இவ்வூர் தேவாரத்தில் தட்சிணாமூர்த்தியின் திருக்கோலம் "திறம்பயன் உறும் பொருள் தெரிந் துணர் நால்வர்க்கு அறம்பயன் உரைத்தனை புறம் பயம் அமர்ந்தோய்" என்று திருஞானசம்பந்தப் பெருமா னாலும், "திருவாசகத்துள்" புறம்பயம் அதனில் அறம் பல பகர்ந்தும்" என்று மாணிக்கவாசகராலும் போற்றப் பட்டுள்ளது. இக்கோயில் கல்வெட்டில் இவர் அறம் பயந்த பிள்ளையார் என்று குறிக்கப்பட்டுள்ளார். இவருடைய வழிபாட்டிற்கு வேண்டிய நிபந்தங்கள் அளிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

## திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் மலை சுற்றும் பாதையில் தென் முகத்தின் நேராக தட்சிணாமூர்த்திக்கெனத் தனிச் சிற்றாலயம் உள்ளது. இதில் மிகப்பெரிய வடிவில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவருக்குத் தினசரி பூசைகளும் வியாழக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

மேலும் இத்தலத்தில் மேற்கு மாடவீதியும் வடக்கு மாடவீதியும் (வாயுமூலை) கூடும் இடத்தில் தெற்கு நோக் கியவாறு தட்சிணாமூர்த்தி ஆலயம் என்ற பெயரில் ஓர் ஆலயம் அமைந்துள்ளது. இது குன்றக்குடி திரு வண்ணாமலை ஆதீனத்திற்குச் சொந்தமான குருமூர்த் தம் என்று கூறப்படுகிறது.

## திருவொற்றியூர்

(தியாகராஜ சுவாமி ஆலய) சந்நிதித் தெருவில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ள யோகீசுவரர் திரு மடம் உள்ளது. இங்குத் தனி ஆலயநிலையில் தட் சிணா மூர்த்தி வடக்கு நோக்கி எழுந்தருளி இருப்பதைக் காண்கிறோம். இது தட்சிணாமூர்த்தி ஆலயமாகப் போற்றி வழிபடப் படுகிறது. ஆலயத்திற்குள் சென்று கொண்டே தத்துவ விளக்கம் கேட்ட யோகி களுக்கு விளக்கம் கூற, சுவாமி அபிமுகமாய் அமர்ந்த நிலை என்கின்றனர்.

## பட்டமங்கை சித்த தட்சிணாமூர்த்தி

பாடல்பெற்ற திருத்தலமான திருப்புத்தூருக்கு அருகில் (திருக்கோட்டியூர் செல்லும் சாலையில், சாலை யோரத்தில்) அமைதியான சூழலில் பட்டமங்கை உள் ளது. இந்நாளில் பட்டமங்களம் என்றழைக்கின்றனர். இங்கு மீனாட்சி அம்பிகை உடனாய சுந்தரேசர் ஆலயம் உள்ளது. சோமசுந்தரக்கடவுள் எல்லாம் வல்ல சித்தராக இங்கு எழுந்தருளி ஆலமரத்தடியில் சாபத்தால் கற்களா கக் கிடந்த கார்த்திகைப் பெண்களுக்குச் சுயவடிவம் அளித்து அட்டமா சித்திகளை அருளிச் செய்தார் என்று திருவாசகமும் திருவிளையாடற் புராணமும் கூறு கின்றன.

சுந்தரேசுவரர் ஆலயத்தின் வடக்கில் அதையொட்டிய வாறு தட்சிணாமூர்த்தி ஆலயம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை முகமண்டபம் மகாமண்டபம் ஆகியவை விசாலமாக உள்ளன. கருவறைக்கு மேற்கில் அதையொட்டிப் பெரிய ஆலமரம் விழுதுகள் விட்டுப் படர்ந்துள்ளது. தட்சிணாமூர்த்தி ஆலயங்களில் இதுவே பெரியதாகும். மகாமண்டபத்தில் கார்த்திகைப் பெண் களுக்கு உபதேசிப்பது விதான ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. கருவறையில் வீராசனத்தில் பெருமான் வீற்றிருக்கின்றார் வலது மேற்கரத்தில் சுடரும் இடது மேற்கரத்தில் பாம்பும் உள்ளன. வலது முன்கையில் ஜெப மாலையுடன் சின்முத்திரை தாங்கி இடதுகையை இடது முழுங்கால் மீது நீட்டியுள்ளார். பீடத்தில் முனிகணங் களுடன் அன்னமும் பன்றியும் காட்டப்பட்டுள்ளன. இது பிரமன் அன்னமாயும் திருமால் பன்றியாயும் அடிமுடி தேடிய வரலாற்றைக் குறிப்பதாகும்.

சுந்தரேசுவரர் கருவறையின் தெற்குக்கோட்டத்தில் வழக்கம்போல் சனகாதியர் நால்வருடன் தட்சிணா மூர்த்தி எழுந்தருளியுள்ளார். அவருக்கு எதிரே திரு மாளிகைப்பத்தியில் கார்த்திகைப் பெண்களான அம்பா, துலா, நிதார்த்தனி, அப்ரகேந்தி, மேகேந்தி, வர்த் யேந்தி ஆகிய ஆறுவரும் கல்திருமேனிகளாக எழுந்த ருளியுள்ளனர்.

திருச்சுற்றின் வடக்கு திருமாளிகைப் பத்தியில் பெரிய சபை அமைக்கப்பட்டு அதில் உலாத்திருமேனியாக தட்சி ணாமூர்த்தி எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளார். பெரும் திரளான மக்கள் வந்து வழிபடுகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## அண்மைக்காலத்து தட்சிணாமூர்த்தி ஆலயங்கள்

இந்த நூற்றாண்டில் தட்சிணாமூர்த்தி ஆலயங்கள் பல புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. அவை இரண்டு வகையின. முதல்வகை குருபக்தியையும், சமயக்கல்வி அறிவையும் வளர்க்கத் தோன்றிய அருளாளர்களும் பெரியோர்களும் அமைத்தவை. இரண்டாவது வகை குரு கிரக வழிபாட்டில் மக்களுக்குள்ள ஈடுபாட்டால் எழுந்தவை. இவை இரண்டின் அடிப்படையிலும் அமைந்த ஆலயங்கள் இரண்டைக் காணலாம்.

### தேனி தட்சிணாமூர்த்தி

தேனியில் ஸ்ரீசுவாமி சித்பவானந்தர் அவர்களால் தோற்று விக்கப்பட்ட வேதாந்த சாஸ்திர பிரச்சார டிரஸ்டிற்குச் சொந்தமான இடத்தில் பெரிய தட்சிணாமூர்த்தி ஆலயம் அமைக் கப்பட்டுள்ளது. மூலமூர்த்தி தட்சிணாமூர்த்தி ஆவார். சுற்றிலும் விநாயகர், சுப்பிர மணியர், சூரியன், அம்பிகை, நாராயணர் ஆகி யோருக்கும் அழ கிய சந்நிதிகள் அமைக்கப் பட்டுள்ளன. இங் குள்ள தட்சிணா மூர்த்தி வடிவம் மிகப் பெரியதாகும். இங்கு நவக் கிரகங்களில் ஒருவனான குருபகவானுக்கும் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

### காக்களூர் தட்சிணாமூர்த்தி

திருவள்ளூருக்கு அருகில் காக்களூர் (பூங்கா நகர்) என்ற ஊர் உள்ளது. இங்கு ஸ்ரீ வெங்கட ராம சிவாச்சாரியார் அவர்கள் இறைவன் தமக்கு அருளிய வண்ணம் 9 அடி உயரமுள்ள தட்சிணா மூர்த்தி வடிவை எழுந்தருளி வைத்துச் சிறப்பு வழிபாடுகள் நடத்திவருகிறார். இத்தலம் குருதலம் என்று அழைக்கப்படுகிறது.

## திலதர்ப்பணபுரி தட்சிணாமூர்த்தி

தேவாரத்துள் திலதைப்பதி என்று போற்றப்படும் செதலப்பதியில் பொற்கொடி அம்பிகை உடனாய முக்தீசுவரர் ஆலயம் உள்ளது. இதன் முன்புறம் தட்சிணாமூர்த்தி ஆலயம் உள்ளது. அதனை இன்னாளில் ஆதிவிநாயகர் கோயில் என அழைக்கின்றனர். அதிலுள்ள மூர்த்தம் தட்சிணாமூர்த்தியேயாகும்.

## அயல்நாட்டில் தட்சிணாமூர்த்தி ஆலயம்

இந்த நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் தமிழர்கள், அயல் நாட்டில் குடியேறிப் பணிபுரியத் தொடங்கினர். அங்கு அவர்கள் கூட்டமாக வாழத் தொடங்கிய பின் கோயில்கள் பலவற்றை அமைத்தனர். அயல்நாட்டினர் பலரும் சைவ சமயத்தின் மீது ஆர்வம் கொண்டு இம்மதத்தினை தழுவியதுடன் கோயில்களை அமைக்க உதவினர். இதனால் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளில் பல சிவாலயங்களும் சக்தி ஆலயங்களும் விஷ்ணு ஆல யங்களும் கட்டப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் தட்சிணாமூர்த்தியின் பால் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். இவருடைய ஆசிரமங்களில் தட்சிணாமூர்த்திக்குத் தனி ஆலயம் அமைத்துள்ளார். இவர் அமெரிக்காவில் பென்சில்வேனியா என்ற இடத்தில் 1500 கிலோ எடை கொண்ட பெரிய தட்சிணாமூர்த்தியை அமைத்துள்ளார்.

## தட்சிணாமூர்த்திக்கு உரிய விழாக்கள்

தட்சிணாமூர்த்திக்குத் தனிவிழாக்கள் நடத்தும் வழக்கம் இல்லை. அவர் தியான மூர்த்தியாக இருப்பதால் இடம் பெயர்த்து விழா செய்யும் வழக்கமில்லை என்று கூறுகின்றனர். ஆனால் தஞ்சைப் பெரியகோயில், திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் முதலான ஆலயம் சிலவற்றில் உலாத்திருமேனிகள் அமைக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது. பின்னாளில் குரு கிரகத்திற்குச் செய்ய வேண்டிய விழாக்களைத் தட்சிணாமூர்த்திக்குச் செய்து கொண்டாடும் வழக்கம் வந்ததால் பல ஆலயங்களில் தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வகையில் ஆலங்குடி உத்தமர்கோயில், வாணியம்பாடி, காளத்தி முதலிய பல தலங்களில் உலாத்திருமேனிகள் அமைக்கப்பட்டு திருவிழாக்களும் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

மிருகசீரிடம் தட்சிணாமூர்த்திக்கு உரிய நட்சத்திரமாகும். ஆனிமாத மிருகசீரிடம் தட்சிணாமூர்த்தி வழிபாட்டிற்குரிய நன்நாளாகும். இந்நாளில் குருபெயர்ச்சி நடைபெறும்போது தட்சிணாமூர்த்திக்கு லட்சார்ச்சனை பிராகார உலா முதலிய உபசாரங்கள் நடத்தப்படுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அரும் பொருள் கேட்டவர்கள்

தட்சிணாமூர்த்தி மௌனமாக உபதேசித்துக் கொண்டிருக்கின்றார். அவருடைய மௌனத்தினின்று ஓம்காரம் அஜபா எனப்படும் மௌன ஒலியாக வெளிப் பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த ஒலி அலைகள் எதிரே ஒன்றியிருந்து உணர்பவர்களின் மனதில் தோன் றும் ஐயங்களுக்கான விடைகளைத் தருகிறது. எனவே அங்கு பேச்சுக்கு இடமே இல்லை, மௌனமே மொழி யாக உள்ளது.

இவ்வகையில், எண்ணிலாதவர்கள் பெருமானிடம் ஞானம் பெற்று மேன்மை அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் அறிந்து போற்றுதல் இயலாது என்பதால் புராணங்கள் குறிக்கும் சிலரை இங்கே சிந்திக்கலாம்.

## வேதங்கேட்ட நால்வர்

அதிக அளவு நூல்களில் தட்சிணாமூர்த்தியிடம் அரும்பொருள் கேட்டவர்கள் நால்வர் என்றே குறிக்கப் பட்டுள்ளது. இவர்கள் சனகர், சனந்தனர், சனா தனர். சனற்குமாரர் என்பவர்களாவர் சனற்குமாரர் இளையவர், மற்றவர்கள் அவரைவிடப் பெரியவர்கள், இவர்களைச் சனகாதியர் என்று அழைப்பர். திருமுறை களில் அனேக இடங்களில் கல்லாலின் நீழலில் பெரு மானிடம் நால்வர் அறங்கேட்டதும், வேத நூல்களைக் கேட்டதும், வேதத்துடன் ஆறு அங்கங்களைக் கேட்டதும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைக் கேட்டதும் குறிக்கப்பட்டுள்ளன. அழிந்த சிந்தை அந்த ணாளர்க்கு அறம், பொருள், இன்பம் மொழிந்த வாயான் என்று முதுகுன்றப்பதிகம் கூறுகிறது.

## இசைநூல் கற்றோர்

வீணாதர தட்சிணாமூர்த்தியிடம் இசை நுணுக்கம் தொடர்பான விளக்கங்களை அறிந்தவர்கள் நாரதர். தும்புரு முதலானோர், இவர்களுடன் கந்தர்வர்களும் கின்னரர்களும் கேட்டு மகிழ்ந்தனர். இவர்கள் யாவரும் இசை வல்லுனர்கள் ஆவர்.

## ஆகமம்பெற்ற கௌசிகாதியர்

கௌசிகர். பாரத்வாஜர் முதலான ரிஷிகள் ஆக மங்களைக் கேட்டு உணர்ந்தனர். இவர்களை எழுவர் என்றும் எண்மர் என்றும் சிற்பநூல்கள் கூறுகின்றன.

சகளாதிகாரம் என்ற சிற்ப நூலில் நாரதர், ஜமதக்னி, வசிட்டர், ப்ருகு ஆகிய நால்வர் வலது புறத் திலும் பாரத்வாஜர், அகஸ்தியர், சனகர், பார்க்கவர் ஆகிய நால்வர் இடப்புறம் நின்றும் பொருள் கேட்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

உத்திரகாமிக ஆகமத்தில் அவருடைய கரத்திலுள்ள புத்தகத்தில் 28 ஆகமங்களையும் உபாகமங்களையும் மந்திரப்பூர்வமாக நிலைப்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

## திருமூலருடன் கேட்டவர்கள்

திருமூலர் தன்னுடன் எழுவர் (ஆக எண்மர்) ஆகமப் பொருளைக் கேட்டதாகத் திருமந்திரத்தில் குருமட வரலாறு எனும் பகுதியில் குறிக்கின்றார். சனகாதியர் நால்வருடன் மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரபாதர், சிவயோக மாமுனி ஆகிய எழுவர் தன்னுடன் (திருமூலர் சேர்த்து எண்மர்) தந்திரங்களைக் கேட்டனர் என்று குறிக்கின்றார். (தந்திரங்கள் – ஆகமங்கள்)

## அட்டமாசித்திகளைப் பெற்ற அறுவர்

சிவபெருமானிடம் அஷ்டமாசித்திகளைப் பெற்றவர் கள் யக்ஷ கன்னியர் அறுவராவர். இவர்களைக் கார்த்தி கைப் பெண்கள் என்றும் கூறுவர். முருகப் பெருமானைச் சரவணத்தில் பாலூட்டி வளர்த்தவர்கள் இவர்களே ஆவர்.

ஒரு சமயம் இந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும் பெருமானைத் தரிசித்து அட்டமாசித்திகளை உப தேசிக்கும்படிக் கேட்டனர். அவரும் மிகுந்த அன்புடன் உபதேசம் செய்யத் தொடங்கினார். அவர்கள் உமாதேவியை வணங்காமல் கேட்கத் தொடங்கியதால் அதில் மனம் பற்றவில்லை. அசிரத்தையாக இருந்து கேட்டனர். கோபம் கொண்ட சிவபெருமான் அவர்களைக் கற்களாகும்படிச் சபித்துவிட்டார்.

அவர்கள் பட்டமங்கை என்னும் தலத்தில் ஆல மரத்தடியில் கற்களாகக் கிடந்தனர், காலங்கள் பல கடந் தன, அவர்களுக்கு அருள்புரிய விரும்பிய பெருமான் பட்டமங்கையில் தோன்றினார், அவர் அவர்களது கல் வடிவை நீக்கி பெண்களாக்கினர், அவர்களுக்கு அட்ட மாசித்திகளை அருளிச் செய்தார். அவர்கள் அதிக கவ னத்துடன் அவற்றைக் கேட்டு உணர்ந்து கொண்டனர்.

இது திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ள வரலாறு ஆகும். திருவாசகத்தில் "பட்டமங்கையில் பாங்காயிருந்து அங்கு அட்டமாசித்தி அருளிய அதுவும்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

## தத்துவஞானம்

பெருமான் தத்துவஞானங்கள் அருள்வதை கோட்டாலடியில் குருவடிவாகி... அடியவர்க்குத் தத்துவஞானம் தனித்திருந்து அருளிய ஆரூர் என்று திருவாரூர் ஒரு துறைக் கோவை குறிப்பிடுகிறது.

மனிதர்கள் தேவர்கள், யக்ஷர்கள் முதலானோர் பெருமானிடம் ஞான உபதேசம் பெற்றதைப் போலவே பறவைகள், பாம்புகள், மான், முயல் போன்ற விலங்கு களும் உபதேசம் பெற்றன. பெருமானின் திருவுருக் காட்சியில் அவையும் இடம் பெற்றுள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தட்சிணாமூர்த்தியும் பாம்பு வழியாடும்

தட்சிணாமூர்த்தி வழிபாட்டில் பாம்புகள் தனியிடம் பெற்றுள்ளன. சிவபெருமான் தட்சிணாமூர்த்தி வடிவில் யோகராஜனாக விளங்குகிறார். யோகத்தின் சின்னம் பாம்பு. குண்டலினி சக்தி பாம்பாக உருவகம் செய்யப் படுகிறது. மூலாதாரத்தில் சுருண்டுகிடக்கும் அது குருவின் அருட்பார்வை யால் விழிப்புற்று செயல்படும் என்று யோக சாதகர்கள் கூறுகின்றனர். லோககுருவாக விளங்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் சாதகனுக்கு யோக நிலை இயல்பாகவே கைகூடிக் குண்டிலினி சக்தி எழுந்து மேலே செல்லும் என்பதைக் குறிக்க அவருடைய பீடத்தில் படமெடுத்தாடிக் கொண்டிருக்கும் பாம்பை அமைத்துள்ளனர்.

❖ காஞ்சீபுரம் கயிலாயநாதர் ஆலயத்திலுள்ள பெரிய தட்சிணாமூர்த்தி வடிவில் அவருடைய பீடத்தில் நளினமாக அவரை பார்த்துக் கொண்டிருக்கும் பாம்பைக் காண்கிறோம். திருக்கருகாவூர், தக்கோலம் முதலிய தலங்களிலும் அவருடன் சுருண்டுகிடக்கும் உடலுடன் தலை தூக்கிப் பார்க்கும் நிலையில் உள்ள பாம்பைக் காணலாம்.

அனேக வடிவங்களில் பெருமான் பாம்பை வலது கையில் ஏந்தியுள்ளார். சில வடிவங்களில் அவரிடமிருந்து இருபுறமும் பாம்புகள் வெளிப்பட்டுச் செல்வது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

❖ பாம்புக்குத் தென்முகக் கடவுள் அருள்புரிந்ததைச் சுந்தரர் திருநின்றி யூர்த் தலப்பதிகத்தில் குறித்துள்ளார். ஆதியில் நாகர்களின் வழிபடு தெய்வ மாகத் தட்சிணாமூர்த்தி இருந்தார் என்று கூறப்படுகிறது.

## முயலகன்

பொதுவாகத் தட்சிணாமூர்த்தி வடிவங்களில் சிவபெருமான் தனது வலது திருவடியைத் தொங்கவிட்டு, அதை முயலகன் என்னும் பூதத்தின் மீது ஊன்றியுள்ளார். அவன் தலையை மேற்கில் வைத்து கால்களைக் கிழக்கில் நீட்டிக் கவிழ்ந்து காணப்படுவான். அவன் கரங்களில் நீண்ட பாம்பைப் பற்றியுள்ளான். சில தலங்களில் அபூர்வமாகக் கத்தி கேடயத்துடனும் காணப்படுகிறான். வட்டமாகப் பின்னித் தலைமுடியை முடித்துள்ளான். சில உருவங்களில் கோரைப் பற்கள் காணப்படுகின்றன.

இவன் அறியாமையின் உருவமாவான். அறியாமை நீங்குவதற்கு அறிவு தேவை. உயிர்களிடம் அறியாமையே நிறைந்திருக்கிறது. கற்கக் கற்க அறியாமை விலகி அறிவினால் அனுபவத் தெளிவு உண்டாகிறது. இறைவன் அறியாமையை விலக்கும் ஞானாசிரியனாய் விளங்குகிறான். அதுவே தட்சிணாமூர்த்தி கோலமாகும்.



உலகப் படைப்பில் அறியாமையும் ஓர் அங்கமாகும் அது முற்றிலும் அழிவதில்லை. அதை உணர்த்தவே பாம்புடன் மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் அவனை அமைத்துள்ளனர். முயலகனை வடமொழியில் அபஸ்மாரம் என அழைக்கின்றனர்.

★ திருவீழிமிழலையிலுள்ள தட்சிணாமூர்த்தி வடிவத்தில் பாதத்தடியில் முயலகனுக்குப் பதில் தாமரை மலர் உள்ளது.

★ திருவையாற்றுத் தட்சிணாமூர்த்தியின் பாதத்தடியில் ஆமை உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஆசனங்கள் பெயரில் ஆலமர்செல்வன்

யோகம் பயில்விக்கின்ற மூர்த்தியாகத் தட்சிணாமூர்த்தி விளங்குகிறார் அவரிடமிருந்தே யோக சாத்திரம் தோன்றுகிறது. அவர் யோக சாத்திரத்தைப் பதஞ்சலி முனிவருக்கு அருளினார் என்று புராணம் கூறுகிறது. அந்த முனிவர் அதை நூலாக அருளிச் செய்தார். அது பதஞ்சலியோக சூத்திரம் என்று அழைக்கப்படுகிறது. "யோகம்" பயில்வதற்கு உறுதியான உடலும் சலிக்காத மனமும் வேண்டும். யோகத்தின் அங்கமான தியானம் பயில்வதற்கு அமர்வு நிலை முக்கியமான தாகும். அதுவே ஆசனம் எனப்படுகிறது.

தட்சிணாமூர்த்தி பல்வேறு அமர்வுகளால் வீற்றிருந்து காட்சியளிக்கிறார். அந்த அமர்வுகளின் பெயர்களாலேயே அந்த மூர்த்தங்கள் அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக உத்குடிகாசனத்தில் வீற்றிருக்கும் பெருமானை உத்குடி காசன தட்சிணாமூர்த்தி என்றழைக்கின்றனர். அதேவடிவில் வீணை யேந்தியிருந்தால், உத்குடிகாசன வீணாதர தட்சிணாமூர்த்தி என்றழைக்கப்படுகிறார். வீராசனம், உத்குடிகாசனம், மகாராஜ லீலாசனம், அர்த்தபத்மாசனம், பத்மா சனம், சுகாசனம், சுவஸ்திகாசனம், யோக பட்டாசனம் என்ற பல்வேறு நிலைகளில் அவர் அமர்ந்து அருள்பாலிப்பதைப் பலதலங்களில் காண்கிறோம். இத்தகைய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் சிலவற்றைச் சிந்தித்து மகிழலாம்.

### உத்குடிகாசனமூர்த்தி

ஒரு காலைத் தொங்கவிட்டு மறு காலை மடித்துப் பீடத்தின் மீது குத்திட்டு அமர்ந்திருக்கும் நிலையே உத்குடிகாசனம் ஆகும். தக்கோலம் சோமநாதீசுவரர் ஆலயத்திலுள்ள தட்சிணாமூர்த்தி உத்குடிகாசன தட்சிணாமூர்த்தியாவார். இந்த அமர்வில் யோக பட்டம் தரித்திருப்பதும் உண்டு.

இந்த அமர்வில் ஊன்றியுள்ள இடது முழங்கால் மீது தனது கரத்தை நீட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும் காண்கிறோம். உத்திர காமிகாமத்தில் யோகபட்டம் தரித்து, உத்குடிகாசனத்தில் அமர்ந்து இடது கரத்தை முழந்தாளின் மீது நீட்டியுள்ள யோக தட்சிணாமூர்த்தி விவரிக்கப்பட்டுள்ளார். சில்பரத்தினமும் இம்மூர்த்தியைச் சிறப்புடன் பேசுகிறது. திரிசூலம் திரிசூலநாதர் ஆலயத்தில் இம்மூர்த்தியுள்ளார்.

உத்குடிகாசனத்தில் பெருமான் கிழக்குநோக்கி வீற்றிருக்க மார்பும் முகமும் தெற்கு நோக்கித் திரும்பியுள்ள நிலையைத் திரு வெண்காடு முதலிய தலங்களில் காண்கிறோம்.

உத்குடிகாசனத்தில் வீணை மீட்டிக்கொண்டிருக்கும் உத்குடி காசன வீணாதரதட்சணாமூர்த்திச் சில விமானங்களில் காண்கி றோம்.

### ராஜலிங்காசன தட்சிணாமூர்த்தி

ராஜலிங்காசனம் என்பது இரண்டு கால்களையும் மடித்து ஒன்றின்மேல் ஒன்றை படியவிட்டு இறுக்கமான நிலையில் வைத்து நிமிர்ந்து அமர்ந்திருக்கும் நிலையாகும். மாபெரும் சித்தர்கள் இந்த அமர்விலேயே காட்சியளிக்கின்றனர். மதுரையிலுள்ள எல்லாம் வல்ல சித்தர் வீற்றிருக்கும் நிலை இதுவாகும். இந்த அமர்வில் வீற் றிருக்கும் தட்சிணாமூர்த்தியைத் திருநெடுங்களம் நெடுங்களநாதர் ஆலயத்தில் காண்கிறோம்.

### அர்த்தசுவஸ்திகாசன தட்சிணாமூர்த்தி

இரண்டுகால்களையும் குத்திட்டுப் பாதங்கள் படிந்திருக்கக் குதிகால்கள் உடம்போடு ஒட்டியிருக்க அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளவர் அர்த்தசுவஸ் திகாசன தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப் படுகிறார்.

★ தக்கோலம் உத்குடிகாசன தட்சிணாமூர்த்தி★



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## சுவஸ்திகாசனம்

இரண்டு கால்களை மடித்து குத்திட்டுக் குறுக்காக வைத்துக்கொண்டு கட்டைவிரல் பூமியில் பதியும் வகையில் அமர்வது சுவஸ்திகாசனம் எனப்படும். இதில் யோக பட்டம் தரித்திருப்பதைப் பல இடங்களில் காண்கி றோம். இந்நிலையில் இரண்டு கைகளையும் முழங்கால்கள் மீது நீட்டிக் கொண்டிருப்பதே பெரு வாரியாக உள்ளது. இது யோகபட்ட அபிராம ஆசனம் (அ) யோகபட்ட சுவஸ்தி காசனம் எனப்படுகிறது. (யோக நரசிம்மர் வீற்றிருப்பது இந்நிலையிலாகும்).

காஞ்சீபுரம் கயிலாய நாதர் ஆலயத்தில் (ஜலந்தர வதத்தில்) அமைந்துள்ள தட்சிணாமூர்த்தி இத்தகைய யோகபட்ட ஸ்வஸ்திகாசன தட்சிணாமூர்த்தியாவார்.

சில்பரத்தினம் என்ற நூலில் இந்தவடிவம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

## பத்மாசனம்

இரண்டு கால்களை மடக்கி ஒன்றன்மேல் ஒன்றாகக் குதிகால்கள் இடுப்பை ஒட்டிய நிலையில் பாதங்கள் விண்ணோக்கி இருக்க அமரும் நிலை பத்மாசனம் எனப்படும் (பெருமாள் கோயில்களில் லட்சுமி அமர்ந்திருக்கும் நிலை இதுவே பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் தட்சிணாமூர்த்தியைத் திங்களூர் கயிலாய நாதர் ஆலயத்தில் காண்கிறோம். இவர்மேற் கரங்களில் ஜபமாலையும் அமுதகலசம் ஏந்தி முன்கரங்களில் ஞான முத்திரை, புத்தகம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளார்.

## வீராசனம்

உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருப்பவர் வலது காலை முன்நீட்டி தொங்கவிட்டு முயலகன் மீது ஊன்றிக் கொண்டு இடது காலை மடித்து கணுக்கால் வலது முட்டியின் மீது பொருந்த வீற்றிருக்கும் நிலை வீராசனம் ஆகும். இது இமைப்பளவில் எழுந்து கொள்வதற்கு உதவும் நிலையாகும். பெருவாரியான ஆலயங்களில் தட்சிணாமூர்த்தி வீராசனத்திலேயே அமர்ந்துள்ளார்.

★ திருமயிலை கபாலீசுவரர் ஆலய ராஜகோபுரத்தில் தென் முகத்தில் ஏழு தட்சிணாமூர்த்தி வடிவங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனிச்சிறப்புடன் கதைப் போக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

கீழிருந்து மேலாக முதல்தளத்தில் வீராசனத்தில் பெருமான் வீற்றிருந்து சனகாதியருக்கு உபதேசம் புரிந்து கொண்டிருக்கிறார். இவர் தர்மவியாக்யான மூர்த்தியாவார். இரண்டாவது நிலையில் ராஜலிங்காசனத்தில் காமதகன மூர்த்தியாக விளங்குகிறார். மூன்றாவது நிலையில் யோகபட்டம் தரித்த ஸ்வஸ்திகாசனத்துடன் உள்ளார். நான்காம் நிலையில் வீராசனத்தில் வீணாதரராக விளங்குகிறார். ஐந்தாம் நிலையில் மகாராஜா லீலாசனத்தில் வலதுமுன்கை பீடத்தில் ஊன்றியிருக்க இடது கரத்தை முழந்தாள் மீது நீட்டி அமர்ந்துள்ளார். ஆறாம் நிலையில் பத்மாசனத்தில் தியான கோலத்தில் வீற்றிருக்கின்றார் இந்த ஆசனங்கள் பார்த்து மகிழவேண்டியவைகளாகும்.

## தாமரை ஆசனம்

மேலே கட்டுரையில் சொல்லப்பட்ட ஆசனங்கள் திருக்கரங்களையும் கால்களையும் வைத்துக் கொண்டிருக்கும் நிலையைக் குறிக்கும் குறியீட்டுச் சொற்களாகும். இப்போது சொல்லும் ஆசனம் தாமரை வடிவில் செய்யப்பட்ட இருக்கையாகும்.

எழும்பூர் கடம்வனேஸ்வரர் ஆலயத்திலுள்ள பிரமன், உருத்திரர் ஆகிய தியானமூர்த்திகள், திருப்பூந்துருத்தி தட்சிணாமூர்த்தி, தியாக சமுத்திரம் மழு ஏந்திய தட்சிணாமூர்த்தி ஆகியோர் உடுக்கை வடிவிலான தாமரைமலராசனத்தில் அமர்ந்து உள்ளனர்.

## மலையாசனம்

பெரும்பாலான தட்சிணாமூர்த்தி திருமேனிகள் மலைமேல் அமர்ந்திருக்கும் கோலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதுவே மன்னுமாலை மகேந்திரம் ஆகும். பட்டமங்கையில் கார்த்திகைப் பெண்களுக்கு உபதேசித்தபோது அவர் பெரும்பாறைமீது அமர்ந்து உபதேசித்தார் என்று புராணம் கூறுகிறது.

## சிறுதெய்வ ஆலயங்களில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

அங்காளம்மன், காளியம்மன் ஆலயங்களில் சிவபெருமான் "தாண்டவராயர்" என்ற பெயரில் நடராசராக எழுந்தருளியிருக்கக் காணலாம். அதுபோன்று சிறுதெய்வ ஆலயங்களில் தட்சிணாமூர்த்தியை அமைக்கும் வழக்கம் இல்லை என்றாலும் சென்னை திருமுல்லைவாயில் பச்சையம்மன் ஆலயத்தில் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு தட்சிணாமூர்த்தி அமைக்கப்பட்டுள்ளார் இவருக்கு வியாழக்கிழமைகளில் சிறப்புவழிபாடுகள் நடைபெறுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தட்சிணாமூர்த்தி வழிபாட்டில் பறவைகளும் விலங்குகளும்

சிவபெருமானின் மகேசுவர வடிவங்கள் எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு தட்சிணாமூர்த்திக்கு உள்ளது. அவர் உலகையும் உயிர்த்தொகுதியையும் படைத்ததை நினைவூட்டும் வகையிலும் அவர் அனைத்து உயிர்களுக்கும் ஞான உபதேசம் செய்து மேன்மைபெற வைப்பதை உணர்த்தும் வகையிலும், அவரைச் சுற்றி விலங்குகளும் பறவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ பெருமானைச் சுற்றிலும் முனிவர்களுடன் பாம்பு, மான்கள், புலி, கரடி, சிங்கம், இடபம், யானை, ஆகியனவும் அமைந்துள்ளன. மேலே கின்னரர் கிம்புருஷர்களும், விளங்குகின்றனர். நிழல்பரப்பும் மரத்தின் கிளைகளில் பறவைகள், பாம்புகள், பல்லிகள் உள்ளன. மரப்பொந்தில் ஆந்தை உள்ளது.

❖ உத்திரகாமிகம், சகளாதிகாரம், சில்பரத்தினம் ஆகிய நூல்களில் பறவைகளும் விலங்குகளும் அவரைச் சூழ்ந்திருப்பது குறிக்கப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநின்றியூரில் அருளிச் செய்த பதிகத்தில்,

காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ்சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்ப
கோல ஆல்நிழல் கீழ் அறம்பகர

என்று கந்தர்வர், கின்னரர், புலி, கடிக்கும் இயல்புடைய பாம்பு, பிடித்துக் கட்டுவதற்கரிய சிங்கம் குற்றமற்ற முனிவர்கள் ஆகியோருக்கு ஆலமரத்தின் கீழிருந்து பெருமான் உபதேசம் செய்வது குறிக்கப்பட்டுள்ளது.

❖ சிவபெருமான் கரிக்குருவிக்குப் பஞ்சாட்சரத்துடன் ம்ருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தது திருவிளையாடற் புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

❖ தட்சிணாமூர்த்திப் பெருமாளை விலங்குகளும் பறவைகளும் சூழ்ந்திருப்பது அவர் இயற்கையோடு உடனாயிருந்து இணைந்து அருள் புரிவதைக் குறிக்குமென்று கூறுவர்.

❖ தத்துவ நூலார் இந்தவடிவத்தில் இடம்பெற்றுள்ள விலங்குகளும் பறவைகளும் தத்துவங்களை வெளிப்படுத்தும் குறியீடுகள் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு தத்துவத்தைக் குறிக் கிறது என்பர். அதன்படி புலி வைராக்யத்தையும் பாம்பு யோகத்தையும், யானை பிரணவத்தையும் குறிக்கிறதென்பர்.

❖ ஆற்றல் மிக்கவரான தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கும் மரத்தில் ஆந்தையும் இடம் பெற்றுள்ளது. ஆந்தை அளவிலா ஆற்றலும் சாதுர்யமும் நிறைந்தது. செல்வத்தின் அடையாளமாகவும் விளங்குவது. வடநாட்டில் லட்சுமி உருவங்களுடன் ஆந்தை வடிவத்தையும் சேர்த்தே அமைக்கின்றனர். அது முகத்தைத் திருப்பி முதுகையும் பார்க்கும் ஆற்றல் உடையதாகும். ஆந்தைகள் பாடிக் கொண்டிருப்பது அனேக திருமுறைத் திருப்பதிகங்களில் கூறப்பட்டுள்ளது.

❖ தட்சிணாமூர்த்தி சிற்பங்களில் மான்கள் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளன. கயிலாயநாதர் ஆலய சிற்பத்தில் இரண்டுமான்கள் அமைந்திருப்பதைக் காணலாம். மான்கள் வேதத்தின் குறியீடுகளாகும். வேதத்தின் நுண்பொருளைப் பெருமான் விளக்கிக் கொண்டிருப்பதைக் குறிக்கும் வகையில் மான்கள் இடம்பெற்றுள்ள தென்று கூறு கின்றனர்.

★ மயிலாடுதுறை தட்சிணாமூர்த்தி★

இவ்வாறாக ஒவ்வொரு விலங்கிற்கும் பறவைக்கும் தத்துவநோக்கில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

❖ மயிலாடுதுறை தட்சிணாமூர்த்தி வடிவத்திலுள்ள மரத்தில் இரண்டு மயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

– தொடர்ச்சி அடுத்த பக்கம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிந்துசமவெளியில் உள்ள மொகஞ்சாதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 5000 ஆண்டுகள் பழமைவாய்ந்த சரித்திரச் சின்னங்களில் பலவகையான முத்திரைகள் கிடைத்துள்ளன. இவற்றில் பசுபதி என்று பெயரிடப்பட்ட முத்திரை தட்சிணாமூர்த்தி வழிபாட்டைச் சுட்டுவதாக உள்ளது. உயர்ந்த பீடத்தில் யோகமுத்திரையில் சிவன் அமர்ந்திருக்கிறார். சுற்றிலும் யானை, புலி, மலையாடுகள் (அல்லது) மான்கள் காண்டாமிருகம் எருமை ஆகிய ஆறு விலங்குகள் காட்டப்பட்டுள்ளன. வேறொரு முத்திரையில் அவருடன் ஆறு பெண் தெய்வங்கள் காட்டப்பட்டுள்ளன. இது ஆதி காலத்திலிருந்தே சிவன் யோக நெறியின் கடவுளாகவும். விலங்கிகளுக்கிடையே இருப்பவனாகவும் போற்றப்படுவதைக் குறிக்கின்றன.

## கல்லாலமரம்

தட்சிணாமூர்த்தி என்றதும் அவருடன் அவருக்கு நிழல் பரப்பும் ஆலமரமும் நமது நினைவுக்கு வந்து விடுகிறது. இந்த ஆலமரத்தை இலக்கியங்களும் சிற்ப நூல்களும் சிறப்புடன் பேசுகின்றன. இதன் கீழ் இருப்பதால் பெருமான் ஆலமர் செல்வன் என்று அழைக்கப் படுகிறான். முருகன் சங்க இலக்கியங்களில் ஆலமர் செல்வன் புதல்வன், ஆலமர் கடவுள் மகன் என்று போற்றப்படுகிறான்.

❖ இந்த மரத்தில் பழுத்துள்ள பழங்கள் பவளம் போல் சிவப்பாகக் காட்சியளிக்கின்றன. கிளைகளில் பறவைகளும் பொந்துகளில் ஆந்தைகளும் அமர்ந்து உள்ளன. அடிமரத்தில் பெரிய பல்லிகளும் உள்ளன. கிளைகளில் உருத்திராட்ச வடம், வெண்சாமரம், நீர்க்கரகம், பொக்கணம் (செல்வப்பை) ஆகியவை மாட்டப்பட்டு உள்ளன.

கிளைகளில் உள்ள வெண்சாமரம் அரச போகத்தின் சின்னமாகும். தட்சிணாமூர்த்தி தன் ஆற்றலால் ராஜ சுகங்களுக்கு மேலான சுகத்தில் திளைத்திருப்பதை இது குறிக்கிறது. அரூப தட்ணாமூர்த்தியாக விளங்கும் திருப்பெருந்துறைப் பெருமானை மணிவாசகர் திருப்பெருந்துறை மன்னன் என்று பல இடங்களில் குறித்திருப்பதைக் காண்க.

இந்த மரத்தில் நீர்க்கரகம் (கமண்டலம்) தூக்கி மாட்டப்பட்டுள்ளது. கலித்தொகையில் சிவந்த முடத்தாழைப் பழங்கள் பழுத்திருப்பது ஆலமர் செல்வனின் ஆலமரத்தின் கிளையில் மாட்டப்பட்டி ருக்கும் நீர்க்கரகத்திற்கு உவமையாகக் கூறப்பட்டு உள்ளது. இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இராசராசன் காலத்தில் தட்சிணாமூர்த்தியின் உலாத் திருமேனி செய்து தரப்பட்டுள்ளது. இங்குப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இந்த உலாமூர்த்தியில் இடம் பெற்றிருந்த ஆலமரத்தின் வர்ணனை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒன்பது பெருங்கிளைகளும், பல சிறுகிளைகளையும் கொண்ட இம்மரத்தின் கிளைகளில் விபூதிப் பையும், கைத்தழை (சாமரம்) ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம்.

திருக்கருகாவூர் முல்லைவனநாத சுவாமி ஆலயத்தில் இடம் பெற்றுள்ள தட்சிணாமூர்த்தி வடிவம் சிறப்பானதொன்று. இதில் ஆலமரத்தின் கிளைகளில் பாம்பு, பொக்கணம், சாமரம் உருத்திராட்சவடம் ஆகியவற்றைக் காண்கிறோம். திருவெண்காட்டு தட்சிணாமூர்த்தி வடிவத்தில் இடம்பெற்றுள்ள மரத்தின் கிளையில் உருத்திராட்ச வடமும், பொக்கணமும் காட்டப்பட்டுள்ளன.

★ திருவெண்காடு சுவேதவனேஸ்வரர் ஆலயம் திண்டி வனத்தை அடுத்த தாதாபுரம் மாணிக்கேசுவரர் ஆலயம் முதலானவற்றில் உள்ள தட்சிணாமூர்த்தியின் பின்னால் கல்லாலமரம் நன்கு அமைக்கப்பட்டுள்ளது. இதன் கிளை களில் பொக்கணம் உருத்திராக்க வடம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

★ ஈழநாட்டுத் திருத்தலமான திருக்கோண மலையில் கல்லாலமரம் தலவிருட்சமாக உள்ளது. இந்த கல்லால மரத்தடியில் இருந்து. மலைக்குப் பூசை செய்த பின்னரே ஆலயத்தில் பூசைகள் செய்யப்படும்.

### தட்சிணாமூர்த்தி வழிபாட்டில் மரங்கள்

தட்சிணாமூர்த்தியைச் சிற்ப நூல்கள் கல்லால மரத்தடியில் வீற்றிருப்பவராகவே சித்தரிக்கின்றன என்றாலும் அவர் பல்வேறு மரங்களின் அடியில் வீற்றிருந்தும் அறம்பகர்ந்ததைத் தலபுராணங்களால் அறிகிறோம்.

சிவபெருமான் அரூப தட்சிணாமூர்த்தியாகத் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்றார். அங்கு அவர் மானுட வடிவம் தாங்கி வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டார். அப்போது குருந்தமரத்தடியில் வீற்றிருந்து உபதேசித்தார்.

உத்தரகோச மங்கையில் அவர் நந்தி கணத்தைச் சேர்ந்த ஓராயிரம் முனிவர்களுக்கு உபதேசம் செய்தார். அப்போது இலந்தை மரத்தடியில் வீற்றிருந்தார் என்று தலபுராணம் கூறுகிறது.

வழுவூர் வீரட்டேசுவரர் ஆலயத்தில் வீற்றிருக்கும் பெருமான் தாருகா வனத்தில் 48000 முனிவர்களுக்கு ஞானஉபதேசம் புரிந்தார். அவ்வேளையில் அவர் தாருகா மரத்தின் கீழ் உமையுடன் வீற்றிருந்து அருள்புரிந்ததாகக் கூறப்படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிறப்புமிக்க தட்சிணாமூர்த்தி வடிவங்கள்

ஆகமங்களும். சிற்ப நூல்களும் தெய்வத் திருவுருவங்களை அமைக்க வேண்டிய முறைகளையும் அதன் இலக்கணங்களையும் விரிவாகப் பேசுகின்றன. சிற்ப உலகில் திறமை வாய்ந்த கலைஞர்கள் அதற்கு மாறுபடாமல் தமது கற்பனைத் திறனையும் கலை வண்ணத்தையும் சேர்த்து புதுமைகளைப் புகுத்தியுள்ளனர், அவர்களின் கருத்திலும் கைவண்ணத்திலும் மலர்ந்த அரிய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

## தக்கோலம் தட்சிணாமூர்த்தி

திருவூறல் என்று திருமுறைகளில் குறிக்கப்படும் தலம் தக்கோலம். இங்குள்ள ஆலயத்தில் வீர தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கிறார். வலது காலை தொங்கவிட்டு இடது காலைமடித்துக் குத்திட்டுப் பீடத்தில் பாதம் பட அமர்ந்துள்ளார். வலது கை சின்முத்திரை காட்டு கிறது. இடது கரம் ஓலைச் சுவடியைத் தாங்கியுள்ளது. வலது மேல் கரத்தினைச் சுட்டிக் காட்டும் வகையில் உயர்த்தியுள்ளார். சுட்டுவிரல்மீது உருத்திராக்க வடம் உள்ளது. இடது கரத்தில் முத்தலைச் சூலம் (தீச்சுடர்) உள்ளது. தலையை வட்டமாக விரித்து அலை அலை யாக முடிந்துள்ளார். வட்டத்தின் விளிம்பில் முடிச்சுகள் வரிசையாக உள்ளன. காலடியில் பாம்பு ஒன்றும் இரட்டை மான்களும் உள்ளன. இது அரிய கலைப்படைப்பாகப் போற்றப்படுகிறது. இடுப்பில் அணிந்துள்ள துணியின் முடிச்சுகள் கண்டு மகிழத்தக்கவை.

## இலம்பயங்கோட்டூர் ஆத்மநாத தட்சிணாமூர்த்தி

திருப்பெருந்துறையில் சிவபெருமான் ஆன்ம நாதராக அருவ நிலையில் எழுந்தருளியுள்ளார். அவரை உருவமாக வழிபட விரும்பிய அன்பர்கள் (ஆன்ம நாதரைக் குரு) தட்ணாமூர்த்தி வடிவில் அமைத்துள்ளனர்.

சிவபெருமான் வலது முன்கையைச் சின்முத்திரையுடன் மார்பில் வைத்துள்ளார். வலது பின்கரம் நீண்ட சூலத்தை தாங்கியுள்ளது. இந்த சூலம் இருமை வினைகளையும் நீக்குவதாகும். இடது பின்கரம் ஜபமாலை ஏந்த முன்கரத்தைப் பீடத்தில் ஊன்றியுள்ளார். அட்சமாலை முடிவற்ற (எ) எல்லையில்லாத பிறவிச் சூழலில் இருந்து விடுபடுவதையும் பீடத்தில் ஊன்றிய கரம் அந்த சுகத்தில் திளைத்திருத்தலையும் குறிக்கின்றன. ஆன்ம ஞான சித்தி பெற்றவர்கள் வினைகளிலிருந்து விடுபட்டு மேலான முக்தியின்பத்தில் திளைப்பதையே இவர் தனது வடிவின் மூலமாகக் காட்டுகிறார்.



மகாராஜ லீலாசனத்தில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தி இராஜகோபுர சிற்பம்

இத்தகைய தட்சிணாமூர்த்தி திருவுருவம் இலம்பையங் கோட்டூர் அரம்பேசுவரர் ஆலயத்தில் உள்ளது. திருப்பெருந்துறையை நினைவூட்டும் வகையில் அருகில் குருந்த மரமும் அதனடியில் யோக பீடமும் இருந் துள்ளன. காலப்போக்கில் குருந்த மரம்பட்டு விட்டது. அந்த யோகபீடத்தில் விநாயகரை அமைத்து விட்டனர். அந்த விநாயகர் குருந்த விநாயகர் என்றழைக்கப் படுகிறார்.

## திருக்கழுக்குன்றம் யோகபட்ட உத்குடிகாசனர்

❖திருக்கழுக்குன்றம் பக்தவத்சலேசுவரர் ஆலயத்துள் இந்நாளில் நகைக் கொட்டிலாகப் பயன்படுத்தப்படும் கட்டிடம் ஒன்று உள்ளது. இது ஆதியில் மூலத்தானமாக இருந்த கற்களைக் கொண்டு இடம்பெயர்த்துக் கட்டப்பட்டது என்பர். இதில் தட்சிணாமூர்த்தியின் வடிவம் இடம் பெற்றுள்ளது.

இதில் பெருமான் வலது காலை பீடத் தில் குத்திட்டு ஊன்றி யோகப்பட்டம் தரித்துள்ளார். இடது காலை கீழே தொங்க விட்டுள்ளார் வலது மேல் கையில் தாமரை மலரும் இடக்கையில் அட்சமாலையும் உள்ளன. வலது கையில் சின்முத்திரை தாங்கி இடதுகையையில் தொடை மீது வைத்துள்ளார். அதில் புத்தகத்தைத் தாங்கியுள்ளார்.

வலது காலை பீடத்தில் ஊன்றியிருத்தல், அதில் யோகபட்டம் தரித்திருத்தல், இடது கரத்தில் ஜபமாலை தாங்குதல் தாமரை ஏந்துதல் முதலிய பல காரணங்களால் இவர்வடிவம் மாறுபட்ட புதுமையான தட்சிணாமூர்த்தியாகப் போற்றப்படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## மலரேந்திய தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர்
மலரேந்தும்பிரான்

தட்சிணாமூர்த்தி வடிவங்களில் நாகம், புத்தகம், ஜபமாலை அக்கினிச்சுடர் ஆகிய வையே அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. நீலோற்பல மலர் ஏந்திய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் சிலவே உள்ளன. சுசீந்திரம், மயிலாடுதுறை, திருவிடைமருதூர் முதலிய தலங்களில் உள்ள பெருமான் மேற்கரங்களில் ஜபமாலை நீலோற்பல மலரும் முன் கரங்களில் சின்முத்திரை, புத்தகமும் ஏந்தி காட்சியளிக்கின்றனர். நீலோற்பலம் யோகத்தி னைக் குறிக்கும் மலராகும்.

## மழுவேந்திய தட்சிணாமூர்த்தி

மழு சிவபெருமானுக்கே உரிய ஆயுதமாகும். அதை கணிச்சி எனவும் அழைப்பர். இதையொட்டி, மழுவாளன் மழுப்படையான், கணிச்சிக் கடவுள் எனப்பலவாறு அழைக்கப் படுகிறார். மழுவேந்திய தட்சிணாமூர்த்தியை சுவாமிமலையை அடுத்த தியாகசமுத்திரம் கயிலாசநாதர் ஆலயத்தில் காண்கிறோம். (மழு ஏந்தியிருப்பதால் இவரை சண்டிகேசு வரர் என நினைத்து கோமுகத்துக்கு அருகில் சண்டீசர் சந்நிதியில் நிலைப்படுத்தி யுள்ளனர்) கழுகுமலை, மாமல்லபுரம் முதலான பல ஊர்களில் உள்ள தட்சிணாமூர்த்தி மழு ஏந்தியுள்ளார். ஆதியில் அமைத்த தட்சிணாமூர்த்தி வடிவங்களில் அவரை பாம்பு, ஜெபமாலை, தீயகல் ஏந்தியவாறே அமைத்தனர். பின்னாளில் மழு, ஜெபமாலை ஏந்திய வாறாகவும் அமைத்தனர். தொடர்ந்து சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் போன்று மான், மழு ஏந்தியவராகவும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆசீன தட்சிணாமூர்த்தி கொருக்கையில் வீற்றிருக்கும் காமதகனர் முதலான வடிவங்களில் பெருமான் பின்கரங் களில் மான், மழு ஏந்தியவாறு காட்சியளிக்கிறார்.

இன்னும் சிறப்புமிக்க அனேக தட்சிணாமூர்த்தி வடிவங்கள் தென்னக ஆலயங்களில் சிறப்புடன் திகழ்கின்றன.

# மானுடனாக மண்மேல் வந்த பிரான்

அளவற்ற ஆற்றலும், வரம்பிலா கரு ணையும் உடைய பெருமான் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் அவற்றைத் தேடி வந்தான். அருபரத்தொருவன் அவனி யில் வந்து குருவடிவாகி அருளியபோது உயிர் களுக்கு கருணை வெள்ள நீராட்டி அன்பு நீர் பருகத் தந்து ஆட்கொண்டான்.

மானுடனாக மண்மேல் வந்த அவனுக் குத் திருவுருவம் அமைத்துப் போற்றி வணங்கி வழிபட்டனர். அந்தத் திருக்கோலம் இரண்டு திருக்கரங்களைக் கொண்டது. அத்தகைய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் சிலவற்றைக் இங்கு காணலாம்.

சென்னையின் ஒரு பகுதியாகத் திகழும் வேளச்சேரியில் தண்டீசுவரர் ஆலயம் உள்ளது. இக்கோயில் கருவறைக் கோட்டத் தில் குருவடிவான தட்சிணாமூர்த்தி எழுந் தருளியுள்ளார். வலது கை சின்முத்திரை காட்ட, இடது கையில் புத்தகம் ஏந்தியுள்ளார். வலதுகாலைக் குத்திட்டு வைத்து இடது காலைத் தொங்கவிட்டு முயலகன் மீது

ஊன்றியுள்ளார். இருபுறமும் முனிவர்கள் உள்ளனர். இவரைக் குருபர தட்சிணாமூர்த்தி என்று அழைக் கின்றனர்.

திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகருக்கு மதுரைச் சோமசுந்தரப் பெருமானுக்குரிய அலங் காரங்களைச் செய்து அன்பர்கள் மகிழ்கின்றனர். மாணிக்கவாசகர் பேரில் மாறிலாபற்று கொண்டு வாழ்ந்த அடியார்களுக்குச் சிவபெருமான் மாணிக் கவாசகர் வடிவிலேயே வந்து காட்சி கொடுத்தான் என்று கூறுகின்றனர். அந்த வடிவில் அவன் தலை யில் வட்டணையாகச் சடையை விரித்து முடிந்திருந் தான். இத்தகைய வடிவங்களைப் பல ஆலயங் களில் காணலாம். இது ஞானதட்சிணாமூர்த்தியின் வடிவமாகும். காலப்போக்கில் இந்தச் சிவவடிவம் மாணிக்க வாசகராகவே கொள்ளப்பட்டுவிட்டது.

காஞ்சீபுரத்திற்குத் தெற்கிலுள்ள பெருநகர் பிரம்மபுரீசுவரர் ஆலயத்தில் மாணிக்கவாசகப் பெருமான் சடாமகுடத்துடன் கணுக்கால் வரை ஆடை அணிந்து சின்முத்திரையும், ஓலைச்சுவடியும் தாங்கியுள்ளார். இதுவும் சிவபெருமான் மாணிக்க வாசகர் கோலத்தில் விளங்குவதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாலயங்களில் தனியிடம் கொண்ட தட்சிணாமூர்த்தி

சிவாலயங்களில் தட்சிணாமூர்த்தி கருவறைக் கோட்ட மூர்த்தியாக விளங்குவதே பொது நிலையாகும் அவ் வாறில்லாமல் ஆலயத்தின் வேறு இடங்களில் அவரை அமைத்து வழிபடுவதையும் காண்கிறோம். எடுத்துக் காட்டாக ஓமாம் புலியூரில் (நடராசர் இருக்கவேண்டிய) சபா மண்டபத்திலும், திருநெல்வேலி மாவட்டம், புளியரையில் சுவாமிக்கும் நந்திக்கும் நடுவே அமைந்திருப்பதையும் காணலாம். அத்தகைய தட்சிணாமூர்த்தங்களைப்பற்றி இங்கே காணலாம்.

## ஓமாம்புலியூர் (சபா மண்டபத்தில்)

ஓமாம் புலியூரில் துயர் தீர்த்த நாதர் ஆலயம் உள் ளது. இங்குத் தட்ணாமூர்த்தி மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு சபா மூர்த்தியாக (நடராசர் இருக்க வேண்டிய இடத்தில்) விளங்குகிறார். கல் திருமேனியாக விளங்கும் இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப் படுகின்றன. சுவாமி சந்நிதிக்கும் அம்பிகை சந்நிதிக்கும் இடையே தட்சிணாமூர்த்தி சபா நாயகராக இருப்பது இத்தலத்தில் மட்டுமேயாகும்.

இங்குப் பெருமான் ஓங்காரத்திற்கு உண்மைப் பொரு ளைத் தட்சிணாமூர்த்தியாக இருந்து உபதேசித்தார். அதையொட்டி இத்தலம் பிரணவ வியாக்ரபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆலின் கீழ் இருந்து அண்ணல் அறமுரைத்த தலமாதலின் இக்கோயில் வடதளி என்ற ழைக்கப்படுகிறது. (வடம் – ஆலமரம்)

இவ்வூர்த் தேவாரத்துள் தட்சிணாமூர்த்தியின் கோலமும். அவர் ஆலங்காட்டின் நடுவே பரந்த ஆலக் கோயிலில் வீற்றிருப்பதுவும்

கற்ற நால்வேதம் அங்கம் ஓர் ஆறும்
கருத்தினார் அருத்தியாற் றெரியும்
உற்றபல் புகழார் ஓமாம் புலியூர்
உடையவர் வட தளி அதுவே என்று

குறிக்கப்பட்டுள்ளது.

**சுவாமிக்கும் – நந்திக்கும் இடையே தட்சிணாமூர்த்தி இருப்பதைப் புளியறையில் காண்கிறோம்.**

## புளியறை (மகாமண்டபத்தில்)

புளியறை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தலமா கும். இங்கு சற்று மேடான பகுதியில் சிவகாம சுந்தரி அம்பிகை உடனாய சதாசிவர் ஆலயம் உள்ளது. 27 படி களைக் கடந்து இக்கோயிலை அடைகிறோம். இங்குச் சுவாமிக்கும் நந்திக்கும் இடையே தட்சிணாமூர்த்தி உள்ளார். இவர் சின்முத்திரை தரித்து புத்தகம் ஏந்திக் கொண்டு வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வெள்ளிக் கவசம் அணிவித்துள்ளனர். அரைஅடி உயரத்திற்கு மலைபோல் செய்து அதன்மீது அவரை நிலைப் படுத்தியும் உள்ளனர். இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

## திருக்கழுக்குன்றம் (கருவறைக்குள்)

திருக்கழுக்குன்றத்தில் நான்கு வேதங்களும் மலை யாகி நின்று பெருமானைத் தாங்குகின்றன என்ற புரா ணங்கள் கூறுகின்றன. மலைமீதுள்ள ஆலயம் வேதகிரீ சுவரர் ஆலயம் ஆகும். இது பல்லவர் காலப் பணியாகும். பெரிய பாறையை ஒட்டி கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாறை யில் சோமாஸ்கந்தர் தட்சிணாமூர்த்தி அர்த்தநாரீசுவரர் ஆகிய சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளது. இதன் முன்புறம் வேதகிரீசுவரர் எழுந்தருளி யுள்ளார்.

மாணிக்க வாசகருக்கு இறைவன் பலவிதமான திருக்கோலங்களைக் காட்டி அருள்பாலித்தான். அவர் கணக்கிலாக் கோலம் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே என்று அருளிச் செய்துள்ளார். அதை விளக்கும் வகை யில் கருவறையில் மூன்று வடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன என்று கூறுகின்றனர்.

## சிதம்பரத்தில் (பலிபீடத்தில்....)

கருவறைக்கு நேராக அமையும் கொடிமரம், நந்தி யுடன் கூடிய பலிபீடத்தின் முகப்பில் விநாயகரை அமைப் பது வழக்கம். சிதம்பரத்தில் நடராசமூர்த்திக்கு நேராக உட்பிரகாரத்தில் தங்கக் கொடிமரம் உள்ளது. வெளிப் பிரகாரத்தில் மாக்காளையும் (பெரிய ரிஷபமும்) மகா பலிபீடமும் உள்ளன. பலிபீடத்தின் முன்புறம் சிறு சந்நிதி அமைந்துள்ளது. அதில் நடனவிநாயகரும் தட்சிணா மூர்த்தியும் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கு நேர் எதிராகத் தெற்கு ராஜகோபுரம் அமைந்து உள்ளது.

இது நடராசரும் தட்சிணாமூர்த்தியும் ஒருவரே என்ப தைக் குறிப்பதாகும். நடராசர் ஆலயத்திலுள்ள திரு மூலட்டானர் சந்நிதி கோட்டத்தில் முன்புறமும் பெரிய தட்சிணாமூர்த்தி உள்ளார். இவருக்குச் சிறப்பு வழிபாடு கள் நடைபெறுகின்றன.

## திருக்கோகர்ணத்தில் (புதுக்கோட்டை)

திருக்கோகர்ணத்தில் ராஜகோபுரம் தெற்கு நோக்கி யுள்ளது கருவறைக்கிழக்கு நோக்கியுள்ளது. கோட்டத் திற்குரிய தட்சிணாமூர்த்தியும், நர்த்தன விநாயகரையும் கோட்டங்களில் அமைக்காமல் தனிமேடை மீது கோபுரத் திற்கு நேராக அமைத்துள்ளனர். கோபுரத்திலிருந்து பார்த்தால் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் காட்சி யளிக்கின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## திருக்காளத்தி (தட்சிணாமூர்த்தி)

தென்கயிலாயம் என்று போற்றப்படும் திருத்தலம் காளஹஸ்தி ஆகும். இங்கே பெருமான் சுவர்ணமுகி ஆற்றங்கரையில் கல்லாலமரத்தின் கீழ் அமர்ந்து அம் பிகைக்கு ஞானஉபதேசம் செய்தார். அக்கோலத்தில் தட்சிணாமூர்த்தியாகத் தென்திசை நோக்கிக் கோயில் கொண்டிருந்தார். இவரிடம் அம்பிகை உபதேசம் பெற்று அதை விளக்கமாக அன்பர்களுக்கு உபதேசித்தாள்.

அதனால் அவளுக்கு ஞானாம்பிகை என்றும் ஞானப் பூங்கோதை என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

ஒரு சமயம் சிவபெருமான் சுவர்ணமுகி ஆற்றில் நீராடியவாறே ஞானம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த முனி வர்களுக்குப் பதில் கூறி விளக்கவும். சுவர்ண கங்கை எனப்படும் சுவர்ணமுகி தேவிக்கு உபதேசிக் கவும் தெற்கு நோக்கியிருந்த சுவாமி மேற்கு நோக்கித் திரும் பிச் சற்றுதள்ளி அமர்ந்தார்.

அப்படியே கோயில் கொண்டுவிட்டார். அவர் வீற்றி ருக்கும் இப்போதைய பீடம் ஆகமபீடம் என்றழைக் கப்படுகிறது. முதலில் சுவாமி வீற்றிருந்த பீடத்தினை வைதீக பீடம் என அழைத்து அதில் தட்சிணாமூர்த்தி யைப் பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர். இந்தக் கோயிலில் ராஜகோபுரத்தின் வழியே உள்ளே சென்றதும் தரிசிக்கத் தக்க வகையில் தட்சி ணாமூர்த்தி அமர்ந்துள்ளார்.

இங்கு தட்சிணாமூர்த்தியின் பெரிய உலாத்திரு மேனியும் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள இவருக்கு நேராகவே வாயிலின் மீது ராஜகோபுரம், ஜெயஸ்தம்பம் ஆகியன உள்ளன.

## உய்யக்கொண்டான் மலை தட்சிணாமூர்த்தி

காளஹஸ்தியைப் போலவே கற்குடி (உய்யக் கொண் டான் மலை) என்னும் தலத்திலும் பெருமான் தட்சிணா மூர்த்தியாகத் தெற்கு நோக்கிக் கோயில் கொண்டிருந் தார். பின்பு மார்க்கண்டேயனுக்கு நேர்ந்த இடரைக் களைய மேற்கு நோக்கித் திரும்பியவர் அப்படியே இருந்து விட்டார் இங்கு (காளத்தியில் இருப்பது போலவே) நந்தி, பலிபீடம், கொடிமரம், தலைவாயில் ஆகியன தட்சிணாமூர்த்தி நோக்கியே உள்ளன. காளத்தியில் தட்சிணாமூர்த்தியைத் தனிவிமானத்தில் எழுந்தருளி வைத்துள்ளனர். இங்கு அவர் கோட்ட தெய்வமாகவே உள்ளார்.

## தலமரக் கோட்டங்களில் தட்சிணாமூர்த்தி

சுசீந்திரம், திருஆனைக்கா முதலிய தலங்களிலும் கருவறைக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி அமைக்கப்படவில்லை. அத்தலங்களில் அன்பர்கள் அவரைத் தலமரத்தின் அடியில் எழுந்தருளிவைத்து வழிபடுவதைக் காண்கிறோம்.

சுசீந்திரத்தில் மாக்காளை எனப்படும் பெரியநந்திக்குத் தெற்கில் ஆதிமூலஸ்தானம் எனப்படும் கொன்றையடி உள்ளது. இங்கு மும்மூர்த்திகளும் சிவலிங்கங்களாக எழுந்தருளியுள்ளனர். இங்குக் கொன்றையடியைச் சுற்றிலும் சுவர் எழுப்பித் தனிச் சந்நிதியாக்கி உள்ளனர். அதன் தென்புறச் சுவரில் மாடம் அமைத்துத் தட்சிணாமூர்த்தியை அமைத்துள்ளனர். இவர் தாமரை, ஜபமாலை, சின்முத்திரை, புத்தகம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளார்.

திருவானைக்காவில் கருவறைக்குத் தென்புறம் தலமரமான நாவல் செழித்து வளர்ந்துள்ளது அதையொட்டி தனிச் சிற்றாலயம் அமைத்து அதில் தட்சிணாமூர்த்தியை அமைத்துள்ளனர். இது கலையழகுடன் திகழ்கிறது. இவரை நாவல்அடி நாதர் எனப்போற்றுகின்றனர்.

திருவண்ணாமலையில்... தென் பிராகாரத்திலுள்ள மகிழமரத்தடியில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ள இரண்டு சிறிய சந்நிதிகள் தெற்குநோக்கியுள்ளன. இம்மூர்த்தங்கள் பிரசந்நிதி கோட்டங்களிலிருந்து இடப்பெயர்ந்து, இங்கே அமைக்கப்பட்டுள்ளதென்று கூறுகின்றனர்.

## தட்சிணாமூர்த்தி இல்லாத ஆலயம்

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் தட்சிணாமூர்த்தித் திருமேனி இல்லை. மாவடியில் வீற்றிருக்கும் சோமாஸ் கந்தரே ஞான உபதேசிக யோக மூர்த்தியாகக் கொள்ளப்படுகிறார். அவர் வலது கரத்தில் சின்முத்திரையையும் இடது கரத்தை மடிமீது தியான முத்திரையில் வைத்துக்கொண்டு கண்களை மூடியபடி தியானத்தில் உள்ளார்.

காஞ்சீபுரத்தில் இந்த ஒருகோயில் தவிர ஐராவதேசுவரர், சித்தீசர், கச்சபேசுவரர், கயிலாசநாதர், இறவாதீசுவரர் முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட ஆலயங்களில் பலவேறு திருக்கோலங்களில் இவரைத் தரிசிக்க முடிகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஒரே ஆலயத்தில் பல்வேறு தட்சிணாமூர்த்திகள்

பெரிய சிவாலயங்களில் கருவறையைச் சுற்றி பல தனிச் சிவாலயங்கள் இருப்பதைக் காணலாம். இந்த சிவாலயங்களுக்கும் பஞ்சகோட்டங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் விநாயகர் தென்முகக் கடவுள், திருமால் (அண்ணாமலையார்) பிரமன், துர்க்கை ஆகியோர் அமைக்கப்பட்டிருக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, திருவாரூர் ஆலயத்தில் சித்தீசுவரம், அனந்தேசுவரம், விசுவகர்மேசம், முதலிய தனிச் சந்நிதிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் பஞ்ச கோட்டங்கள் உள்ளன. அவற்றில் தட்சிணாமூர்த்தி வடிவங்களும் உள்ளன. இவற்றில் சித்தீசுவரர் சந்நிதியிலுள்ள தட்சிணாமூர்த்தி தனிச்சிறப்பு பெறுகிறார்.

தனிச் சிவ சந்நிதிகளில் மட்டுமன்றி பெரிய அளவில் கட்டப்பட்டுள்ள சோமாஸ்கந்தர் சந்நிதிகளிலும் பஞ்சகோட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக திருவாரூர் திருஒற்றியூர் முதலிய தலங்களிலுள்ள தியாகராஜர் சந்நிதிகளிலும், திருக்கழுக்குன்றம், திருவெண்காடு, திருவையாறு, முதலிய தலங்களிலுள்ள சோமாஸ்கந்தர் சந்நிதிகளிலும் தெற்கு கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி அமைக்கப்பட்டிருக்கிறார்.

இவ்வகையில் பெரிய ஆலயங்களில் கருவறைக் கோட்டத்தில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியைத் தவிர மேலும் சில தட்சிணாமூர்த்திகள் இருக்கக் காண்கிறோம். இவை ஒவ்வொன்றும் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாகும். இப்படி அதிகமாக அமைந்த தட்சிணாமூர்த்தி வடிவங்களில் சிறப்புமிக்க சிலவற்றைச் சிந்திக்கலாம்.

## நாகப்பட்டினத்து தட்சிணாமூர்த்திகள்

நாகப்பட்டினம் நீலயதாக்ஷி உடனாய காயாரோகணேசுவரர் ஆலயத்தில் சுவாமிசந்நிதியில் ஒன்றும், தியாகராஜர், சந்நிதியில் இரண்டும் ஆக மூன்று தட்சிணாமூர்த்திகள் வடிவங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி தட்சிணாமூர்த்தி வடிவம் அளவால் பெரியதாகும்.

இவ்வூரில் ஆதிகாயாரோகணசுவாமி ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் அங்கமாகச் சட்டநாதர் ஆலயம் உள்ளது. இதில் சட்டநாதர் கட்டுமலை மீது தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். வலப்புறம் சோமாஸ்கந்தரும், இடப்புறம் தட்சிணாமூர்த்தியும் உலாத்திரு மேனிகளாக அமைந்துள்ளனர்.

## மயிலாடுதுறை தட்சிணாமூர்த்திகள்

மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி ஆலயத்தில் சுவாமிசந்நிதி, அநவித்தை சந்நிதி ஆகியவற்றில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார் அநவித்தை ஆலய சந்நிதியில் உள்ள தட்சிணாமூர்த்தி வடிவத்தில் புலி, சிங்கம், பாம்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. இது கலையழகு மிக்கதாகும்.

## திருவாரூர் சித்தீச்சுரத்துப் பெருமான்

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் வடகிழக்கு முனையில் சித்தீசுரம் என்ற துணை ஆலயம் உள்ளது. மேற்கு நோக்கியுள்ள இந்த ஆலயத்தில் அம்சன் என்னும் அரசன் பஞ்சாட்சர ஜபம் செய்து சித்திகளைப் பெற்றான். அவனுக்குச் சித்திகளை அருளிச் செய்வதால் பெருமான் சித்தீசர் என்றழைக்கப்படுகிறார்.

இந்த சந்நிதியின் தெற்குக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கின்றார். இவருடைய சந்நிதியில் வீற்றிருந்து அனேகர் சிவஞானத்தைப் போதித்திருக்கின்றனர். அவர்களுள் சிறந்தவர் கமலை ஞானப்பிரகாசர். அவரிடம் உபதேசம் பெற்ற குருஞானசம்பந்தப் பெருமானே திருத்தருமபுர திருமடாலயத்தைத் தோற்றுவித்தவர் ஆவார். தருமபுர ஆதீனத்தினர் இந்த சந்நிதியைப் பெரிதாகக் கட்டி சிறப்பு வழிபாடுகள் செய்துவருகின்றனர்.

இவர்பேரில் சித்தீச்சுரம் தட்சிணாமூர்த்தி தோத்திரம் என்றபெயரில் ஒரு பதிகம் உள்ளது. தருமையாதீன பத்தாவது குருமகாசந்நிதானம் அருட்பா ஒன்றைப் பாடியுள்ளார்.

## திருவையாற்று தட்சிணாமூர்த்தி வடிவங்கள்

பாசுபத சைவர்கள் சமய ஆசாரியர்களுக்கு முதன்மை அளித்து அவர்களைப் பட்டாரகர்கள் என்று போற்றினர். ஆசாரிய மூர்த்தியாக விளங்கும் சிவபெருமான் மகாதேவ பட்டாரகர் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆதிசிவத்திடமிருந்து படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலை நடத்த மும்மூர்த்திகள் தோன்றினர். அவர்களும் பட்டாரகர் என்றே அழைக்கப்பட்டனர். இவர்களையும் திருவையாறு ஆலயத்தில் காண்கிறோம்.

திருவையாறு பஞ்சநதீசுவரர் ஆலய கருவறைக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோட்டத்தில் மகாதேவ பட்டாரகரை அமைத்துள்ளனர். இவரை சிவகுருதட்சிணாமூர்த்தி என்றழைக்கின்றனர்.

இந்த ஆலயத்தில் ஓர் அங்கமாக விளங்குவது தென்கயிலாயமாகும். இங்கு உள்ள கருவறை வடக்கு நோக்கியுள்ளது அதன் மூன்று கோட்டங்களிலும் மூன்று வகையான தட்சிணாமூர்த்திகளைக் காண்கிறோம். இவை பாசுபத சமயத்தினர் போற்றும் வடிவங்களாகும்.

கிழக்கு நோக்கிய மூர்த்தி மேற்கரங்களில் மான், மழு ஏந்தியுள்ளார். மேற்கு நோக்கிய மூர்த்தி அட்சயவடம், கெண்டி ஏந்தியுள்ளார். தெற்கு நோக்கிய மூர்த்தி சூலம், கபாலமும் கொண்டுள்ளார். மூவரும் முன் கரங்களை முறையே சின்முத்திரையிலும் தொடைமீது வைத்தவாறும் உள்ளனர்.

திருநாகேசுவரம் கிரிகுசாம்பாள் சந்தியில் நிறைவுபெறாத சிற்பங்களாக விளங்கும் நான்கு தட்சிணாமூர்த்தி வடிங்களும் இதையொத்ததே ஆகும்.

திங்களூர் ஆபத்சகாயேச்சுவரர் ஆலயத்தில் இடம்பெற்றுள்ள தட்சிணாமூர்த்தியும் பாசுபதர்கள் போற்றும் தட்சிணாமூர்த்தி ஆவார். இவர் மேற்கரங்களில் கெண்டி அட்சமாலையும், முன் கரங்களில் சின்முத்திரையுடன் ஓலை சுவடி தாங்கி பத்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.

## கௌரி வழிபாடும் – தட்சிணாமூர்த்தியும்

கௌரநிறம் என்பது வெண்மைநிறமாகும். வெண்மைநிறம் கொண்ட உமாதேவி, கௌரி என்று அழைக்கப்படுகிறார். ஆதியில் பெருமான் கௌரிதேவிக்குச் சிவாகமங்களை அருளிச்செய்தான். அந்த கோலங்கள் கௌரி உபதேச மூர்த்தி, கௌரி லீலாசமன்வித மூர்த்தி என்று அழைக்கப்படுகின்றன. சிவபெருமானிடம் உபதேசம் பெறும் கௌரி "சிஷ்யபாவ கௌரி" என்று அழைக்கப்படுகிறாள்.

சோழ மண்டலத்திலுள்ள திருநாகேசுவரம், திருப்புறம்பயம், திருவிடைமருதூர் ஆகிய மூன்றும் கௌரிக்ஷேத்திரங்களாகும். இவற்றில் முறையே ஞானகௌரி (கிரிகுஜாம்பிகை) போககௌரி (குகாம்பிகை) யோககௌரி (மூகாம்பிகை) என்ற கோலங்களில் அருள்பாலிக்கிறாள். இவை மூன்றும் தட்சிணாமூர்த்தி சிறப்புடன் வீற்றிருக்கும் தலங்களாகும். திருவிடைமருதூரில் சாம்பவிதட்சிணாமூர்த்தியாகவும் திருப்புறம்பயத்தில் தர்ம வியாக்யான தட்சிணாமூர்த்தியாகவும் (அறம்பயந்தபிள்ளையார்) திருநாகேஸ்வரத்தில் யோக தட்சிணாமூர்த்தியாகவும் பெருமான் காட்சியளிக்கிறார்.

## திவ்யத் தொனியும் - பிரணவ ஒலியும்

தட்சிணாமூர்த்தியை மௌனமொழியான், பேசாது பேசும் பெருமான், மௌனமாய் பேசும் மூர்த்தி என்று பலவாறு அழைக்கின்றனர். அவர் உதடுகளை அசைத்து ஒலிக்காத மூர்த்தியாக இருக்கின்றார், ஆனால் எதிரி லுள்ளவர்களின் மனதில் தோன்றும் ஐயங்கள் தாமே முற்றிலும் அகன்று விடுகின்றன. இந்தக்கருத்து உபநிஷ தங்களிலும் காணப்படுகிறது.

இதே போன்ற கருத்து சமண சமய நூல்களிலும் உள்ளன. கேவல ஞானம் பெற்ற பகவான் (தீர்த்தங்கரர்) கந்தகுடி மண்டபத்தில் வீற்றிருக்கின்றார். மேலே முக்குடையும் அரசமரமும் நிழல் பரப்புகின்றன. தேவர், யட்சர், மனிதர், நீர்வாழ்வன, பறப்பன, ஊர்வன யாவும் அந்தசபையில் கூடியுள்ளர். பகவானின் உதடுகள், நாக்கு அசைவ தில்லை. ஆனால் அவரிடமிருந்து திவ்யத் தொனி வெளிப்படுகிறது. அந்தத் தொனியை பக்குவமுள்ள ஜீவன்கள் கேட்கிறார்கள்.

❖ உலகிலுள்ள 18 மகாபாஷைகளையும் துணை பாஷைகளையும் எண்ணற்ற சிறுபாஷைகளையும் அறிந்தவர்களின் மனதில் தோன்றும் ஐயங்களுக்கு பகவானிடமிருந்து தோன்றும் திவ்யத்தொனி ஞானத்தைப் போதித்து விடுகிறது. திவ்யத் தொனியைச் சமணர்கள் ஆகமவாணி என்றும் சரஸ்வதி என்றும் கொண்டாடுகின்றனர். அது பெண் வடிவில் திகழ்கிறதென்று கூறுகின்றனர்.

இது போன்றே தட்சணாமூர்த்தியிடமிருந்து தோன்றும் ஓங்காரமான ஒலியையும் திவ்யத்தொனி என்பர். அதுவே ஆதி பராசக்தியான மூலசரஸ்வதியானது. அவள் உலகிலுள்ள மொழிகள் அனைத்திற்கும் தலைவி யாக இருக்கிறாள். சரஸ்வதியான பராசக்தியைத் திரு மந்திரம். புவனாபதி என்றும் ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி வேடம்படிகம் விரும்பும் வெண் தாமரை என்றும் போற்றுகிறது. மேலும் அவளை ஓங்கார ரூபி என்றும் திரு மந்திரம் ஓங்காரீ என்பாள் அவள் ஒரு பெண் பிள்ளை என்றும் துதிக்கிறது. தட்சிணா மூர்த்தி பிரம்மனுக்குப் படைப்புத் தொழிலை அளித்த போது ஆதி சரஸ்வதியான அவள் தனது அம்சமாகக் கல்விக் கடவுளான சரஸ்வதியைப் படைத்து அவனுக்கு அளித்தாள்.

சரஸ்வதியை வழிபடுபவர்கள் தட்சிணாமூர்த்தி யையும் வழிபடுவது மிக்க நலம்தரும். புராணங்கள் சரஸ்வதியைத் தட்சிணாமூர்த்தியின் தங்கை என்று போற்றுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# இருபத்து நான்கு வகை தட்சிணாமூர்த்தி வடிவங்கள்

எண்கள் தெய்வீகத் தன்மை கொண்டவை என்றும் ஒவ்வொரு எண்ணுக்கும் ஒவ்வொருவிதமான ஆற்றல் இருக்கிறதென்று கூறுகின்றனர். ஆறு ஆற்றலைக் குறிக்கும் எண்ணாகும். எட்டு பாக்கியங்களைக் குறிப்ப தாகும். 21 மூவேழு தலைமுறைகளைக் குறிக்கிறது. இதையொட்டி முருகவழிபாட்டில் ஆறு லட்சுமி வழிபாட் டில் எட்டு, வாழ்த்துக்களில் பதினாறு ஆகியவை சிறப்பிக் கப்பட்டிருப்பதைக் காணலாம்.

❖ போற்றுதல் 12 உடனும், சாத்திரங்கள் 14 உடனும் தொடர்பு கொண்டுள்ளன. திருத்தலங்களைப் போற்றிப் பெருமை சேர்க்கும் வகையில் அதற்குப் பன்னிரண்டு பெயர்கள் சூட்டப்பட்டிருப்பது, தோத்திரநூல்கள் பன்னி ரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டிருப்பது, முதலி யனவும் எண்ணத்தக்கதாகும். சைவ சித்தாந்த சாத்திர நூல்கள், வேதாந்த அடிப்படை நூல்கள், முதலியன பதினான்காக வகுக்கப்பட்டிருப்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

❖ இவ்வகையில் 24 என்ற எண் தர்மத்தோடு தொடர்புடையதாகும். பாரதத்தில் தோன்றிய சமயங்கள் இக் கருத்தைக் கொண்டுள்ளன. பௌத்த சமயத்தின் சின்னமான தர்மச்சக்கரம் இருபத்துநான்கு ஆரக்கால் களுடன் காட்டப்பட்டுள்ளது. அந்தச் சக்கரம் இருக்கு மிடத்தில் துன்பமிருக்காது என்பதாலும், அசோக சக்ர வர்த்தியால் கொண்டாடப்பட்டதாலும் அது அசோகச் சக்கரம் என்று அழைக்கப்படுகிறது. அது அசோகஸ்தூபி யில் நான்கு திசைகளையும் நோக்கியுள்ள சிங்கங்களின் பீடத்தில் நாற்புறமும் அமைக்கப்பட்டுள்ளது.

சமணசமயத்தில் தர்மத்தை உபதேசித்து வீடுபேற் றுக்கு வழிகாட்ட வந்த தீர்த்தங்கரர்கள் இருபத்து நான்குபேர்களென்று ஜைனபுராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் குறிப்பிட்ட இடைவெளியில் இருபத்து நால்வர் தோன்றி ஞானம் பெற்று அறம்பகர் வார்கள் என்று அப்புராணங்கள் குறிப்பிடுகின்றன.

சைவசமயத்திலும் அறம்பயந்த செல்வன் என்று போற்றப்படும் தட்சிணாமூர்த்தி இருபத்து நான்கு வடிவுடன் திகழ்கிறார்.

❖ லட்சுமியை அஷ்டலட்சுமியாகவும், வீரட்டகாச மூர்த்தங்களை அஷ்டவீரட்டான மூர்த்திகளாகவும் கொண்டாடுவது போலவே தட்சிணாமூர்த்தியைத் தர்ம வியாக்யான மூர்த்தி (அறம்பயந்தபிள்ளையார்) சக்தி தட்சிணாமூர்த்தி, சம்ஹார தட்சிணாமூர்த்தி என்று இருபத்து நான்கு வடிவங்களில் வழிபடுகின்றனர்.

❖ திருப்புறம்பயம் தட்சிணாமூர்த்தி வடிவத்தைக் குறிப்பிடும்போது பழையநூல்கள் இது இருபத்து நான்கு வடிவங்களில் ஒன்று என்று குறிக்கப்பட்டுள்ளது. சாந்தி பரிகாரங்களைக் கூறும் போது, தட்சிணாமூர்த்திக்கு இருபத்தி நான்கு விளக்குகளை இட்டு வழிபடவேண்டு மென்று கூறப்பட்டுள்ளது

தட்சிணாமூர்த்திக்குரிய தலங்கள் பலவாகும். அவற்றில் கீழ்காணும் வகையில் இருபத்திநான்கு தலங்களை, பெரியோர்கள் வரிசைப்படுத்தியுள்ளனர். அத்தலங்களின் பெயரையும் அங்கு வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியின் சிறப்புப் பெயரையும் காணலாம்.

## தட்சிணாமூர்த்திகள்

1. திருவெண்காடு – வீராசனர்
2. திருமாந்துறை – யோகவீராசனர்
3. குடந்தை – கங்காகிருபாகரர்
4. திருவையாறு – குருபரர் (கௌலீசர்)
5. திருவீழிமிழலை – பத்மபாதர்
6. திருவாரூர் – ஜகத்வீராசனர்
7. மாங்குடி – குருஉபதேசர்
8. கஞ்சனூர் – அக்னி தட்சிணாமூர்த்தி
9. கருவிலி – பவ ஔஷதர்
10. ஆலங்குடி – மகாதட்சிணாமூர்த்தி
11. திருவிடைமருதூர் – சாம்பவிதட்சிணாமூர்த்தி
12. மயிலாடுதுறை – மேதாதட்சிணாமூர்த்தி
13. மதுரை – சித்(து)பரமேசர்
14. காசி/திருநெல்வேலி – தாரகேசுவரர்
15. பெருவேளூர் – ஸ்கந்த உபதேசிகர்
    திருவிடைகழி – ஸ்கந்த உபதேசிகர்
16. கொள்ளம்பூதூர் – அர்ச்சுன உபதேசர்
17. திருநாவலூர் – ஊழிமுதல்வர்
18. திருப்புறம்பயம் – அறம்பயந்த பிள்ளையார்
19. திருவாலங்காடு – முக்தி தட்சிணாமூர்த்தி
20. திருப்பெருந்துறை – அருபதட்சிணாமூர்த்தி
21. தென்திருவாலங்காடு – வம்சவிருத்தீசர்
22. தக்கோலம் – உத்குடிகாசனர்
23. ஓமாம்புலியூர் – ஓங்காரரூபர்
24. கேதாரநாதர் – கௌரீ அனுக்கிரகர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சமண சமயமும் தட்சிணாமூர்த்தி வழிபாடும்

சைவத்தோடு போட்டி மனப் பான்மையுடன் திகழ்ந்த சமயம் சணமாகும். ஆனாலும் வழிபாட்டில் இரண்டு சமயங்களும் ஒரே விதமான வழிபாடுகளைக் கொண்டிருக்கும் அதிசயத்தையும் காண்கிறோம். அவ்வகையில் தட்சிணாமூர்த்தி வழிபாட்டிற்கும் தீர்த்தங்கரர்கள் வழிபாட்டிற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைக் கீழ்வரும் பட்டியலில் காணலாம்.

| வ. எண் | தீர்த்தங்கரர்கள் | தட்சிணாமூர்த்தி |
|---|---|---|
| 1. | உலகம் உய்ய அருளிய உபதேசங்கள் "அருளறம்" பகர்தல் என்று அழைக்கப்படுகின்றன. | சிவபெருமான் தரும உபதேசம் செய்வதாகக் கூறப்படுகிறது. அவன் அறம் பயந்தவன், அறம் மொழிந்த வாயான் என்று போற்றப்படுகிறான். |
| 2. | தீர்த்தங்கரர்கள் அசோக மரங்க்ளின் கீழ் அமர்ந்து அறம் பகர்கின்றனர். | தட்சிணாமூர்த்தி பரந்த ஆலமரத்தின் கீழ் அமர்ந்து அறம்பகர் கின்றார். |
| 3. | தீர்த்தங்கரர்களைச் சுற்றி பன்னிரண்டு கோட்டங்களில் மனிதர், யட்சர், முனிவர் முதலியோரும் பறவைகள் விலங்குகளும் உள்ளனர். | தட்சிணாமூர்த்தியைச் சுற்றி முனிவர்கள், யட்சர்கள் கின்னர கின்னரிகள், பறவைகள் (புறா, மயில், கிளி, குயில் முதலியன) விலங்குகள் (யானை, காண்டா மிருகம் முதலியன) உள்ளன. |
| 4. | உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அருள் உபதேசம் செய்யத் தோன்றிய தீர்த்தங்கரர்களின் எண்ணிக்கை 24 ஆகும். | தட்சிணாமூர்த்தியின் வடிவ பேதங்கள் இருபத்திநான்காகும். |
| 5. | தீர்த்தங்கரர்கள் பேசுவதில்லை அவரிடமிருந்துதோன்றும் திவ்யத்தொனி அன்பர்களுக்கான ஐயங்களுக்கு விடைகளை அளிக்கிறது. | தட்சிணாமூர்த்தியும் மௌன மூர்த்தியாக இருக்கிறார் அவரிடமிருந்து தோன்றும் ஓங்காரம் அன்பர்களின் ஐயங்களைத் தீர்த்து விடை அளிக்கிறது. |
| 6. | திவ்யத் தொனியிலிருந்தே சகல ஜைன ஆகமங்களும் தோன்றுகின்றன. | "ஓம்" என்ற தொனியிலிருந்தே சகல வேத ஆகமங்களும் உண்டானதென்று கூறப்படுகிறது. |
| 7. | தீர்த்தங்கரர்கள் ஆத்ம ஞானத்தில் லயித்து தியானத்தில் அமர்ந்திருக்கின்றனர். | தட்சிணாமூர்த்தி ஆன்ம ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருக்கும் தியான மூர்த்தியாக விளங்குகிறார். |
| 8. | தீர்த்தங்கரர்கள் காமனை (ஆசைகளை) வென்ற அஜித மூர்த்திகளாவர். | தட்சிணாமூர்த்தியும் காமனை (ஆசையின் வடிவான மன்மதனை) எரித்த கண்ணுதற் கடவுளாகப் போற்றப்படுகிறார். |
| 9. | தீர்த்தங்கரர்களுக்குரிய சின்னமாக (லாஞ்சனமாக) விலங்குகளும் பறவைகளும்உள்ளன. | தட்சிணாமூர்த்தியைச் சுற்றிப் பறவைகளும் விலங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. |
| 10. | தீர்த்தங்கரரின் பீடத்தில் தர்ம சக்கரத்தின் இருபுறமும் இரண்டு மான்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. | காஞ்சி கயிலாயநாதர் முதலிய தலங்களில் தட்சிணாமூர்த்தியின் பீடத்தில் இரட்டை மான்கள் இருப்பதைக் காணலாம். |
| 11. | சமணர்கள் தமது நீர்க்கரகங்களையும் மரக்கிளைகளில்மாட்டி வைப்பது வழக்கம். | தட்சிணாமூர்த்தி வடிவங்களில் மரக்கிளைகளில் பொக்கணம், நீர்கரகம் முதலியன மாட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. |

எனது அன்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய ஜினஸ்ரீ மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார் அவர்களின் குமாரர் ஜினஸ்ரீ M. ஜினேந்திரதாஸ் (CLRI) அவர்கள் அடிக்கடி சமயத்தொடர்பான செய்திகளைக் கேட்பார். அவருக்குக் கூறிய கருத்துக்கள் இங்கு பட்டியலிடப்பட்டுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிறப்புமிக்க தட்சிணாமூர்த்தி சந்நிதிகள்

சிவாலயங்களில் அன்பர்கள் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் ஜபம் செய்வர். அது பன்மடங்கு பலன்தரும் என்பதில் ஐயமில்லை. முக்தியை வேண்டியும் ஞானம் வேண்டியும் வழிபாடுகள் செய்வர். இதனால் தட்சிணாமூர்த்தி சந்நிதிகள் தனிச் சிறப்புப் பெற்றிருந்தன. பின்னாளில் குரு கிரகத்திற்குச் செய்ய வேண்டிய பரிகாரங்களையும் வழிபாடுகளையும் அன்பர்கள் தட்சிணாமூர்த்திக்குச் செய்யத் தொடங்கியதால் மேலும் பல சந்நிதிகள் மேன்மை பெற்றன. சிறப்புடன் விளக்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதிகளைச் சிந்திக்கலாம்.

## 1. ஆலங்குடி

திருவாரூர் மாவட்டம் கும்பகோணம் நீடாமங்கலம் சாலையில் ஆலங்குடி அமைந்துள்ளது. இறைவர் காசி காரண்யர் (ஆபத்சகாயேசுவரர்) இறைவி உமையம்மை. இத்தலத்தில் குருகிரக பெயர்ச்சியையொட்டி லட்சக் கணக்கான மக்கள் வழிபாடு செய்கின்றனர். சித்ரா பௌர்ணமி, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகியவற்றில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. சிறந்த பிரார்த் தனைக் தலமாகும்.

## 2. கோவிந்தவாடி அகரம்

காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள கோவிந்தவாடி அகரத்தில் காமாட்சி அம்பிகை உடனாய கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. பெரிய தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரைக் குருதட்சிணாமூர்த்தி என்றும் அழைக் கின்றனர். இவர் பெயரால் இவ்வூரே குரு கோயில் என்று அழைக்கப்படுகிறது. முன்புறத்தை வளர்த்திக்கட்டி மகா மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

## 3. திருநாவலூர்

திருநாவலூர் பக்த ஜனேசுவரர் ஆலயத்தில் நின்ற வாறு தட்சிணாமூர்த்தி காட்சியளிக்கிறார். இவருக்கு மஞ்சள் ஆடை அணிவித்து வழிபடுகின்றனர்.

## 4. ஓமாம்புலியூர்

ஓமமாம் புலியூர் துயர்தீர்த்தநாதர் ஆலயத்தில் சபா மண்டபத்தில் தட்சிணாமூர்த்தி ராஜயோக மூர்த்தியாக விளங்குகிறார். வியாழக்கிழமைகளில் சிறப்பு வழி பாடுகள் நடைபெறுகின்றன.

## 5. இலம்பையங்கோட்டூர்

முத்தியின்பத்தை நல்கும் ஆத்மநாத தட்சிணா மூர்த்தி இலம்பையங்கோட்டூர் அரம்பேசுவரர் ஆலயத் தில் உள்ளார்.

## 6. சுருட்டப்பள்ளி

இங்கு சக்தி தட்சிணாமூர்த்தியாகச் சிவபெருமான் நந்தியுடன் விளங்குகிறார். வாழ்வில் சாந்தி நிலவ இவரை வழிபடுகின்றனர்.

## 7. லால்குடி

லால்குடி சப்தரிஷீசுவரர் ஆலயத்தில் உள்ள தட்சிணாமூர்த்தியையும் ரிஷிகள் வழிபட்ட மூலவரையும் வழிபட வம்சம் விருத்தியாகும்.

## 8. தக்கோலம்

இங்கு சோமநாதீசுவரர் ஆலயத்தில் வீற்றிருக்கும் உத்குடிகாசன தட்சிணாமூர்த்தியை வழிபட வாழ்வு வளம் பெறும். தொழிலில் செல்வாக்கு பெருகும்.

## 9. திருப்பட்டூர்

பிரம்மசாத்தனின் ராஜதானியான திருப்பட்டூரில் ஆலயம் உள்ளது. இங்கு அறிவுக்கடவுளரான பிரம் மனுக்கும் சாஸ்தாவுக்கும் பெரிய சந்நிதி உள்ளன. இவர் களுடன் குருகிரகத்தையும் வழிபடுகின்றனர்.

## 10. திருவாலங்காடு

தென்திருவாலங்காடு வடவாரண்யேசுவரர் ஆலயத்தில் கரிகால்சோழன் வழிபட்ட தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரை வழிபடுவதால் புத்திர தோஷம் நீங்கி நல்ல குழந்தைகள் பிறப்பர்.

## 11. காளத்தி

காளத்தியில் பெருமான் வைதீக பீடத்தில் எழுந்தருளியுள்ளார். எதிரே ஜெபஸ்தம்பம் நாட்டப்பட்டு உள்ளது. இவரை வழிபடுவதால் தெளிவு உண்டாகி வெற்றிமேல் வெற்றி உண்டாகும்.

## 12. மயிலாடுதுறை

இங்குள்ள வள்ளலார் கோயிலில் மேதா தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரை வழிபடுவ தால் ஞானம் உண்டாகும்.

## 13. பட்டமங்கை

திருப்புத்தூரிலிருந்து திருக்கோட்டியூர் செல்லும் சாலையில் பட்டமங்கை உள்ளது. தட்சிணா மூர்த்திக்கென அமைந்த பெரிய ஆலயம். வியாழக் கிழமைகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி வழிபடு கின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## லகுளீசர் – அன்பர்களின் சிந்தனைக்கு

சிவாலய பரிவாரங்களில் ஒருவராக லகுளீசர் விளங்குகிறார் பூஜாபத்ததி நூல்களில் லகுளீசரை அக்னி திக்கில் அமைக்கவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. ❖ லகுளீசர் என்ற பெயரில் மூன்று ஆசாரியர்களைக் காண்கிறோம். மூவரும் சிவனுடைய அம்சமாகவும் சமய நூல்களை விளக்கும் ஆசாரியாராகவும் விளங்கியதால் தட்சிணாமூர்த்தி களாகப் போற்றப்படுகின்றனர்.

❖ முதல் (வகையில் லகுளீச பாசுபத சைவர்கள் வழிபடும் தட்சிணாமூர்த்தியாக லகுளீசர் விளங்குகிறார். திருஒற்றியூர் விமானத்தில் விமானமூர்த்தியாகவும் தனிச் சந்நிதியில் தட்சிணாமூர்த்தியாகவும் அவரைக் காணலாம். இவர் ஆதி லகுளீசர் ஆவார். ❖ இரண்டாவது லகுளீசர் சைவசித்தாந்தம் கூறும் 224 புவனங்களில் (அப்பு) நீர்தத்துவத்திலுள்ள 116 ஆவது புவனமான லகுளீசுவர புவனத்தில் அதன் அதிபதியாக வீற்றிருப்பவர். சிவபராக்கிரமம் இந்த லகுளீசமூர்த்தியைச் சிறப்பித்துப் போற்றுகிறது. ❖ மூன்றாம் லகுளீசர் யோகமார்க்கத்தை போதிக்கும் யோகா சாரியார்களில் 155வது ஆசாரியராகத் தோன்றியவர் காஞ்சீபுரத்தில் இவர் வழிபட்ட தலம் லகுளீச்சரம் என்ற பெயரில் உள்ளது.

### லகுளீசர்

❖ லகுளீசுவரர் திருவையாறு ❖

லகுளீச பாசுபதர்களின் சமயத் தலைவர் லகுளீசர் ஆவார். அச்சமயத்தினர் தமது உரிமைக் கோயிலாக விளங்கிய திரு ஒற்றியூர் படம்பக்க நாதர் ஆலயத்தில் ஸ்ரீ விமான மூர்த்தியாகவும், கோட்ட மூர்த்தியாகவும் லகுளீச (தட்சிணா) மூர்த்தியை அமைத்து வழிபட்டனர்.

பின்னாளில் லகுளீசரை கோட்டத்திலிருந்து இடம் பெயர்த்து அவ்விடத்தில் பொதுவாகக் காணப்படும் தட்சிணாமூர்த்தியை அமைத்துவிட்டனர் என்று கூறுகின்றனர். இப்போது தியாகராஜருக்குப் பின்புறம் அமைந்த சிறிய கற்றளியில் லகுளீசர் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளார் இவர் மேற்கரங்களில் சூலம், கபாலம், ஏந்தி வலது முன்கை சின்முத்திரைகாட்ட இடதுகை தியான முத்திரையில் இருக்க பத்மாசானத்தில் வீற்றிருக்கின்றார். காதுநுனிகளை வளர்த்தி கனத்த குண்டலங்களை அணிந்துள்ளார். சடையை எடுத்துக் கட்டியுள்ளார். கலையழகு மிக்க திருமேனியாக இது விளங்குகிறது.

திருவையாறு ஐயாறப்பர் கோயிலும் லகுளீச பாசுபதர்களின் உரிமைக்கோயிலாக இருந்ததால் அங்கும் கருவறைக் கோட்டத்தில் லகுளீசரையே தட்சிணாமூர்த்தியாக அமைத்துள்ளனர். இவர் நீண்டசூலம், கபாலம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளார். சுகாசனத்தில் அமர்ந்துள்ள இவர் வலது காலை ஆமையின் முதுகில் ஊன்றியுள்ளார். ஆமை இரகசியம் மந்திரங்களின் குறியீடு என்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

திருவையாற்றுக் கோயிலின் அங்கமாகத் திகழும் தென் கயிலாயத்தின் கருவறைக் கோட்டங்களில் மேலேகுறித்த லகுளீசருக்கு இணையான மூன்று வகையான தட்சிணாமூர்த்தி கோலங்களைக் காண்கிறோம்.

திரு ஒற்றியூரில் லகுளீசர் திருமேனி அருணாசலேசுவரர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவரை வீராகமம், மகாதேவபட்டாரகர் என்று அழைக்கிறது. அபராஜிதவர்மனின் கல்வெட்டுகளில் இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார் தகவல் மூலம் திரு . பாபு திரு. ரவி, பாண்டிச்சேரி PEPO



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மணிவாசகப் பெருமானுக்கு உபதேசிக்க இறைவன் மானுட வடியில் குருபரனாக வந்ததுபோலவே சிவபெருமான் லகுளீச மூர்த்தி எனும் மானுடனாக வந்தார். அத்தகைய கோலம் நெமிலி புன்னாகேசுவரர் ஆலயத்தில் உள்ளது.

பாசுபத சைவர்கள் அரசாங்க செல்வாக்கு பெற்றிருந்த போதிலும் பொதுமக்களிடம் போதிய செல்வாக்கு பெற்றி ருக்கவில்லை. எனவே அவர்களின் சமயம் கூறும் சிற்ப ஓவியங்கள் பரவலாக இல்லாமல் ஓரிரு இடங்களில் மட்டுமே உள்ளது. அதிலொன்றாக லகுளீசர் திருமேனி உள்ளது.

கூர்ம புராணத்தில் சுவேதர் முதல் லகுளீசர் வரையிலான இருபத்தெட்டு பாசுபத ஆசிரியர்களின் பெயர்களும் அவர்களின் வரலாறும் குறிக்கப்பட்டுள்ளன. சுவேதாசுவரம் என்ற உபநிஷத் சுவேதரின் கருத்துகளைக் கூறுகிறது.

## ஆகமம் கூறும் லகுளீசர்

உலகம் தோன்றி ஒடுங்கும் வழியாக ஆறு அத்துவாக்களைச் சிவாகமங்கள் கூறுகிறன்றன. அதில் புவனம் ஒன்றாகும். புவன அத்துவா ஐந்து கலைகளில் விரவியுள்ளது. இதில் பிரதிஷ்டாகலையின் நடுவிலுள்ள நீர்தத்துவத்தில் பாரூதம் முதலான எட்டு புவனங்களின் உச்சியில் லகுளீசுவரபுவனம் ஜோதி மயமானதாய் இருக்கிறது. அங்கே சூலம், மழு, சின்முத்திரை, நீர்க்கரகம் தாங்கி சிம்மாசனத்தில் லகுளீசுவரர் வீற்றிருக்கிறார். அவர் உயிர்களின் பாசங்களை நீக்கி, ஆணவாதி மும்மலங்களை நீக்கி நற்கதியை அருளும் ஆசார்ய மூர்த்தியாவார். அவரே 224 புவனங்களிலும் ஒவ்வொரு மூர்த்தியாக வடிவுகொண்டு ஆன்மாக்களுக்கு ஞானத்தைப்போதிப்பார் என்று ஆகம நூல்கள் கூறுகின்றன.

## காஞ்சீபுரம் யோகஸ்தானத்து லகுளீசரம்

யோகாசாரிய மதம் யோகங்களைப் போற்றி அட்டமா சித்திகளை வெறுத்து இறைவனோடு கலந்திருக்கும் நிலையே முத்திப்பேறு என்று கூறுகிறது. யோகத்தின் படிகள் 1. இயமம், 2. நியமம், 3. ஆதனம், 4. பிராணா யாமம், 5. பிரத்தியாகாரம் 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி என்னும் எட்டாகும். இவற்றை முறையே பயின்று கைவாப்பெற்றவர் கரணங்கள் இறந்து சாக்கிராதீதத் தில் தன்னிலையை அறிந்து தன்னைமறந்திருக்கும் நிலையில் நிர்விகல்ப சமாதி எனும் பேரின்ப நிலையை அடைவர்

சாதகனின் மூலாதாரத்துள் சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி ஆறு ஆதாரங்களை முறைப்படி கடந்து தலைக்கு மேலுள்ள சகஸ்ராரம் எனப்படும் ஆயிரம் இதழ்தாமரையில் உறையும் இறைவனுடன் இரண்டறக்கலக்கும் படிச்செய்யும் மனம் கடந்த நிலையே யோகம் எனப்படும், இது அமிர்த யோகம், ஆனந்த யோகம், பன்னயோகம், வஜ்ரயோகம் ஞானயோகம் என்று இவற்றின் விரிவை சிவயோக சாரம், சிவயோக மஞ்சரி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு பதஞ்சலியோக சூத்திரம் முதலிய நூல்களில் காணலாம்.

யோக மார்க்கத்தை விளக்கும் நிலையில் சிவ பெருமான் யோக தட்சிணாமூர்த்தியாக விளங்குகிறார். சிவபெருமான் யோகாசார்யனாக வீற்றிருந்து அதைக் கற்பிக்கின்ற வேளையில் நான்கு சீடர்கள் அவற்றைப் பெறுவர். அவர்கள் மூலம் அம்மதம் பரவும். இந்த யோகா சாரியர்கள் சுவேதர் முதல் லகுளீசர் வரையிலான 155 பேர்கள் ஆவர்.

இவர்கள் தம்பெயரால் 155 சிவாலயங்களை காஞ்சிபுரத்தில் அமைத்து வழிபட்டனர் என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது. இந்த ஆலயங்கள் யோகாசாரியார் தளிகள் என்றும் அவை அமைந்திருந்த பகுதி யோகஸ் தானம் என்றும் கூறப்படுகிறது.

இவற்றில் இறுதி ஆசாரியானாக தோன்றிய லகுளீசர் அமைத்த சிவாலயம் லகுளீச்சரம் என்ற பெயரில் உள்ளது. காஞ்சி க்ஷேத்திரமஞ்சரி என்ற நூலில் இந்த 155 ஆசாரியர்கள் பெயரும் வரிசையாகக் கூறப்பட்டுள்ளது.

★ யோகம் என்ற சொல் மனதை ஐம்புலகளின் வழியே கிடைக்கும் போகங்களில் செலுத்தாமல் சிவபெருமானையே அன்புடன் மனதில் கொண்டு மனதை ஒருங்கச் செய்வது என்பதாகும். இது மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம், மகாயோகம் என்ற ஐந்தாகும். (இவற்றை யோகசாத்திர நூல்களில் விரிவாகக் காணலாம்)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

## சிவமகாபுராணம் கூறும் யுகங்கள் தோறும் தோன்றும் யோகாசாரியார்கள்

சிவபெருமான் ஆகமங்களைச் சூரியமண்டலத்தில் வீற்றிருந்து உமாதேவிக்கும் முனிவர்களுக்கும் அருளிச் செய்தான். காலவெள்ளத்தில் அவற்றில் பல மறைந்தன. உமாதேவி மீண்டும் அவற்றை அருளவேண்டுமென்றாள். பெருமான் ஒரே இரவில் மீண்டும் அவளுக்கு உபதேசித்தார். ததீசி, அகத்தியர் முதலியோரும் கேட்டு மகிழ்ந்தனர்.

சிவபெருமான் ஒவ்வொரு யுகத்திலும் அப்போதைய தேவைக்கேற்ப தானே யோகாசாரியராகத் தோன்றி ஆகமங்களை அருளிச் செய்வான். நான்கு பேர் சீடர்களாக இருந்து அவர் கூறும் ஆகமங்களைக் கேட்டு உணர்ந்து உலகில் பரப்புவர். இந்த இருபத்தெட்டு சதுர் யுகங்களிலும் யோகாசாரியராகத் தோன்றும் பெருமானின் பெயரை கீழே காணலாம். இங்கு யோகம் என்ற சொல் அடையத்தக்கது என்ற பொருளில் வந்துள்ளது. எது அடையத் தக்கது என்றால் சிவாகமங்களே அடையத்தக்கவை. அதை அருளும் பெருமான் யோகாச்சாரியார் என்று அழைக்கப்படுகிறார். இவரை யோக தட்சிணாமூர்த்தி எனவும் வழங்குவர்.

1. சுவேதன்
2. சுதாரன்
3. தமணன்
4. சுகோத்திரன்
5. சுங்கன்
6. லோகாஷி
7. சைகிஷவ்யன்
8. திவாகரன்
9. குஷ்பன்
10. ருத்தரிரன்
11. அத்திரி
12. ஜ்வலைகன்
13. கௌதமன்
14. வேதசிரன்
15. கோகர்ணன்
16. குஹாவாசி
17. ஜிகண்டி
18. ஜடாமாலி
19. அட்டகாசன்
20. தாருகன்
21. இலாங்கதி
22. மஹாகாயன்
23. சூலி
24. ஜண்டி
25. முண்டிசன்
26. சயிஷ்ணு
27. சோமசன்
28. வருணேசன்

என்பவர்களாவர்.

### சாக்த தந்திரத்தில் கௌலீச தட்சிணாமூர்த்தி

சாக்த சமயத்தில் சமய ரகசியங்களைத் தகுதி உள்ளவர்களுக்கு போதிக்கும் ஆசிரியர்கள் குலேசுவரர்கள் என்றும் கௌலீசர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களை கௌலின்னிகர் என்றும் அழைப்பர். பெண்பால் ஆசாரிடைகளை கௌலின்யை என்று அழைத்தனர். சிவபெருமான் சமய ரகசியங்களை போதித்த வேளையில் கௌலீச தட்சிணா மூர்த்தியாக விளங்குகிறார் லலிதா சகஸ்ரநாமத்தில் அம்பிகை கௌலினி என்று துதிக்கப்படுகிறாள்.

## தட்சிணாமூர்த்தி கல்வெட்டுச்செய்திகள்

அனைத்து ஆலயங்களிலும் கோஷ்ட மூர்த்தியாக தட்சிணாமூர்த்தியை எழுந்தருளி வைப்பது பொது விதியாகும். தட்சிணாமூர்த்தி ஆலய நிர்மாணத்தி லேயே இடம் பெற்றிருக்கிறார். அவரைப் பற்றிய சிறப்பு மிக்க கல்வெட்டுச் செய்திகள் அதிகம் இல்லை. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட உலா மூர்த்திகளின் பெயர்கள் விவரிக்கப் பட்டுள்ளன. அதில் ஒன்றாக ஒரு முழ உயரமுள்ள தட் சிணாமூர்த்தி உலோகத் திருமேனி அளிக்கப்பட்ட விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சைப் பெரிய கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தட்சிணா மூர்த்தியின் உலோகதிருமேனியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. இதன்படி பெருமான் ஒரு மலை மீது ஒன்பது பெருங்கிளைகளும் நாற்பத்திரண்டு சிறுகிளைகளையும் கொண்ட ஆலமரம் நிழல் பரப்ப அமர்ந்திருக்கிறார். அதன் கிளைகளில் சாமரமும் பொக்கணமும் உள்ளன. அவருடைய பாதத்தின் கீழ் முயலகன் கிடக்கிறான். நான்கு முனிவர்கள், ஒரு பாம்பு, கின்னரர், கின்னரிகள், புலி ஆகியவை சூழ்ந்துள்ளனர்.

இதில் குறிப்பிட்டுள்ள மரம், கிளை, முனிவர்கள், புலி, முதலிய ஒவ்வொரு உருவத்தின் அளவும் நிறையும் கூட கல்வெட்டில் விளக்கமாகப் குறிக்கப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம் முன்னூர் ஆடவல்லீசுவரர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இரண்டாம் ராஜராஜ சோழனின் (கி.பி.1148) ஆட்சியில் பெரிய நாச்சி என்பவர் பெரிய விநாயகரைச் செய்து கொடுத்ததுடன் தட்சிணாமூர்த்தி கோயிலுக்கு சோபான மண்டபம் கட்டித்தந்த செய்தி இடம் பெற்றுள்ளது.

சிதம்பரத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு தினமும் மூலத்தான முடையார்க்கும் தட்சிணாமூர்த் திக்கும் அப்பம் ஆகியவற்றை அமுதூட்ட ஏற்பாடு செய்ததை விரிவாகக் கூறுகிறது.



**யோகபாலா தேவியுடனாகிய தட்சிணாமூர்த்திப் பெருமான் அருளினால்**
**எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!!!**





Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகம வடிவே போற்றி! அருள்நிறை ஆச்சார்ய திருவே போற்றி!!
ஐயாறதனில் சைவனாகிய அண்ணலே போற்றி ! போற்றி!!

# ஸ்ரீ சிவாச்சாரியார்கள்

உலக நலன் வேண்டி சிவபூசை செய்வதற்காக ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரத்தின் வேரில் ஊற்றப்படும் நீர் அடிமரம், கிளைகள், இலைகள், மலர்கள், பழங்கள் ஆகிய யாவற்றுக்கும் பயனாவது போல் ஆலயத்தில் முறையாகச் செய்யப்படும் பூசைகள் இறைவனை அடைந்து அவன் அருளை உலக உயிர்கள் யாவும் அடையும்படிச் செய்கின்றன. எனவே, சிவபூசையை உயிரில் கலந்து உணர்வோடு, பக்தியாகவும் முறையாகவும் செய்ய வேண் டும். " அன்புடன் ஆசார பூஜை என்பது அருண கிரியார் திருவாக்கு,

அதனை எல்லோரும் செய்ய இயலாது என்பதால் இறைவனே சிலரைத் தோற்றுவித்து அவர்கள் முறையாகச் செயல்பட ஆகமம் என்ற விதிமுறை நூல்களையும் வகுத்தளித்தான்.

நாடு நலம் பெற ஆகமங்களில் விளக்கியுள்ளபடி பரார்த்த சிவ பூசை (பர+அர்த்தம் :உலக நன்மையின் பொருட்டு)செய்ய வேண்டும். ஆகம நெறியில் வந்து தீக்ஷை பெற்ற சிவாச்சாரியார்கள் மட்டுமே அதற்கு உரிய தகுதி படைத்தவர்கள் என்று புராணங்கள், திருமுறைகள், ஆகமங்கள், திருமூலரின் திருமந்திரம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் பூசை செய்பவர்களை அர்ச்சகர், குருக்கள், சிவாசாரியார், பட்டர், நம்பியார் என்னும் பெயர்களில் பலவாறு அழைக்கின்றனர். சிவாச்சாரியார்கள் என்பது பொதுப் பெயர். இவர்கள் உபநயனம் ஆன பிறகு வேதத்தின் சில பகுதிகளையும் ஆகம நெறி வழிபாட்டையும் முறைப்படி கற்கின்றனர். சிவதீக்ஷை பெற்று தினமும் ஆத்மார்த்த (ஆன்மநலன் பொருட்டு) பூசை செய்கின்றனர். இல்லறம் ஏற்றுச் சிலகாலம் ஆனபின் சிவாசார்யாராவதற்கான தகுதியை அடைய ஆசார்ய அபிஷேகம் செய்து கொள்ளுகின்றனர். அதன் பிறகே சிவாசாரியார் என்று அழைக்கப்படுகின்றனர்.

இத்தகைய சிறப்புப் பெற்ற சிவாசார்யர்களைச் சிவமாகவே போற்றி வழிபட வேண்டுமென்றுப் பெரியோர்கள் கூறுகின்றனர். சிவமஞ்சரியின் நாற்பத்து நான்காவது மலர் சிவாசார்யர்களின் பெருமைகளைப் பேசுவதாக மலர்கிறது.

இதில் சிவபெருமான் சிவாசார்யர்களை தோற்றுவித்தது. அவர்களுக்கு ஆகமங்களை அருளியது. காலப்போக்கில் மன்னர்கள் வடநாட்டிலிருந்து சிவாசாரியர்களைக் குடியேற்றியது, சிவாசாரியார்களின் கடமைகள், செயல்பாடுகள் முதலிய பலசெய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் தானே மண்மேல் சிவாசாரியராகத் தோன்றிச் சிவபூசை செய்து. அன்பர்களுக்கு அருள்புரிந்தது முதலான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்

ஐயாறதனில் ஆதிசைவனாகி உமாதேவியுடன்வீற்றிருக்கும் சிவபெருமான் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளிக்க வேண்டுமென்று அவர்தம்பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகிறோம்.

– சிவசுந்தரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## அன்பர்களின் கவனத்திற்கு.....

இந்நூலுக்குச் சிவாசாரியர்கள் என்ற பெயரிடப்பட்டிருந்தாலும், இந்நூலில் சிவாசாரியார்களின் பெருமைகளைப் பேசுவதுடன், சிவாலயங்களில் வேதநெறியில் பணிபுரிந்த வேதியர்கள் சமய தீக்ஷைகளைப் பெற்று அதன்மூலம் சிவாசாரியார்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் ஆகியோரைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

நூலின் முதற்பகுதியில் சிவாச்சாரியர்களின் பெருமைகள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதி, சிவாலயங்களில் அருச்சனை புரிந்த வேதியர்களின் சிறப்புக்களை விளக்குகிறது. மூன்றாம் பகுதியில் தென்னகத்தில் பெருமை பெற்றுவிளங்கிய பாசுபத ஆசாரியர்களைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் சிந்தனைக்கினிய சிறுசிறு செய்திகளும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

## பல்வகை சிவாச்சாரியார்கள்

சிவபெருமானை வழிபடுவோர் சைவர் ஆவர். இவர்களில் சிவதீக்ஷைகளைப் பெற்றவர்கள் சிவர் என்றும், சிவாச்சாரியார் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிறப்பு கருதி இவர்களை, அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர் அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்நிய சைவர் என்று சிவமகா புராணம் வகைப்படுத்துகிறது. இவர்களைச் சப்த சைவர்கள் என்பர்.

அநாதி சைவன் என்பது சிவபெரு மானை மட்டுமே குறிக்கும். ஆதிசைவர்கள் சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்திலிருந்து தோன்றியவர்கள், சதாசிவ மூர்த்தியால் தீக்ஷிக்கப் பட்டவர்கள். காமிகாகமம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களை அவரிடமிருந்து பெற்று அதன்படியே சிவபெருமானைப் பூசித்து வருபவர்கள். இவர்களைச் சிவபுத்திரர் என்றும் கூறுவர். புராணங்கள் இவர்களை சிவத்துவிஜர் என்று அழைக்கின்றன. சிவாச்சாரியர்களில் ஆசாரிய அபிஷேகம் செய்யப் பெற்றவர்களே பிரதான ஆச்சாரியராக இருந்து கும்பாபிஷேகங்களில் பூசை செய்யவும், பிறர்க்கு தீக்ஷை செய்து வைக்கவும் உரிமையும் தகுதியும் படைத்தவர்கள் ஆவர். சிவாலயங்களில் பூசை செய்யவும் அபிஷேகம் அலங்காரம் நடத்தவும் தகுதி பெற்றவர்கள்.

வேதநெறியைப் போற்றும் பிராமண குலத்தில் தோன்றி சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த பூஜையுடன் சிவநெறியில் நிற்பவர்கள் மகா சைவர்கள் எனப்படுவர்.

போர் நெறி வல்ல க்ஷத்ரியர்களும், வியாபாரம் செய்யும் வைசியர்களும் நான்காம் நிலையிலான அனுசைவர்களாவர். தொல்குடியான விவசாய நற்குடியில் பிறந்தவர்கள். சிவதீக்ஷை பெற்றுச் சிவநெறி நிற்பவர்கள் அவாந்தர சைவர் ஆவர்.

இவர்களைத் தவிர்த்து வண்ணார், குலாலர், முதலியோர் ப்ரவர சைவராவர். அந்நிய மதத்தில் இருந்து கொண்டு சிவபெருமானை வழிபடுபவர்களும், அண்டை நாட்டினைச் சேர்ந்த சிவபக்தர்களும், அந்நியசைவர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் தனித் தன்மை பெற்ற குருமார்கள் தோன்றி, ஆகமம் கூறும் தீட்சைகளைப் பெற்று உயர்ந்த மாணவர்களையும் அன்பர்களையும் உருவாக்கி சைவப்பயிரை வளர்த்து வருகின்றனர்.

இவர்கள் எழுவரில் ஆதிசைவர்கள் மட்டுமே சிவாலயங்களில்(உலக நன்மைக்காக சிவ வழிபாடு செய்வதெற்கென கட்டப்பட்டுள்ள பரார்த்த சிவாலயங்கள்) பூசைசெய்யும்தகுதியைப் பெற்றிருக்கின்றனர்.

**லட்சாத்தியாயீ** – ஆகமங்கள் பல கோடி சுலோகங்களைக் கொண்டவை. அவற்றில் ஒரு லட்சம் சுலோகங்களை முறையாக அத்தியயனம் செய்தவர்கள் லட்சாத்தியாயீ என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தம்மை ஸ்ரீலட்சஸ்ரீ என்ற அடைமொழியுடன் அழைத்துக் கொண்டனர். அதுவே ஸ்ரீலஸ்ரீ என சுருக்கம் பெற்றது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாசாரியார்களின் தோற்றம்

சிவபூசை செய்வது உயிருக்கு நன்மை தருவதாகும். அது இகவாழ் விற்கும் பரவாழ்விற்கும் மேன்மையை அளிக்கிறது. அதனால் எல்லோரும் முறையாகச் சிவதீக்ஷை பெற்று சிவ பூசை செய்ய வேண்டும். அது ஆத்மார் த்த பூஜை எனப்படும். (ஆத்மார்த்தம் : ஆன்மாவின் நலன் பொருட்டு)

அதுபோல்உலகிலுள்ள அனைத்து உயிர்களும் நலமும் வளமும் பெறச் சிவாலயங்களை அமைத்துச் சிவபூசை செய்யப்படுகிறது. ஆலயங்களில் செய் யப்படும் பூசை பரார்த்த பூசை எனப் படும். மரத்தின் வேரில் ஊற்றப்படும் நீர் மரம், கிளை, கப்பு, இலை, மலர், பழம் எல்லாவற்றிற்கும் பயனாவது போல் முறையாகச் செய்யும் சிவாலய பூசையின் பயன் அனைத்து உயிர்களை யும் சென்றடைகிறது.

எனவே, சிவாலய பூசையை ஆகம நூல்களில் விதித்துள்ளபடி முறையாகச் செய்ய வேண்டும். சிவபெருமான் ஆகமங்களின்படி பூசிப்பதற்காக ஐந்து முகங்களில் இருந்தும் ஐந்து ரிஷிகளை உண்டாக்கினார். (இவர்களை ஊர்த் துவ முகத்திலிருந்து தோற்றுவித்தார் என்று சிவமகாபுராணம் கூறுகிறது) இவர்கள் அகஸ்தியர், கௌசிகர், காஸ்யபர், பாரத்வாஜர், கௌதமர் என்பவர்களாவர். இவர்களுக்கு பெரு மான் முறையே தனது ஐந்து முகங்க ளால் தீக்ஷை அளித்தார்.

பெருமான் அவர்களுக்கு தீக்ஷை அளித்து ஆகமத்தை உபதேசித்து சிவாலய பூசைகளைச் செய்யும் அதிகா ரத்தையும் வழங்கினான். அவர்கள் வம்சம் பல்கிப் பெருகிவளர, மனைவியரையும் படைத்தளித்தான். மேற்குறித்த ஐந்து ரிஷிகளின் பெயரால் சிவாச்சாரியார்கள் ஐந்து கோத்திரத்தார் களாக இருந்து வருகின்றனர். இவர்களிடமிருந்து சில உபகோத்திரங்களும் தோன்றியுள்ளன. இவர்களைக் குருக்கள் என்றும் சிவாசாரிய தீக்ஷை மேற்கொண்ட பின் சிவாசாரியார்கள் என்றும் அழைக்கின்றோம்.

காமிகாகமம் இவர்களுக்குப் பெருமான் சிவ தீக்ஷையால் அருள்புரிவதற்கும், பிரதிஷ்டை, உற்ச வம், ஸ்நபனம், ப்ரோக்ஷணம், பிராயச்சித்தம் அபிஷேகம் முதலான சடங்குகளைச் செய்துவைப் பதற்கும் அதிகாரம் வழங்கினார் என்று கூறுகிறது. இவர்கள் அன்பர்களுக்கு சிவதருமங்களை விவரித் துக் கூறி சைவத்தை மேன்மைப்படுத்துகின்றனர்.

இவர்கள் தமது கோத்திரத்திற்கேற்ப பல்வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.





Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## சிவாசார்யர்களும் பூசை முறைகளும்

ஒரு சிவாலயத்திலுள்ள சிவலிங்கத் திருமேனியைப் பூசிக்கும் உரிமை அத் ·தலத்துச் சிவாசார்யர்களுக்கு மட்டுமே உரியது. அவ்வூரில் பெண்ணெடுத்தவர்கள் சுவீகாரம் வந்தவர்கள் முதலானவர்கள் சுற்றுக் கோயில்களை மட்டுமே பூசிக்கலாம். மற்றைய உறவினர்கள் தீபாராதனை செய்யவும் அருச்சனை செய்யவும் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

## சிவாசாரியர்களும் பஞ்ச ரிஷிகளும்

சிவபெருமான் ஆதியில் தம் ஐந்து முகங்களில் இருந்தும் ஐந்து ரிஷிகளைத் தோற்றுவித்தார். இவர்களைப் பஞ்சரிஷிகள் என அழைப்பர். இவர்கள் சிவபெருமானிட மிருந்து ஆகம நூல்களைப் பெற்றதுடன் பூசை முறைகளையும் அறிந்து கொண்டனர். இவர்கள் வம்சத்தில் வந்தவர்களே வாழையடி வாழையென வந்து சிவாலயங்களில் உலக நலன் வேண்டி முறையாகப் பூசைகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் ஐவருக்கும் மற்றுமுள்ள ரிஷிகளுக்கும் நித்திய அனுஷ்டானத்தில் தர்ப்பணம் செய்யப்படுகிறது. இதற்கு ரிஷி தர்ப்பணம் என்பது பெயர்.

இதே பெயரில் வேதங்களிலும் புராணங்களிலும் பல ரிஷிகள் உள்ளதையும்காணலாம். அவர்கள் இவர்களிலிருந்து வேறானவர்கள். இவர்கள் மட்டுமே ஆலயங்களில் சிவபூசை செய்யும் உரிமை பெற்றவர்களாவர். சிவனருளால் தோன்றிய ரிஷிகளைச் சிவசிருஷ்டி ரிஷிகள் என்றும், வேத வழிபட்ட ரிஷிகளை ப்ரம்ம சிருஷ்டி ரிஷிகள் எனவும் அழைக்கின்றனர்.

**சிவாசார்யர்களுக்குரிய சின்னங்கள்**

சிவாசார்யர்களுக்குரிய சின்னங்கள் ஐந்தாகும், அவை விபூதி, உருத்திராட்சம், உபவீதம், உத்தரியம், தலைச்சீலை என்பன.

## பஞ்சாசாரியார்கள்

சிவாலயங்களில் பணிபுரிவோரைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் சிலவற்றில் ஸ்ரீபாதமூலப் பட்டுடையார்களும் பஞ்சாசார்யம் செய்வார்களும் என்று தொடரைக் காண் கிறோம். ஸ்ரீபாதமூலம் பட்டுடையார்கள் என்பவர்கள் ஆகம ஞானத்தில் தேர்ச்சி பெற்று சிவாலயப் பணிகளைத் தலைமையேற்று நடத்துபவர்களாகவும் அவர்களுக்குத் துணையாக பணிபுரிவோர் பஞ்சாசாரியம் செய்வோர்களாகவும் விளங்கி வந்ததாக அறிகிறோம்.

பஞ்சாசாரியர்கள் என்போர் ஆசாரியர்கள், அர்ச்சகர், அலங்கிருதர், சாதகர், வாசகர் என்பவர்களாவர். இவர்களில் ஆசார்யர் விசேஷித்த சிறப்புப் பூசைகளைத் தலைமையேற்று நடத்துவதுடன் ஆகம நூல்களில் கூறியுள்ள விஷயங்களை தமது உதவியாளர்களுக்குக் கற்பிப்பவர் அறிவுத்துபவர். அருச்சகர் தினப் பூசைகளை முறைப்படி செய்பவர். அலங்கிருதர் சுவாமிக்குச் சிறப்பான அலங்காரங்களைச் செய்பவர்.

சாதகர் என்பவர் பூசைக்கு அவ்வப்போது தேவையான பொருட்களை முறைப்படுத்தி எடுத்துத் தருபவராவர். வாசகர்கள் என்பவர்கள் தினமும் பூசை வேளையில் வேத, ஆகமங்களை ஓதுவதுடன், மற்றவர்களுக்கும் விரித்துரைப்பவர்களாவர்.

பின்னாளில் மற்றவர்களின் பணியையும் பட்டுடையார்களே மேற் கொண்டனர். இதனால் எல்லா சிவாசாரியார்களும் பட்டுடையார் (அ) பட்டர் என்று அழைக்கப்படுகின்றனர்.

மேற்குறித்த ஐவகைப் பணிகளேயன்றிக் கட்டியம், பராக், திருவாசல் முதலான பணிகளையும் சிவாசாரியர்கள் மேற்கொண்டிருந்ததை அறிகிறோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# முப்போதும் திருமேனி தீண்டுவார்

மூன்று காலங்களிலும் சிவபெருமானைத் தீண்டிப் பூசிக்கும் உரிமை பெற்றவர்கள் சிவாசாரியர்கள் என்பதால், அவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவார் என்று அழைக்கப்பட்டனர். சுந்தரர் அந்தச் சொல்லா லேயே அவர்களைப் போற்றியுள்ளார்.

ஆலயங்களில் அமைந்துள்ள தொகையடியார் அறுபத்து மூவர் வரிசையில் 62ஆவதாக முப்போதும் திருமேனி தீண்டுவாரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள் ளது. இவர் அனைத்துச் சிவாசாரியர்களின் பிரதி நிதியாக விளங்குகிறார். இவரது திருவுருவத்தைக் குடம், புஷ்ப கூடை ஆகியவற்றுடன் அமைக்க வேண்டுமென்று கூறுவர். புண்ணியம் செய்தார்க்குப் பூவுண்டு நீருண்டு என்று கூறப்படுவதால் சிவபூசைக்கு ஆதாரமான இவற் றைத் தாங்கி நிற்பவராக அமைக்கப்பட வேண்டுமென்று கூறுவர். பெரிய புராணத்தில் பத்தராய்ப் பணிவார்கள் சருக்கத்துள் இரண்டு பாடல் களில் இவர்களது பெருமை கூறப்பட்டுள்ளது. இப்பாடல்களில் திரண்ட கருத்து எப்போதும் இனிய பிரானாக விளங்கும் சிவபெருமானின் மீது அன்புகொண்டு மெய்யறிவு நெறியான ஆகமவிதி முறைகள் வழுவாமல் அப்போதைக்கப்போது (முன்னி லும் அன்பு அதிகரிக்க) ஆர்வம் மிக மூன்று (சந்திகளிலும்) அர்ச்சிக்கும் முதன்மை பெற்ற சைவர்கள்.

இவர்கள் தெரிந்து உணர்ந்து மூன்று காலங்களான சென்ற காலம், நிகழ் காலம், வருங்காலம் ஆகியவற்றில் விரும்பி பெரு மானை அர்ச்சனைகள் புரிகின்றனர் (இங்கு அருச்சனை என்பது பூஜையைக் குறிக்கிறது.) பூசையானது நித்திய, நைமித்திக, காம்ய, பிராயச்சித்த பூஜை என நான்கு வகைப்படும், நித்யபூஜை என்பது தினப்பூஜையாகும். நைமித்திகம் என்பது தீக்ஷை கும்பாபிஷேகம் மற்றும் சிறப்புப் பூசைகளான விழாக்களாகும். காம்யம் என்பது தனக்காக மட்டுமே செய்யப்படும் வழிபாடுகளாகும். பிராயச் சித்தம் என்பது தீய பலன்கள் அணுகாதிருக்கச் செய்யப்படும் கழுவாய்ப் பூசைகளாகும்.

இவர்கள் வழிவழியாக ஆகம வழிபாட்டைக் குன்றாமல் போற்றுகின்றனர். பெருமை மிக்க அக்குலத்தின் பெருமையை நம்மால் விளக்க முடியாது என்பதே உண்மை யாகும். வழிவழியாக வருபவர்கள் என்று இவர்களைக் கூறுவதால் இது ஆதிசைவர்களையே குறிக்கும் என்பர்.

சேக்கிழார், திருமாலும் பிரம னும் அறிய முடியாத சிவபெரு மான் அருளிய ஞானமயமாக விளங்கும் ஆகமங்களில் கூறப் பட்டுள்ள உண்மைப் பொருளை உணர்ந்து அதன்படியே மூன்று காலங்களிலும் அன்புமிகுந்த கார ணத்தால் அர்ச்சித்து வழி படும் சிவமறையோர்களுடைய கமல மலர்க்கழல் வணங்குவதாகக் கூறு கின்றனர். இதன் மூலம் அவர்கள் பெருமானைப் போலவே வீரக் கழல்கள் அணிந்திருந்ததையும் அறிகிறோம்.

முப்போதும் திருமேனி தீண்டுவார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஐயாறதனில் சைவனாகியும்..

திருவையாற்றில் ஐயாறப்பனைத் திரு மேனி தீண்டிப் பூசிக் கும் காணி வட்டத் தார் இருபத்துநான்கு பேர் ஆவர். அவர்க ளில் ஒருவர் காசி நகர் சென்று கங்கையில் நீராடி விசுவநாத ரைத் தரிசித்து வர விரும்பினார். அதற் கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் பயணத் தினை மேற்கொண்டார். அவர் குறித்த தேதி யில் திரும்பி வரவில்லை. அவருடைய தாயா தியர் அவருடைய சொத்துக்களைக் கவர்ந்து கொண்டதுடன், பூசை முறையையும் கைக் கொள்ள முயன்றனர்.

அருச்சகரின் மனைவியும் மக்களும் ஐயாறப்பனிடம் அழுது முறையிட்டனர்.

மறுநாள்...இறைவன் காசி சென்ற அருச்ச கரின் வடிவை எடுத்தார். அவர் வீட்டிற்குச் சென்று எல்லோரையும் நலம் விசாரித்தார். உறவினர் கவர்ந்த அருச்சகரின் உரிமை களைத் திரும்பப் பெற்றார். சில காலம் தனி மடத்தில் தங்கிச் சிறப்புப் பூசைகளைத் தாம் மேற்கொள்ளப்போவதாகக் கூறினார்.

அதன்படியே கோயிலுக்குச் சென்று உரிய பூசைகளை முறையாகச் செய்துவிட்டு தனி மடத்தில் தங்கியிருந்தார். மக்கள் அவர் செய்துவரும் சிவபூசையைக் கண்டு மகிழ்ந் தனர். அதைக் காணும் போதெல்லாம் பெரிய இன்பத்தைப் பெற்றனர்.

நாட்கள் சென்றன. யாத்திரையை முடித் துக் கொண்டு அர்ச்சகர் ஊர் திரும்பினார். தம்மைப் போலவே ஒருவர் தமக்குரிய பூசை களைச் செய்வது கண்டு அதிசயித்தார். தாமே உண்மையான அருச்சகர் என்று எல்லோரி டமும் கூறினார். அவர்கள் இருவரையும் ஒரு சேரக் கண்டவர்களால் யார் உண்மையானவர் என்று அறிய முடியவில்லை.

இறைவன் திருவிளையாடல் புரிய விரும் பினார். தாமே உண்மையான அருச்சகர் என்று வாதிட்டார். அருச்சகரும் சளைக்காமல் வாதிட்டார். இவர்களுடைய வாதங்களைக் கேட்டவர்களால் யார் உண்மையானவர் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

இறுதியில் உண்மையான அருச்சகர் சில ஏதுக்களைக் காட்டி வென்றார். அந்த மகிழ்ச்சி யால் ஆடிப் பாடினார். இறைவனாக வந்த அருச்சகர் மறைந்தார்.

விண்ணில் விடைவாகனத்தில்உமையொ டும் பெருமான் காட்சியளித்தார். அதைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்து வணங்கினர்

அன்று முதல் அநாதிசைவனான ஐயாறப் பனும் ஆதிசைவனாகப் போற்றப்படுகிறார்.

ஐயாறப்பன் சைவனாக வந்து சிவபூசை செய்து எல்லோரையும் மகிழ்வித்ததை நினை வூட்டும் வகையில் ஐதீக விழா நடத்தப்படு கிறது. இது தன்னைத்தான் பூசித்தல்" என்னும் ஐதீக விழாவாகப் பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாளில் நடைபெறுகிறது. அன்று ஏழூரிலுள்ள சோமாஸ்கந்த மூர்த்திகளும் ஒரே இடத்தில் இங்கு எழுந்தருள்கின்றனர். அருச்சகர் ஸ்படிக, வெள்ளி சிவலிங்கத்திற்குப் பூசை செய்வார். அதுவேசிவபூசைக் காட்சியாகும். இதில் ஏராள மான அன்பர்கள் மகிழ்வுடன் கலந்து கொள் வதுடன், அவ்வேளையில் தமது ஆத்மார்த்த சிவபூசையையும் செய்கின்றனர்.

சிவபெருமான் ஆதிசைவராய்ப் பூசை செய்த திருவையாற்றுத் தலத்தில் மட்டுமே சிவகலை அர்த்தசாம பூசைக்குப் பிறகும் அகலாமல் அவ்விடமே இருக்கும். ஏனையே திருக்கோயில் சிவகலைகள் அர்த்தசாம பூசைக்கு தில்லைச் சிற்றம்பலத்தில் ஒடுங்கும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பொற்காசு பெற்ற சிவாசாரியார்

அன்புடன் பூசிக்கும் சிவாசாரியார்களுக்கு இறைவன் தாமே உவந்து படிக்காசு வைத்து அருள் பாலித்ததைப் பின்வரும் வரலாறுகளில் காணலாம்.

## புகழ்த்துணையார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான புகழ்த்துணை நாயனார். சிவாசாரியார் குலத்துப் பிறந்தவர். செருவிலிபுத்தூர் எனும் ஊரில் தோன்றி அவ்வூரிலுள்ள சிவாலயத்தில் பணி செய்து வந்தவர்.

ஒரு சமயம் பஞ்சம் தோன்றியதால் விளைவுஇல்லை. மக்கள் உண்பதற்கு எதுவும் கிடைக்கவில்லை.எல்லோரும் பெருந்துன்பம் அடைந்தனர். நாயனாரும் பல நாட்கள் பட்டினி கிடந்து பசியால் துன்பமடைந்தார், என்றாலும் சிவபூசை செய்வதை முன்னிலும் சிறப்பாகச் செய்து வந்தார்.

ஒரு நாள் சிவலிங்கத்தை நீராட்டி (திருமஞ்சனம் செய்து)க் கொண்டிருந்தார். பசிப்பிணியால் வருந்தித் தளர்ந்திருந்த அவர், மயக்கமெய்தி தண்ணீர்க் குடத்தைத் தாங்க முடியாது அதைச் சிவலிங்கத்தின் மேலேயே போட்டுவிட்டுத் தானும் வீழ்ந்தார்.

அப்படியே மயங்கி விட்டார். மயக்கம் அதிகரித்து உறக்கமானது. அவர் கனவில் சிவபெருமான் தோன்றினார். அன்பனே! வருந்தாதே இந்தப் பஞ்சகாலம் தீரும் வரை பலிபீடத்தின் மீது நாம் ஒரு பொற்காசு வைத்தருள்வோம்.அதைஎடுத்துப் பயன்பெறுக எனக்கூறி மறைந் தார்.

துயில் நீங்கி எழுந்த நாயனார் இறைவன் அருளியபடி பொற்காசு இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். அன்று முதல் பஞ்சகாலம் முழுவதும் இறைவன் பொற்காசை அளித்து வந்தார். நாயனார் மிகுந்த அன்புடன் பூசை செய்து வந்தார். நீண்ட நாள் மகிழ்வுடன் சிவபூசை செய்து வந்த நாயனார் ஓர் ஆவணி ஆயில்ய நன்னாளில் சிவகதி அடைந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சம்பந்தரும் .இந்நாயனாரின் பக்தி திறத்தையும், படிக்காசு பெற்றமையையும் பாடியுள்ளார்கள். பெரிய புராணத்துள் பத்தாவது சருக்கமான கடல் சூழ்ந்த சருக்கத்துள் ஏழு பாடல்களில் இவருடைய வரலாறு கூறப்பட்டுள்ளது. செருவிலிபுத்தூர் மூவராலும் பாடப்பட்ட பதியாகும். அது இந்நாளில் அரிசிற்கரைபுத்தூர் என்றும், அழகார்புத்தூர் என்றும் அழைக்கப்படுகிறது. இறைவன் படிக்காசு வைத்த நாதர் என்றும், அம்பிகை அழகம்மை என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இதேபோன்ற நிகழ்ச்சி மற்றொன்றும் வரலாற்றில் உள்ளது.

ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரில் புகழ்பெற்ற சிவாலயம் உள்ளது. இதில் வீற்றிருக்கும் பெருமானின் பெயர் வைத்தீசுவரர் என்பதாகும். இவரைக் கல்வெட்டுகள் படிக்காசு வைத்தருளிய நாயனார் என்று குறிக்கின்றன.

நெடுங்காலத்திற்கு முன்பு நாகநம்பி என்பவர் இங்கே



புகழ்த்துணையார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அர்ச்சராக இருந்தார். மிகுந்த அன்புடன் நாளும் சிவபெருமானைப் பூசித்து மகிழ்ந்தார். மெலிந்த உடலும் உறுதியான உள்ளமும் கொண்டவர். ஒரு சமயம் இப்பகுதியில் பஞ்சம் தலைவிரித்தாடியது. அப்பஞ்சம் நம்பியாரையும் வாட்டியது. பல நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது.

என்றாலும் தளராத உள்ளத்துடன் அவர் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் சிவனை நீராட்டிக் கொண்டிருந்த வேளையில் பசி மயக்கத்தால் குடத்துடன் சிவலிங்கத்தின் மீது விழுந்து விட்டார்.

சிவபெருமான் அவரிடம் தினமும் படியில் ஒரு காசு வைக்கின்றேன். அதை எடுத்து விற்றுப் பூசைகளைச் செய்துவருக என்று அருளிச் செய்தார். அதன்படியே தினமும் காசு வைத்தார்.அதையொட்டியே படிக்காசு வைத்த தம்பிரான் என்று அழைக்கப்படுகிறார்.

நம்பியார் தினமும் இறைவன் அளித்த காசை எடுத்துச் சென்று வியாபாரியிடம் கொடுத்து வந்தார். அவன், அது மாற்றுக் குறைவானதென்று கூறி குறைவாகப் பணம் கொடுத்தான். இறைவன் அவனுக்கு நேரில் வந்து பாடம் புகட்டியதாகக் கூறப்படுகிறது. இவ்வூருக்கு அருகில் படிக்காசு வைத்தான் பட்டி என்னும் ஊர் உள்ளது.

சிவாசாரியர்களுக்குப் படிக்காசு அருளியதைப் போலவே சிவாசாரிய குலப் பெண்களில் சிலருக்கும் பெருமான் காசளித்து அருள் பாலித்ததைக் காண்கிறோம். கீழ்வேளூரில் நடைபெற்ற அத்தகைய வரலாறு ஒன்றை இங்கே காணலாம்.

கீழ்வேளூர் எனும் தலத்தில் மிகுந்த பக்தியும் அன்பும் மிக்க சிவாசாரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் அவர் வடநாட்டிற்கு யாத்திரை மேற்கொண்டார். அவருடைய மனைவி சிக்கனமாகச் செலவு செய்து வந்த போதிலும் சில காலத்தில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. அவள் பெருமானிடம் வந்து நின்று தம்முடைய வறுமையைப் போக்கி அருளுமாறு வேண்டினாள். பெருமான் அவளிடம் தினமும் பலிபீடத்தில் ஒரு பொற்காசினை வைத்து எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். அதன்படியே காசு பெற்ற அவள் வளமாக வாழ்ந்து வந்தாள்.

அவளுடைய வளமையைக் கண்டு உறவினர் பொறாமை கொண்டனர். பல நாட்கள் கழிந்தபின் கணவன் ஊர் திரும்பினான். அவனிடம் உறவினர்கள் உனது மனைவி தகாத வழியில் சென்று வளமாக வாழ்ந்தாள் என்றனர். அதைக் கேட்டு அவன் வருந்தினான். மனைவியிடம் உண்மை யென்ன? என்று கேட்டான்.

அவள் நேரே சிவபெருமானிடம் சென்று உண்மையை உரைத்து தமக்கு அருள்புரியுமாறு வேண்டினாள். பெருமான் விண்ணொலியாக நடந்ததைக் கூறியதுடன், அவதூறு கூறிய உறவினர்களை அழித்து வரும்படி தமது மழுவை வீசினார். அது கரகரவென்று சுழன்று ஓடி தீமை செய்த உறவினர்களை அழித்தது. அது சென்றபோது நந்தியம்பெருமான் சற்று விலகிவழிவிட்டாராம். அவர்அதே கோலத்தில் இன்றும் இருப்பதை இத்தலத்தில் காணலாம்.

இதுபோன்று பல வரலாறுகளை ஆங்காங்கே காணமுடிகிறது.

## ஆசாரிய இலக்கணம்

வேதங்கள், அவற்றின் அங்கங்கள், பலவித மான மந்திர சாஸ்திரங்கள், தந்திர சாஸ்தி ரங்கள், முத்திரைகள், கிரியைகள், சிற்பசாஸ்திரங்கள், அவற்றில் மறைத்துக் கூறப்பட்டுள்ள இரகசியங்கள் என்னும் இவற்றை அறிந்தவராயும், ஒழுக்க முடையவராயும், நற்குணமுடையவராயும்,இனிய வாக்கு உடையவராகவும் நல்ல வடிவமுள்ளவராயும், மங்களத்தைச் செய்பவராயும் இருக்கிற ஆதி சைவரை ஆசாரியரெனப் பெரியோர் கொள்கின்றனர்.

தத்துவ ஞானத்துடன் கூடியவராயும், ஆறு அத்துவாக்களின் உண்மைகளை உணர்ந்து சிந்திப்பவராயும், பரதசாஸ்திரம், அஷ்டாங்க யோகம் என்னுமிவற்றை அறிந்தவராயும், சிவஞானத்தை உபதேசிப்பவராயும், ஆசாரியாபிஷேகத்தால் சுத்தமான ஆன்மாவை உடையவராயும், சோதிட சாஸ்திரங்களைக் கற்றவராயும், வாக்குப் பிரசாதத்தால் சுபத்தைச் செய்பவராயும் உள்ள ஆதிசைவர் ஆசாரிய சிரேஷ்டரென்று நூல்களிற் கூறப்பட்டுள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாசாரியார்களின் பல்வேறு பட்டப் பெயர்கள்

திருக்கோயில்களில் இறைவனைத் தொட்டுப் பூசிக்கும் உரிமை பெற்றவர்கள் ஆதியில் திருமேனி தீண்டுவார் என்று அழைக்கப் பட்டனர். சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களை முப்போதும் திருமேனி தீண்டுவார் என்று சிறப்பித்துள்ளார். கேரளாவில் இறை வனைத் தொட்டு அருச்சனை புரிபவர்கள் " திருமேனி கள்" என்று இப்போதும் நடைமுறையில் அழைக்கப்படுகின்றார். தமிழ்நாட்டில் இவர் கள் அருச்சகர், சிவாச்சாரியார், பட்டர் என்று பலவாறு பட்டப்பெயரிட்டு அழைக்கப்படு கின்றனர். கல்வெட்டுகளில் சிவப்பிராமணர், மகேசுவரர், பட்டுடையார் என்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் சில பட்டப் பெயர்களின் விளக்கத்தைக் காண லாம்.

## அர்ச்சகர்கள்

சிவவழிபாடு செய்வதை அர்ச்சனை என்று அழைப்பர். அம்பிகை சிவபெருமானை வழிபட நினைந்து அவரை வேண்டுவதை ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனை புரிய பொங்குகின்றதென் ஆசை என்று பெரிய புராணத்தில் கூறிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அர்ச்சனை என்பது சிவ வழிபாட்டைக் குறிக் கும் சொல்லாக இருப்பதை இதன்மூலம் அறிகி றோம்.

சிவவழிபாட்டை, சிவபெருமான் வாயி லாக அருச்சனை பாட்டேயாகும். என்று சுந்தரர் வரலாற்றில் சேக்கிழார் கூறுகின்றார். ஆதலின் சிவவழிபாட்டைச் செய்யும் அந்த ணர்கள் அருச்சகர் எனப்பட்டனர். இந்நாளி லும் ஆலயப் பணிபுரிபவர்களை அருச்சகர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கின்றோம். இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அர்ச்சனா போகம் என்றழைக்கப்படுகிறது. இவர்கள் கூட்டமைப்பு ஆலய அர்ச்சகர் சங்கம் என்று பெயர் பெற்றுள்ளது.

## மாகேசுவரர்கள்

அருச்சகர்களில் மாகேசுவரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சிவபெருமான் உருவம் அற்ற நிலையில் இருந்து அருவுருவ நிலை யான லிங்க வடிவாகத் தோன்றி அருள்பாலித் ததுடன் உருவம் தாங்கியும் அருள்பாலிக் கிறான். அவ்வுருவங்கள் மாகேசுவரவடிவங் கள் எனப்படுகின்றன. அவ்வடிவங்களில் மனதைப் பதித்து வழிபடுபவர்கள் மாகேசு வரர்கள் எனப்பட்டனர். ஆலயங்களில் மூலவராக லிங்கத்தைத் தவிர உருவமாக அருள்பாலிக்கும் வடிவங்களைப் பூசித்த அர்ச்சகர்கள் மாகேசுவரர்கள் எனப்பட்டனர் என்று சிலர் கூறுகின்றனர். அவர்களுக்குத் தலைமை தாங்கிக் கண்காணித்தவர்கள் மாகே சுவரக் கண்காணிகள் எனப்பட்டனர்.

கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நன்கொ டைகளை இவர்கள் பரிபாலித்து வந்ததுடன் அனைத்து வழிபாடுகளையும் நடத்தி வந்த தாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கல் வெட்டுகளின் முடிவில் இது பன்மாகேசுவர ரக்ஷை என்று இவர்கள் பெயரால் அந்த தர்மத்திற்குக் காப்பும் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் ஆலயங்களில் நிலையாகத் தங்கியிருந்ததுடன், அருகிலுள்ள கோயில் களில் விழாக்கள் நடக்கும் வேளைகளில் அங்கு சென்று தொண்டாற்றினர்.

திருக்கோயில்கல்வெட்டுக்களில் மாகேசு வரர்களைப் பற்றிய குறிப்புகள் நிறையவே உள்ளன.

## பட்டர்

தென்மாவட்டங்களில் அருச்சகர்களை பட்டர் என்று அழைக்கின்றனர். வைணவ ஆலயங்களில் அருச்சகர்கள் தம்மை பட்டர் அல்லது பட்டாசாரியார்கள் என்று அழைத் துக் கொள்கின்றனர். பட்டன் என்பது பட்டறிவு உடையவன் (அனுபவ ஞானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடையவன்) என்பதைக் குறிக்கின்றது. சிவபெருமானை ஆலநீழல் பட்டனே என்று தேவாரம் அழைக்கிறது. அதையொட்டி இவர்கள் பட்டர்கள் எனப் பெயர் பெற்றனர்.

மதுரை மீனாட்சியம்மன் முதலான ஆலயங்களில் பூசித்து வரும் அருச்சகர்கள் பட்டர் என்று அழைத்துக்கொள்கின்றனர். இவர்களைத் தலையில் தலைப்பாகை நீண்ட அங்கவஸ்திரம் ஆகியவற்றை அணிந்து பூசிக்கும் வழக்கம் இருந்தது. இந்நாளில் முக்கியமான திருவிழாக்களில் மட்டும் இவற்றை அணிகின்றனர்.

திருவண்ணாமலை ஆலயத்திலும் அண்ணாமலையாரைப் பூசிப்பவர்கள் பட்டால் சரிகை வைத்து தைத்த கிரீடங்களை அணிந்து கொண்டு பூசிக்கும் வழக்கம் இருந்தது என்பர். இந்நாளில் ரிஷபவாகனக் காட்சியன்றும் சில விழாக்களில் மட்டும் கிரீடம் உருத்திராக்க கண்டிகை அணிந்து வாகன பீடத்தில் அமர்ந்து ஆச்சாரியார்கள் பவனி வருகின்றனர்.

## (சிவவேதியர்கள்) சிவமறையோர்

இச்சொல் இப்போது வழக்கில் இல்லை பெரியபுராணத்தில் சேக்கிழார் ஆலயத்துள் அருச்சனை புரிந்துவந்த முருகனாயனாரை ஞானமறையோர் குலமரபின் வந்தார் என்று போற்றுகின்றார். திருநீலநக்கரைப் போற்றும் வேளையில் மங்கல மறையவர் என்றும் திருமறையோர் என்றும் குறிக்கின் றார். ஆலய அர்ச்சகர்களைச் சிவமறையோர் என்று கொள்ளும் வழக்கம் இலக்கியங்களில் மட்டும் ஆங்காங்கு உள்ளது.

## சிவப்பிராமணர்கள்

சிவநெறி வந்த அருச்சகர்கள் பல இடங்களில் சிவப்பிராமணர் என்று தம்மைக் குறித்துக் கொண்டனர். கல்வெட்டுக்களில் இச்சொல் அதிகம் பயிலப்பட்டுள்ளது. வேதவழி வந்த பிராமணர்கள் சுமார்த்த (சுருதி: வேதம் அதன் வழிவந்தவர்கள்) பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆகமநெறி வந்த அந்தணர்கள் தம்மைச் சிவப்பிராமணர்கள் என்று அழைத்துக் கொண்டனர். இவர்களே ஆலயத்தை நிர்வாகம் செய்துவருகின்றனர். ஆலயத் திற்கு அளிக்கப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக் கொண்டு முறையாக நடத்துவோம் என்று உறுதி கூறும் கல்வெட்டுகளில் இக்கோயில் சிவப்பிராமணரோம்என்று குறித்துள்ளதைக் காணலாம்.

## நம்பியார்கள்

நம்பி என்ற சொல்லுக்கு அழகன் என்பது பொருள். ஆகம அறிவு நிறையப் பெற்று சிவயோக சாதனையால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அருச்சகர்கள் நம்பிமார் என்று அழைக்கப்பட்டனர். திருவாரூர் முதலிய தலங்களில் உள்ள சிவாலய அருச்சகர்கள் நம்பிமார் என்று அழைக்கப்படுகின்றனர். திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள் ஆலயத்தில் பணிபுரிந்துவந்த நம்பிமார் வம்சத்தவர். நம்பிமார் என்பது நம்பியார் என்று மருவி விட்டது.

## நாயகர்

நாயகன் என்பதற்குத் தலைவன் என்ற பொருள். சிவபெருமானைப் போற்றிக் குறிப்பிடும் வகையில் பள்ளியறை நாயகர், பிரதோஷ நாயகர் என வழங்குகின்றனர். சோமாஸ்கந்த மூர்த்திக்கு இமையவர் நாயகன் (தேவர்களால் துதிக்கப்படுபவர்) என்பது பெயர். திருவிடைமருதூரிலுள்ள சோமாஸ் கந்தர் ஏகநாயகர் என்று அழைக்கப்படுகிறார். திருமுறைகள் அவரை ஆதிநாயகன், பூதநாயகன், வேதநாயகன் என்று பலவாறான பெயர்களால் அழைக்கின்றது. இதையொட்டி உற்சவரான சோமாஸ்கந்தரைப் பூசிப்பவர்கள் நாயகர் எனப்பட்டனர்.

காஞ்சிபுரத்தில் சோமாஸ்கந்தரைப் பூசித்து வந்தவர்களுக்கு நாயகர் பட்டம் வழங்குகிறது. இதற்கு வேறு காரணம் ஒன்றும் கூறப்படுகிறது. இவர்களின் முன்னோர்கள் அரசியலில் ஈடுபட்டு சாளுவ திம்மப்ப நாயக்கன் என்பவர் பட்டத்துக்கு வர துணை நின்றனர். அவன் பட்டத்துக்கு வந்ததும், இவர்க

தொடர்ச்சி அடுத்தபக்கத்தில்...



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஸ்ரீ கண்டர்

சிவபூசைக்குரிய அனைத்துச் செய்திகளையும் விளக்கமாகத் தரும் நூல்கள் சிவாகமங்கள். இது குரு, சீடர் என்னும் வழியில் பரம்பரை பரம்பரையாக போதிக்கப் பட்டு வருகிறது.

சிவபெருமான் சதாசிவமூர்த்தியாகக் கோலம் தாங்கித் தாமரை மலர்ப்பீடத்தில் எழுந்தருளி இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளினான் .இதைப் பலர் பலவிதமான நிலையில் நின்று கேட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இப்படிக் கேட்டு மற்றவர்களுக்கு உபதேசித்த, அனந்தர், ஸ்ரீகண்டர் அம்பிகை, முருகன், விஷ்ணு, பிரம்மா ஆகிய அறுவரோடு இவர்களுக்கு குருவாக விளங்கிய சதாசிவரையும் சேர்த்து ஏழுகுருமார்களாகக் கொண்டாடும் வழக்கம் உள்ளது, இவர்களை சப்தகுருமார்கள் என்பர்.

தெய்வங்களை வணங்கத் தொடங்குவதற்கு முன்பாக, தமக்கு ஞானத்தைப் போதித்து நன்னெறியில் ஈடுபடுத்திய குருமார்களை வணங்குவது தொன்று தொட்டு இருந்து வரும் முறையாகும்.

இவ்வகையில் சிவபூசை செய்பவர்கள் மேலே குறித்த ஏழு குருமார்களை வணங்குகின்றனர். இவர்களை முறையே சதாசிவகுரு.அனந்தேசகுரு,ஸ்ரீகண்டகுரு,.அம்பிகா குரு,குமார குரு, விஷ்ணுகுரு, பிரம்மா குரு என அழைக்கின்றனர்

சிவபூசையின் தொடக்கத்தில் ஏழு மலர்களை இட்டு இவர்களை வணங்குகின்றனர். இதில் ஸ்ரீகண்டர் என்னும் குருவே உலகில் ஆகம ஞானத்தைப் பரப்பியவர் என்று கருதுகின்றனர். இவரைச் சிவபெருமானின் குருவடிவம் என்பர். சிவாசாரியார்களான ஆதிசைவர்களுக்குப் பரார்த்த பூசை செய்ய அதிகாரம் வழங்கியதும் இவரேயாவர்.சைவ மடங்களும் சைவ சித்தாந்தத்தை அருளிச் செய்த ஆதி குருவாக ஸ்ரீகண்டரைக் குறிக்கின்றன.

தஞ்சைப் பெரிய கோயிலில் ப்ருத்வி மகாதேவி என்பவள் ஸ்ரீகண்டமூர்த்தியின் திருவுருவத்தை எழுந்தருளி வைத்துடன் பூஜைக்கு வேண்டிய நிவந்தங்களையும் ஏற்படுத்தினாள் என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

பரந்துபட்ட ஆகம நூல்களில் இருந்து பூசைக்குவேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துப் பத்ததி நூல்களை உருவாக்கிய ஆசாரியர் ஒருவரும் ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் என்றழைக்கப்படுகிறார். இவர் இயற்றிய பத்ததி ஸ்ரீ கண்ட பத்ததி எனப்படும்.. சில தலங்களில் இவர் திருவுருவம் எழுந்தருளி வைக்கப்பட்டு பூசிக்கப் படுகிறது. காஞ்சிபுரம் ஏகாம் பரநாதர்ஆலயத்தில் ஸ்ரீகண்டரின் அழகிய உலாத் திருமேனி உள்ளது.தைமாதத்தில் அவருக்குச் சிவாசாரியர்கள் விழா நடத்துகின்றனர்.

சென்னை திருவேட்டீசுவரன் பேட்டையிலும் மூலவராக ஸ்ரீகண்டசிவாசாரியார் எழுந்தருளியுள்ளார்

.....முன் பக்கத் தொடர்ச்சி

ளுக்கு சாளுவ நாயக்கன் என்ற பட்டத்தைப் பெயருடன் சேர்த்துக் கொள்ளும்படி அனுமதியளித்து அரசியல் செல்வாக்கையும் அளித்தான். அதுமுதல் இவர்கள் சாளுவ நாயக்கர் என்ற பட்டத்தைத் தரித்து வருவதாகக் கூறுகின்றனர்.இதுபோன்று தீக்ஷிதர், நயினார் முதலான பல்வேறு பட்டப் பெயர்களை சிவாலய அர்ச்சகர்கள் சூடியுள்ளனர். இந்தப் பெயர் ஆய்வு பல்வேறு வரலாறுகளைத் தெரிவிப்பதாக அமைகிறது..



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாசாரியர் தரும் விபூதி

சிவாசாரியார்கள் விபூதி தரித்தவர்கள். சிவபெருமானின் அருளை (பரையின்-பராசக்தியின் வண்ணமாக) விபூதி வடிவில் அன்பர்களுக்கு அளிப்பவர்கள். அவர்களுக் குரிய பொருட்களில் விபூதிப்பை என்கிற பொக்கணமும் ஒன்று. அதை மான்தோலால் செய்திருப்பர். இந்நாளில் பட்டுத் துணியால் ஆன பையை வைத்திருக்கின்றனர். தில்லை தீக்ஷிதர்கள் வெள்ளியாலான சம்புடத் தை வைத்திருக்கின்றனர்.

ஒழுக்கமும் மேன்மையும் கொண்டவ ராகவும் சிவபெருமானைத் தொட்டு பூசிக்கும் பேறு பெற்றவர்களுமாகிய சிவாசாரியார் களைச் சிவமாகவே பாவித்து வணங்கி அவர் களிடம் பிரசாதமாக விபூதி பெற்றுக் கொள் வது வழக்கம்.

சிவபெருமானே அடியவர்களுக்குச் சிவா சாரியார் வடிவில் சென்று திருநீறு அளித்ததைப் பலருடைய வரலாற்றில் காண்கிறோம். அதிலொன்றை இங்கே காணலாம்.

திருவிடை மருதூருக்கு வடக்கே உள்ள தலம் திருவிசைநல்லூர். இங்கு ஸ்ரீதர ஐயா வாள் என்னும் பரம சிவபக்தர் வாழ்ந்து வந்தார். இவருக்காக கங்கை இவருடைய தோட்டத்துக் கிணற்றில் பொங்கி வந்து அருள் பாலித்ததாக வரலாறு கூறுகிறது. இவர் தினமும் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி யை வணங்கி ஊருக்குத் திரும்புவது வழக்கம். ஒரு சமயம் கடும் மழை பெய்து காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அவரால் பூசைக்கு வரமுடிய வில்லை. உள்ளம் வருந்திச் சோர்ந்தார்.

அவ்வேளையில் சிவாசாரியார் அங்கே வந்தார். கொட்டும் மழையில் முழுவதுமாக நனைந்திருந்தார். அவர் ஸ்ரீதர ஐயாவாளிடம் புஷ்பத் தை அளித்து விபூதி அளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட ஐயாவாள் மகிழ்ச்சி அடைந்தார். ஆச்சார்யார் ஈரத்தை மாற்றிக் கொள்ள புதிய துணிகளை அளித்ததுடன் ஒரு சால்வையை அவருக்குப் போர்த்தினார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவர் விடைபெற்றுக்கொண்டார்.

மறுநாள் வெள்ளம் வடிந்தது. ஐயாவாள் கோயிலுக்கு வந்தார். இரவு தமது இல்லத்திற்கு வந்த சிவாசாரியாரைக் கண்டு முதல் நாள் இரவு தமது இல்லத்திற்கு வந்து விபூதி அளித்ததற்கு நன்றி தெரிவித்தார். அதற்குச் சிவாச்சாரியார் தாம் கடும் மழையால் வெளியே வரவில்லை என்று கூறினார். அதைக் கேட்ட ஐயாவாள் வந்தது யாராக இருக்கலாம் என எண்ணி யவாறே அவ்விடம் விட்டுக் கோயிலுக்குள் சென்றார்.

ஆலயத்துள் சென்று அவர் மகாலிங்க சுவாமியை வழிபட்டார். முதல் நாள் இரவு தாம் சிவாசாரியாருக்குப் போர்த்திய சால்வை சிவலிங்கத்தின் மீது இருக்கக் கண்டார். மனம் உருகி வழிபட்டார். வந்தவர் சிவபெருமானே என உணர்ந்தார்.

கடும் மழையில், காவிரியில் வெள்ளம் புரண்டு ஓடும் போது எப்படி சிவாசாரியார் தமது வீட்டிற்கு வந்திருக்க முடியும்? என நாம் யோசிக்கவில்லையே அப்படி யோசித்திருந் தால்வந்தவர் சிவபெருமானே என்பதை அறிந்து சிக்கெனப் பிடித்திருக்கலாமே என எண்ணி பெருமானின் கருணையை வியந்தார்.

இப்படி அனேகருக்குச் சிவபெருமான் சிவாசாரியார் வடிவில் சென்று விபூதி அளித்து அருள்பாலித்ததைக் காண்கிறோம்.

சிதம்பரத்தில் அன்றைய தினத்தில் பூசை செய்யும் தீக்ஷிதரை நடராஜராகவே போற்றி அவரிட மிருந்து விபூதி பெற்றுக்கொள்கின்றனர். இதற்கு முறைக்காரர் விபூதி என்பது பெயர்.

---

அறுபத்து மூன்று நாயன்மார்களின் தேவாரத்தை அருளிச்செய்த சுந்தரர் அவரது தாய்தந்தையரான சடையனார், இசைஞானியார், படிக்காசு பெற்ற புகழ்த்துணையார் ஆகிய நால் வரும்சிவாச்சார்ய மரபில்வந்தவர்களாவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சமய இலக்கிய வரலாற்றில் சிவாசாரியார்கள்

அருச்சகர்கள் வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

சமய ஆதிநூல்களான ஆகமங்களுக்கு பல உரை நூல்களை ஆதிசைவர்களான சிவாசாரியார்கள் எழுதியுள்ளனர். அவை யாவும் கிரந்த எழுத்தில் வடமொழியில் அமைந்துள்ள்ன. அவற்றில் அகோர சிவாச்சாரியார் எழுதியுள்ள கிரியாகிரமத்ஜோதி முதலியவை தனிச்சிறப்புடன் திகழ்கின்றது

கச்சியப்பர் ஓலைச்சுவடி வைத்தல்

ஆதி சைவ மரபில் வந்த அகோர சிவாச்சாரியார் சிதம்பரத்தில் வசித்து வந்தவர். இவர் அகோர பத்ததி என்னும் நூலை எழுதி யுள்ளார். அந்தபத்ததியே சித்தாந்த சைவர் களால் பரத கண்டத்தில் கையாளப் படுகிறது.

இலங்கையில் வாழ்ந்த பல ஆதிசைவர்கள் பல பூஜா விளக்க நூல்களை எழுதியளித்துள்ளனர்.

தமிழ் இலக்கியங்களில் அவர்களின் பங்களிப்பு குறைவானதே என்றாலும் குறிப்பிடத்தக்க மேன்மை பெற்றுள்ளன.

சைவத் திருமுறைகளில் ஏழாவது திருமுறையை அருளிச் செய்த தம்பிரான் தோழரானசுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆதிசைவ நன் மரபில் வந்தவர். அவருடைய குலப் பெருமையை விளக்கும் வேளையில் சேக்கிழார் பெருமான், அருமறைச் சைவம் ஓங்க அவதரித்த வாய்மை குன்றாத் திருமறையவர்கள் குலம் என்றும், மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர்குலம் என்றும் குறிக்கின்றார்.

திருமுறைகளைத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள் அருச்சகர் குலத்துதித்தவர். அவர் விநாயகர் மீதும் சிவபெருமான் மீதும் பல நூல்களை இயற்றியுள்ளார்.

காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டம் என்னும் முருகனாலயத்தில் அருச்சகப்பணி புரிந்து வந்தவரான கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழ்க் காவியங்களில் ஒன்றான கந்த புராணத்தைஎழுதிப் பெருமை பெற்றிருக்கின்றார்கள். அந்நூலை முருகப் பெருமானே தம் கைப்பட பிழையற திருத்தினான் என்றும், அதன் அரங்கேற்ற வேளையில் தடைநேர்ந்த போது புலவனாய் வந்து விளக்க மளித்து உதவினான் என்றும் வரலாறு கூறுகிறது. இது மிக வுயர்ந்த தமிழ்க் காவியமாகப் போற்றப் படுகிறது.

திருத்துறையில் ஆதிசைவக் குலத்தில் பிறந்து "சகலாகம பண்டிதர்" என்ற சிறப்புப் பட்டத்துடன் வாழ்ந்தவர் அருள் நந்தி சிவாச்சாரியார். முதலில் மெய்கண்டசிவத்தின் குலகுருவாக விளங்கி, அவருடைய ஞான நிலையை உணர்ந்து அவரது தலைமைச் சீடரானவர். இவர் இயற்றிய நூல்கள் சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படும் சிவஞான சித்தியாரும். இருபா இருபஃதும் ஆகும்.

இவரை அடியொற்றிவந்த உமாபதி சிவனார் தில்லைவாழ் அந்தணர் தம் மரபில் வந்தவர். குலமரபுகளை ஆச்சார்ய பக்தியின் காரணமாக மீறியதால் குடியிலிருந்து விலக்கப்பட்டு கொற்றவன்குடி எனுமிடத்தில் தங்கியிருந்தார். சிவபெருமானின் திருவருளால் நிறையப்பெற்ற இவர் சித்தாந்த அட்டகம் என்னும் சித்தாந்த நூலை இயற்றியுள்ளார். இவை எட்டும் சைவசித்தாந்தச் சாத்திரங்களாகப் போற்றப்படுகின்றன.

தென் மாவட்டங்களில் பல சிவாச்சாரியார்கள் அருமையான தமிழ்ப்புலவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்களைப் பற்றிய விரிவான குறிப்புக்களை அறியமுடியவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாசாரியர்களும் திருமடங்களும்

சைவ சமய வரலாற்றில் திருமடங்கள் முக்கிய மான இடத்தைப் பெற்றுள்ளன. ஞான பீடங்களாக அவை போற்றப்படுகின்றன. பூஜாபத்தி நூல்களில் பல ஆதிசைவ மடங்கள் இருந்தது பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன.

ஆதியில் நான்கு புகழ்பெற்ற சைவாசாரிய திருமடங்கள் இருந்தன. பரதகண்டத்தில் துர்வாச முனிவரால் ஆமர்த்தக மடம் நிறுவப் பட்டது. அதிலிருந்து காசிபர், கௌசிகர் முதலான ரிஷிகள் ஸ்ரீகண்டரை உபாசித்து ஆகம ஞானம் பெற்றனர். இம்மடத்தில் வீற்றி ருந்த தட்சிணா மூர்த்தியிடம் உபதேசம் பெற்ற சனகாதியர் நால்வரும் தனித்தனி மடங்களை அமைத்தனர்.

சனத்குமாரர் மேற்குறித்த ஆமர்த்தக மடத்திலிருந்தார். சனந்தனர் ரணபத்திர மடத்தையும், சனாதனர் கோளகி மடத்தை யும், சனகர் புஷ்பகிரி மடத்தையும், ஸ்தாபித் தனர். இவை நான்கும் கோதாவிரி தீர்த்தத்தில் மந்திர காளீயம் என்ற நகரைச் சூழ்ந்திருந்தன. இவற்றிலிருந்து அனேக கிளைகள் உண்டாகித் தனி மடங்களாயின. இந்தப் பகுதிக்கு அந்தர் வேதி என்பது பெயர்.

இவர்கள் ஆகம வழியில் வந்தவர்களா யினும், வேதங்களையும் ஏற்று புதுநெறி படைத்தனர். இவர்களின் வழிவந்தவரில் ஒரு லட்சம் பேரை ராஜேந்திர சோழன் கொண்டு வந்து சோழநாட்டில் குடியேற்றினார் என்பர். இவர்கள் இங்கே பல மடங்களை நிறுவினர். இவை ஆகமம், வேதம் ஆகிய இரு நிலையை யும் கைக்கொண்ட மடங்களாகும்.

அகோரசிவாச்சாரியர்களின் பத்ததியில், 1.ஸ்ரீ கைலாசமடம், 2.பௌண் டாரக மடம் 3.வலாக மடம்,4.கற்பக்கிராய மடம், 5.பத்ரீ மடம் 6.தேவாருவன மடம், 7.கர்ந்தர்ப்ப மடம் 8.உத்ராண்ய மடம் 9.தக்ஷிணா ரண்ய மடம்,10.கோவிதார மடம் 11.ஆமந்தக மடம் 12.மத்தமடம் 13.மாயூர மடம் 14.ரண பத்திர மடம் 15.சோழக மடம் என்பன குறிக்கப் பட்டுள்ளன.

தென்னகத்தில் சிவாசாரியார்களில் ஞானத்தால் முதிர்ந்தவர்கள் திருமடங்கள் அமைத்து அங்கு ஞானசாரியார்களாக வீற்றி ருந்து மக்களுக்கு உபதேசம் செய்து வந்தனர். இவர்கள் துறவறம் பூண்பதோ காவி உடை உடுப்பதோ இல்லை. முதிர்ந்த இல்லறத்தில் நிலை நின்றவாறே ஆதீன கர்த்தர்களாக விளங்கி வந்துள்ளனர்.

சிவாசாரியார்கள் ஆதிசைவ இனத் தின ருக்கு மட்டுமின்றி பல்வேறு இனத்தினர் களுக்கும் ஆசாரியர்களாக இருந்து வந்துள் ளனர். அந்த இனத்தவர்களுக்குரிய திருமடங் களில் மடாதிபதிகளாக வீற்றிருந்து ஞானத்தை உபதேசித்துள்ளனர். திருவெண்ணை நல்லூ ரில் அரசு செலுத்தி வந்த வேளாள ரான அச்சுத களப்பாளருக்கு அருள்நந்தி சிவாசாரி யார் குலகுருவாக இருந்ததும், அவர்கள் மகப் பேறு வேண்டி வந்து ஆலோசனை கேட்ட போது தேவாரத்தில் கயிறுசார்த்திப் பார்த்து உரிய வழி கூறியதும் இங்கே எண்ணத் தக்கதாகும்.

இவர்கள் அமைத்த திருமடங்கள் நூற்றுக் கணக்கில் இருந்துவந்தன. பின்னாளில் காலமாற்றத்தாலும் காவியுடுத்த துறவிகளே மடாதிபதிகளாக இருக்க வேண்டுமென்ற கொள்கை பரவியதாலும், இம்மடங்கள் படிப் படியாகச் செல்வாக்கிழந்துவிட்டன. எடுத்துக் காட்டாக திருவாலங்காட்டில் தரும சிவாச் சாரியார் மடம் எனப்படும் திருமடம் ஆதிசைவ சிவாச்சாரியாரை முதல்வராகக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டிருந்தது. இதற்கு ஆயிரம் வைஸ்யர் எனப்படும்செட்டிமார்சீடர்களாக இருந்தனர்

இம்மரபினர் தங்கள் குருமார்கள் சந்நியாசம் மேற்கொண்டு காவியுடுத்து தண்டு கமண்டலம் ஏந்தியவர்களாக இருக்க வேண்டு மென்று வற்புறுத்தினர். அதற்குக் குருமார்கள் ஆகம சைவ சமயத்தில் தங்களுக்கு சந்நியாசத் திற்கு இடமில்லை என்பதால் அதற்கு வழி யில்லை என்று கூறிவிட்டனர். செட்டியார் கள் குருவை விலக்கி விட்டு சுமார்த்த சந்நி யாசி ஒருவரை குருவாகப் பீடமேற்றினார் என்றாலும், தம்மை தரும சிவாச்சாரியாரின் சீடர்கள் என்றே இப்போதும் அழைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு பல மடங்கள் சிவா சாரியார்களிடமிருந்து கை நழுவிவிட்டன.

இப்போது ஆதிசைவரை ஆதிகுருவாக வும் வழிவழியாக அவ்வினத்து ஆச்சாரியர் களைக் கொண்டிருப்பதுமாக சில மடங்களே உள்ளன. அவற்றில் கோவை மாவட்டத்தில் விஜயமங்கலத்துக்கு அருகிலுள்ள கூனம்பட்டி யில் விளங்கிவரும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி கள் ஆதீனம் முதன்மை பெற்றதாகும்.

இம்மடத்தை நிறுவியவர் திருச்சி மாவட் டத்திலுள்ள வாட்போக்கி (இரத்தினகிரி) யில் வீற்றிருக்கும் மாணிக்கவரதரைப் பூசித்துவரும் ஆதிசைவ மரபில் வந்த ஸ்ரீமத் மாணிக்கசாமி என்பவராவார். இவர் சமயக்குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமி களுக்கு அணுக்கத் தொண்டராக இருந்து அவரிடம் ஞான உபதேசமும் சிவபூசையும் பெற்றுக் கொண்டு இரத்தினகிரிக்கு வந்து இந்த மடத்தை நிறுவினார் என்கின்றனர்.

பின்னர் அவிநாசிக்கு இடம் பெயர்ந்து அங்கே இருந்து சிலகாலம் செயல்பட்டது. இப்போது கூனம்பட்டியில் நிலைபெற்று நிலையான சமயப்பணி புரிந்துவருகிறது. திருக்கயிலாய பரம்பரை கல்யாணபுரி ஆதீனம் எனப்படும் இந்த ஆதினத்தில் இப்போது 57- ஆம் பட்டத்தில் குருமகா சந்நி தானமாக ஸ்ரீஸ்ரீ ராஜலிங்க சரவண மாணிக்கவாசகசுவாமிகள் அமர்ந்து ஞானச் செங்கோலோச்சிவருகின்றார்கள். இம்மடத் தின் வழிபடு கடவுளாக இரத்தின கிரீசரும் ஞான முதல்வராக ஸ்ரீமத் மாணிக்கவாசகப் பெருமானும் போற்றப்பட்டு நித்திய பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை கோமளீசுவரன் பேட்டையில் சீர்காழி சட்டநாதசுவாமிகள் மடம் என்னும் பெயரில் ஆதிசைவ சிவாச்சாரியாரைத் தலை வராகக் கொண்ட மடம் இருந்து வருகிறது. இம்மடத்தின் சீடர்கள் அச்சிறுபாக்கம் மளிகை வர்த்தக செட்டியார் சமூகத்தவராவர். இவர்கள் இம்மடத்திற்கு வந்து பூணூல் போட்டுக் கொள்வதுடன் உபதேசம் பெற்றுக் கொள்கின்றனர். இம்மடம் ஆதியில் சீர்காழி யில் இருந்ததென்றும், பின்னர் பல இடங் களில் இருந்து செயல்பட்டு 200 ஆண்டு களுக்கு முன் சென்னைக்கு வந்து நிலை பெற்றது எனவும் கூறுகின்றனர். இம்மடத்தின ரின் வழிபடு கடவுள் காமாட்சி அம்பிகை உடனாய அகத்தீசுவரர் ஆவார்.

ஆதிசைவர்களை மடாதிபதிகளாகக் கொண்டிருந்த அநேக திருமடங்கள் கால வெள்ளத்தால் சிறப்பு குன்றிக் கண்டறியப் பட முடியாமல் உள்ளன. இவற்றைக் கண்ட றிந்து மேன்மைப்படுத்த வேண்டியது அனை வரின் கடமையாகும்.

## காலாண்டார் மடம்

காஞ்சிபுரத்தில் காலாண்டார் தெரு என்னும் பெயரில் தெரு ஒன்று உள்ளது. காலாண்டார்கள் எனப்படும் ஆதிசைவர்களின் மடம் ஒன்று இத்தெருவில் இருந்ததால் இப்பெயர் பெற்றதென்பர். இவர்கள் வைரவமூர்த்தியை உபாசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு ஏகாம்பரேசுவரர், காமாட்சியம்மன் ஆலயங்களில் கால்பங்கு (நான்கில் ஒரு பகுதி ஆளுமை இருந்ததால் காலாண்டார்கள் என அழைக்கப்பட்டனர் என்பர். இவர்களை வடமொழியில் சாதுர்பாக மிராசுதாரர்கள் என்று அழைக்கின்றனர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

## சிவசாரிய குலப் பெண்கள்

ஆகமவழிவந்த சிவாசாரிய குலப் பெண்களும் ஆகம வழிகளை நன்கு கற்றறிந்து இருந்தனர். கணவன்மார் சிவபூசை செய்யும்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய இது உதவியாயிருந்தது. சிவாசாரிய தீக்ஷை பெறும் போது தம்பதியராகவே அமர்ந்து தீக்ஷை பெறுவது வழக்கம்.

பெண்கள் ஆலயங்களில் ஆகம வழி நின்று சிவபூசை செய்தற்கு அம்பிகையே சான்றாக இருக்கின்றாள்.

திருமறைக்காட்டில் (வேதாரண் யத்தில்) அருச்சகர்களுக்கு சிவாசாரிய தீக்ஷை தரும்போது கணவன் மனைவி ஆகிய இருவரையும் கருவறையுள் சிவலிங்கத்திற்கு முன்பாக அமர்த்தி மந்திர உபதேசம் செய்து திருமுழுக்காட்டும் வழக்கமும் உள்ளதென்று கூறுகின்றனர்.

காலப்போக்கில் வேத வழிபட்ட பிராமணர்களின் மரபு மேலோங்கியதால் அவர்கள் பழக்கவழக்கங்கள் ஆலய வழிபாட்டில் கலந்தன. இதனாலும் காலப் போக்கில் சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களாலும் பெண்க ளின் பங்கு வழிபாட்டில் குறைந்து விட்டது.

பேரரசிகள் ஆலயத்திற்கு வந்தபோது சிவாசாரிய குலப் பெண்களே அவர்களுக்கு விபூதி அளித்து மரியாதை செய்யும் வழக்கம் இருந்தது.

## தலபுராணங்களில் சிவாசாரியார் துதிகள்

சில தலபுராணங்களில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் விநாயகர், சிவபெருமான் என்று வரிசையாகத் தொடங்கி நாயன்மார்கள், தல அடியவர்கள் ஆகியோரை வாழ்த்தி வணங்குவதுடன், ஆதிசைவர்களையும் துதித்துப்பாடல் அருளிச் செய்திருப் பதைக்காணலாம். திருமயிலைத் தல புராணத்தில் இடம் பெற்றுள்ள ஆதிசைவர் துதியை இங்கே காணலாம்.

புத்தமுது , அனைய தமிழ்பொலியுமிசை  
வளர்மயிலாபுரியென்றோது  
முத்தி நகரைத் தினமும்நான் மறையாக மந்  
தெரிந்தமூதூர் வைகுஞ்  
சுத்தசிவவேதியரைப் பரசிவகாரிய  
பரராய்த் துகளற்று ஓங்கு  
முத்தமசைவத் தவரைத் தொழுதவர்  
தாட்கமலம்எமது உளத் தில் வைப்பாம்.

எடுத்துக்காட்டாக விக்டோரியா மகாராணி சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்திற்கு வந்து வழிபட்ட போது அந்த நாளில் முதன்மை அருச்சகராக இருந்தவரின் துணைவியார் அவருக்கு மாலை அணிவித்துப் பிரசாதம் வழங்கியதாகப் பெரியோர்கள் குறித்துள்ளனர்.

## சிவாச்சாரியார் மரபில் வந்த பெண் சித்தர்

சென்னை கோமளீசுவரன் பேட்டையிலுள்ள ஸ்ரீ சட்டநாதசுவாமி திருமடத்தில் வீற்றிருந்த குருமார்களில் ஒருவரான திரு. சாம்பசிவ சிவாச்சாரியாரின் துணைவியார் பெரும் சித்தராக விளங்கி வந்துள்ளார்.

அனந்தாம்பாள் என்பது இவரது இயற்பெயராகும். இவர் ஸ்ரீ சக்ர பூஜையைச் சிறப்பாகச் செய்து வந்ததால், ஸ்ரீ சக்கர அம்மாள் என்று அழைக்கப்பட்டார். திருவான் மியூரில் இவரது அருட்சமாதி விளங்கிவருகிறது. தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் இந்த அம்மையார் பறக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் என்று தம் நூலில் குறித்துள்ளார். இவர் ஒரே சமயத்தில் சென்னையிலும் திருவண்ணாமலையில் உள்ள குகையிலும் காட்சியளித்ததை அன்பர்கள் குறித்துள்ளனர். இவர் பரவெளி கண்டவர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# மாமறைவழி வந்த அருச்சகர்கள்

ஆகமவழி நின்ற அந்தணர்கள் சிவமறையோர், சிவாசாரியர், ஆதிசைவர் எனப்பட்டனர். வேதவழி வந்த அந்தணர்கள் வேதியர், திருமறையோர், மறை அந்தணர் முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

வேத வழிபட்ட அந்தணர்கள் பரார்த்த சிவாலய வழிபாட்டை மேற்கொண்டதில்லை என்றாலும், அவர்கள் தமக்கென தனியே சிவாலயங்களை அமைந்திருந்தனர். அவை ஆகமங்கள் கூறும் பரிவாரங்களைக் கொண்டிராமல் சிவபெருமானை மட்டுமே கொண்டதாக இருந்தன என்பர்.

திருநாவுக்கரசர் கூறும் கோயில்களின் வரிசையில் இருக்கோதி மறையவர்கள் ஏத்தி இளங்கோயில் என்பதைக் காண் கிறோம். பின்னாளில் உரையாசிரியர்கள் இளங்கோயிலை பாலாலயம் என எழுதினர். ஆனால், இருக்கோதி மறையவர்கள் ஏத்தும் என்ற அடைமொழி இளங்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருப்பதால், அவை மறைவழி அந்தணர்கள் வழிபட்ட கோயில்கள் என்று கொள்ள வேண்டும்.

இத்தகு இளங்கோயில்கள் பெரிய ஆலயங்களின் பிராகாரங்களிலேயே அமைந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். அயவந்தியில் நீலநக்கர் வழிபட்ட ஆலயம் திருப்புகலூரில் முருகநாயனார் மலர்ப்பணி செய்து வழிபட்ட வர்த்தமானீச்சரம் முதலியவை இத்தகு ஆலயங்களே ஆகும்.

இவை மூலமூர்த்திகளாக இல்லாமல் துணைச் சந்நிதிகளாக இருப்பது நோக்கத்தக்கதாகும். மறையவர்கள் தமது ஆத்மார்த்த பூஜையை இளங்கோயிலிலுள்ள மூர்த்திக்குச் செய்துவழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

மறைவழி அந்தணர்கள் வழிபட்ட இந்த ஆலயங்கள் பின்னாளில் சிவாசாரியர்களின் வழிபாட்டுக்கு உரியதாகி விட்டது.

பாரத தேசத்தில் பல ஆலயங்களில் வேத வழி பூசைகள் சிறப்பாக இப்போதும் நடைபெற்றுவருகின்றன. சென்னை பெசன்ட் நகரிலுள்ள இரத்தினகிரீசர் ஆலயம் முதலிய வற்றில் மறையவர்கள் வேதவழி அருச்சகர்களாக இருந்து வருகின்றனர்.

தமிழகத்தில்ஆதியில் வேதவழி அந்தணர்களின் வழிபாட்டிற்கென தோன்றி ஆலயங்கள் பெருகிய போது அவற்றைப் பூசிக்க வேத வழிபட்ட அந்தணர்கள் குடியேற்றம் நிகழ்ந்தது. இப்படி குடியேறிய அனைவருமே எண்ணிக்கையின் பெயரால் தம்மை அழைத்துக் கொண்டனர். இப்பகுதியில் மறையோர் செய்த வழிபாடு மறையவர்தம் கூட்டத்தினர் முதலான செய்திகளைத் தொடர்ந்து சிந்திக்கலாம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# வேத வழி வந்த அருச்சகர்கள்

ஆகமவழியில் சிவாச்சாரியார்களைக் கண்டு சிவாலய பூசைகளை நடத்த வேண்டு மென்னும் நிலை அந்நாளில் பரலலாக இருந்த போதிலும், வேதவழி வந்த மறையவர்கள் பூசை செய்து மகிழ்ந்த ஆலயங்கள் பலவற்றை யும் வரலாற்றில் காண்கிறோம். இவற்றில் பெரிய புராணத்தில், வேதவிதிப்படி சிவபூசை செய்து பேறு பெற்ற இருவர் பற்றிக் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்துக் காணலாம். இருவருமே திருஞான சம்பந்தரின் திருமணத் தில் கலந்து கொண்டதோடு அவருடன் சேர்ந்து முத்தி பெற்றவர்களாவர்.

முதலாமவரான, முருக நாயனார் திருப் புகலூரில் வர்த்தமானீச்சரம் எனும் ஆலயத் தில் மலர்ப்பணி செய்து பேறு பெற்றவர்.

இரண்டாமவரான நீலநக்கர் அயவந்தி எனும் ஆலயத்திலுள்ள பெருமானை அருச்சித் தவர்.

பெரியபுராணம் காட்டும் திருநீல நக்கர் வரலாற்றில் கருவறையில் அவர் பூசை செய் யும் போது அவரது துணைவியாரும் உடன் இருந்தது குறிக்கப்பட்டுள்ளது.

**உறையுள்ளாகிய மனை நின்றும்ஒருமை அன் புற்ற**
**முறைமையால் வருபூசைக்கும் முற்ற வேண்டுவன**
**குறைவறக் கொண்டு மனைவியார் தம்மொடும் கூட**
**இறைவர் கோயில் வந்தெய்தினர்எல்லையில் தவத்தோர்**

என்று பூசைக்கு வேண்டுவனவற்றை அந்த அம்மையார் சேகரித்துக் கொண்டு கோயிலுக்கு நாயன்மாருடன் வந்ததையும்,

**இணைய நின்றங்கு வேண்டுவ மனையார் ஏந்த**
**உணர்வின்மிக்கார் உயர்ந்தஅர்ச்சனை புரிந்தார்**

என்று அம்மையார் உடன் நின்று பூசைக்கு வேண்டியவற்றை எடுத்துத் தந்தார் என்பதையும் கூறுகிறார்.

ஒருநாள் இப்படி பூசைசெய்யும் போதில், சிவலிங்கப் பெருமான் மீது சிலந்தி ஒன்று விழக் கண்டு அம்மையார் அதை ஊதித் தள்ளியதுடன் எச்சில் கொண்டு தேய்த்தார். குழந்தைகள் மீது சிலந்தி விழுந்தால் அந்த இடத்தில் கொப்புளம் உண்டாகும் என்பதால் எச்சில் தொட்டு அது விழுந்த இடத்தைத் துடைப்பது வழக்கம். அவ்வகையில் அம்மை யார் அன்பினால் அச்செய்கை செய்தார். அதைக்கண்டு நீலநக்கர் கோபம் கொண்டார் அனுசிதமான காரியத்தைச் செய்தாய் என்னை விட்டு நீங்குக என்று கூறினார். அம்மையார் அந்த இடத்தை விட்டு அகன் றார். கோயிலின் வேறிடத்தில் சென்று தங்கி யிருந்தார்.

பூசையை முடித்துக் கொண்டு திருநீல நக்கர் வீட்டுக்குச் சென்றார். அன்றிரவு கனவில் பெருமான் தோன்றி, தன் மேனியைக் காட்டி ,"அன்ப என்பால் உள்ளம் வைத்து அம்மை ஊதிய இடம் தவிர சிலந்தி விழுந்து ஓடிய இடங்களில் உண்டான கொப்புளங் களைப் பார் என்று காட்டினார்.

அதைக் கண்டு அடிகள் வியந்தார். துயிலினின்று கண் விழித்த நாயனார் பெருமா னின் கருணையை வியந்தார். ஆலயத்திற்குச் சென்று பெருமானை வணங்கியதுடன் மனைவியைக் கண்டு நடந்ததைக் கூறி அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

இதை நோக்க முன்னாளில் மறைவழி குலப் பெண்கள் உடனிருந்து கணவன்மார் களுடைய பூசைக்கு உதவியதை அறிய முடிகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# அண்டைநாடுகளில் இருந்து அரசர்கள் அந்தணர்களைக் குடியேற்றியது

ஆதியில் தமிழகம் எங்கும் அமைதி ததும்பும் சமய வாழ்வின் நிலைக்களமாக இருந்தது. ஊர்க் கோயில்கள் யாவும் அகன்ற பரப்பில் அமைந்த சோலைகளுக்கு நடுவே இதமான சூழலில் இருந்தன. இவற்றைத் தேடிப் பல நாடுகளிலிருந்து அன்பர்களும் குருமார்களும் இங்கே வந்தனர்.

இவ்வாறு வந்த அன்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கோயில்களும் அதிகரித்தன. புதியதாகக் கட்டப்பட்ட கோயில்களுக்கு பணியாளர்களும் அர்ச்சகர்களும் ஆசாரியர்களும் தேவைப்பட்டனர். புதிய ஆலயங்களை நிர்மாணித்தவர்கள் பாரத தேசத்தின் பல பகுதிகளில் இருந்து அந்தணர்களை அங்கே குடியேற்றினர்.

அருச்சகர்களை இவ்விதம் குடியேற்றும் வழக்கம் நெடுங்காலமாக நிலவி வருகிறது. தலபுராணங்களில் பெரும்பாலானவற்றில் அங்குப் பணியாற்றும் அருச்சகர்கள் வெளியூரிலிருந்து அழைத்துவந்து குடியேற்றப் பட்டதுடன், அவர்கள் வாழ்வு செம்மையாக நடைபெற நிலங்களும் வீடுகளும் அளிக்கப் பட்ட செய்திகளைக் கூறுகின்றன.

எடுத்துக்காட்டாக தில்லைவன புராணம், தில்லை மூவாயிரவரை இரண்யவர்மன் அந்தர்வேதியிலிருந்து அழைத்துவந்து குடியேற்றினார் என்று கூறுவதைக் காண் கிறோம்.

தேவாரத்தில் பரசுராமர் தமது பூமியான மலையாள தேசத்திலிருந்து முந்நூறு அந்தணர்களைப் பழுவூரில் குடியேற்றி அவர்களுக்கு வீடுகளும் நிலமும் அளித்தான் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதனை ஞானசம்பந்தர்

மண்ணின் மிசையாடி மலையாளர்
தொழுதேத்தி
பண்ணொலி கொண்டு பயில்கின்ற
பழுவூரே என்றும்,

அந்தணர்களான மலையாளவர் ஏத்தும்
பந்தமலிகின்ற பழவூரானை

என்றும் குறித்துள்ளார்.

அதை அடியொற்றிச் சுந்தரர் திருநின்றியூர் பதிகத்தில்,

மொய்த்த சீர் முன்னூற்று அறுபதுவேலி
மூன்று நூறு வேதியரோடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்கள்
ஏந்தி ஓங்கும் நின்றியூர்

எனஉனக்கு அளிப்ப என்று கூறுகிறார்.

இவ்வாறு மலையாள அந்தணர் குடியேற்றம் நடைபெற்றதைக் காண்கிறோம். திருஒற்றியூரில் அம்பிகையை இப்போதும் மலையாளரே பூசிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு குடியேறி பெருமையுடன் வாழ்ந்து வந்த இக்கூட்டத்தினரின் எண்ணிக்கை இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது என்றாலும், இயன்றவரை அவர்கள் பண்டைய மரபுகளைப் போற்றி வருவதைக் காண்கிறோம். இவர்கள் தம்வழி வந்த பூஜை முறைகளைப் போற்றி வருகின்றனர். அவை இப்போதும் பெருமளவு நடைமுறையில் உள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த திருக்கூட்டத்தினர்

சிவாலயப் பணிகளில் எண்ணிக் கையின் பெயரால் அமைந்த அந்தணர் குழுக்களைக் இங்கே காணலாம். அவர்கள் எல்லோரும் வேத வழிப்பட்ட பிராமணர்கள் ஆவர். சில தலங்களில் இவர்கள் ஆகமவழி பூசை முறைகளை வகுத்துக் கொண்டும், பூசைகளை நடத்தி வருகின்றனர்.

அவர்களைப் புராணங்கள் சிறப்புடன் போற்றுகின்றன. அவர்களே கோயிலுக்கு உரிமை உடையவர்கள் ஆவர். அவர்களைக் காணியாளர் என்பர். அவர்கள் ஆலய வழிபாட்டைத் திறம்பட நடத்தி வருகின்றனர். இவர்களைப் பற்றி இங்கே காணலாம்.

ஆலயங்கள் பெரியதானபோதும் பல சந்நிதிகளைக் கொண்டு விரிவடைந்தபோதும் சிறப்புடன்விளங்கும் அந்தணர்களைப் பெருங் கூட்டமாக குடியேற்றி அவர்களிடம் நித்திய பூசைகளும் விழாக் களும் நடத்தும் பொறுப்பு அளிக்கப்பட்டது. அவ்வாறு அமர்த் தப்பட்ட பெருமக்கள் தாம் வந்த எண்ணிக்கை அடிப் படையில் பெயரிட்டு அழைத்துக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக, தில்லை மூவாயிரவர், வீழிமிழலை ஐந்நூற்றுவர், ஆவடுதுறை ஆயிரவர் என்று அழைக்கப்படுவதைக் காணலாம். இவர்களைச் சிவபெருமானே தோற்றுவித்து காணி வழங்கினார் என்றும் கூறுகின்றனர். அவர்கள் சிவபெருமானைத் தமது கூட்டத்தினருள் ஒருவராகக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக, தில்லை மூவாயிரவர் நடராசரைத் தம்முள் ஒருவராகவே கொண்டுள்ளனர். தமது சபையில் ஒருவராக விளங்குவதாகக் குறிக்கும் வகையில் ஒரு விளக்கேற்றி வைத்துச் சபையினை நடத்துகின்றனர்.

## திருநின்றியூர் முந்நூற்றுவர்

வைத்தீசுவரன் கோயிலுக்கு அருகிலுள்ள திருத்தலம் திருநின்றியூர். இந்நாளில் அது திரிநின்றவூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குப் பரசுராமர் வழிபட்டுப்பேறு பெற்றார். அவர்முந்நூறுவேதியர்களை அங்கு குடிய மர்த்தி அவர்களுக்கு முந்நூற்று அறுபது வேலி நிலத்தையும் அளித்து, அவர்களையும், நிலங் களையும் பெருமான் கையில் நீர்வார்த்து அளித்தான். அதுமுதல் அக்கூட்டத்தினர் அங்கு வழிபாடு செய்து வந்தனர். இதனைச் சுந்தரர் தேவாரத்தால் அறிகிறோம்.

## முந்நூற்று அறுபது அந்தணர்கள்

திருப்பாதிரிப்புலியூர் ஆலயத்தில் முந்நூற்று அறுபது அந்தணர்கள் வழிபட்டு வந்தனர் என்ற குறிப்பை டாக்டர் உ.வே.சாமி நாதையர் அவர்கள் குறித்துள்ளார். இவர்கள் தினமும் ஒருவராகச் சிவபெருமானைப் பூசித்து வந்ததாகக் கூறுகின்றனர். இச்செய்தி திருப் பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது

## திட்டைக்குடி நானூற்றுவர்

வெள்ளாற்றின் கரையிலுள்ள திட்டக் குடியில் வீற்றிருக்கும் பெருமான் வசிட்டேசுவரர் என அழைக்கப்படுகிறார். இவரை வசிட்ட முனிவர் அமைத்து வழிபட்டதுடன் இவருடைய வழிபாட்டைச் செம்மையாக நடத்துவதற்கெனக் கங்காதீரத்திலிருந்து நானூறு அந்தணர்களை அங்குக் குடியேற்றினர். சிவபெருமான் தானும் அவர்களில் ஒருவராக உருவம் தாங்கிவந்து சிவபூசை செய்வதாகக் கூறப்படுகிறது.

அவர்களுக்கு நிலம், வீடு ஆகியவற்றை அளித்தபோது அவரும் தமக்குரிய பாகத்தைப் பெற்றுக் கொண்டார் என்று கூறுவர். அப்படிக் கொண்டதால் சிவபெருமானுக்கு நானூற்றொருவர் என்பது பெயராயிற்று.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவருக்கு ஒதுக்கிய நிலத்தில் அவருக்கென பரிவாரங் களுடன் சிவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை நானூற்றொருவர் கோயில் என்று அழைக்கின்றனர்.

திட்டைக்குடி புராணம் அவருக்குத் தனி வீடு ஒதுக்கப்பட்டதையும், பின்னாளில் அங்கு நானூற்று ஒருவர் என்னும் சிவாலயம் அமைந்ததையும் குறிப்பிடுகின்றது.

## திருவோத்தூர் நானூற்றுவர்

வடார்க்காடு மாவட்டம் திருவோத் தூர் (திருவத் திபுரம் செய்யாறு) வேதபுரீசுவரர்ஆலயத்துச் சிவபிரா மணர்கள் நானூற்றுவர் என்றழைக்கப்பட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இங்குள்ள கல் வெட்டு, நானூற்றொரு ஆளுடையார் திருவோத்தூரு டையார் என்று பெருமானைக் குறிக்கிறது. இதனைக் கொண்டு இங்கிருந்த சிவ வேதியர்கள் நானூற்றுவர் என்று அழைக்கப்பட்டதையும் அவருடைய ஒருவ ராகப் பெருமான் விளங்கியதையும் அறிகிறோம்.

## திருவிடைக்கழி ஐந்நூற்றுவர்

திருவிடைக்கழி திருவிசைப்பா அருளப் பட்ட தலமாகும். இங்கு முருகனும் சிவபெருமானும் ஒன்றுக்குள்ஒன்றாக அமைந்த கருவறையில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். இவர்களுக்கு பூசை செய்து வந்தவர்கள் ஐந்நூற்றுவர் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இங்கு ஆலயத்திற்கு நேர்எதிரில் அமைந் துள்ள ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகருக்கு ஐந்நூற்றுப் பிள்ளையார் என்ற திருநாமம் வழங்குகிறது. இப்பிள்ளையார் அந்தணர்களுடன் ஐந்நூற்றில் ஒருவராக இருந்து சிவபெருமானைப் பூசிப்ப தாகச் சொல்லப்படுகிறது.

## திருவாவடுதுறை ஆயிரவர்

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் கோயில் திருவா வடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமானதாகும். இங்கு ஆயிரம் அந்தணர்கள் பூசித்து வந்தனர் என்பதைத் திருவிசைப் பாவின் மூலம் அறிகிறோம். பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர்மிகு காவிரிக் கரை மேவிய ஐயா திருவாவடுதுறை அமுதே என்னும் தொடரால் அறிய முடிகிறது.

**தில்லைவாழ்அந்தனர் திருமேனிகள்**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடி யேன் என்று தொடங்கிப் பாடுவதால் அறுபத்துமூவர் வரிசையில்முதல் நாயன் மாராக தில்லைவாழ் அந்தணர் தம் திரு வுருவம் எழுந்தருளி வைக்கப்படுகிறது. அதில் அவர் வலதுகையில் வேள்விக் கரண்டியும்இடது கரத்தில் கெண்டியும் கொண்டவராக அமைக்கப்பட்டிருக்கிறார். முன்னாளில் பட்டுக் கிரீடம் அணிந்து பூசிக்கும் வழக்கம் இருந்தது என்பதால் இத்திருவுருவத்தில் தலைமுடியை கிரீடம் போல் எடுத்துக் கட்டியுள்ளனர்.

## ஆக்கூர் ஆயிரவர்

மயிலாடுதுறையிலிருந்து- திருக் கடையூர் செல்லும் சாலையில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆக்கூர் என்னும் தலம் உள்ளது. இங்குள்ள ஆலயம் தான்தோன்றீசுவரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஆயிரம் அந்தணர் கள் வழிபாடு செய்து வந்தனர் என்று கூறப்படுகிறது. இங்குள்ள ஆலயத்தில் ஆயிரத்திலொருவர் என்னும் மூர்த்தியாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார் ( இவர் எழுந்தருளியதற்கு வேறு வரலாறும் கூறப்படுகிறது அதை சிவமஞ்சரி பக்கம் 1548ல் காணலாம்.

### திருவண்ணாமலை – ஐயாயிரவர்

திருவண்ணாமலையில் அண்ணாமலையாரைப் பூசிப்பவர்கள் ஐயாயிரவர் என்று டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறித்துள்ளார்.

### முன்னூற்றுவர்திருச்சேய்ஞ்ஞலூர்

சண்டேசுவர நாயனார் அவதரித்துச் சிவனருள் பெற்ற திருத்தலம் சேய்ஞ்ஞலூர். இத்தலத் திலுள்ள சத்தியகிரீசுவரர் ஆலயம் மிகப்பழைமையானது.இத்தலத்தில் வேறொரு சிவன் கோயிலும் உள்ளது. அது ஐந்நூற்றுவர் என்னும் பிராமணர்களால் பூசிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வூரில் அரிச் சந்திரன் யாகம் செய்தபோது, ஐநூறு பேரைக் குடியேற்றி பூமிதானம், வீடு தானம், சொர்ண தானம் முதலியவற்றைச் செய்ததாகக் கூறுகின்றனர்.

### திருவீழிமிழலை ஐநூற்றுவர்

திருவீழிமிழலையைப் போற்றிப் பரவும் வேதியர்கள் ஐநூற்றுவர் என்று புராணம் கூறுகிறது. இவர்களை வீழிப்பிராமணர் என்று இப்போதுஅழைக்கின்றனர். திருவிசைப் பாவில் ஐநூ(ற்று) அந்தணர் ஏத்தும் (எண்ணில் பல்கோடி குணத்தர்) ஏர்வீழி என்று குறிக்கப் பட்டுள்ளது. இவர்களில்" பெரும்பான்மை யான வர்கள் விஷ்ணுபுரம், தேதியூர் முதலான ஊர்களில் வசிக்கின்றனர். விழாக் காலங்களில் சிறப்புடன் சேவை புரிகின்றனர்.

### திருப்பெருந்துறை மூந்நூற்றுவர்

இறைவன் மாணிக்கவாசக சுவாமி களை ஆட்கொண்ட திருத்தலம் திருப்பெருந் துறை என்னும் ஆவுடையார் கோயிலாகும். இங்கு இறைவன் ஓங்கார வடிவில் பீடத்தில் அருவத் திருமேனியாக வீற்றிருக்கின்றான். அவரையும் அவருக்கு நிழல் பரப்பும் குருந்த மரத்தின் பிரதிவடிவத்தையும், இறைவனின் திருவடிகளாகக் காட்சியளிக்கும் அருளன்னை யோகாம்பிகையையும் பூசிக்கும் மறையோர்கள் முந்நூற்றுவர் என்று அழைக் கப்படுகின்றனர். வடமொழியில் இவர் களைத் திரிசதர் என்பர்.

ஆதியில் பிரம்மனுக்கு, இங்கு குருந்த மரமாக இறைவன் ஓங்கார வடிவில் காட்சி யளித்ததுடன் படைப்பாற்றலையும் வழங்கி னான். பிரமன் நெடுநாட்கள் சத்திய லோகத் திலிருந்து தினமும் இங்கு வந்து அம்மரத்தை ஆராதித்து வந்தான். பின்னர், பூசை தடைப் படாதிருக்க ஒரு வேள்வியியற்றி அதிலிருந்து ரௌட் சாயணர் என்ற முனிவரைத் தோற்று வித்தான். பிறகு மேலும் ஒரு வேள்வியைச் செய்து பதினோரு துணைவர்களைத் தோன்றச் செய்து அவருக்கு அளித்தான். அந்த இனம் பெருகி முன்னூற்றுவர் ஆனது. அவர் களின் வழிவந்தவர்களே மேற்குறித்த மூன்று சந்நிதிகளிலும் இப்போதும் பூசித்து வருகின் றனர். அவர்களின் பெருமைகளைத் தல புராணம் விரிவாகக் கூறுகிறது. அவர்களின் குமாரர்களுக்கு இறைவன் ஆசிரியராக இருந்து வேதங்களைப் போதித்து வந்தான் என்று கூறுகின்றனர்.

அவர்கள் ஆதிசிவனிடமிருந்து பஞ் சாட்சர உபதேசத்தைப் பெற்று ஓராண் (ஒருவருக்கு மட்டுமே அவர் வழியாக வருதல்) வழியாக அதைப் போற்றி வருகின்றனர். மாணிக்கவாசகருக்குப் பெருமான் உபதே சித்து ஆட்கொண்டார் என்பர். அதை யொட்டி திருப்பெருந்துறையில் (ஆவு டையார் கோயிலில்) நடைபெறும் உபதேசக் காட்சி விழாவில் மாணிக்கவாசகர் திருச்செவி யில், ஓதி உபதேசம் செய்யும் ஐதீகத் தின் போது மேற்படி உபதேசத்தைப் பெற்று வழிவழியாகக் காத்துவரும் அந்தணர் அந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூலமந்திரத்தை இறைவன் பிரதிநிதியாக மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்கிறார்.

இவ்வாறு பலவகையான சிறப்புகளைப் பெற்றிருக்கும். பல்வேறு எண்ணிக்கையின் பெயரால் அமைந்த வேதியர்களின் குழுக்கள் ஆலயங்களில் அருச்சகர்களாகப் பணி புரிந்து வருவதை அறியமுடிகிறது.

சில தலங்களில் அவர்களுடன் சிவாசாரி யாரும் பணியாற்றுகின்றனர். திருச்செந்தூர், திருப்பெருந்துறை முதலிய தலங்களில் காணி யார்களான வேதியர்களுடன் சிவாசாரி யாரும் பணிபுரிவதையும் காணலாம். வேதியர் களின் உரிமைக் கோயில்களில் பிரதிஷ்டை செய்யப் பட்ட சிவலிங்கம் இருந்தால் அதை ஆதி சைவர்களைக் கொண்டு பூசிக்கும் வழக்கமும் உள்ளது.

திருச்செந்தூர், திருப்பெருந்துறை முதலிய தலங்களில் அக்குழுவினர் முதன்மை பெற்றி ருந்த போதிலும் அங்கு ஆதிசைவசிவாசாரி யார்களும் பூசையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

காலப்போக்கில் சில கோயில் பூசை களைச் சிவாச்சாரியார்களே முழுவது மாக ஏற்றுக் கொண்டு நாட்பூசைகளைச் செய்து வர, விழா நாட்களில் மட்டும் வேதவழிபட்ட அந்தணக் காணியாளர்கள் அபிஷேக அலங்



காரங்களைச் செய்து வழிபடுகின்றனர்.

எடுத்துக் காட்டாக, திருவீழிமிழலையில் வீழிநாதரைச் சிவாசாரியாரும் பிற சந்நிதி களை ஐந்நூற்று வரும் பூசித்து வந்தனர். காலப் போக்கில் இப்போது எல்லா சந்நிதிகளை யுமே சிவாசாரியார்கள் பூசிக்கத் தொடங்கி விட்டனர். திருவிழாக் காலங்களில் மட்டும் ஐநூற்றுவரான வீழியாளர்கள் வந்து மாப் பிள்ளை சாமிக்கு அபிஷேகம் செய்வதுடன் ஸ்ரீபாதமும் தாங்குகின்றனர். இப்பகுதியில் இக்கூட்டத்தினரை இன்றும் காணலாம். காலப் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களால் வைதீகச் சிவாலயங்கள் பெரியதாக ஆக்கப்பட்டது டன் அவற்றில் சிவாசாரியார்களைப் பூசைக்கு அமர்த்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்

## வீர சைவ அருச்சகர்கள்

வீர சைவ சமயம் தமது மக்களுக்கு இஷ்ட லிங்கம் எனப்படும் ஆத்மார்த்த பூசையை மட்டுமே விதித்துள்ளது. பரார்த்த சிவாலயங்களை அவர்கள் வணங்குவதில்லை. அவற்றிற்கு ஊறு நேரிட்டால் மட்டும் இஷ்டலிங்கம் குடியிருக்கும் இடமாகக் கொண்டு அவற்றை உயிர் கொடுத்துக் காப்பர்.

காலப்போக்கில் அவர்கள் தமது சமயத்திற்கும் கோயில் வேண்டுமென்பதற்காக பசவர் கோயில்கள், வீரபத்திரர் ஆலயங்கள் முதலியவற்றை ஏற்படுத்தி அவற்றை அவர்களே பூசித்து வந்தனர். அப்படிப் பூசித்தவர்கள் பூணூல் அணிந்ததுடன் தம்மை ஐயர் என்றும் அழைத்துக் கொண்டனர்.

தென்னாற்காடு மாவட்டங்கள் பலவற்றில் இத்தகு ஐயர்களை ஆலய அருச்சகர்களாகக் காண்கிறோம். இவர் தாங்கள் வழிபடும் திருவுருவங் களின் முன்னுச்சியில் சிவலிங்கத்தை அமைத்திருக் கின்றனர். அதன் மூலம் அத்தெய்வங்கள் இஷ்டலிங் கத்தை அணிந்த வீர சைவ அடியாளர்களாக மாறிவிடுகின்றனர் என்று கொள்கின்றனர்.

ஐயனார் அங்காளம்மன் காளிதேவி முதலிய பல ஆலயங்களில் இந்த ஐயர்கள் அருச்ச கர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் வழிபாட்டில் ஆகம வழக்கங்கள் வெகுவாக கலந்துள்ளன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# வடநாட்டுச் சிவாச்சாரியர்கள்

சங்ககாலத்திற்கு முன்பாக, ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பே சமணர், பௌத்தர் முதலானோர் தென்னாட்டிற்கு வந்து மடம் அமைத்துச் சமயத்தைப் பரப்பி வந்ததுடன் தமிழ்ப்பணியும் செய்துவந்தனர். அதே கால கட்டத்தில் வடநாட்டுச் சைவர் களும் தென்னாட்டிற்கு வந்து சைவத்தைப் பரப்பினர்.

இவர்கள் திருமடங்கள் அமைத்து மக்கள் பணி செய்து தனிச்சிறப்புப் பெற்றனர். காலப் போக்கில் அரசர்களின் ஆதரவைப் பெற்றுப் பெரும்செல்வாக்கு அடைந்தனர். இம்மடங் களில் தீக்ஷை பெற்றுத் தொண்டு செய்து வந்தவர்களே திருக்கோயில் பணியாளர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் சிவர் என்றும், சிவாசாரியர்கள் என்றும் தம்மை குறித்துக் கொண் டனர்.

மேலும், சோழ மன்னர்கள் கங்கை வரை படையெடுத்துச் சென்ற காலங்களில் அங்கி ருந்து லட்சம் பேரை அழைத்து வந்து குடிய மர்த்தினர். அவர்களைத் தொடர்ந்து பலர் தென் னாட்டிற்கு வந்து குடியேறினர். இவர்கள் குடியேற்றத்தைப் பல கல்வெட்டுகள் குறிக் கின்றன.

ராஜேந்திர சோழனின் ஒரு கல்வெட்டு ஆர்ய தேசம் மத்திய தேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆசார்யர்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்களை யும் குறிப்பிடுகின்றது.

இவர்கள் வந்த காலத்தில் தமிழ் நாட்டில் பூசை செய்ய தகுதிவாய்ந்த சைவக் குருமார்கள் குறைவாக இருந்த காரணத்தால், இவர்கள் செல்வாக்கு பெற்றனர்.

இவர்கள் தென்னாட்டிற்கு வந்து ஆகமங் களைக் கற்றுத் தகுதி பெற்றதுடன் அதைப் பிறருக்குப் பயிற்றும்வித்தனர். கோயில்களை மேற்பார்வையிடவும் வழிநடத்தவும் பொறுப் பேற்றனர். சோழர்கள் காலத் தில் மிகவும் செல்வாக்குப் பெற்றனர். காளாமுகம், வைரவம் எனப் பல பிரிவினரில் இருப்பினும், பெரும் பாலும் லகுளீச பாசுபத ஆசாரியர்கள் மிகுந்த செல்வாக்குப் படைத்திருந்தனர். இவர்கள் பெரிய மடங்களை அமைத்தும் சிவப்பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இராஜராஜன் காலத்தில் அவனுக்குக் குருவாக ஈசானசிவர் என்ற பண்டிதர் விளங் கினார். இவர் தஞ்சைக் கோயிலில் திக்பால கர் ஆலயங்களுக்குப் பொற்கலசம் தந்ததாகக் கல்வெட்டுகள்கூறுகின்றன. இராஜராஜன் காலத் திலும் அவனுக்குப் பிறகு இராஜேந் திரன் காலத்திலும் சிறந்து விளங்கிய குரு பிரான் சர்வசிவபண்டிதர் ஆவார். இம் மன்னன், இவரும் இவருடைய சீடர்களும் எங்கே குடி யிருந்த போதிலும் ஆசார்ய போகமாக நெல் அளக்கும்படி ஏற்பாடு செய்திருந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இவர்கள் சிறந்த மந்திரதந்திரங்களைத் தெரிந்தவர்களாகவும், இறையருள் பெற்றவர்க ளாகவும் விளங்கினர். மன்னர்களின் வெற்றிக் குப் பெரிய பூசைகளை நடத்தினர்.

திருஒற்றியூரிலுள்ள ஒரு கல்வெட்டு மயானமும் மடமும் கொண்ட பிரசித்தி பெற்ற சதுரானன பண்டிதரைக் குறிக்கின்றது.

அந்நாளில் பாண்டியனும் ஈழஅரசனும் சோழநாட்டின் மீது படையெடுத்து வந்த போது எதிரிகளின் படையை அடக்க இறை யருளை வேண்டிநின்ற எதிரிலி சோழச் சம்பு வரையன் என்பான் உமாபதி தேவர் என்னும் ஞான சிவதேவரை அணுகினான். அவர் ஆர்ப் பாக்கம் என்னும் ஊரிலுள்ள வாலீசுவரத்தில் 28 நாட்கள் அகோர பூசை செய்தார். அதன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பயனாகப் பாண்டியனும் ஈழப் படையும் நிலைகுலைந்து ஓடிஒளிந்தனர். இதற்காக அவன் ஆத்தூர் எனும் கிராமத்தை அவருக்குச் சிவபாத காணிக்கையாக வழங்கினான்.

மற்றுமோர் சமயத்திலும் ஈழப் படைகளை முறியடிக்க சுவாமிதேவர் என்பவர் தவவலிமையால் வழிபாடு நடத்தி னார். அதில் வெற்றி பெற்றதும் அச்சுதமங்கலம் என்னும் ஊரில் சிவால யத்தை அமைத்தார். அதற்கு வேண்டிய நிபந்தங்களை மன்னன் அளித்தான்.

திருக்கடையூரில் நிலைமாறி இருந்த பூசை முறைகளை இவர் பழையபடி மாற்றி அமைத்தார் என்றும் அதை மன்னன் ஏற்றுக் கொண்டு ஆணையிட் டான் என்னில் இவரது செல்வாக் கினை என்னென்பது!

ஆகமநெறிகளைமட்டுமேபோற்றி வந்த இந்தச் சிவாச்சாரியர்கள் பின்னா ளில் தேவா ரத்தை ஏற்றுக் கொண்டு அதில் சிறப்புப் பெற்றனர். இவர்களிடத்தில் பயின்று தொண்டு செய்தவர்களே ஆலயங்களில் பணி அமர்த்தப் பட்டனர். காலப்போக் கில் இவர்கள் தனித் தன்மை இழந்து தென் னாட்டுச் சிவாச்சாரியர்களுடன் கலந்து விட்டனர்.

இப்படி வடநாட்டுச் சைவக் குருமார்கள் தென்னகமெங்கும் பரவிச் சிறப்புடன் விளங்கி வந்துள்ளனர்.

## குகையிடி கலகம்

வடநாட்டிலிருந்து குடியேறிய சைவாசாரியர்கள் நல்ல கல்வித்திறம் படைத்தவர் களாகவும் அரசியல் நெறி கற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களுக்கு அவர்களது மடங்களும் அரசியலில் பெருஞ்செல்வாக்கு பெற்றிருந்தன. இவ்வேளையில் இவர்களிடம் பயின்றவர்கள் திருமுறைகளை முன்னிலைப்படுத்தித் தனியாக மடங்களை ஏற்படுத்தினர். அந்த இடங்கள் குகைகள் என்று அழைக்கப்பட்டன. மக்கள் செல்வாக்கும் அதற்குப் பரவலாகப் பெருகி வந்தது. அதைக் கண்டு பொறாமையும் அச்சமும் கொண்ட வடநாட்டு ஆசாரியர்கள் அவற்றை இடித்தும் அதிலுள்ள ஆசாரியார்களைக் கொன்றும் கலகம் விளைத்தனர். இதனை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குகையிடிகலகம் என அழைக் கின்றனர்.

திரிபுவனதேவன் என்று பட்டப்பெயர் சூடிய மூன்றாம் குலோத்துங்கன் தமது இருபத்தியிரண்டாம் ஆட்சியாண்டில் தோன்றிய இக்கலகத்தை அடக்கினான். அப்படி அடக்காவிட்டால் சைவர்களுக்குள்ளேயே பெருங்கலகம் நிகழ்ந்து பேரழிவு நிகழ்ந்திருக்கும். இப்படிப்பட்ட துயர்நிலை சைவ சமயத்திற்குத் தனது காலத்தில் வந்து விட்டதே என்று மன்னன் மனம் நடுங்கிச் சோர்ந்தான். அவனது முயற்சியால் ஒருவாறு கலகம் அடங்கிச் சைவ சமயம் துளிர்த்தது. அவன் தனது மன நடுக்கத்தை நீக்கியதால் தாம் அமைத்த திரிபுவன வீரேசுவரம் ஆலயத்திலுள்ள பெருமானுக்கு நடுக்கம் தீர்த்தநாதர் என்னும் பெயரைச் சூட்டினான் என்று பேராசிரியர் முனைவர்.இரா. செல்வக்கணபதி அவர்கள் தெரிவித்துள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# பாசுபத சிவாச்சாரியர்கள்

சைவ சமயத்தில் பெருமை வாய்ந்த பிரிவுகளில் மிகவும் சிறப்புப் பெற்றது லகுளீச பாசுபதமாகும். இவர்கள் வேதத்தை ஏற்றுக் கொண்டதுடன் ஆகமவழி நின்றவர்கள். இவர்கள் தென்னகத்தில் பல இடங்களில் சைவ மடங்களை உருவாக்கி ஆசாரியர்களாக வீற்றிருந்து அன்பர்களுக்கு சைவசமயக் கருத்துக்களைப் போதித்து வந்தனர்.

ஆதியில் சிவபெருமானே சுவேதர் என்ற குருவாகத் தோன்றி இம்மதத்தைத் தோற்றுவித்தார் என்றும், அதுவே வழிவழியாகப் போதிக்கப்பட்டு லகுளீசர் வரை தொடர்ந்தது என்றும் வரலாறு கூறுகிறது.

சிவமகாபுராணத்தில் இருபத்தேழு சதுர்யுகங்கள் நடந்து முடிந்ததென்றும், இருபத்தெட்டாவதான சதுர்யுகம் இப்போது நடந்து கொண்டிருக்கிறதென்றும் கூறப்பட்டுள்ளது. இந்த இருபத்தெட்டு யுகங்களிலும் யுகத்திற்கு ஒருவர் வீதம் சுவேதர் முதல் லகுளீசர் வரை தோன்றி சமயத்தை நிலை நிறுத்துவர் என்றும், சிவபெருமானே இவர்கள் வடிவில் மண் மீது வந்து வேதாகமங்களைப் போதித்தான் என்றும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அவ்வாறு வந்த குருமார்கள் ஒவ்வொருவருக்கும் தலைமைச் சீடர்களாக நால்வர் விளங்கினர். அவர்களிடமிருந்து இச்சமயம் பல்கிப் பெருகியது

பாசுபத சைவத்தின் முதல் ஆசாரியரான சுவேதர் அருளியது சுவேதாச்வதரம் என்னும் உபநிடதமாகும். இது 108 உபநிஷதங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆகம நெறியில் சிவாசார்யார்களே சிவாலய வழிபாடு செய்ய வேண்டும் என்றிருந்த நிலைமை மாறி வேதவழியிலும் சிவாலய வழிபாடுகளைச் செய்யலாம் என்று சுவேதரே வழிவகுத்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் வழிவந்தவர்கள் இயற்றியுள்ள பூஜா பத்ததி நூல்களும் உள்ளன.

இவர்கள் வழிவந்த சைவ சிவாசாரியார்களும் திருமடம் அமைத்து சிவப்பணி செய்து வந்த மடாதிபர்களும் அவர்களது சந்தான மரபினரும் பின்னாளில் சிவாலயங்களில் அர்ச்சகப் பொறுப்பேற்ற தையும் அறிய முடிகிறது, இவர்கள் ஆகமத்தோடு திருமுறைகளையும் பயின் றனர்.

திருவொற்றியூரிலுள்ள கல்வெட்டின் மூலம் திரு ஒற்றியூரிலும் பாசுபத சைவம் தழைத்திருந்ததை அறிகிறோம். இங்கு மட மும் மயானமும் உடை ய சதுரானன பண்டிதர் என்ப வர் செல்வாக்கு பெற்றிருந் ததை அக்கல்வெட்டு கூறுகிறது. தொண்டை மண்டலத்தில் வாகீசுவர பண்டிதர் முதலான பல பண்டிதர்கள் பெருமை பெற்றிருந்ததைக் கல்வெட்டுகளால் அறிகி றோம்.

சுந்தரர் திருமுல்லை வாயில் பெருமானைப் பாசுபதா பரஞ் சுடரே என்று போற்றுகின்றார் இது பாசுபதர்களின் திருத்தலமாகும். திருப்பாசூரில் வாரணாசி லட்சத்யாய இராவாளரது கொல்ல மடம் என்னும் மடம் இருந்ததை அறிகிறோம். இது பாசுபத மடம் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பந்தணை நல்லூரில் வாரணாசி பிஷா மடம் என்னும் பெயரில் மடம் இருந்ததை அறிகிறோம். இத்தலத்தில் அப்பர் சுவாமிகள் தாம் அருளிச்செய்த பதிகத்தில் பாசுபத



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சைவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சாம் பலைப் பூசி தரையில் புரண்டு என்று தொடங்கும் பாடல் பாசுபத யோகத்தையும் பாசுபதர்களையும் குறிப்பதாகும். எனவே, அப்பர் காலத்தில் பாசுபத சைவர்கள் செல் வாக்குப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

பசுபதி, பாசுபதன், பசுக்கள் முதலிய பெயர்களோடு தொடர்புடைய தலங்கள் பெரும் பாலானவற்றில் பாசுபத சைவர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்துள்ளது. பாசூர், திருமுல்லைவாயில், பட்டீச்சரம், பந்தணை நல்லூர் முதலிய தலங்களில் பெருமான் பாசுபதராகவும் பசுபதியாகவும் எழுந்தருளி யுள்ளார். பாசுபதர்களில் இராவாளரது மடம் எனும் பெயரில் மடம் உள்ளது. பட்டீச்ச ரத்தின் ஒருபகுதி இராப்பட்டீச்சரம் என வழங்குவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

பாசுபத மடத்தைச் சேர்ந்த சிவாசாரி யர்கள் சோழர்கள் காலத்தில் பெருஞ்செல் வாக்குப் பெற்றிருந்தனர். காலப்போக்கில் இவர்கள் இங்கேயுள்ள மக்களுடன் கலந்து விட்டனர்.

## லகுளீசர்

லகுளீசுவர பாசுபத சமய நூல்கள் சிவ பெருமானே சுவேதர் முதல் லகுளீர் வரையி லான குருமார்களின் வடிவில் தோன்றி லகுளீ சுவர சைவ சமயத்தை விளக்கமுற போதித்தார் என்று கூறுகின்றன.

இவர்கள் யாவரும் ஓரிடத்தில் நிலை யாகத் தங்காமல் பல்வேறு இடங்களுக்குச் சென்று சமயக் கருத்துக்களை விளக் கிச் சமய போதனை செய்து வந்தனர்.இவர்களுக்கு எண் ணற்ற சீடர்கள் இருந்தனர். மக்கள் இவர்களையும் சிவாச்சாரியார் என்றே அழைத்தனர்.

தமிழகத்தின் வடபகுதியான வடாற்காடு மாவட்டம், காஞ்சீபுரம் மாவட்டங்களில் லகுளீசபாசுபதர்கள் தனிச்சிறப்பு டன் விளங்கினர். இவர்கள் மயானத்தில் உறையும் சிவபெரு மானைப் போற்றி வணங்கினர்.தாங்கள் அமைத்த ஆலயங் களை மயான மென்றும் குருமார்களின் இருப்பிடத்தை மடம் என்றும் அழைத்தனர்.

திருஒற்றியூரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு மயான மும் மடமும் உடைய சதுரானன பண்டிதர் என்பவரைக் குறிக்கிறது. திருக்கச்சி மயானம், திருக்கடவூர் மயானம், வீழிமயானம், காழி மயானம், நாலூர் மயானம் முதலிய சிவா லயங்கள் யாவும் இவர்களுக்கு உரியதாக இருந்தன என்பர். இவர்கள் பண்டிதர் என்றும் தம்மை அழைத் துக் கொண்டனர்.

காஞ்சியில் யோகவனம் என்னுமிடத்தில் சுவேதர் முதல் லகுளீசர் வரையிலான நூற்று ஐம்பத்தாறு சிவாச்சாரிய பண்டிதர்கள் பூசித்த சிவாலயங்கள் இருந்ததென்று காஞ்சிப் புராணம் கூறுகின்றது. இவற்றை யோக ஸ்தானங்கள் என்றும் கூறுவர். இப்போது லகுளீசுவரம் மட்டுமே எஞ்சியுள்ளது.

திருஒற்றியூரில் லகுளீசருக்கு தனிச் சிற்றாலயம் உள்ளது. மேலும், இங்குள்ள ஆலயத்தின் விமானத்தில் தெற் குக் கோட்டத்தில் லகுளீசர் உருவமுள்ளது. சிவபெரு மானே மண்மீது லகுளீசர் வடிவில் வந்ததாகக் கொள்ளப் படுவதால் அவரை சிவபெரு மானாகவே அமைத்துள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேற்கரங்களில் சூலம், கபாலம் ஏந்தியுள்ளார். வலது முன் கை சின் முத்திரையுடன் விளங்க இடது கை தியான முத்திரையில் உள்ளது. இவர் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இவர் லகுளீச புவனம் என்னுமிடத்தில் வீற்றிருப்பதாகச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

திருவையாற்றிலுள்ள ஐயாறப்பர் ஆலயத்துக் கருவறைக் கோட்டத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தி என்னும் வடிவமும் லகுளீசர் வடிவமேயாகும். இதில் அவர் திருவடியில் ஆமை ஒன்று காட்டப்பட்டுள்ளது. கூர்மாசனத்தின்மீது வீற்றிருந்து யோகங்களை விளக்கி நிற்பதாகக் கூறுவர்.

லகுளீசரைச் சிவவடிவமாகக் காட்டாமல் மானுடச் சட்டை தாங்கிய சிவாசார்ய வடிவமாகக் காட்டுவதும் உண்டு.

நெம்மேலி புன்னாகேசுவரர் ஆலயத்திலுள்ள ஆச்சார்யார் திருவடிவம் லகுளீச மூர்த்தியே என்பர் சிலர். இவ்வடிவில் முண்டிதம் செய்யப் பட்ட தலையில் சிறிய சிகை உள்ளது. காது களில் குண்டலம் அணிந்துள்ளார். வலது கை ஆசார்ய முத்திரையுடன் நடுமார்பில் இருக்க, இடது கையில் சுவடி வைத்துள்ளார். மார்பில் முப்புரி நூல் அணிந்து அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இது அளவால் பெரிய ஆசார்யத் திருமேனியாகும்.

இப்பகுதியில் இம்மதம் இப்போது இல்லாததால் ஆசார்யரின் வடிவங்கள் பெயர் மாறி வழிபாடுகளும் மாறிவிட்டன.

## ஸ்ரீ ஹர தத்த சிவாச்சாரியார்

வேறு சமயங்களில் தோன்றிய போதிலும், பல அன்பர்கள் தங்கள் சிவபக்தியாலும், மகிமையாலும் மேன்மை பெற்றுச் சிவாச்சார்யர்களாக விளங்கிச் சைவத்தை விளக்கமுறச் செய்திருக்கின்றார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஸ்ரீ ஹரதத்த சிவாச்சாரியார். இவர் கஞ்சனூர் என்னும் தலத்தில் வைணவ குலத்தில் தோன்றியவர். இவருக்குப் பெற்றோர்கள் உபநயனம் செய்து மந்திரோபதேசம் செய்வித்த வேளையில், இவர் சிவமே பரம்பொருள் என்று கூறினார். அங்குக் கூடியிருந்த வைணவர்கள் கோபம் கொண்டு அவரிடம் பழுக்கக் காய்ச்சிய மழு மீது நின்று அதைக் கூற முடியுமா? என்று கேட்டனர்.

அவர் சற்றும் சளைக்காமல் சிவபெருமானே பரம்பொருள் என்று மட்டுமல்ல அவர் ஏன் பரம்பொருளாக இருக்கின்றார் என்பதையும் விளக்கிக் கூறுவேன் என்றார். வைணவர்கள் அங்கு ஒரு இரும்பு முக்காலியை இட்டு அதைப் பழுக்கக் காய்ச்சினர். இரும்பு கனன்று நெருப்பு வடிவமாயிற்று. ஹரதத்தர் அதன்மீது ஏறி அமர்ந்தார்.

சிவபெருமானின் அதியுன்னத பராக்கிரமங்களை விளக்கும் இருபத்தைந்து செயல்களை எடுத்துக்கூறும் சுலோக பஞ்சகம் என்ற நூலை அருளிச்செய்தார். அதைக் கண்டும், கேட்டும் எல்லோரும் வியந்தனர். அப்போது திருமால் அங்குத் தோன்றி அவர் கூறியது சரியென்று ஆமோதித்தார். அன்று முதல் அவர் ஹர தத்தர் என்று அழைக்கப்பட்டார். சைவத்தின் மேன்மையைஉபதேசித்து மகிமைப்படுத்தியதால் அவரை மக்கள் ஹர தத்த சிவாச்சாரியார் என்று கொண்டாடுகின்றனர். இந்த வரலாற்றை விளக்கும் சுதைச் சிற்பமொன்று மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் ஆலய இராஜகோபுரத்தில் இடம் பெற்றுள்ளது அதையே இங்குக் காண்கிறோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்து சிவாசாரியார் திருவுருவங்கள்

சிவாச்சாரியார்களைச் சிவமாகப் போற்றி வழிபடவேண்டுமென்று கூறுவர். முன்னாளில் ஆலயங்களில் மிகவுயர்ந்த நிலையில் இருந்த சிவாச்சாரியர்களின் திருவுருவங்களை எழுந்தருளுவித்து வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது, தஞ்சைப் பெரிய கோயிலில் இடையன் நள்ளாறன் என்பவன் வில்லானை குருக்கள் என்னும் சிவாச்சாரியாரின் திருமேனியை எழுந்தருளுவித்தான் என்றும், அத்திருவுருவத்திற்கு வேண்டும் பூசைகளுக்கு ஈசான சிவபண்டிதர் என்பவர் நிபந்தங்களை ஏற்படுத்தினார் என்று தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. இதுபோல இரண்டாம் இராஜஇராஜசோழன் காலத்தில் தாராசுரம் ஐராவதீசுவரர் ஆலயத்தில் 108 சிவாச்சாரியாரின் திருவுருவங்களை அமைத்துப் பெருமைப்படுத்தி உள்ளனர். அது பற்றிய செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

சோழர்கால கோயிற்கலைப் பாணியில் உன்னதமான இடம் பெற்றுள்ள ஆலயம் தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயமாகும். ஏறத்தாழ தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே அமைந்திருப்பதுடன், மாபெரும் சிற்பக் கலைக் கூடமாகத் திகழ்கிறது. புராணங்களில்கூறப்பட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள வனப்புமிக்க அநேக சிற்பங்களை இங்கே காண்கிறோம்.

இந்த ஆலயத்தில் வடக்குத் திருமாளிகையில் சுவரில் தெற்கு நோக்கியவாறு 108 சிவாச்சாரியர்களின் திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டு, அத்திருவுருவங்களின் மீது அவர்களுடைய பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.

இப்படி நீண்ட வரிசையில் அமைக்கப்பட்டுள்ள சிவாச்சாரியர்களின் திருவுருவங்கள் வேறெங்கும் இல்லாததாகும்.

இவற்றில் 17 பேர்களை எடுத்துக் கொண்டு அந்தப் பெயர்களின் சிறப்புக்களை இங்கே காணலாம்.

1.களப்பாளுருடைய பிள்ளையான சதாசிவர் ;2.முல்லைவனமுடையார் தேவரான ஈசான சிவன் 3.(கர்)கம்பைக்குடையார் திருமழபாடி உடையா ரான அகோர சிவர்4.புளியம்பூண்டி உடையார் காலபுருஷரானசதாசிவர்5.நெடுமணல் உடை யார் சிற்றம்பலக் கூத்தரான ஹ்ருதய சிவர்6 .காவிரி மங்கலமுடையார் சந்திர சேகரரான அனந்த சிவர்7.மழவச் சேரி உடையார் திருச்செம்பொன் பள்ளி உடையா ரான சூக்ஷ்ம சிவர்8.காழியூர் கிழவர் நாட்டியத் தான்குடி நம்பியான வாகீச சிவர் 9.குடவாயில்கிழார் உமாபதி ஆழ்வாரான சிகாசிவர் 10.ஆலத்தூருடையார் புற்றிடங் கொண்டாரான தம்மசிவர் 11.நெல்வாயிலு (டையார்) ப(சு)பதியாரான ஈசானசிவர்

தாராசுரம் அருள்மிகு ஐராவதேசுவரர் ஆலயம் –வடக்குப் பிராகாரத்தில் உள்ள 108 சிவாச்சாரியர் திருஉருவ ங்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

12வண்டாழைக் குடையார் வேதவன முடையாரான ஈசான சிவர்13.கழுமலமுடையார் புற்றிடங் கொண்டாரான அஸ்திரசிவர் 14.சிற்றாயிலுடையாரான அணரிய் திருநாமமுடையாரான உருத்திர சிவர் 15.மண்ணிக் குடையார் மாதேவரான வைக்ராய சிவர் 16.பழுவூர் கிழவர் திருவீரட்டானமுடையாரான தத்புருஷ தேசிகர் 17. புளியங்குடையார் மூவாயிரத் தொருவரான தத்புருஷ சிவர் என்னும்

இந்தப் பெயர்கள் மூன்று பகுதிகளை உடையவையாக இருப்பது சிந்தித்தற்குரியதாகும். முதல் பகுதி ஊரையும், இரண்டாம் பகுதி அவருடைய இயற்பெயரையும், மூன்றாம் பகுதி அவர்களுடைய தீட்சா நாமத்தையும் குறிக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் தனித் தனியே விளக்கலாம்.

இவர்களுடைய ஊருக்கு அடுத்ததாக உடையார், பிள்ளை கிழவர் என்னும் பட்டப் பெயர் இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் இவர்கள் ஊரில் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்ததை அறிய முடிகிறது. இரண்டாவது பகுதியின் மூலம் இவர்களுடைய பெயர்கள் யாவும் திருமுறையில் வருகின்ற பெயர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது பகுதி, இவர்கள் சிவதீக்ஷை பெற்ற பின் சூடிய தீக்ஷா நாமமாக உள்ளது.

அதிலும் தனிச்சிறப்பு ஒன்றைக் காண்கிறோம். இப்போது நடைமுறையில் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்தியோஜாதம் என்னும் சிவபெருமானின் ஐந்து முகங்களின் பெயராலேயே தீக்ஷா நாமங்களை வைத்து சிவாசாரியர்கள் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால், இங்கு சிவபெருமானைச் சுற்றியுள்ள ஷடங்கம் (எ) ஆறங்கமான ( இருதயம், சிரசு, சிகை, நேத்திரம், கவசம், அஸ்திரம், ) என்ற ஆறின் பெயராலும், சிவபெருமான் வீற்றிருக்கும் சிம்மாசனத்தினைத் தாங்கி நிற்கும் தர்மம் முதலான நான்கு சிங்கங்களின் பெயர்களாலும், அதையும் தாங்கி நிற்கும் அனந்தன் என்னும் பாம்பின் பெயராலும் தீக்ஷா நாமங்கள் வழங்கப் பட்டதைக் காண்கிறோம். மேலும், யாகாக்னியின் தந்தையான வாகீசர் பெயராலும் தீக்ஷை நாமம் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று வழங்கிய தீக்ஷா நாமங்களின் மூலம் அந்நாளில் சிவாச்சாரியார்கள் பெற்றிருந்த செல்வாக்கையும் ஆகம நெறி பரவியிருந்ததையும் அறிய முடிகிறது.

இவர்களுடைய சிலைகள் இங்கு அமைக்கப் பட்டுள்ளதற்குப் பல காரணங்கள் கூறப் பட்டுள்ளன.அவற்றுள் முதன்மையானது.

இரண்டாம் இராஜராஜன் ஐராவதேசுவரர் ஆலயத்தை மாபெரும் கலைக் கோயிலாக மாற்றிக் கட்டியதுடன் இதனைச் சுற்றிப் பெரிய ஊரை நிர்மாணித்தான். அதற்கு இராஜராஜபுரம் என்று பெயர் சூட்டினான். அப்பெயரே மருவி தாராசுரம் என்றானது என்பர்.

இவன் கங்கைக் கரையிலிருந்து தம்முன்னோர்களால் குடியேற்றப்பட்ட லட்சம் சிவாச்சாரியர்களில் 1000க்கு ஒருவர் வீதம் 108 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய திருவுருவங்களை இங்கே செதுக்கியதுடன் அத்திருவுருவங்களுக்கு மேல் அவர்களுடைய பெயரையும் பொறித்து வைத்தான் என்கின்றனர். இதற்கான இலக்கியச் சான்றோ வரலாற்றுக் குறிப்புகளோ இல்லை.

இந்த லட்சத்தினர் தம்மைச் சிறப்பித்துக் கொள்ளும் வகையில் ஸ்ரீ லட்சத்து ஸ்ரீ என்று பெயருக்கு முன்னால் அடைமொழி இட்டுக் கொண்டனர். அதுவே சுருக்கமாக ஸ்ரீலஸ்ரீ என்று குறிக்கப்படுகிறது. அந்த அடைமொழியை இப்போதும் சைவமடாதிபதிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

உன்னத நிலையில் வைத்துப் போற்றப் பட்ட இந்த சிவாசாரியர்கள் ஆலயங்களில் பூசை செய்தததாகச் செய்தியில்லை. ஆலயங்களை மேற்பார்வை செய்ததுடன், அன்பர்களின் குடும்பத்திற்குக் குருமார்களாக விளங்கி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சைவம் வளர்த்து வந்துள்ளனர் என்று கூறப் படுகிறது.

திருமுறை கூறும் பெயர்களைச் சூடியிருந்ததால் இவர்களைத் திருமுறை ஓதுபவர்கள் என்று வரலாற்றாராய்ச்சியாளர்கள் குறித்தனர். தஞ்சைப் பெரிய கோயிலில் ராஜராஜ சோழனால் நியமிக்கப்பட்ட ஓதுவார்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பொறிக்கப்பட்டுள்ள ஓதுவார்களின் (பதியம் பாடுவார்) பெயர்கள் ஏறத்தாழ இதுபோன்றே இருப்பதால் இவர் களையும் ஓதுவார் என்றனர்.

ஆனால் அந்நாளில் இந்த சிவாச்சார்யர்களின் வழிவந்து தீட்சை பெற்று திருமுறைப் பயிற்சிகளைப் பெற்றிருந்தவர்களே ஆலயங்களில் பதிகம் பாட நியமிக்கப்பட்டனர் என்பது வரலாற்றுச் செய்தியாகும். எடுத்துக் காட்டாக. திருநெல்வேலியில் பொறிக்கப்பட்டுள்ள சுந்தர பாண்டியனின் கல்வெட்டில், திருமுறை பாட நியமிக்கப் பட்டிருந்தவர்கள் தம்மை இந்த மடத்தின் சந்தானத்தார் என்று குறித்திருப்பதைக் காண்கிறோம்.

இவர்கள் சைவ ஆச்சார்ய மடங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை இது உறுதிப் படுத்துவதாகும்.ஆதலின் மேற்குறித்த தாராசுரத்திலுள்ள திருவுருவங்கள் யாவும் சைவாச்சார்யர்களின் திருவுருவங்களே ஆகும்.

இவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்புகள் மூலம் அந்நாளில் ஆகமங்கள் பெற்றிருந்த உன்னத நிலையை அறிய முடிகிறது.

## தவசிகள்

ஆதியில் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்த சைவ சமயக் குருமார்கள் ஆகம நெறிகளின் வழிநின்று சமயத்தைப் போற்றிப் பேணி வந்தனர். ஏழாம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் பெரிய எழுச்சி பெற்ற போது இவர்கள் திருமுறைப் பாடல்களையும் சமய வழிபாட்டில் ஏற்றுக் கொண்டனர். இம்மடத்திலிருந்து சிவதீக்ஷை பெற்ற சீடர்கள் பக்தி இயக்கத்தில் தலைப்பட்டு நின்றதுடன், திருமுறைகளை மேன்மைப்படுத்தும் வகையில் தனியே மடங்கள் அமைத்தனர். அம்மடங்களே குகைகள் எனப்பட்டன. இவை யாவும் திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. இக்குகைகளுக்கு தேவாரச் செல்வன் குகை, திருஞான சம்பந்தன் குகை என்ற பெயர்கள் வழங்கி வந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இத்தகு குகைகளும் அதில் வீற்றிருந்த சைவக் குருமார்களும் பக்தி இயக்கத்தால் பெருஞ்சிறப்பைப் பெற்றனர். அதுகண்டு பொறுக்காத சில வடநாட்டுக் குருமார்கள் குகைகளை இடித்து கலகம் செய்தனர். இது வரலாற்றில் குகையிடி கலகம் எனப்பட்டது. இதை திரிபுவன தேவனான குலோத்துங்கன் அடக்கினான் என்று வரலாறு கூறுகிறது.

இத்தகு குகைகளில் வீற்றிருந்தவர்கள் தம்மை தபஸ்விகள் என்று அழைத்துக் கொண்டனர். இவர்கள் திருமுறைகளை ஓதி உணர்ந்திருந்தனர். இத்தகு தபஸ்விகளே அந்நாளில் ஆலயங்களில் திருமுறைப் பணிகளுக்கு நியமிக்கப் பட்டனர். தபஸ்விகள் தமது மூல ஆசார்ய புருஷர்களாகிய சைவக் குருமார்களைப் போற்றித் தாம் இன்ன குருமாருடைய வம்சத்தைச் சேர்ந்த தபஸ்வி என்று தம்மைக் குறித்துக் கொண்டனர்.

திருநெல்வேலியில் பொறிக்கப்பட்டுள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டு நெல்லையப்பர் கோயிலில் பஞ்சாசாரி யர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பதினோரு தபஸ்விகள் திருப்பதிகம் பாட நியமிக்கப்பட்டதைக் கூறுகிறது. இதில் இவர்கள் பெயருக்கு முன்னால் மேலே சொன்னது போல் ஆசாரியர் பெயர், இவர்களுக்குள்ள மடத்துத் தொடர்பு ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக விஷகண்ட தேவர் சந்தானத்து இல்லாததேவர் சிஷ்யரில் தவப்பெருமாளுக்கும்: திருவாரூர் வடக்கில் மடத்து சிஷ்யரில்திருநட்டப்பெருமாளுக்கும் திருநெல்வேலி மாளிகைமடத்து அழகிய நாயகர் சந்தானத்து உய்யக்கொண்டதேவர் ஆகிய பெயர்களைக் காணலாம்..

தபஸ்விகள் காலப்போக்கில் சிவாலயங்களில் அருச்சகப் பணியையும் மேற்கொண்டனர். திருஒற்றியூரில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு லிங்கார்ச்சனம் செய்து கொண்டிருக்கும் தபஸ்வி விடையின் மேல் வருவான் என்பவனைக் குறிக்கிறது. திருமுறைப் பணியில் மேம்பட்டவரைக் குறித்த தபஸ்வி எனும் சொல் காலப்போக்கில் மடத்துப் பணியாளர் பெயராகி, தபசிப்பிள்ளை என்று உதவியாளரையும் பணியாளரையும் குறிக்கும் சொல்லாகி விட்டது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவாலயங்களில் பூசை நடத்தும் பல்வேறு இனத்தினர்

சிவாலயங்களில் முதன்மை மூர்த்தி யான சிவலிங்கப் பெருமானையும், அவரது தேவி யான பராசக்திதேவியாரையும் சிவாசாரியார் மட்டுமே பூசிப்பர். மற்றைய சந்நிதிகளை (பூசை செய்வதற்குத் தகுதி வாய்ந்த) வேறு அர்ச்சகர்களைக் கொண்டு பூசிக்கும் வழக்க மும் உள்ளது.

எடுத்துக்காட்டாக திருப்பெருந்துறை ஆலயத்தில் ஆறுவகையான அருச்சகர்கள் பூசை செய்கின்றனர். இறைவன் வடிவாக விளங்கும் குருந்தமரம், கருவறையிலுள்ள ஓங்கார பீடம், சிவயோக நாயகி சந்நிதி ஆகியவற்றை நம்பியார் எனப்படும் மரபினர் பூசிக்கின்றனர். இவர்கள் பிரம்மனால் பூசை செய்வதற் கென்று தோற்றுவிக்கப்பட்ட ரௌட்சாயணர் என்பவரின் மரபில் வந்த வர்களாவர் .இவர் கள் வேதம் வழிவந்த அந்தணர் களாவர்.

உற்சவர் மாணிக்கவாசகர், சம்சர்க்க (சொக்க) விநாயகர், வீரபத்திரர் ஆகியோ ரைச் சிவாச்சார்யர்கள் பூசை செய்கின்றனர். இவர்கள் ஆகமவழிவந்த அர்ச்சகர்கள். கனக சபையிலுள்ள தூணில் இடம் பெற்றுள்ள குதிரைச் சாமியையும் மாணிக்கவாசகரையும் சைவப்பிள்ளைமார் பூசிக்கின்றனர்.

மேற்குப் பிராகாரத்திலுள்ள மதிலின் மாடத்தில் மகாலிங்கசுவாமி எனும் ஐயனார் உள்ளார். அவரை வைதிகப் பிராமணர்கள் பூசை செய்கின்றனர். ஆயிரக்கால் மண்டபத் திலுள்ள வீரபத்திரர் சிலைகளைக் கோயில் கொத்தனார் என்பவர்கள் பூசிக்கின்றனர். இவர்களுடன் உவச்சர்கள் சிலவழிபாடு களைச் செய்கின்றன. இப்படி அறுவகை இனத்தினர் பூசிக்கும் ஆலயத்தை வேறெங்கும் காண முடிய வில்லை.

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் மூலத்தானத்தில் முதன்மைக் கடவுளாக விளங்கும் முருகப் பெருமானை மலையாள அந்தணர்களான நம்பியார்கள் பூசிக்கின் றனர். ஆறுமுக நயினாரான ஷண்முகரையும் பிற சந்நிதிகளையும் சிவாச்சாரியார்கள் பூசிக்கின் றனர். இவர்களுக்குத் துணைவர்களாக முக்கா ணியர் எனப்படும் ஈராயிரவர் இங்குள்ளனர். இவர்களே ஸ்தலத்தார் ஆவர். இவர்களைப் போத்திமார் என்று அழைக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலய த்தில் நான்கு வகையானவர்கள் பூசிக் கின்றனர். இவர்கள் அனைவரும் சிவாசாரியார்களே என்றாலும் நான்கு வகையான பட்டப் பெயர்கள் பூண்டுள்ளனர். சிவாசாரியர்கள் என் பவர்கள் ஏகாம்பரநாதரை தொட்டுப் பூசிக்கும் உரிமை பெற்றுள் ளனர். தீக்ஷிதர்கள் மாவடிக் குமார ரையும் பரிவாரங் களையும் பூசிக்கின்றனர். பட்டர்கள் நடராச மூர்த்தி யை மட்டும் பூசிக் கின்றனர். சாளுவ நாயகர் என்பவர்கள் சோமாஸ்கந்தரைப் பூசிக்கின் றனர். இந்த அமைப்பு நிர்வாகச் சிக்கல் இல்லாமலிருக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகக் கருதப் படுகிறது..

பலவகையினர் இவ்வாறு ஒரே ஆலயத் தில் அருச்சகர்களாக இருந்து பூசித்த போதி லும், ஆலயங்கள் யாவும் ஆகம விதிகளை யொட்டிய சிற்ப நூல்களில் கூறப் பட்டுள்ள படியே கட்டப்பட்டுள்ளன என்பதும் ஆகமங்களைப் போற்றிப் பாதுகாப் பவர்கள் சிவாசாரியார்களே என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

**ஞானேஸ்வரி உடனாய சிவாச்சார்ய மகாதேவர் அருளினால்**
**எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க ! வளர்க!!**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# சிவமஞ்சரி

சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்
இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

Center for Shaiva Studies, Pondicherry Collection